அந்த கோத்ரப்ரவர்த்தகரிஷியான பரத்வாஜரின் பெருமை அளப்பரியது. வேதம் என்று கூறும்போதும் आतिथ्यम् (விருந்தோம்பல்) எனும் போதும் அம்மஹர்ஷியின் நினைவு தானாகவே வரும்.

जमदग्निर्भरद्वाजो विश्वामित्रात्रिगौतमाः ।
वसिष्ठ काश्यपागस्त्या मुनयो गोत्रकारिणः ॥

என்கிற மனுவின் ஸ்ம்ருதியில் கோத்ரப்ரவர்த்தகர்களான முனிவர்களுள் பரத்வாஜரின் பெயரும் சிறப்பாகப் போற்றப்படுகிறது. இம்மஹர்ஷியின் பெருமைகளை நாவல்பாக்கம் மஹாவித்வான் N.Sதேவநாதாசார்யார் எழுதிய மஹர்ஷிகள் சரிதத்தில் காணலாம்.

மூன்று ஆயுட்காலத்தை வரமாகப் பெற்ற பரத்வாஜ முனிவர் எல்லா வேதங்களையும் கற்க விரும்பிக் கற்கத் தொடங்கினார். நான்காவது ஆயுட்காலம் கிடைத்தால் அக்காலத்திலும் வேதங்களையே கற்பேன் என்று கூறியதாக வேதத்தில் காடகபாகத்தில் கூறப்பட்டுள்ளது.

भरद्वाजो ह त्रिभिरायुर्भिर्ब्रह्मचर्यमुवास.. इन्द्र उपव्रज्योवाच। भरद्वाज यत्ते चतुर्थमायुर्दद्यां किमनेन कुर्या इति। ब्रह्मचर्यमेवैनेन चरेयमिति होवाच।

இம்முனிவரின் விருந்தோம்பல் சிறப்பை ஸ்ரீமத்ராமாயணத்தில் விளக்கமாகக் காணலாம். ஸாக்ஷாத் பரமாத்மாவான ஸ்ரீராமனுக்கும் அவனது படையினர்க்கும் அவர் அளித்த விருந்து உலகப் புகழ் பெற்றது. இன்றும் யாராவது சிறந்த முறையில் ததீயாராதனை செய்தால் பாரத்வாஜாதித்யம் போன்றிருந்தது என்று வியப்புடன் பகர்வர்.

முன்னோர்

ஸ்ரீமதாண்டவனின் பூர்வாஸ்ரம முன்னோர்கள் மிகச்சிறந்தவர்கள். ஜ்ஞானம், அனுஷ்டானங்களில் சிறந்து விளங்கியவர்கள். வேதாத்யயனத்திலும் சாஸ்த்ரஜ்ஞானத்திலும் சிறந்து விளங்கியதோடு ஸ்ரீபூவராஹப் பெருமாளுக்கு முக்கரணங்களாலும் தொண்டு செய்தவர்கள்.

जनित्वाऽहं वंशे महति जगति ख्यातयशसां
शुचीनां युक्तानाम् .....

என்ற ஆளவந்தாரின் ஸ்ரீ ஸூக்தியை இங்கு பொருத்தமாக நினைவு படுத்திக் கொள்ளலாம்.

ஸ்ரீமதாண்டவனது பூர்வாஸ்ரம ப்ரபிதாமஹரான நாராயணாசார்யஸ்வாமி மிகப் புகழ் வாய்ந்த வித்வானாக விளங்கினார். நடுநாட்டு நாராயணாசார்யர் என்றே புகழ் பெற்றவர். ஸ்ரீஹயக்ரீவமந்த்ரோபாஸனம் செய்து அவரை ப்ரத்யக்ஷீகரித்து அம்வெம்பெருமானின் திவ்யகடாக்ஷத்தால் ஸர்வ ஶாஸ்த்ரங்களிலும் நிகரற்று விளங்கிய திருமலை சதுர்வேத சதக்ரது நாவல்பாக்கம் ஸ்ரீமதண்ணயார்ய மஹாதேஶிகனிடம் எல்லா ஶாஸ்த்ரங்களையும் தினவடங்கக் கற்றுத் தேர்ந்த நாராயணாசார்ய ஸ்வாமி முதலில் ஸ்ரீஅண்ணயார்ய மஹாதேஶிகனிடம் அத்வைத வேதாந்தத்தை நன்கு கற்ற பிறகு நமது ஸித்தாந்த க்ரந்தங்களான ஸ்ரீபாஷ்யாதிகளை நன்குகாலக்ஷேபம் செய்து முடித்தார்.

நடுநாட்டு நாராயணாசார்ய ஸ்வாமியின் தனியனாவது

अण्णयार्यकृपालब्धवेदान्तयुगळाशयम् ।
भारद्वाजकुलाब्धीन्दुं नारायणगुरुं भजे ।।

என்பதாகும். நடுநாட்டு நாராயணாசார்ய ஸ்வாமியிடம் பயின்றவர்களில் ப்ரஹ்மசாரி தடாவூர் ஸ்ரீ.உ.வே. ரங்கஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி, தடாவூர், சீமாராகவாசார்ய ஸ்வாமி ஸ்ரீமுஷ்ணம் ஸ்வர்ணம் ஸ்வாமி என்று ப்ரஸித்தரான க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி நடுநாட்டு நாராயணாசாரியஸ்வாமி குமாரர் புராணம் க்ருஷ்ணமாசாரியஸ்வாமி (ஸ்ரீமதாண்டவனது பூர்வாச்ரம பிதாமஹன்) ஆகியோர் சிறந்தவர்கள். இந்த நாராயணாசார்ய ஸ்வாமியிடம் பயிலாத பண்டிதர்களே இலர். ஸ்ரீஸ்வர்ணம் ஸ்வாமி அஹோபிலமடஸம்ப்ரதாயஸ்தராயினும் ஸ்ரீநாராயணாசார்ய ஸ்வாமியிடமே ஸமாச்ரயணம், ஸாமான்யஶாஸ்த்ரம், வேதாந்தகாலக்ஷேபம், பரந்யாஸம் முதலியவற்றைப் பெற்றார் என்று ஸ்ரீமுஷ்ணம் வித்வான் ரகூத்தமாசார்யர் எழுதுகிறார்.

ஸ்ரீஅஹோபிலமடத்தில் 42 ஆம் பட்டத்தில் புகழுடன் விளங்கிய (இஞ்சி மேட்டழகிய சிங்கர்) ஸ்ரீஸ்ரீரங்க சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஸ்ரீஸ்வர்ணம் ஸ்வாமியிடம் வேதாந்த காலக்ஷேபம் செய்தவர் என்று ப்ரஸித்தி.

நடுநாட்டு நாராயணாசார்ய ஸ்வாமி மைஸூர், புதுக்கோட்டை, திருவனந்தபுரம், கொச்சி, ஆகிய அரசு ஸமஸ்தானங்களில் தர்மாதிகாரியாகவும் ஆஸ்தான வித்வானாகவுமிருந்தவர். இன்றும் இந்த நடுநாட்டு நாராயணாசார்யஸ்வாமியுடன் உள்ள பண்டித கோஷ்டியின் புகைப்படம் மைஸூரில் உள்ளது என்று மதுராந்தகம் ஸ்வாமி என்றே புகழ் பெற்ற ஸ்ரீ.உ.வே.தி.ஈ. வீரராகவார்ய மஹாதேஶிகன் அருளியதாக ஸ்ரீமுஷ்ணம் வித்வான் ரகூத்தமாசார்யார் குறிப்பிடுகிறார்.

ப்ரமாதி ஶ்ரீ வைகாசி - ஸ்ரீரங்கநாத பாதுகா:-

நடுநாட்டு நாராயணாசார்ய ஸ்வாமியிடம் ஶாஸ்த்ரங்களைக் கற்ற தடாவூர் சீமாராகவாசார்யாரிடம் ஸ்ரீமுஷ்ணம் ஸுப்பராயாசார்ய ஸ்வாமி வ்யாகரணத்தைக் கற்றுப் புகழுடன் விளங்கினார். இவர் மஹாமஹோபாத்யாய பட்டம் பெற்றவர். இவரது குமாரர் வித்வான் ஸேதுமாதவாசார்யார் ஆவார். இவரிடம் அடியேன் ஆசார்யரும் சிறியமாதாமஹருமான மஹாவித்வான் ஸோமயாஜி நாவல்பாக்கம் நாராயணதாததேஶிகன் வ்யாகரணஶாஸ்த்ரத்தைப் பயின்றார்.

ஸ்ரீமுஷ்ணம் மஹாமஹோபாத்யாய ஸுப்பராயாசார்ய ஸ்வாமி மாத்வரில் ஆர்யாசார்யா வம்ஶத்தில் தோன்றியவர். இந்த ஸுப்பராயாசார்யர் ஸ்வாமி நடுநாட்டு நாராயணசார்யஸ்வாமியிடமே ஸ்ரீமத்வபாஷ்யம், ஆர்யாசார்யாபத்ததி போன்றவற்றை அதிகரித்தார்.

ஸ்ரீமதாண்டவனின் முன்னோர் பெருமையை பழைய ஸ்ரீகார்யம் வித்வான் மாதவாசார்ய ஸ்வாமி சுக்லவருட ஆடி மீ ஸ்ரீரங்கநாதபாதுகாவிலும் ஆங்கிரஸ ஹ வைகாசி மீ பாதுகாவிலும் சிறப்பாக எழுதியுள்ளார்.

ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ ரங்கராமானுஜ மஹாதேஶிகனது தகப்பனார் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியும் பெரிய தகப்பனார் திருநாராயணாசார்ய ஸ்வாமியும் வேதத்தை முழுமையாகப் பயின்றவர்கள். திருத்தகப்பனாரிடமே காவ்யங்களைக் கற்றவர்கள். திருநாராயணாசார்ய ஸ்வாமி ஜ்யோதிஷத்திலும் வல்லவராக விளங்கியவர். இவ்விரு ஸ்வாமிகளும் ஸ்ரீதேஶிகஸம்ப்ரதாயத்தில் ஆழங்கால் பட்டு விளங்கியவர்கள்.

ஸ்ரீமதாண்டவனது அவதாரம்

ஆங்கில ஆண்டு 1935க்குச் சரியான யுவ ஆண்டு வைகாசி மீ திருவாதிரை நக்ஷத்ரத்தில் ஸ்ரீமுஷ்ணத்தில் அவதரித்தார். தம் குலதெய்வமான பூவராஹனது நாமத்தையே உரிய காலத்தில் நாமகரணம் செய்தனர். அவ்வூர் பள்ளியில் ஏழாம் வகுப்பு வரையில் பயின்றார்.

உரிய பருவத்தில் உபநயனம் நடந்ததும் ஸ்ரீமுஷ்ணத்தில் புகழுடன் விளங்கிய வேதபாடஶாலையில் சேர்க்கப்பட்டு வேதாத்யயனம் செய்யத்தொடங்கினார். அறிவிலும் வயதிலும் முதிர்ந்தவர்களான ஸ்ரீமுஷ்ணம் கோபால தேசிகாசார்யஸ்வாமி, சாமாராவ், கிணத்தங்கரை ராமானுஜாசார்யர், பெரியதகப்பனார் திருநாராயணாசார்யர் போன்றோரிடம் காவ்ய நாடகங்களையும் பயின்று வந்தார்.

மதுராந்தகம் கலாஶாலை

ஸ்ரீமதாண்டவனின் பூர்வாஶ்ரம பெரிய தகப்பனார் குமாரரான க்ருஷ்ணமாசாரி என்பவர் மதுராந்தகம் ஸ்ரீஅஹோபில மட ஸம்ஸ்க்ருத கல்லூரியில் பயின்று வந்தார். தமது சிறிய தகப்பனார் குமாரரான ஸ்ரீவராஹாசாரியரையும் (ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவனை) ஸர்வதாரி ஹ 1948 என்று நினைவு, மதுராந்தகம் ஸ்ரீ அஹோபிலமட கலாஶாலையில் சேர்க்க அழைத்து வந்தார்.

புதிதாக வரும் மாணாக்கரின் அறிவுத்திறனைச் சோதித்து ஏற்ற வகுப்பில் சேர்ப்பது வழக்கம். அப்போது ஷெ கல்லூரியில் மேலாளராக இருந்த புகழ்பெற்ற கல்வியாளர் மஹர்ஷி வாஸுதேவாசார்ய ஸ்வாமி, ப்ரின்ஸிபால், தி.ராமஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி மற்றும் கல்லூரி அத்யாபகர்கள் பழைய மாணாக்கர்கள் புதிதாகச் சேரவந்தவர்கள் என ஏராளமானோர் ஹாலில் திரண்டிருந்தனர். இப்புதிய சூழல் புதிதாக வந்த மாணாக்கர்களுக்கு அச்சத்தையும் நடுக்கத்தையும் தரக் கூடியது. புதிதாகச் சேரவந்த மாணாக்கர்களை அத்யாபகர்கள் வினவும் போது அவர்கள் அளிக்கும் விடை அவர்களது தொண்டைகளை விட்டு வெளிக் கிளம்பாது.

இந்நிலையில் ஸ்ரீமுஷ்ணம் வராஹாசார்யார் முறை வந்தது. குமாரஸம்பவத்தில் इवाङ्कः என்று முடியும் ஸ்லோகத்தையும் அதன் பொருளையும் கூறு என மஹர்ஷி ஸ்வாமி வினவியதும் சிறிதும் அச்சமின்றி

अनन्तरत्नप्रभवस्य यस्य हिमं न सौभाग्यविलोप जातम्।
एको हि दोषो गुणसन्निपाते निमज्जतीन्दोः किरणेष्विवाङ्कः॥

என்ற ஸ்லோகத்தை ஸிம்ஹகர்ஜனை போன்ற கம்பீரமான குரலில் வராஹாசார்யார் கூறி பொருளை விளக்கினார். அவரது குரல் அப்பெரிய ஹால் முழுவதும் எதிரொலித்தது. மஹர்ஷி ஸ்வாமி மிகவும் உகந்து வராஹாசார்யாரை Advance -I வகுப்பில் சேர்த்துக் கொண்டார். Elementry III Or IVவகுப்பில் இடம் கிடைக்கும் என்று எண்ணிய நம் வராஹாசார்யருக்குத் திகைப்பு. அந்த ஆண்டுதான் Advance - I வகுப்புக்கு பாரதசம்பூ, போஜசம்பூ, விஸ்வகுணாதர்ஸசம்பூ, மாககாவ்யம் என்று பாடங்களை வைத்திருந்தனர். அங்கு இந்த நிகழ்ச்சிகளை நேரில் கண்ட எனக்கு அவை பசுமரத்தாணிபோல் மனத்தில் பதிந்தன.

அக்காலத்தில் வேதாந்தவாவதூக ஸ்ரீவில்லிவலம் நாராயணாசார்ய ஸ்வாமி ஸரளகவி பாதூர் புராணம் ராகவாசார்ய ஸ்வாமி, மஹாவித்வான் மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி, முக்கூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி போன்றோர் ஆசிரியர்களாக விளங்கினர்.

ஓராண்டுக்குப் பிறகு பல்வேறு சூழ்நிலைகளால் மதுராந்தகம் கலாஸாலையை அந்த அழகிய சூழ்நிலையை விட்டு (ஸ்ரீஹரி காத்த ராமன் கோவில் - எதிரில் புஷ்கரிணி இத்தகைய அழகிய சூழ்நிலையில் கல்லூரி அமைந்திருந்தது.) அக்காலத்தில் சென்னையில் நாராயண முதலித் தெருவிலிருந்த காகுமானி ஆதிகேசவுலு செட்டி அறக்கட்டளையினரின் ஸம்ஸ்க்ருத பாடஸாலையில் நம் வராஹாசார்யார் சேர்ந்தார். அப்போது திருக்கண்ணபுரம் பண்டிதரத்னம் ஸ்ரீநிவாஸாசார்யார், பக்ஷிராஜய்யங்கார் போன்ற வித்வான்கள் ஆசிரியர்களாக விளங்கினர். ப்ரஸித்த வித்வான்களான கொத்திமங்கலம் வரதாசார்யார் (மைஸூர்) வேளுக்குடி வரதாசார்யார் போன்றோர் இப்பாடஸாலையில் பயின்றவர்களே. அரசு நடத்தும் எண்ட்ரன்ஸ் தேர்வில் (நுழைவுத்தேர்வு) ஆறு ஸப்ஜெக்டிலும் வெற்றி பெற்றார். பின்னர் நம் தர்ஸனஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரர் அவதாரஸ்தலமான ஸ்ரீபெரும்பூதூர் ஸம்ஸ்க்ருத கல்லூரியில் சேர்ந்தார். மஹாவித்வான்களான ஆஸூரி பெரிய ராமானுஜாசார்ய ஸ்வாமி, சின்ன ராமானுஜாசார்ய ஸ்வாமி போன்றோர் இக்கல்லூரி ஆசிரியர்களாக விளங்கினர். நம் வராஹாசார்யார் சேர்ந்தபோது ஸாந்தி தாந்தி போன்ற குணங்களுக்கு உறைவிடமாயும் தர்க்க, மீமாம்ஸா, வேத, வேதாந்தங்களில் தன்னிகரற்ற புலமை பெற்றவருமான திருமலை சதுர்வேதசதக்ரது நாவல்பாக்கம் ஸ்ரீக்ருஷ்ணஸ்வாமி தாதாசார்யஸ்வாமி (ஸ்ரீஉ.வே. மஹாவித்வான் N.S.R இன் தகப்பனார்) உழப்பாக்கம் வித்வான் ஸ்ரீஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, பாரதராஷ்ட்ரபதியால் கௌரவிக்கப்பட்ட

வித்வான் ராமசந்த்ரஶாஸ்த்ரிகள் (வயது 103, இன்றும் நல்ல நிலையில் இருக்கிறார்). வித்யார்த்திகளிடம் மிகுந்த அன்புகொண்ட வ்யாகரணவித்வான் ப்ரன்ஸிபால் காந்தூர் ஶேஷாத்ரி ஐயங்கார் சிவஶ்ரீ தமிழ்வித்வான் ஷண்முகஸுந்தரகுருக்கள் (ஶிரோமணி) போன்றோர் ஆசிரியர்களாக விளங்கினர்.

ஶ்ரீ பெரும்பூதூர் ஸம்ஸ்க்ருத கல்லூரி சென்னை பெங்களூர் சாலையில் ஶ்ரீபாஷ்யகாரர் ஸந்நிதிக்கு அருகில் அமைந்திருந்தது. முதலில் சிறிய ஹால். அதையொட்டி இருபுறமும் ஶ்ரீ சாஸ்திரிகள், ப்ரின்ஸிபால் அறைகள் அடுத்ததாக மிகப் பெரிய ஹால். பின்புறம் மாணாக்கர் தங்கும் அறைகள் (ஒவ்வொரு அறையிலும் அவரவர் உணவைத் தயாரித்துக்கொள்ளுமளவு இடம் விசாலமாயிருந்தது.) பின்புறம் அழகிய குளம். ஸ்நாந ஸந்த்யாதிகளுக்கு மிகச்சிறந்த முறையில் அதன் இருபுறமும் ஜபம் செய்ய மேடைகள் என மிக அழகிய முறையில் அமைந்திருந்தது. கல்லூரி வாயிலில் பெரிய வராண்டா. மெயின் ரோடை ஒட்டி அமர்வதற்குத் திண்ணைகள். மாடியில் ஹால் பெரிய அறை என்று கல்லூரி அமைந்திருந்தது.

இங்கு நம் வராஹாசார்யாரின் அறிவுப் பசிக்குச் சிறந்த உணவு அளிக்கும் வகையில் சிறந்த நூல்நிலையம் அமைந்திருந்தது. நாவல்பாக்கம் ஸ்வாமி தம் புத்ரனுக்குப் புகட்டுவது போல் ஶாஸ்த்ரங்களை மிக ஆர்வத்துடன் புகட்டினார். அப்போது நாவல்பாக்கம் கோ.கண்ணன் என்கிற ராமானுஜாசார்யாரும் உடன் பயின்றார்.

நாவல்பாக்கம் ஸ்வாமி, யார் வந்தாலும் உடனே பாடத்தைத் தொடங்க மாட்டார். வராஹனும் வரட்டும் என்பார். அவனது அறைக்குச் சென்று அழைத்து வா என்பார். சில ஸமயம் தாமே எழுந்தருளி அழைத்து வந்த பிறகே பாடந்தொடங்குவார். இது அடியேன் நேரில் அனுபவித்த உண்மை. நம் வராஹாசார்யாரும் நாவல்பாக்கம் ஸ்வாமியின் அபிமான புத்ரனாயிருந்து அந்த ஸ்வாமிக்கு எல்லாவித தொண்டுகளையும் உகப்புடன் செய்து வந்தார்.

ந்யாய ஶிரோமணி பரீக்ஷையில் தேர்வு பெற்றபிறகு ஶ்ரீபெரும்பூதூர் கல்லூரியிலேயே இருந்த தமிழ் வித்வான் வகுப்பில் சேர்ந்து படிக்கத் தொடங்கினார். தமிழ்வித்வான் Priliminary தேர்வில் வெற்றி பெற்றதும் ஆந்த்ர மாநிலத்தில் ஜூடிகல், ஆல்வால் போன்ற இடங்களில் ஸம்ஸ்க்ருத ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார். தெலுங்கு மொழியின் மீதுள்ள ஆர்வத்தால் - பாரதி போற்றிய சுந்தரத் தெலுங்கின் மீதுள்ள ஆர்வத்தால் தெலுங்கைக் கற்கத் தொடங்கினார். பள்ளி நிர்வாகி வராஹாசார்யாரின் அறிவுப்பசியைக் கண்டு வியந்து ஈ பாபனவாடு நேர்ஸ்துன்னாடா நேர்பிஸ்துன்னாடா (இந்த பார்ப்பான் கற்கிறானா கற்பிக்கிறானா) என்று கூறினார். இதை ஶ்ரீR.R தாரண ஹூ ஆவணி மீ ஶ்ரீரங்கநாதபாதுகாவில் A Trustee therein had Sarcastically wondered whether this brahmin boy had come from madras to learn or to teach (Yee Bapanavadu Nerstunnada nerpistunnada?) என்றுக் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் அடியோங்களுடைய வற்புறுத்தலால் மீண்டும் ஸ்ரீபெரும்பூதூர் வந்து படித்து தமிழ் வித்வான் இறுதித் தேர்வை (Final)எழுதி வெற்றி பெற்றார்.

தமிழ் வித்வான் தேர்வில் வெற்றி பெற்றதும் அக்காலத்தில் ஜில்லாபோர்டு பள்ளி எனப்பட்ட செங்கற்பட்டு ஜில்லா போர்டு பள்ளியில் தமிழாசிரியரானார்.

விவாஹம்

ஸ்ரீவத்ஸ கோத்ரத்தைச் சேர்ந்த ஸ்த்ரீரத்னத்தை விவாஹம் செய்து கொண்டார். (1960 என்று நினைவு). இக்காலத்தில் குழந்தைகளுக்குப் பெயர் வைக்கும் அழகைப் பார்க்கிறோம். சீனு கிட்டு என்று பகவன் நாமாவைச் சரியாக உச்சரிக்காமல் அழைப்பதைக் காண்கிறோம்.

நம்பி பிம்பியென்று நாட்டு மானிடப் பேரிட்டால்
நம்பும் பிம்புமெல்லாம் நாலுநாளிலழுங்கிப்போம்
செம்பெருந்தாமரைக் கண்ணன் பேரிட்டு அழைத்தக்கால்
நம்பிகாள் நாரணன் தம்மன்னை நரகம் புகாள், என்பது ஆழ்வார் திருவாக்கு.

वने चरामो वसु चाहरामः नदीस्तरामो न भयं स्मरामः।
इतीरयन्तोपि वने किराता मुक्तिं गता रामपदानुषङ्गात्॥ என்பர். ஏதாவதொரு வ்யாஜத்தால் பகவன்னாமோச்சாரணம் பேரின்பத்தையளிக்கும்.

एतावतालमघनिर्हरणाय पुंसां
सङ्कीर्तनं भगवतो गुणकर्मनाम्नाम्।
आङ्क्श्य पुत्रमघवान् यदजामिलोऽपि
नारायणेति म्रियमाण उपैति मुक्तिम्॥

பாபியான அஜாமிளனும் தன் மகனுக்கு நாராயணன் என்று பெயரிட்டு அப்பெயரால் மகனை அழைத்ததால் நற்கதியை அடைந்தான் என்பது புராண வரலாறு.

இங்கு நம் வராஹாசார்யார் தம் குழந்தைகளுக்கு ஸ்ரீமந்நாராயணன், நாதமுனி, யாமுனாசார்யார், ஸௌம்யநாராயணன், ஸ்ரீவத்ஸன் என்று நாமகரணம் செய்துள்ள அழகு பாராட்டத்தக்கது. அவ்வாறே பெண் குழந்தைக்கு ஜாதவேதஸீ என்று பெயர் சூட்டியிருப்பதையும் பார்த்து அவருக்கு நம்முன்னோர் நெறிமுறையில் உள்ள ஆழ்ந்த பற்றை உணர்ந்து மகிழலாம். தம் குமாரர்கள் வேதாத்யயனம், ஸம்ஸ்க்ருதம் பயிலும்படி செய்துள்ளார்.

வெவ்வேறு பள்ளிகளில் பணியாற்றினாலும் நம் வராஹர்சார்யார் தங்கியிருந்தது மலையாங்குள அக்ரஹாரமும் வேலாமூர் அக்ரஹாரமுமேயாகும்.

தமது தமிழாசிரியப் பணியின் பிற்பகுதியில் வேலாமூர் மீது வராஹாசார்யர்க்கு மிகுந்த நாட்டமேற்பட்டது.

வேலாமூர் என்னும் ஊர் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ளது.

இங்குதான் நம் ஆசார்ய பரம்பரையைச் சேர்ந்தவரும், உபநிஷத்பாஷ்யகாரர் என்று போற்றப்படுபவருமான மஹான் ஸ்ரீரங்கராமானுஜஸ்வாமி அவதரித்தார். எனவே இந்த ஊரின் மீது நம் வராஹாசார்யாருக்கு நாட்டம் ஏற்பட்டதில் வியப்பில்லை. உபநிஷத்பாஷ்யகாரர் மங்களாசாஸனம் செய்த ஸ்ரீலக்ஷ்மீநாராயணன் ஸன்னிதி நல்ல நிலையையடையவேண்டும் என்றெண்ணி அக்கோவிலைத் தமது குறைந்த வருமானத்தைக் கொண்டே புதுப்பித்தார். வராஹாசார்யாரே தச்சு வேலை கொத்தனார் வேலைகளைச் செய்தார். குமாரர்கள் சித்தாள்களாக இருந்து உதவினர்.

தாரணஹ மார்கழி மீ பாதுகாவில் ஸ்ரீ R.R குறிப்பிட்டது

The poorvacharya H.H Upanishad Bhashyakara built this temple and our H.H maintained this temple during the last years of his poorvashramam at his own cost from out of his then meager salary. He had a family of nine to support he would do all skilled and unskilled work with his bare hands. Indeed a combination mason, Carpentar, plumber etc. With his poorvashrama குமாரர்கள் acting as பெரியாள் சித்தாள்.

It is a compact and divine sannidhi and a must visit shrine for all sevarthis..
விளையும் பயிர் முளையிலே தெரியும்.

சிறுவயது முதலே (அடியேனுக்குத் தெரிந்த 12 வயது முதல்) அறிவுத்தேடலில் ஸ்ரீவராஹாசார்யாருக்கு ஆர்வம் மிகுதி. ஸ்ரீபெரும்பூதூர் கல்லூரியிலிருந்த நூல்நிலையத்தில்(Library) உள்ள ஸம்ஸ்க்ருத - தமிழ் நூல்கள் அனைத்தையும் எடுத்துப் படிப்பார். இந்நூல்கள் இவரது ஸிரோமணி வகுப்புப் பாடங்களுக்கோ தமிழ் வித்வான் வகுப்புப் பாடங்களுக்கோ தொடர்புடையவை அல்ல.

ஒரு ஸமயம் ஒரு குறிப்பிட்ட கஷ்டமான விஷயத்தை மிகவும் எளிமையாக நம் வராஹாசார்யார் பலர் எதிரில் விளக்கினார். அருகிலிருந்த அடியேன் மாதுலர் வித்வான் நா.வரததாதாசார்யார் ஸ்வாமி இவரைப் பார்த்து டேய் இதை எப்படி அறிந்தாய் நீயே சொந்தமாக ஆசிரியர் உதவியின்றி நூல்களைப் பார்க்கத் தொடங்கிவிட்டாயா என்று வியப்புடன் கூறினார். ஸ்ரீவராஹாசார்யார் அங்கு வாசிக்குங்காலத்தில் அடியேன் மாதுலர்களும் வித்வான்களுமான நாவல்பாக்கம் யஜ்ஞவராஹதாதாசார்யார், வரததாதாசார்யார் மற்றும் அடியேனது ஸமீபபந்துவான வீராபுரம் வித்வான்

உகோபாசார்யார், பால்யம் முதல் அடியேனிடம் அளவு கடந்த ப்ரீதியை வைத்து உதவிவரும் நா.வலயப் பேட்டை ராமானுஜ தாதாசார்யார் போன்றோர் இரண்டாவது சிரோமணி வகுப்பில் வாசித்து வந்தனர்.

மஹாவித்வான் ஸ்ரீ ராமசந்த்ரஸாஸ்த்ரிகள் (Philology)மொழி வரலாறு பாடம் நடத்தும் போது Indo -European Language மற்றும் German மொழி களுக்கிடையேயுள்ள ஒற்றுமைகளைப் பற்றி வராஹாசார்யார் துருவித் துருவி வினவுவார். ஸ்ரீஸாஸ்த்ரிகளும் சிறிதும் கோபப்படாமல் சிரித்தவாறு அவற்றை விளக்குவதோடு இவரது அறிவுக்கூர்மையையும் பலர் எதிரில் பாராட்டுவார்.

ஸ்ரீபெரும்பூதூர் கலாசாலையில் வடகலை தென்கலை ஸ்ரீவைஷ்ணவர்கள், ஸ்மார்த்தர்கள், சைவர்களான குருக்கள் போன்றோர் பயின்று வந்தனர். அனைவருடனும் கலந்து பழகிய ஸ்ரீ வராஹாசார்யார் அவரவர் ஸம்ப்ரதாயம் பற்றி அவரவரிடையே துருவித்துருவி வினவுவார். குறிப்பாக பாலீஸ்வரன், திருப்பாதிரிபுலியூர் ஸ்ரீ ஞானஸம்பந்தன் எனும் குருக்கள் மாணவர்களிடம் அவர்களுடைய வழக்கங்கள் ஆகமம், பூஜை முறை பற்றி அடிக்கடி வினவுவார். அவர்கள் சிலவற்றிற்குச் சரியான விடை கூறாது விழிக்கும் போது சிரித்தவாறே கேலி செய்வார்.

எங்களுக்குத் தமிழ் கற்பித்தவர் வித்வான் ஸிவஸ்ரீM.S ஷண்முகஸுந்தரகுருக்கள் (மதுராந்தகம்) ஆவார். அவர் திருவையாற்றில் முறையாக ஸம்ஸ்க்ருதம் பயின்று ந்யாய சிரோமணி பாஸ் செய்த பிறகு தமிழ் வித்வான் தேர்விலும் வெற்றி பெற்ற அறிஞர்.

ஆயினும் எங்களுக்குப் பாடம் நடத்தும் போது வராஹாசார்யார் வினவும் வினாக்களைக் கண்டு வியப்பார். என்னப்பா இது நாள்தோறும் துருவித் துருவி வினாக்களைத் தொடுக்கிறாயே. பரீக்ஷைக்குப் பாடங்களை முடிக்க வேண்டாமா. இப்படியே கேள்விக் கணைகளால் துளைத்தெடுத்தால் எப்படி பாடம் முடியும் என்று சலித்துக் கொள்வார்.

தமிழில் தொல்காப்பியம் என்பது சிறந்த பழமையான இலக்கணநூல். அதற்கு இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் எனப் பல அறிஞர்கள் உரை எழுதியுள்ளனர்.

சொல்லதிகாரத்தில் சேனாவரையர் உரை மிகவும் கம்பீரமானது அதில்

இனச்சுட்டில்லா பண்பு கொள் பெயர்க்கொடை
வழக்காறல்ல செய்யுளாறே என்ற ஸூத்ரத்திற்கு (நூற்பாவுக்கு) சேனாவரையர் உரையில்

"விசேடிக்கற்பாலது விசேடியாது நின்ற தன்ற தாகலின் ஈண்டைக்கெய்தா" என்ற பகுதியில் வராஹாசார்யார் மேன்மேலும் வினாக்களைத் தொடுத்த வண்ணம் இருந்தார். மூன்று நாட்கள் இப்படியே தொடர்ந்தது.

டேய் வராஹா என்னை மடக்க வேண்டுமென்றே திட்டம் போட்டு இவ்வாறு வினாக்களைத் தொடுக்கிறாயா என்று வியப்புடன் கூறிப் பாராட்டினார்.

ஸ்ரீவராஹாசார்யாரின் कुशाग्रबुद्धि க்கு இவை எடுத்துக்காட்டுக்களாகும்.

பட்டம்

ஸ்ரீவராஹாசார்யார் அறிவைப் பற்றியும் அறிவுத்தேடலின் ஆர்வத்தையும் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். ஒரு ஸமயம் காஞ்சியில் உள்ள தொண்டைமண்டல துளுவ வேளாளர் மடத்திற்கு சென்று அங்கிருந்த ஸ்ரீலஸ்ரீ ஜ்ஞானப்ரகாஶதேஶிக பரமாசார்யாருடன் உரையாடிக் கொண்டிருக்கும் போது அவர் நம் வராஹாசார்யாரின் அறிவுக் கூர்மையையும் ஶைவஸித்தாந்தத்தில் அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவையும் கண்டறிந்து வியந்து நீர் வைணவராயினும் இங்குள்ளவர்களுக்கு ஶிவஞானபோதம், பாஷ்யம், வ்ருத்தி முதலிய ஶைவஸமய நூல்களைக் கற்பிப்பிப்பீராக என்றார். வராஹாசார்யாரின் கற்பிக்குந்திறனைக்கண்டு வியந்து 'பராவரவித்யாபாஸ்கரர்' என்ற விருதையளித்து கௌரவித்தார். தமிழில் கல்லாடம் எனும் நூல் புகழ் பெற்றது. கல்லாடம் கற்றாரோடு சொல்லாடாதே என்பர். இந்நூலைக் கற்பிப்பதில் நம் வராஹாசார்யார் மிகவும் வல்லவர்.

காலக்ஷேபம்

ஸ்ரீமுஷ்ணம் வராஹாசார்யார் திருக்குடந்தை ஆண்டவன் ஸன்னிதியில் 1987 இல் ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் செய்யத்தொடங்கினார். ஓரிரு நாட்களிலேயே இவரது அறிவுக் கூர்மையையும் விரைந்து ஏற்கும் க்ரஹணசக்தியையும் நுண்மாண் நுழைபுலத்தையும் அறிந்த ஸ்ரீதிருக்குடந்தை ஆண்டவன் காலக்ஷேபம் என்பது வெறும் வ்யாஜமே. நீர் ஸ்ரீபாஷ்யபங்க்தி(வரிகள்) ஸேவிக்கும் அழகே அழகு செவிக்கின்பம். என்று ஸ்ரீவராஹாசார்யாரைக் கொண்டாடி உகந்ததாக ஸ்ரீ R.R தாரண ஹூ ஆவணி மீ பாதுகாவில் குறிப்பிடுகிறார்.

ஆசார்யனே போற்றிய சிறப்பு

வராஹாசார்யாரின் அறிவுத் தேடல் ஆர்வத்தை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். ஸ்ரீதிருக்குடந்தை ஆண்டவன் ஸன்னிதியில் காலக்ஷேபம் செய்தபோது இரவெல்லலாம் கண்விழித்து க்ரந்தங்களை ஊன்றிப் படித்துக் கொண்டிருப்பார். ஒருநாள் பின்னிரவு சுமார் 2 மணிக்கு ஸ்ரீதிருக்குடந்தை ஆண்டவன் விழித்துப் பார்த்த போது வராஹாசார்யார் க்ரந்தங்களில் ஊன்றியிருப்பதைக் கண்டு வியந்து தமக்கேயுரிய

புன்முறுவலுடன் நாளைக் காலையில் காலக்ஷேபத்தில் என்னிடம் வினாக்களைத் தொடுக்க (என்னை மடக்க) முன்னதாகவே ஸ்ரீகோசங்களைப் பார்க்கிறீரோ என்று அருளியதாக ஸ்ரீ R.R தாரணஹ ஆடிமீ பாதுகாவில் குறிப்பிடுகிறார்.

At arround 2 A.M H.H Woke up to find our Swami deeply engrossed in the Granthams. H.H was obviously pleased. with his trade trademark smile asked him whether the sree kosams of Sri Bhashyam were being studied so deeply to cross him. (i.e H.H)

ஸ்ரீ உ.வே ஆடூர் ஆஸ்ரீ, வித்வான் மாதவாசார்யரும் சுக்ல ஹ ஆடி மீ பாதுகா இதழில் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவனுடைய ஜ்ஞாந விசேஷத்தை அடிக்கடி ச்லாகித்துப் பேசியதுண்டு (பக்கம் 41) என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஆங்கீரஸ ஹ வைகாசி மீ பாதுகாவில் "காலக்ஷேபம் செய்யுங்காலத்தில் ஸ்வாமியின் க்ரஹண சக்தியையும் பலபூர்வபக்ஷங்களைச் செய்வதையும் (வினாக்களைத் தொடுப்பதையும்) கொண்டாடி அடிக்கடி ஸ்வாமியின் பெருமையை அடியோங்கள் பக்கம் ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸாதிப்பதுண்டு. அம்மஹானின் பரிபூர்ண அனுக்ரஹமே ஸ்வாமியை இவ்வளவு பெருமைக்கு உள்ளாக்கியதென்றால் அதிசயோக்தியில்லை. இதே போல் மைசூர் ஆண்டவனிடமும் விசேஷபக்தியுடன் இருந்து ஸ்ரீமத்கீதாபாஷ்யம் காலக்ஷேபம் சிறிது காலம் செய்து அம்மஹானின் க்ருபைக்கும் பாத்ரமானார் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் என்று குறிப்பிட்டுள்ளர்ர்" திருக்குடந்தை ஆண்டவன் நம் வராஹாசார்யாரின் நுண்மான் நுழைபுலச்சிறப்பை பலமுறைப் பாராட்டியுள்ளதாக வித்வான் ஓரத்தி ரகுநந்தனாசார்யார்., வித்வான் உத்திரமேரூர் வாஸுதேவாசார்யார் போன்றோரும் கூறியுள்ளனர்.

தெய்வீகக் கட்டளை

ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் திருமேனி அடிக்கடி ஸரியில்லாமலிருந்த போது ஒருநாள் அவரது கனவில் (1987) ஸ்ரீமுஷ்ணம் வராஹாசார்யார் உமக்கு அடுத்தபடி ஆச்ரமப் பொறுப்பை ஏற்கவல்லவர். அவரிடம் ஒப்படைக்கலாம். நீர் விரைவில் ஸ்ரீவைகுண்டம் வரவேண்டியிருக்கும் என்று ஆசார்யபாதுகைகளின் நியமனம் வந்தது.

In 1987 the divine message from the Padukas to the revered Acharya was that " Srimushnam Varahacharyar is your Successor, nominate him as such. ... You will go shortly to Sri vaikuntham.

(ஸ்ரீ R.R தாரண ஹ ஆவணி மீ பாதுகா பக்கம் 164)

ஆசார்யரின் நியமனம்

பூர்வாசார்ய பாதுகைகளின் நியமனம் வந்தபிறகு ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீமுஷ்ணம் வராஹாசார்யாரிடம் ஸமயம் வரும்போது ஆச்ரமப் பொறுப்பை ஏற்குமாறு நியமித்தார்.

ஸ்ரீ உ.வே. ஆடூர் மாதவாசார்யார் எழுதும் போது ஒரு காலத்தில் இந்த ஆச்ரமப் பொறுப்பு உம்மை வந்து சேரும் அப்படி ஒரு ஸந்தர்ப்பம் வரும்போது விட்டுக்கொடுக்காதே என்று அனுக்ரஹித்தபடி என்று ஆங்கீரஸ ஹ ைவகாசி மீ பாதுகாவில் பக்கம் 10 இல் குறிப்பிட்டுள்ளார்.

The acharya directed him that when the tuive comes he should come forward to protect and preserve the Andavan Ashrama. Parampara - in short take up Acharyakam and become his succecor Sri R.R தாரண ஹ ஆடி மீ ஸ்ரீரங்கநாதபாதுகா பக்கம் 142.

துறவறம்

ஸ்ரீதிருக்குடந்தை ஆண்டவனது நியமனத்தை நிறைவேற்ற வேண்டிய காலம் 1989 இல் ஏற்பட்டது. ஸ்ரீதிருக்குடந்தை ஆண்டவன் பரமபதித்தபிறகு மிகக் குறைந்த காலத்திலேயே. ஸ்ரீமைசூர் ஆண்டவனும் திருநாடலங்கரித்தாயிற்று. இந்நிலையில் ஸ்ரீவராஹாசார்யாரை பொறுப்பை ஏற்குமாறு ஸ்ரீ ஆடூர் ஆஸ்ரி மாதவாச்சார் முதலிய ஆச்ரம சிஷ்யர்கள் ப்ரார்த்தித்தனர். அப்போது ஸ்ரீவராஹாசார்யார் வேலாமூர் அக்ரஹாரத்தில் எழுந்தருளியிருந்தார். அவருக்கு திருநக்ஷத்ரம் 54தான். குமாரர்கள் குமாரத்தி என்று குடும்பம் பெரிதாயிருந்தது. ஆயினும் ஆசார்யநியமனம் கருதியும் ஸம்ப்ரதாயத்தைக் காக்கும் அவாவாலும் எவ்வித ஆக்ஷேபணையும் கூறாமல் துறவறமேற்க ஸ்ரீவராஹாசார்யார் பெரியமனதுடன் முன் வந்தார்.

சிக்கல்

ஸ்ரீ வராஹாசாரியர் துறவறமேற்க இசைந்தாலும் வேலாமூர் மற்றும் சுற்றுப்புறக்ராமமக்கள் இதனை ஏற்கவில்லை. உங்கள் ஆச்ரமப்பொறுப்பை ஏற்க வேறொருவரை நாடுங்கள். இவர் இங்குள்ளபிள்ளைகளுக்கு நன் முறையில் கற்பிக்கிறார் . இவரைப்போக விடமாட்டோம் என்று முரண்டு தர்ணா செய்யத் தொடங்கினர். அந்த அளவுக்கு அப்பகுதி மக்களின் மனங்களில் நம் வராஹாசாரியர் இடம் பிடித்திருந்தார்.

.....in hunreds of new faces turning up as well several hundreds of villagers from all over the area blocked the vehichle and would not allow him to proceed to srirangam.

(ஸ்ரீரங்கநாத பாதுகா தாரண ஐப்பசி ஸ்ரீRR)

they staged dharna protesturg that iyer was rendering great service in teaching the children in the Govt schools in that area. that we should not disturb him from carrying on with his teaching profession and that the asramam should engage some other iyer for this(Eveny brahmin is an iyer for them)

மிக்க ப்ரயாசையுடன் அவர்களைச் சமாதானப்படுத்தி விலக்கி ஸ்ரீவராஹாசாரியரே ஸ்ரீரங்கம் எழுந்தருளினார்.

சுக்ல ஹ்ரு வைகாசி 19 வியாழன் த்வாதசி அசுவனி நடசத்திரத்தில் 1.6.1989 இல் ஸ்ரீமுஷ்ணம் வராஹாசாரியர் ஸ்வாமி இவ்வுலகப்பற்றைநீத்து தமது ஆசார்யன் நியமனப்படி துறவறமேற்கொண்டு ஸ்ரீமத் உபநிஷத் பாஷ்யகாரரது திருநாமமான ரங்கராமாநுஜமுனி என்றதையேற்று ஸ்ரீரங்கராமாநுஜமஹாதேசிகனானார்.

குணநலன்கள்

ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனது ஜ்ஞானம் மிகவும் ஆழமானது. அதைப்போலவே எழுத்தாற்றலும் சான்றோர் உகக்கும் பெருமை வாய்ந்தது. ஸம்ஸ்க்ருதத்தில் சுலோகமியற்றுதல் தமிழில் பாக்கள் இயற்றுதல் இவற்றில ஸ்ரீமதாண்டவனது தனித்திறமை ஈடில்லாதது.

ஒரு சமயம் சதுஸ் சாஸ்த்ர வித்வான் தி.ச.நாவல்பாக்கம் N.S.R. ஸ்வாமி தமது நூல்களுக்கு ஸ்ரீமதாண்டவன் அருளிய ஸ்ரீமுகங்கண்டு வியந்து மகிழ்ந்து அடியேனிடம் ஸ்ரீமதாண்டவனது எழுத்தாற்றலைப்பார்த்தாயா? ஸ்ரீபெரும்பூதூர் மஹாவித்வான் ஆஸூர் பெரிய ராமாநுஜாசாரியரது எழுத்தாற்றலைப்போன்று உள்ளது. நீண்டதொடர் மிகவும் அருமை என்று போற்றிக்கூறினார்.

இசைவல்லமை

ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனது பூர்வாச்ரம தந்தையார் ஸ்ரீ.உ.வே. ஸ்ரீநிவாஸாச்சாரியஸ்வாமி. சிறந்த வேதாத்யயனபரர். அதோடு இசையில் மிக்கநாட்டம கொண்டு அக்காலத்தில் மிக்கப்புகழ்பெற்ற இசைமேதையான டைகர் வரதாச்சாரியிடம் ஸங்கீதம் பயின்றுவந்தார். அவரருகிலேயே இருந்த இளம் வராஹாச்சாரியருக்கும் அதில் ஆர்வமும் பயிற்சியும் ஏற்பட்டது ஸ்ரீபெரும்பூதூரில் பயிலுங்கால் வடமொழியில் ஸ்ரீஹயக்ரீவனைப்பற்றி கீர்த்தனைகளை உருவாக்கிப்பாடிக்காட்டுவார். வழுத்தூர் V.R. ஸ்ரீநிவாஸதீக்ஷிதர் ஸ்ரீமதாண்டனது இசைஞானத்தை குறிப்பிடும்போது ஸ்ரீமதாண்டவன் வடமொழியில் ஸ்ரீதியாகய்யரைப்பற்றி கீர்த்தனைசெய்து வஸந்தராகம் கண்டஜாதி த்ரிபுடதாளத்தில் பாடிக்காண்பித்தாராம். அந்த

கீர்த்தனையில் ராகம் தாளம் போன்றவற்றையும் முத்திரையாகப் பதித்துள்ள பாங்கு போற்றத்தக்கது என்று குறிப்பிடுகிறார்.

மும்பையில் (ப்ரமாதி 1999) திருப்பாவை உபன்யாஸத்தின்போது திருப்பாவை முப்பது பாசுரங்களையும் முப்பது வெவ்வேறு ராகங்களில்பாடி பக்தர்களை மெய்மறக்கச்செய்த ஸ்ரீமதாண்டவனது இசையறிவை மும்பையில் பலர் என்னிடம் பெருமையாகக்கூறினர். முதல்பாட்டான மார்கழித்திங்கள் கல்யாணி ராகத்திலும் இறுதிப்பாசுரம் பைரவி ராகத்திலும் என முப்பது பாடல்களையும் வெவ்வேறு ராகங்களில் பாடியருளினார்

ஸ்ரீ. உ. வே திருக்குடந்தை ராமாநுஜபாட்டராசாரிய ஸ்வாமி இந்நிகழ்ச்சியை அழகாகவிளக்கி எழுதியுள்ளார். ஹேமந்தத்தில் வஸந்தம் என்னும் கட்டுரை ப்ரமாதி-வைகாசி பாதுகா இதழில் காண்க. அவ்வாறே ஆச்ரம ஹரிகதா வித்வான் கல்யாணபுரம் ஆராவமுதாச்சாரியரும் அதே இதழில் எழுதியுள்ளார். சிறந்த இசை CRITIC ஆன சுப்புடு அவர்கள் ஸ்ரீமதாண்டவனது ஆழ்ந்த இசை ஞானத்தை அறிந்து மிகவியப்படைந்ததாக எழுதுகிறார். (தாரண பங்குனி மீ பாதுகா பக்கம் 65)

ஆயுர்வேதஞானம்

ஆயுர்வேதத்தில் சிறுவயதுமுதலே நாட்டம் கொண்ட ஸ்ரீமதாண்டவன் பலநூல்களைப்படித்து அறிந்தார். தம்மை நாடிவரும் பக்தர்கள் தமது நோய்களைக்கூறும்போது தகுந்த எளிய மருந்துவகைகளையும் அவற்றைப் பயன்படுத்தும் முறைகளையும் விளக்கியருளுவார். பலர் இதனால் பயனடைந்து ஆண்டவனை வணங்கி மகிழ்ச்சியுடன் சொன்னவற்றைக்கேட்டிருக்கிறேன்.

அண்மையில் ஹைத்ராபாத் (2004.ஆகஸ்டு.செப்டம்பர்) நகரில் இருந்தபோது சென்னையில் ஒரு மஹானுக்கு சரீரத்தில் ஏற்பட்ட நோயையறிந்து டாக்டர்கள் திகைத்துநிற்க ஸ்ரீமதாண்டவன் எளிய சாஸ்த்ரீய மருந்தை தொலைபேசி மூலம் கூறி அதைப்பயன்படுத்தச்சொன்னதையும் அதிலிருந்து அம்மஹான் குணமடைந்ததையும் நானும் மற்றுமுள்ள சிலரும் நேரில் கண்டு வியந்து மகிழ்ந்தோம்.

ஜ்யோதிஷம்

தமது பூர்வாச்ரம பெரியதகப்பனாரான ஸ்ரீ.உ. வே. திருநாராயணாச்சாரிய ஸ்வாமியின் அனுக்ரஹத்தால் சிறு வயது முதலே ஜ்யோதிஷத்தில் பயிற்சி ஏற்பட்டது. ஸ்ரீபெரும்பூதூரில் வாசிக்குங்காலத்தில் உடன் பயிலும் நெருங்கிய நண்பர்களின் ஜாதகங்களைப் பார்த்து பலன் கூறுவார். தமது ஜாதகத்தைப்பற்றி 1956-57 இல் கூறும்போது எனக்கு ஸந்யாஸயோகம் உள்ளது என்றாவது துறவியாகிவிடுவேன் என்று அடிக்கடி கூறியுள்ளார்.

பசுரக்ஷணம்

பசுக்களைக்காப்பதில் ஸ்ரீமதாண்டவனுக்குள்ள ஈடுபாடு அளவிடமுடியாதது. நாள்தோறும் இருவேளைகளிலும் பசுக்களையும் கன்றுகளையும் ப்ரதக்ஷிணம் செய்து அவற்றிற்கு தவிடு, பிண்ணாக்கு புல் போன்றவற்றைச்சரியாகக்கொடுத்தார்களா? என்று கேட்டறிந்து தம்மெதிரிலேயே ஒழுங்காகக்கொடுக்கச்சொல்லிப்பார்த்து மகிழ்வது வழக்கம். ஹைத்ராபாத்திலும் மும்பையிலும் நான் கண்ட உண்மையிது. பசுக்களுக்கு ஏதேனும் நோய் ஏற்படும் போது எளிய மருந்து மற்றும் உணவுகளைக்கூறி வாங்கிவரச்செய்து தாமே அருகிலிருந்து அவற்றிற்களிக்கச் செய்து அவை நோய் நீங்கி இருந்ததையும் கண்டு மகிழ்வது வழக்கம்.

गोब्राह्मणेभ्यः शुभमस्तु नित्यं என்று நாள்தோறும் கூறுகிறோமன்றோ.

ஸௌசீல்யம்

அப்படியென்றால் என்ன? மிக உயர்ந்தவர்கள் மிகத்தாழ்ந்தவர்களிடம் வேறுபாடின்றி கலந்து பழகுதல் ஸௌசீல்யம் என்பர். महतो मन्दैस्सह नीरन्ध्रसंश्लेशः.

ஸ்வாமி தேசிகனது யாதவாப்யுதயத்திற்கு உரையிட்ட ஸ்ரீஅப்பய்யதீக்ஷிதர் वल्लवीजनवल्लभं என்ற பகுதிக்கு உரையிடுகையில் இதனை விளக்கிக் கண்ணபிரானிடம் இவ்வுயர்பண்பைப் பொருத்துகிறார்.

निषादानां नेता என்று தொடங்கும் தயாசதக சுலோகத்தில் இப்பண்பை ஸ்வாமி தேசிகன் விளக்குவதைக்காணலாம்.

ஸ்ரீமதாண்டவன், தம்மைநாடிவருவோர் ஏழையாயினும், செல்வந்தராயினும் ஆச்ரமத்தைச்சேர்ந்த சிஷ்யராயினும் அல்லராயினும் வேற்றுவர்ணத்தனராயினும் வேறுபாடின்றி புன்முறுவலுடன் நலம் வினவி அருளும் உயர்பண்பு வேறெங்கும் காண்பதரிது.

அறிவைப்போற்றுதல்

அறிஞர்களை வரிசையறிந்துபோற்றுவதில் ஸ்ரீமதாண்டவனது திறமை அஸாதாரணமானது. அறிஞர்களைத்தேர்ந்தெடுத்து பட்டமளித்தல், பெருந்தொகை பொற்கிழிவழங்கல், (வெள்ளிப்பாத்திரம் வழங்குதலோடு) போன்றவற்றை கடந்த இரண்டாண்டுகளாக ஸ்ரீமத்திருக்குடந்தை ஆண்டவன் திருநக்ஷத்திரமான பங்குனி

புஷ்யத்திலும் வைகாசி திருவாதிரையிலும் செய்து வருவதை பலரும் பாராட்டுகின்றனர்.

இந்தியா முழுவதிலும் புகழ்பெற்றவித்வான் ஒருவர், அவருக்கு நிகரான வயதுடையோர் மற்றும் இளைவோர் பலர் பாரத ராஷ்ட்ரபதியின் விருதினைப்பெற்றுவிட்டனர் இந்த முதிர்ந்த வித்வானுக்குக் கிடைக்கவில்லை. அந்த வித்வானுக்கோ இத்தகைய பட்டங்களில் நாட்டமில்லை. எனினும் ஸ்ரீமதாண்டவன் தக்கவர் மூலம் அந்த உயர் விருது அந்த முதிர்ந்த வித்வானுக்குக்கிடைக்கச்செய்தார். அந்த வித்வான் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்தைச் சேர்ந்தவருமல்லர்.

சிற்பக்கலையில் அறிவு

இக்கலையிலும் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவனுக்கு மிக்க ஈடுபாடும் செயல்திறனுமுண்டு . மரங்களிலும் பஞ்சலோஹங்களிலும் ஸாளிக்ராம சிலைகளிலும் உருவங்களைச்செய்துள்ள திறமை வியத்தற்குரியது.

மாமல்லபுரம் சிற்பக்கல்லூரியில் பயின்று முடித்த வரதராஜன் போன்றவர்கள் ஸ்ரீமதாண்டவனை தண்டம் ஸமர்ப்பிக்கவந்தபோது அவர்களை அக்கலைப்பற்றிய நுட்பமான கேள்விக்கணைகளால் துளைத்தெடுத்ததை கண்டு ஸ்ரீஆண்டவனது பல்நோக்கறிவை அவர்கள் மிகவும் போற்றினார்.

வரிசையறிந்து கௌரவிப்பதில் ஸ்ரீமதாண்டவனுக்கு நிகரேயில்லை. ஸ்ரீமதி M.S. சுப்புலக்ஷ்மி ஸ்ரீ T.N.க்ருஷ்ணன் ஸ்ரீ T.N. சேஷகோபாலன் கல்யாணபுரம் ஹரிகதா வித்வான் ஸ்ரீ ஆராவமுதாச்சாரியார் ஸ்ரீ T.K.V. ராமாநுஜாசார்யலு , ஸ்ரீமதி R. வேதவல்லி, ஸ்ரீமதி ஸுதாரகுநாதன் , ஸ்ரீலால்குடி ஜெயராமன் ஸ்ரீவேலூர் ராமபத்ரன் போன்ற இசைக்கலைஞர்கள் பல்வேறு ஸமயங்களில் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனிடம் விருது பெற்றவர்கள். இத்தகைய ஜ்ஞானி யின் திருக்கேரத்தால் விருதுபெற்றதை பாக்யமாகப்போற்றி பாராட்டினர்.

தற்கால அறிவியலறிவு

2004 நவம்பரில் அடியேன் ஸ்ரீமதாண்டவனுடன் மும்பையில் தங்கியிருந்தேன். டோம்பிவிலி ஆச்ரமத்திலிருந்து கோரேகான் என்னும் பகுதிக்கு ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியாயிற்று. அங்கு தென்னிந்தியர்கள் நடத்தும் சிறந்தக்கல்விக்கூடமான மிகப்பெரிதான விவேக் வித்யாலயத்திற்கு அவர்களது ப்ரார்த்தனையையேற்று எழுந்தருளி அங்குள்ள ஆசிரியர்கள், நிர்வாஹிகள் மாணாக்கர்கள் ஆகியோரை அனுக்ரஹித்தாயிற்று. அங்கு டோலோத்ஸவம் முடிந்த பிறகு கூடியிருந்த மாணாக்கர் ஆசிரியர் பொதுமக்களிடையே வேதவிஜ்ஞானம் மற்றும்

இன்றைய விஜ்ஞானம் சிறப்பாக அணு ஆராய்ச்சி பற்றி சுமார் 40 நிமிடங்கள் மிக அழகாகவும் தெளிவாகவும் உபன்யஸித்தாயிற்று. இந்த அழகிய உபன்யாஸத்தை அங்கிருந்த அட்வகேட் ஸ்ரீ K.R. ஐயங்கார் என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். ஸ்ரீமதாண்டவனது அறிவியல் அறிவை அனைவரும் பாராட்டினர்.

மனிதநேயம்

மனிதநேயம் மிகவும் அருகிவருகிறகாலம். அவரவர் சுயநலநாட்டங்கொண்டு திரியும் காலமிது. இம்மனிதநேயம் என்னும் உயர்பண்பு ஸ்ரீமதாண்டவனது குருதியில் ஊறிக்கிடக்கும் பண்பு. அனைவருக்கும் இயன்றவரை உதவவேண்டும். இதில் வேண்டியவன் வேண்டாதவன் என்ற பாகுபாடு கூடாது என்ற உயர் நோக்கம் ஸ்ரீமதாண்டவனிடம் குடி கொண்டுள்ளது.

अयं निजः परोवेति गणनालघुचेतसाम् ।
उदार चरितानांतु वसुधैवकुटुम्बकम् ।।

இதற்கோர் எடுத்துக்காட்டைச்சுட்ட விரும்புகிறேன். 1955 ஸ்ரீபெரும்பூதூரில் வித்வான் வீராபுரம் சடகோபாச்சாரியார் தாயார் பரமபதித்துவிட்டார். சடகோபாச்சாரியாரின் பொருளாதாரநிலை அப்பொழுது மிகமிகத்தாழ்ந்திருந்தது. கைங்கர்யத்தை எப்படிச்செய்வது என்று ஏங்கினார். இந்நிலைகண்டு இரங்கிய ஸ்ரீவராஹாசாரியர் யாருடைய தூண்டுதலுமின்றி ஸ்ரீபெரும்பூதூர் அருகிலிருந்து சுமார் 6,7கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கிராமங்களுக்குச் சென்று அங்குள்ளவர்களிடம் நிலைமையைச் சொல்லி அவர்கள் அளித்த நெல், அரிசி போன்ற தான்யங்களைத்தலையில் சுமந்து வந்து கொடுத்து உதவிய உயர்பண்பை ஸ்ரீசடகோபாசாரியார் அனைவரிடமும் வியந்து கூறுவார். பைராகி மடத்தைச்சேர்ந்த ஸ்ரீநந்தகிசோர் போன்றவர்களிடமிருந்து ஓரளவு ரூபாய்களையும் பெற்று உதவிய செயல் அங்குள்ளவர் அனைவராலும் போற்றப்பட்டது. அன்று ஸ்ரீவராஹாசாரியருக்கு 19 திருநக்ஷத்ரம் முடிந்து இருபதாவது நடைபெற்றுக்கொண்டிருந்தது. இது அடியேன் நேரில் அனுபவித்த உண்மையாகும்.

பற்றற்றநிலை

அன்மையில் (2004-அக்டோபர்-நவம்பர்) சில நாட்கள் மும்பையில் ஸ்ரீமதாண்டவனோடு தங்கியிருந்தேன் . அப்போது தமிழகத்தைச்சேர்ந்த சிறந்த செல்வந்தர் ஒருவர் ஸ்ரீமதாண்டவனை ஸேவிக்கவந்தார். அவர் ஸ்ரீவைஷ்ணவரல்லர். அப்போது அவர் வெளியிலிருந்த பலரிடம் பல ஸ்வாமிகளை நான் ஸேவித்து விட்டேன் அவர்கள் விரும்பியவாறு பணத்தையும் ஸமர்ப்பித்தேன் ஆனால் இந்த ஆண்டவன் ஸ்வாமி எதையும் கேட்பதில்லை. நானே கேட்டாலும் உன்

விருப்பப்படி செய் என்கிறார். இவர் ஒரு வித்தியாஸமான ஸாமியாராகப்படுகிறார் இது வியப்பாக உள்ளதே என்றார். அருகிலிருந்த அடியேனும் அவருக்கு ஒரு யோசனைக்கூறியுள்ளேன்- அதை அவர் நிறைவேற்றுவதாக மகிழ்வுடன் கூறினார். ஓரிரு மாதங்களில் அவர் அதை நிறைவேற்றுகிறாரா என்று பொறுத்துப்பார்ப்போம்.

வேதரக்ஷணமும்- அன்னதானமும்

பரத்வாஜமஹர்ஷி மரபினரானதால் இவற்றில் ஈடுபாடு ஏற்பட்டது போலும். ஸ்ரீரங்கம், காஞ்சி, திருப்பதி, ,திருச்சானூர், திருவஹீந்திரபுரம், வடுவூர், போன்ற இடங்களில் ஸ்ரீமதாண்டவன் ஏற்படுத்தியுள்ள வேதபாடசாலைகள் வேதவித்தையில் ஸ்ரீமதாண்டவனுக்குள்ள ஆர்வத்தைக் காட்டுகிறது. வேதவெற்பென்று ஸ்வாமி தேசிகனால் போற்றப்பட்ட திருமலையில் நாள்தோறும் வரும் பக்தர்களுக்கு ஸ்ரீபகவத் பாஷ்யகார ததீயாராதனையெனும் அறக்கட்டளை ஏற்படுத்தி சிறந்த அன்னதானம் வழங்கல்

सकृदवक्षेणात्तत्क्षणात्

प्रकृष्टबहुपातकप्रशमहेतु வான ஸேது ஸ்நாநத்திற்கு வரும் யாத்ரீகர்களுக்கு திருப்புல்லாணி ஸ்ரீதேசிகன் ஸன்னதியில் சிறந்த பகவன் நிவேதித அன்னம் வழங்கல்.

நம்மாழ்வார் அவதரித்த ஆழ்வார்திருநகரி ஸ்வாமிதேசிகன் அவதரித்த ஸ்ரீகாஞ்சி போன்ற திவ்யதேசங்களில் உத்ஸவ காலங்களில் சிறந்த ததீயாராதனை போன்ற ஏற்பாடுகள் அன்னதானத்தில் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுக்குள்ள ஈடுபாட்டை விளக்கவல்லவை.

பூர்வாசார்யபக்தி

आचार्यादिह देवतां समधिकामन्यां न मन्यामहं

ஏற்றி மனத்து எழில் ஞானவிளக்கை இருளனைத்தும்
மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறுமாயனும் காணகில்லான்
போற்றியுகப்பதும் புந்தியிற்கொள்வதும் பொங்குபுகழ்
சாற்றிவளர்ப்பதும் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே.

अशिथिलगुरुभक्तिः तत्प्रशंसादिशीलः
प्रचुरबहुमतिः तद्वस्तु वास्त्वादिकेऽपि

இவை ஸ்வாமி தேசிகனது அருள்வாக்காகும்.

நமது ஸமப்ரதாயத்தில் உபநிஷதங்களுக்கு உரை(பாஷ்யம்)யிட்டும் மற்றும் பல்வேறு நூல்களை இயற்றியும் ஷஷ்டிப்ரபந்த நிர்மாதா என்றும் புகழ் பெற்ற ஆசார்யரான ஸ்ரீரங்கராமாநுஜமுனியின் அவதாரஸ்த்தலத்தை சீர்படுத்தியது

ஸாக்ஷாத் ஸ்வாமி என்றே பெருமையுடன் அழைக்கப்படும் வேதாந்தராமாநுஜ ஸ்வாமி நினைவாக வடுவூரில் மண்டபம்.

திருக்குடந்தை தேசிகனது 300ம் ஆண்டு விழாவைச் சிறப்பாக நடத்தி அவரது மூன்று சிஷ்யர்களுடன் திருவிக்ரஹப்ரதிஷ்டை அவரது அவதாரஸ்தலமான ராயம்பேட்டையில் செய்தது.

வழுத்தூரில் ஸ்ரீவேதாந்தராமாநுஜஸ்வாமி மண்டபம் ஆகியவை ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனது பூர்வாசார்யபக்தி வெளிப்பாட்டின் விளைவாகும்.

விசாலஹ்ருதயம் - (பரந்தமனப்பான்மை)

இரண்டாண்டுகளுக்கு முன்பு அடியேன் திருப்புல்லாணியில் ஸ்ரீமதாண்டவனை தண்டம் ஸமர்ப்பிக்கப்போயிருந்தேன். அப்போது ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீமணவாளமாமுனிகள் அவதரித்த ஸ்தலம் சிக்கல் கடாரம் அருகில்தான் உள்ளது ஆசார்யர்கள் அவதரித்தஸ்த்தலத்தை நன்கு பராமரிக்கவேணும், நான் அங்கு திருவாராதனம் ஒழுங்காக நடைபெற பண உதவி செய்துள்ளேன் நீயும் வா போய் பார்த்து வரலாம் என்று அடியேனையும் மற்றும் சிலரையும் அழைத்துக்கொண்டு சிக்கல் கடாரம் எழுந்தருளி அவதாரஸ்தலத்தை நன்கு பராமரிக்கும்படி கூறி ஏற்கனவே இரண்டு மூன்று முறை பண உதவி செய்திருந்தாலும் இப்போதும் பண உதவி செய்தாயிற்று ஏற்கனவே கொடுத்ததுபோக. வேற்றுஸம்ப்ரதாயத்தைச்சேர்ந்த ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனே பரந்த மனப்பான்மையுடன் செயல்படுவதை கண்டு வியந்து அடியேனிடம் பலமுறைகூறிய காரைகுடி லக்ஷ்மீபுர அக்ரஹாரத்தைச்சேர்ந்த ஸ்ரீக்ருஷ்ணய்யங்கார் (தென்னாசார்யஸம்ப்ரதாயத்தவர்) சிக்கல் கடாரத்தில் ஸ்ரீமணவாளமாமுனிகள் அவதாரஸ்தலத்தில் திருவாராதனம் செய்பவருக்கு என்று அருகிலேயே ஒரு வீடும் கட்டிக்கொடுத்துள்ளார். எங்களுடன் அங்கு வந்த திருப்புல்லாணியைச் சேர்ந்த தென்னாசார்யஸம்ப்ரதாயத்தவரனைவரும் ஸ்ரீமதாண்டவனது செயலைப்போற்றினர்.

நினைவாற்றல்

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனது நினைவாற்றல் அபாரமானது. ஒருமுறை பார்த்துவிட்டால் அவரைப்பற்றியும் அவரது குடும்பத்தாரைப்பற்றியும் விசாரித்தறிவது வழக்கம். பல்லாண்டுகள் கழித்து அவரைச்சேர்ந்தவர்கள் முதன்முறையாக தண்டம் ஸமர்ப்பிக்கும் போது நீ இன்னார் உறவினன்தானே என்று விவரமாகக்கேட்டாகும்.

ஸாளக்ராமசிலைகள்

ஸாளக்ராம சிலைகளில் எப்பொழுதும் திருமால் நித்யவாஸம் செய்வதாக பெரியோர் பகர்வர். ஏறக்குறைய 360 உயர்ந்த பல ஸாளக்ராமங்கள் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமஸ்வீகாரத்திற்குப்பிறகு அவரது திருவாராதனத்தில் எழுந்தருளப்பண்ணப்பட்டுள்ளன. மத்ஸ்யமூர்த்தி, ஹயக்ரீவமூர்த்தி, நரஸிம்மன் , ஸந்தான கோபாலன் , மேருநாராயணன் , ப்ரக்ருதி நாராயணன் என அவை பலவகைப்படும். திருவாராதனகாலத்தில் திருமஞ்சனம் செய்யுங்கால் பக்தியுடனும் மனப்பூரிப்புடனும் அவற்றை பக்தர்களுக்கு எடுத்துக்காட்டி மகிழ்விப்பது ஸ்ரீமதாண்டவனது வழக்கம். ஆச்ரமத்தின் மேன்மைக்கு ஏறக்குறைய 26 க்ஷேத்ரங்கள் உள்ள ஸாளக்ராமங்களின் அனுக்ரஹம் முக்கியகாரணமெனில் மிகையன்று.

நூல்நிலையமும் நூல்வெளியீடுகளும்

அறிவுத்தேடலில் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனுக்குள்ள ஆர்வத்தை ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன், ஸம்ஸ்க்ருதம், தமிழ், தெலுங்கு என பலமொழிகளிலும்ஏராளமான நூல்கள் ஸ்ரீமதாண்டவன் மேற்பார்வையில் வாங்கப்பட்டு நூல்நிலயத்தை அலங்கரிக்கின்றன.

பின்வரும் ஸந்ததியினருக்கு நமது பாரம்பரியமிக்க நூல்கள் பயன்படவேண்டுமென உயர்நோக்கோடு பலநூல்கள்-பல்வேறு துறைகளில் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீஆண்டவனது நியமனப்படி வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றுள் சில, நமது ஸ்ரீபாஷ்யகாரரின் ஸித்தாந்தத்தை அறியவிரும்புவோர்க்கு பெரிதும் உதவும் யதீந்த்ரமததீபிகை என்னும் ஸம்ஸ்க்ருதநூலை சிறந்த அறிஞரான ஸ்ரீ v.k. ராமாநுஜாசார்ய ஸ்வாமியின் சிறந்த தமிழ் விளக்க உரையோடு வெளியிட்டது. அந்த ஸ்வாமி மூலமாகவே வேதங்களில் கூறப்பட்ட யாகாதி கர்மாக்களைப்பற்றி எளிமையாக தமிழில் விளக்கும் ச்ரௌதம் எனும் நூலை வெளியிட்டது.

ஆயுர்வேதத்தில் ஸுச்ருத ஸம்ஹிதை எனும் அரிய நூலை அறிஞர் நடாதூர் ஸ்ரீபாஷ்ய ஸிம்மாஸனம் சிருங்கட்டூர் S.N. ஸ்ரீராமதேசிகாச்சாரியர் மூலம் வெளியிட்டது.

ஸ்வாமி தேசிகனது வாதநூலான சததூஷணீ எனும் நூலுக்கு எளிய ஸம்ஸ்க்ருத உரை எழுதத்தூண்டி உதவி மஹாவித்வான் N.S.R. ஸ்வாமி எழுதிய உரையுடன் வெளியிட்டது.

திருக்குடந்தை தேசிகன், ஸாக்ஷாத்ஸ்வாமி ஆகியோரது சிறந்த உரையான வாராஸ்வாதினீ உரையுடனும் ஸாரப்ரகாசிகா என்ற ஸம்ஸ்க்ருத உரையுடனும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸார நூலை வெளியிடல்.

உரையே இல்லாமல் வெளிவந்து கொண்டிருந்த தேசிகனது பரமத பங்கம் எனும் சிறந்த கடின தமிழ் நூலுக்கு பல ஆண்டுகளுக்கு முன்பு சிறந்த மணிப்ரவாள நடை உரையெழுதி வெளியிட வசதியின்றி வருந்தியவாறே பரமபதித்த காஞ்சி ஸ்ரீஅய்யா ஸ்ரீக்ருஷ்ணதாததேசிகனது உரையை வெளியிடல்

ஸ்ரீபாஷ்யகாரரது ஸ்ரீபாஷ்யத்தை ச்ருதப்ரகாசிகாச்சாரியரின் ச்ருதப்ரதீபிகா உரை, மற்றும் ஸ்ரீஅப்பய்யதீக்ஷிதரின் நயமயூகமாலிகை ஸ்ரீஉபநிஷத் பாஷ்யகாரரின் சாரீரக சாஸ்த்ரார்த்த தீபிகை ஆகியவற்றோடு வெளியில்

சிறந்த தமிழறிஞரான ஸ்ரீT.V. கோபாலய்யர் மூலம் புத்தமித்திரனாரின் சிறந்த இலக்கண நூலான வீரசோழியம் எனும் நூலை உரையுடன் வெளியிடல் போன்றவற்றால் பின்வரும் ஸந்ததியினர்பால் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுக்குள்ள அருட்பார்வையை உணரலாம்.

ஆச்ரமவளர்ச்சி

ஸ்ரீ காஞ்சீயில் ஆச்ரமத்தையொட்டி கல்யாணமண்டபம் ஸ்ரீஆழ்வார் திருநகரியில் மிகப்பெரிய ஆச்ரமம் , திருவஹீந்திரபுரம் ஸ்ரீஒப்பிலியப்பன் ஸன்னதி ஸ்ரீமுஷ்ணம் போன்ற இடங்களில் கல்யாணமண்டபங்கள், ஸெகந்திராபாத் நகரில் காப்ரா ஏரிக்கரையருகில் விசாலமான ஆச்ரமம், அபரகார்யங்கள் செய்ய சிறந்த தீர்த்தவசதியுடன்கூடிய விஷ்ணுபாதம் எனும் கட்டடம் , திரு சானூரில் மிகப்பெரிய கல்யாண மண்டபம், வேதபாடசாலை போன்றவை ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் ஆச்ரம ஸ்வீகாரம் செய்தபிறகு ஏற்பட்ட ஆச்ரம வளர்ச்சிப்பணிகளாம். மேலும் ஸ்ரீரங்கத்தில் சிறந்த கலை அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு நன் முறையில் செயல்பட்டு வருகிறது மும்பை டோம்பிவிலி பாலாஜி மந்திரையொட்டி பெரிய கல்யாண மண்டபத்திற்கு ஸ்ரீமதாண்டவன் திருக்கைகளால் பூமிபூஜை செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை:-

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் பெருமைகளை எழுதிக்கொண்டே போகலாம்

சுமார் 12 வயது முதல் அடியேன் நெருக்கமாகப்பழகிவருகிறேன். அன்றைய தினம் முதல் இன்றுவரை அடியேன்பால் ஒரேமாதிரியான அன்பு, அனுக்ரஹம் உள்ளதைக்கண்டு மட்டற்றமகிழ்ச்சியடைகிறேன். அடியேனுடன் அடியேன் கிராமமான கொத்திமங்கலத்திற்கும் சிலமுறை வாசிக்குங்காலத்தில் எழுந்தருளியுள்ளார் . அடியேனது சிறிய மாதாமஹனான நாவல்பாக்கம் யஜ்வா தி.ச.ச. நாராயண தாததேசிகன், மதுராந்தகம் ஸ்வாமி போன்ற மஹான்களின் அனுக்ரஹத்தை சிறுவயதிலேயே பெற்ற மஹான் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீஆண்டவன் ஸ்வாமி. ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதிபயங்கரம் அண்ணங்கராச்சார்யஸ்வாமியுடன் பூர்வாச்ரமத்தில் ஸ்ரீமுஷ்ணம் ஸ்வாமி நெருக்கமாகப்பழகி அவரது முழு அன்புக்கு உரியவராயிருந்தார்

தமிழாசிரியராகப்பணியாற்றிய போது பள்ளிக்கல்வி இயக்குனராயிருந்த பத்ம ஸ்ரீநெ. து சுந்தரவடிவேலு அவர்களின் பாராட்டை நேரிடையாகப்பெற்ற பெருமை ஸ்ரீமுஷ்ணம் வராஹாச்சாரியருக்கு உண்டு.

இங்கு ஒரு விஷயத்தை அவசியம் சுட்டிக் காட்ட விழைகிறேன். அடியேன் தகப்பனாரது ப்ரபிதாமஹன் கொத்திமங்கலம் அப்பாஸ்வாமியும் வைராக்ய நிதியான ஸ்ரீமத் பெரியாண்டவனும் (பூர்வாசிரமத்தில்) ஷட்டகர்கள். இருவருக்கும் நாவல்பாக்கம் ஏழுகரை வகயராவைச் சேர்ந்த குடும்பத்திலேயே விவாஹம். அதோடு இரு ஸ்வாமிகளும் பால்யம் முதல் மிகவும் அந்தரங்கர்கள் என்பர். திருமலை யாத்ரையை இரு ஸ்வாமிகளும் சேர்ந்தே நடத்தினர் என்று முன்னோர் அருளியதை அடியேன் ஆசாரியனது சதாப்தி மலரில் (1987) குறிப்பிட்டுள்ளதை இங்கும் சுட்டிக் காட்ட விழைந்தேன்.

அன்பர்கள் கடமை

கூட்டுப்ரார்த்தனைக்கு சிறந்த பலன் உண்டு என்பதை அனைவரும் அறிவர். அன்பர்கள் அனைவரும் கூடி ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் நமது ஸம்ப்ரதாயம் மேன்மேலும் தழைத்திட திருமேனி பாங்குடன் பல்லாண்டுகள் இந்நிலவுலகில் எழுந்தருளியிருக்குமாறு எம்பெருமானை ப்ரார்த்திப்போமாக. அடியேன்பால் மிக்க அனுக்ரஹத்துடன் மஹாவித்வான் ஆச்ரம ஸ்ரீகார்யம் நரஸிம்ஹராகவாசாரியர் ஸ்வாமி அடியேனை ஸ்ரீமதாண்டவனது சரித்ரத்தை எழுதுமாறு பணித்ததை சிர மேற்கொண்டு இதை எழுதினேன். தொடர்பிழை எழுத்துப்பிழை போன்றவற்றை பொறுத்துக்கொள்ளுமாறு அன்பர்களை வேண்டி அமைகிறேன்.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸவிசேஷாத்வைதத்தின் வைசிஷ்ட்யம்

(ஸ்ரீ ஸுதர்சனன்)

"விசிஷ்டாத்வைதம்" என்று சொல்லப்படும் இந்த ஸித்தாந்தத்தின் உண்மையான பெயர் ஸவிசேஷாத்வைதம் தான். விசிஷ்டம், ஸவிசேஷம் இரண்டும் ஸமானம் தான். ஆனால் "விசிஷ்டஞ்ச விசிஷ்டஞ்ச விசிஷ்டே, தயோரத்வைதம்= விசிஷ்டாத்வைதம்" என்கிற விவரணம் போதுமானதல்ல. "ஸவிசேஷம்"என்று கூறினால், விசேஷம் என்றால் எவை? என்கிற கேள்விக்கு, பதில் - குணம், விக்ரஹம், விபூதி மூன்றும் அர்த்தம். குணங்களில் பகவானின் ஸகல கல்யாண குணங்களெல்லாம் அடங்கும். விக்ரஹம் என்றால் திவ்யமங்கள விக்ரஹம். இதைதான் சுபாச்ரயம் என்பர். விபூதி என்றால் நித்யவிபூதி, லீலா விபூதி இரண்டும் அடங்கும். "பாதோஸ்ய விச்வா பூதானி" என்பது தான் லீலாவிபூதி. "त्रिपादस्यामृतं दिवि" என்பது தான் நித்யவிபூதி. இதையே त्रिपाद्विभूति என்றும் கூறுவர். त्रिपाद्विभूति महानारायणोपनिषत् என்கிற ஒரு உபநிஷத்து உள்ளது. ஆக चिदचिद्विशिष्ट இத்யாதி விவரணங்களெல்லாம் लीलाविभूतியில் அடங்கும். ஆகையால் सविशेषाद्वैतम् என்கிற பதம் தான், निर्विशेषाद्वैत ஸித்தாந்தத்திற்கு நேர் எதிரான ஸித்தாந்தமானது என்பதை பகவான் ராமானுஜர் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் விஸ்தாரமாகக் கூறியுள்ளார்.

மற்ற எல்லா ஸித்தாந்தங்களைக் காட்டிலும் இந்த ஸித்தாந்தத்தில் தான் ஆசரணம் (**practical**) என்று சொல்லப்படும் ஸாதன பாகமும், கொள்கைகள் (**Theory**) என்று சொல்லப்படும் தத்வங்களைக் கூறும் பாகமும் உள்ளன என்பதை ப்ரத்யக்ஷமாகக் காணலாம். வடமொழியிலுள்ள நூல்களெல்லாம் தத்வபாகத்தைச் சேர்ந்தவை. மணிப்ரவாள மொழியிலுள்ள திவ்யப்ரபந்தங்கள் முதலான எல்லா நூல்களும் ஆசரணத்திற்கு சேர்ந்த ஸம்ப்ரதாய பாகத்திற்குச் சேர்ந்தவை. இங்குதான் வடகலை, தென்கலை என்ற பிரிவு ஆரம்பமாகிறது. இதையாதாரமாக வைத்துக்கொண்டுதான் ஸ்ரீபாஷ்யகாரர் 74ஸிம்ஹாஸனாதி பதிகளை ஏற்படுத்தும் போது சிலரை உபயஸிம்ஹாஸனாதி பதிகளாகவும், சிலரை ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனாதிபதிகளாகவும், சிலரை பகவத் விஷய ஸிம்ஹாஸனாதிபதிகளாகவும் வ்யவஸ்தை செய்தார். இப்பொழுது அதிகமாக ப்ரசாரத்திலுள்ள இருகலையைச் சேர்ந்த குருபரம்பரையின் மூலபுருஷரிருவரும் உபயஸிம்ஹாஸனாதிபதிகள்தான், ஸந்தேகமில்லை. ஆனாலும், ஆசார்ய பரம்பரையில் வந்த சில மந்தாதிகாரிகளால் இவற்றிலும் பக்ஷ பாகங்கள் துரத்ருஷ்ட வசமாகத் தோன்றியுள்ளன. முக்யமாக, ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீநம்பிள்ளையின்

காலக்ஷேபகோஷ்டி மற்றும் காஞ்சியில் ஸ்ரீஅம்மாள் அவர்களின் காலக்ஷேப கோஷ்டி காலத்தில் சிறிதளவு ஸம்ப்ரதாய பேதம் ஏற்பட்டதாகத் தெரியவந்தாலும், அதுவளரவில்லை. ஸ்ரீநம்பிள்ளையின் காலக்ஷேபகோஷ்டியில் நடந்த விஷயங்களை, அவரின் சிஷ்யரான வடக்குத் திருவீதிப்பிள்ளை எழுதிவைத்திருந்து, கடைசியில் அதை ஸ்ரீநம்பிள்ளைக்குக் காட்டியதாகவும், அதைப்பார்த்த ஸ்ரீநம்பிள்ளையவர்கள் மிகவும் உகந்து "இது ச்ருதப்ரகாசிகை போன்றுள்ளது. ஆனாலும் "ரஹஸ்ய விஷயங்களைப் பட்டோலைப்படுத்த வேண்டாம்" என்று ஸ்ரீபாஷ்யகாரரின் நியமனமாகியுள்ள படியால், இதை நீர் ப்ரகாசப்படுத்த வேண்டாம், கரையானுக்குக் கொடுத்துவிடும்" என்று நியமித்ததாகவும் பின் பழகியஜீயர் குருபரம்பரையிலுள்ளது. ஆனால் பிறகு ஸ்ரீபிள்ளை லோகாசாரியாரால் சில ரஹஸ்யவிஷயங்கள் எழுதப்பட்டபடியால், வேறு விதியில்லாமல் ஸ்வாமி தேசிகனும் ரஹஸ்யத்ரயஸாரங்களை எழுதும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. இக்காலத்தின், கரையானுக்குக் கொடுக்காமல் மறைத்துவைத்திருந்த முப்பத்தாராயிரப்படியை வெளியிலே எடுத்து பிரசாரத்துக்கு விட்டுவிட்டனர். இந்தகாலத்தில்தான் அனேக விதமான மோதல்கள் ஏற்பட்டதாகச் தெரிகிறது. "அஷ்டாதச பேத விசார:" முதலான பழைய நூல்கள் இதை உறுதிப் படுத்துகின்றன. ஆனாலும் இது ஸம்ப்ரதாயத்துக்கு மட்டும் ஸம்பந்தப்பட்டதாகத் தெரிகிறதே தவிர, பாத்ரம் (ராமானுஜ தயாபாத்ரம்) புண்ட்ரம் (திருமண்காப்பு பேதம்) இரண்டும் இந்த காலத்தில் வந்திருப்பதற்கு ஸம்பவமே இல்லை. ஏனெனில், ஜீயரின் நித்யத்தில் புண்ட்ரபேத சூசனையே கிடையாது. ஸ்ரீ தேசிகனின் நூல்களிலும் இது இல்லை. ஆகையால், அக்காலத்தில் இருவிதமான புண்ட்ரம் இருக்கவே இல்லையென்று தான் நிச்சயம் செய்துள்ளனர். இங்ஙனமே,பாத்ரவிஷயமும் ஸ்ரீஜீயருக்கே நேராக ஸம்பந்தப்பட்டிருப்பதால், அது முதலில் வருவதற்கு ப்ரஸக்தியே இல்லை. ஆகையால் சாத்துமுறையில் "ஸ்ரீமன் ஸ்ரீரங்க ஸ்ரீயமனுபத்ரவாமனுதினம் ஸம்வர்தய" என்பதோடு சாத்துமுறை முடிந்திருக்க வேண்டும். பிற்பட்ட பகுதிகள் ஸ்ரீஜீயர்காலத்திற்குப் பின்புதான் நுழைந்திருக்க வேண்டும், முதலில் இருக்கவே இல்லை. ஸ்ரீகாஞ்சீ வரதர் சன்னதியில், தாயார் ஸன்னதிக்குப் போகும் வழியில், பக்கத்திலுள்ள ஆத்தான் ஜீயர் சாஸனமும் இதையே த்ருடப்படுத்துகிறது.

ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசாரப் பத்திரிகை அல்லது ஸங்கேத பத்திரிகை என்கிற ரஹஸ்யமான பிரசுரமும் இதையெல்லாம் நன்கு நிரூபிக்கின்றன. ஆக, வடகலை-தென்கலை ஸம்பிரதாய பேதம் நம்பிள்ளை காலத்தில் ஏற்பட்டது போல், ஊர்த்வ புண்ட்ர பேதங்கள் பிற்பட்டவைதான் (ராமானுஜதயாபாத்ரதத்வம் என்கிற சிறுநூலில் கூறப்பட்டுள்ள ராஜ உடையார் சாசனத்தில் இந்த அம்சமுள்ளது) பிரிட்டீஷாரின் ஈஸ்ட் இந்தியா கம்பனி காலத்தில், ஆர்க்காட் நவாப் காலத்திற்குப் பிறகு நம் தேவஸ்தானங்களை நம்மவர் வசம் அவர் ஒப்புவிக்க ஆரம்பித்த பிறகுதான், கோவில்களையெல்லாம் ஆக்ரமித்து தங்கள் வசம் எடுத்துக் கொள்ள ஒரு ரஹஸ்ய

கும்பல் கட்டுப்பாட்டுடன் பிரயத்னப்பட்ட பிறகுதான் இப்போதுள்ள வடகலை - தென்கலை பேதம் அல்லது ஊர்த்வபுண்ட்ர பேதம் வளர்ந்தது.

இதையெல்லாம் பூரணமாக விரோதித்து, பழைய முறையை ஸ்தாபிப்பதற்காக பெரியபரகால ஸ்வாமிகள் பிரயத்னப்பட்ட விஷயம், அவருடைய சரித்திரத்திலேயே சேர்ந்துள்ளது. आपादचूडमनपायिनि दर्शनेऽस्मिन् என்கிற ஸ்ரீமத்ராமானுஜ ஸம்பிரதாயத்திற்கு இந்நிலை ஏற்பட்டதென்பது மிகவும் துரதிருஷ்டமான விஷயம்தான்.

இதன் பிறகும் முனித்ரய - மடம் ஸம்ப்ரதாய விஷயம் அதை விடவும் மிகவும் துரதிருஷ்டமானதுதான். ஸ்வாமி தேசிகன் போலவே ஸ்ரீமத் ஆதிவண்சடகோப ஸ்வாமிகள் அனேகமாக எல்லோருக்கும் ஸ்ரீபாஷ்யபரம்பரையில் வருகிறார் என்கிற விஷயம் எல்லோரும் அறிந்ததே. ஆகையால் பழையகாலத்தில் இந்த முனித்ரய - மடம் ஸம்ப்ரதாய பேதம் உண்மையில் இருந்திருக்க பிரஸக்தியே இல்லை. அஹோபிலமடத்து பரம்பரையில் தற்போது உள்ளது போன்ற ஸங்கேதங்களாவது, கட்டுப் பாடாவது பழையகாலத்தில் இருக்கவில்லையென்றே நடுநிலையாளர்களான அறிஞர்கள் கூறுகின்றனர். அந்ய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஒரு மஹான் தீவ்ர நரஸிம்ம உபாஸகராக இருந்ததாகவும், ஸ்ரீநரஸிம்ஹனின் ஆக்ஞைப்படி அவருக்கு ஆஸ்தான ஆதிபத்யத்தைக் கொடுத்ததாகவும் சொல்லப்படுகிறது. அந்த சமயத்தில் ஸ்ரீநரஸிம்ஹனின் திருவுள்ளப்படி இந்த கடனை (घटनै) ஏற்பட்டுள்ளது. ஆனாலும் தேவரீர்கள் ஸம்ப்ரதாயத்தை மாற்ற வேண்டாம் என்று சொல்லி வாக்தானம் பெற்றே அவருக்கு ஆச்ரமத்தைக் கொடுத்ததாகவும் சொல்வர். ஆனால் அவர் வாக்தானம் செய்திருப்பது நாம்தானே, மற்ற ஒருவரல்லவே என்று கருதி, தனக்குப் பிறகும் தன் ஸம்ப்ரதாயத்தவரையே ஆஸ்தானத்தில் நியமித்தார், அதனால்தான் மட ஸம்ப்ரதாயத்தில் பகவத் விஷயத்தில் ஈடு இடம் பெற்றதென்று தெரிந்தவர் கூறுவர். அவ்வளவு மட்டுமல்ல, அக்காலத்தில் ஸ்வாமி தேசிகன் ஸம்ப்ரதாயத்தைக் கண்டித்து சுமார் 60 க்ரந்தங்கள் எழுதப்பட்டன. மஹானாக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் கோஷ்டீபுரம் ஸ்வாமியும் இந்த விஷயங்களை ஏற்று சாதுர்யமாக அதை ஸ்வாமி தேசிகனை கண்டிப்பதற்காக ஏற்படவில்லை. பூர்வபக்ஷம் ஸாதித்தவளவில் அந்த ஸ்வாமி பரமபதித்து விட்டபடியால், ஸித்தாந்த பாகம் வெளிவராமல் போய்விட்டது என்று அனுக்ரகித்ததாகும். பிறகு ஸ்ரீந்ருஸிம்ஹனின் திருவுள்ளத்தினால், ஸம்ப்ரதாய பேதம் அந்த இரு திருநாமங்களோடு முடிவடைந்ததாகக் கூறுவர். ஆக, முனித்ரய - மடம் ஸம்ப்ரதாய பேதம் பழைய காலத்தில் இருந்ததில்லைதான்.

இதை ஏற்கும் சிலர்- திருக்குடந்தை தேசிகன் காலத்தில் தான் இந்த ஸம்ப்ரதாய பேதமேற்பட்டதாகவும் கூறுவர். இதற்குக் காரணம், அந்த காலத்தில் மிக மிகவும்

வ்யாபகராக இருந்த அவரையே ஆஸ்தானத்தில் நியமிக்க பிரயத்னம் நடந்ததாகவும், வேறு சிலர் அதை விரோதித்த படியால்அது நின்றுவிட்டபோது, முனித்ரயமட ஸம்ப்ரதாய பேதத்தை சிலர் ஏற்படுத்தினர் என்று கூறுவர். எப்படியாகிலும், திருக்குடந்தை தேசிகனை எழுந்தருளச்செய்ய ப்ரயத்னம் நடந்த விஷயமே - அக்காலத்தில் அந்த வைஷம்யம் இல்லையென்பதற்கு போதிய சான்றுகள் ஆகும். திருக்குடந்தை தேசிகனால் மட-முனித்ரய பேதமேற்பட்டதென்று கூறுவரும் உண்டு. ஜயந்தீ நிர்ணயாதிகளில் ஏற்பட்ட வைஷம்யம் தான் அதற்குக் காரணமென்று அவர்கள் கூறுவர். ஜயந்தீ நிர்ணயத்தில் உள்ள ரஹஸ்யமே வேறு. தர்மசாஸ்திரங்களெல்லாம் எல்லோருக்கும் பொதுவானவையே. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தை சேர்ந்த தோழப்பர் என்பவர் தசநிர்ணயீ முதலான க்ரந்தங்களை இயற்றினார். இந்த தோழப்பர் சடமர்ஷணரல்லர், ஹாரீதர். இந்த ரஹஸ்யம் தெரியாத பிற்காலத்திய சில ஸ்ரீவைஷ்ணவர்கள் தோழப்பர் வைஷ்ணவர் என்கிற அபிமானத்தினால் அவருடைய ஸம்ப்ரதாயத்தை ஆச்ரயித்தனர். அவர் சடமர்ஷணர் என்று நினைத்த, அந்த கோத்ரத்தைச் சேர்ந்த தாதாசாரியர்களும் அந்த ஸம்ப்ரதாயத்தை ஆச்ரயித்தனர். (தர்மசாஸ்த்திர விஷயத்தில் அபிமானம் சரியில்லையென்று நினைத்த சில ஸ்ரீவைஷ்ணவர்கள் (கொத்திமங்கலத்தார் போன்றவர்கள்) அப்படி மாற்றவில்லை. சடமர்ஷணர்களான நாவல்பாக்கத்தைச் சேர்ந்த மஹாவித்வான் ஸ்ரீ.உ.வே.நாவல்பாக்கம் ஸ்வாமிக்கு (ஸ்ரீ . உ. வே. நரஸிம்மாசாரியார், இவர் பெருமாள் கோவிலில் (ஸ்ரீகாஞ்சி) எழுந்தருளியிருந்ததால் பெருமாள் கோயில் ஸ்வாமி என்று ப்ரஸித்தமாக இருந்தார்.) தோழப்பர் ஸம்ப்ரதாயம் சரியல்ல என்று அதை மாற்றினார்.) அப்போது அவரின் அந்தரங்க சிஷ்யரொருவர் ஐயா ஸ்வாமி "பூர்வீகர்கள் ஏற்றுக் கொண்டுள்ள போது நாம் ஏன் மாற்ற வேண்டும்?" என்று கேட்டாராம். அதற்கு அந்த பெருமாள் கோயில் ஸ்வாமி "நான் உங்களையெல்லாம் மாற்றிக் கொள்ளச் சொன்னேனா" எனக்கு சரிபடவில்லை, நான் மாற்றிக் கொண்டேன். உன் இஷ்டப்படி நீ செய்யேன் என்று தீக்ஷணமாக பதில் ஸாதித்தாராம். இன்றும் நாவல்பாக்கத்தவரில் ஜயந்த்யாதிகளில் ஸம்ப்ரதாயபேதம் உண்டு. அஹோபிலமட ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ப்ரஸித்தரான ஸ்ரீ. உ. வே. கோஷ்டீபுரம் ஸ்வாமிகளும் ஸ்ரீராமநவமி தினம் பகலிலேயே பாரணை செய்யும்படியாவதால், உபவாஸத்திற்கு ப்ரஸக்தியேயில்லாதபடியால் "பாரணை" என்பது அர்த்தமில்லாமல் போகிறதென்று நிச்சயித்து, அந்த ஒரு விஷயத்தில் மட்டும் முனித்ரய ஸமப்ரதாயப்படி மறுநாள்தான் பாரணை செய்துள்ளாராம். இந்த "பாரணை" விஷயமும் மிகவும் அல்பமானது. "உத்ஸவாந்தே பாரணம்" என்கிற வாக்யம்தான் விவாதத்திற்கு விஷயமானது. உத்ஸவம் என்றால் "சிக்யோத்ஸவமும்" அடங்கும் என்பது ஒருபக்ஷம், அது அடங்காது என்பது மற்றொரு பக்ஷம், இதை எப்படி தீர்ப்பது? ஜயந்தி உத்ஸவம் வேறு சிக்ய உத்ஸவம் வேறு என்று கூறினாலும், ஜயந்தீ உத்ஸவத்தையே வளர்த்தினால் பொழுது விடிந்து விடுமே! "உத்ஸவ"பதமும் மிகவும் ஆழமான அர்த்த முள்ளதில்லையா? "विदुषोऽपि तथारूढोऽभिनिवेशः" என்கிற பதஞ்சலியின் வாக்யம் தான் பதிலா? ஸம்ப்ரதாய பேதமெல்லாம் இப்படியே

வளர்ந்தவையே. "மன்மிருந்தால் மார்கமும் உண்டு" ஆக திருக்குடந்தை தேசிகன் புதிதாக ஒன்றும் சொல்லிவிடவில்லை. பழைய பத்ததியை தான் சொன்னார். அந்த காலத்தில் தான் மட - முனித்ரய பேதம் ஏற்பட்டதென்பது ஸரியல்ல.

வாஸ்தவத்தில் நடந்த உண்மை விஷயமே வேறு தான். தற்போது சென்னை என்கிற பட்டினத்தில் திருவல்லிக்கேணி திவ்ய தேசத்திற்குச் சேர்ந்த விஷயம் எல்லாருமறிந்ததே. அந்த கோயிலில் ஸ்வாமி தேசிகன் எழுந்தருளியிருந்த விஷயமும், அவருடைய சாற்றுமுறை விமர்சையாக நடந்து வந்த விஷயமும் எல்லாருமறிந்ததே. (தற்போது எப்படியோ, தெரியவில்லை). ஆனால் ஸ்வாமி தேசிகனுக்கு தென்கலை திருமண் காப்பைச் சாற்றியிருப்பதாலும், சாத்துமுறையில் ஸ்ரீசைலேசதயாபாத்ரத்தைக் கூறியதாலும், மனம் நொந்த சிலர், இதற்கு ப்ரதி என்ன செய்வதென்று யோசித்தனர். சுமார் 100வருஷங்களுக்கு முன், பட்டிணத்தில் மிக மிக ப்ரபலராக இருந்த, தேசிக ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீபாஷ்யமய்யங்கார், ஸ்ரீநிவாஸ ஐய்யங்கார் முதலியோரெல்லாம் ஒன்று சேர்ந்தனர். திருவல்லிக்கேணியில் தேரடித் தெருவிலிருந்த ஸ்ரீஅஹோபிலமடத்தை தங்களின் கார்யக்ஷேத்ரமாக நிச்சயித்து, அப்போதிருந்த ஸ்வாமிகளின் அனுமதியைப்பெற்று, அங்கு ஸ்வாமி தேசிகனின் ஸன்னிதியை ஸ்தாபித்து, வாஹனாதிகளுடன் பத்துநாள் ஸ்ரீதேசிகனின் உத்ஸவத்தை மிகவும் விமர்சையாக சாத்துமுறையுடன் நடத்தி வந்து மனதிற்கு ஸமாதானமடைந்தனர்.

ஆனால் ஸ்ரீமடத்தில் பிறகு வேறு ஒரு ஸ்வாமி வந்தார். அவர் மடத்திலேயே வேறொரு பாத்ரத்தையாரம்பித்து அதை சாத்துமுறைகளிலும் சொல்ல ஆரம்பமாகியது. ஸ்ரீதேசிகனின் சாத்துமுறையிலும் அதை நுழைக்க வற்புறுத்தினார். தேசிக பக்தர்களுக்கு மனம் ஒப்பவில்லை. ஸ்ரீதேசிகனின் சாத்துமுறையில் அதைச் சொல்வது நியாயமாகாதுதன்று வாதித்தனர். வாதம் வளர்ந்து பிரிவு கௌன்ஸில் வரை சென்றது. அந்த இடம் அஹோபிலமடத்திற்குச் சொந்தமானதால், நீங்கள் அதற்காக எவ்வளவோ செலவு செய்திருந்தாலும், எழுத்து மூலமான ஆதாரமில்லாததால், அவர்களின் இஷ்டப்படி தான் நீங்கள் நடக்க வேண்டுமென்று தீர்மானமாகியது. அவ்வளவு தான், ஸ்ரீசைலேசதயாபாத்ர - ராமானுஜதயாபாத்ர சண்டை போய் ராமானுஜபாத்ர - கேசவார்ய க்ருபாபாத்ர சண்டை ஆரம்பித்து தினதினத்திற்கு முற்றியது. இருபக்ஷமும் ஸமான பலமான இடங்களில் அடிதடி சண்டைகள் அளவு நடந்தன. அப்போது தான் உண்மையில் மடம் - முனித்ரய சண்டை ப்ரமாதமாக வளர்ந்ததாக வயதான சிலர் இப்போதும் கூறுவர்.

இதற்காகவே திருக்குடந்தை தேசிக ஸம்ப்ரதாயத்தவரெல்லாம் ஸம்பாவனையில் "முனித்ரயஸித்தாந்த நிர்தாரண ஸார்வ பௌமர்" என்று தான் முன்பு அனுஸந்தித்து வந்தனர். இப்படி அனுஸந்திப்பதற்குக் காரணம் - திருக்குடந்தை தேசிகன் திருவடியை மூன்று யதிகள் ஒரே காலத்திலேயே ஆச்ரயித்திருந்தனர். இது ஸாமான்யமான விஷயமன்று.

க்ருஹஸ்தனிடம் ஸன்யாஸிகள் சிஷ்ய விருத்தியை பண்ணுவதென்பது ஸாமான்யமானதன்று. பகவத் ராமானுஜ ஸம்ப்ரதாயத்தின் பெருமைக்குக் காரணமான அனேகவிஷயங்களில் இதுவும் ஒன்றாகும். அதாவது குரு க்ருஹஸ்தனாகவும் சிஷ்யன் ஸன்யாசியாகவுமிருப்பது தவறில்லை. "இது தவறு" என்று அத்வைதிகளில் சிலர் கூறுவர். அதாவது ஸ்ரீசங்கராசார்யரின் ஸாக்ஷாத் சிஷ்யரான ஸுரேச்வராசார்யார் இதை ஒப்புவதில்லை. அவருக்குப் பிறகு வந்த விவரணகாரர் என்கிற ப்ரகாசாத்ம யதிதான் யதியின் குரு கிருஹஸ்தனாக இருக்கக் கூடாது என்று சொன்னார். இன்று அத்வைதிகள் விவரணகார மதத்தையே ஸித்தாந்தமாக ஆக்கியுள்ளனர். ஸ்வாமிதேசிகன் "गृहस्थोऽपि विमुच्यते" இது முதலிய யாஜ்ஞவல்க்ய ஸ்மிருதி முதலானவற்றைக் கொண்டு, எல்லோருக்கும் மோக்ஷம் உண்டு என்று ஸாதித்திருக்கிறார். ஸ்வாமி தேசிகனிடம் ஸன்யாஸியான ப்ரம்ம தந்த்ர ஸ்வாமி சிஷ்யராக இருந்தது ப்ரஸித்தம். முப்பது தரம் ஸ்ரீபாஷ்ய ப்ரவசனம் செய்தருளிய ஸ்வாமி தேசிகனிடம் ஸன்யாஸிகள் எவ்வளவு பேரிருந்தனர் முதலான விவரம் கிடைக்கவில்லை. ப்ரக்ருதம் 1) ஸ்ரீஸ்ரீநிவாஸ மஹாதேசிகன். 2) ஸ்ரீரங்கநாத மஹாதேசிகன். 3) ஸ்ரீவேதாந்த ராமானுஜ தேசிகன் என்கிற மூவரும் ஒரே காலத்திலேயே திருக்குடந்தை தேசிகனிடம் சிஷ்யராக இருந்ததைக் கொண்டு "முனித்ரயஸித்தாந்தம்" என்று தான் முதலில் ஆரம்பித்தனர்.

ஆனால் அஹோபிலமடத்தவர் - தங்கள் ஸம்ப்ரதாயம் தான் ப்ராசீனமென்றும், முனித்ரய ஸம்ப்ரதாயம் நவீனமென்று ப்ரசாரம் செய்ய ஆரம்பித்தனர், "ஆதிவண் சடகோபர் பழையவரா, திருக்குடந்தை தேசிகன் பழையவரா?" என்று வாதித்தனர். அப்போது, ஆண்டவன் ஸம்ப்ரதாயத்தில் வேறுவழியில்லாமல், திருக்குடந்தை தேசிகனைக் காட்டிலும் இந்த ஸம்ப்ரதாயம் மிகமிக பழையது என்று உண்மையை தெரிவிப்பதற்காக "ஸ்ரீமன் நாதமுனி ஸ்ரீமத்யாமுனமுனி ஸ்ரீபகவத் ராமானுஜ முனிரூப முனித்ரய" என்று சொல்கிற நிர்பந்தமேற்பட்டது. உண்மையில் தோழப்பர் ஸம்ப்ரதாயம் என்பது பின்பட்டதுதான். பாஷ்யகாரராதிகள் காலத்தில் அந்த ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரஸக்தியேயில்லை. அஹோபிலமடத்திலும் ஈடுநுழைந்ததைப் போல் தோழப்பர் ஸம்ப்ரதாயம் பின்புதான் நுழைந்திருக்க வேண்டும்.

முனித்ரய ஸம்ப்ரதாயத்தவரான திருவஹீந்திரபுரம் சேட்லூர் ஸ்ரீ. உ. வே. நரஸிம்மாசாரியார் முதலாழ்வார்களான பூதமுனி, ஸரோமுனி, மகதாஹ்வயமுனி என்கிற முனித்ரய ஸம்ப்ரதாயம் தான் நமது என்றும் ஸாதிப்பார். இவ்விதம் ப்ராமணர்களில் மதத்ரயபேதம் உண்டாகியது. ஸ்ரீவைஷ்ணவர்களில் தென்கலை வடகலை பேதம், வடகலையில் மட - முனித்ரய பேதம் முதலியவை உண்டானது துரத்ருஷ்ட வசம்தான். அபிமானம் என்பது கேவல ஸாத்விகமாக ஆகாமல் ராஜஸ - தாமஸங்களாக ஆனால், கோபதாபங்கள் தானாகவே வளர்வது தவிர்க்கமுடியாதவை. ஆனால் இக்காலத்தில் இது போன்ற வைஷம்யங்களை எப்படியாவது நீக்குவது அவசியம். எது ச்ரேயஸ்ஸுக்கு விருத்தம்? என்பதை நன்கு ஆலோசிக்க வேண்டும். ஒருகாலத்தில் இவர்கள்

ஒருவருக்கொருவர் சேர்ந்து சாப்பிடவே மாட்டார்கள். பெண் கொடுக்கல் வாங்கல் இருந்ததே இல்லை. ஆனால் இன்று இந்த வைஷமயங்களெல்லாம். சிறிது சிறிதாகவே மறைந்து கொண்டே இருப்பதை பார்க்கின்றோம். சிகை விஷயத்தில் எத்தனை போராட்டங்கள் நடந்தன என்பதையெல்லாம் நினைத்துப்பார்க்க வேண்டும். புத்ரன் சிகையை எடுத்துவிட்டதற்காக தந்தையளவில் எவ்வளவு சர்ச்சைகள் நடந்தது என்று நினைத்துப்பார்க்க வேண்டும். ஒரு தந்தை உபவாஸமிருந்து உயிரையேவிட்டது அடியேனறிந்த விஷயம். சிகையில்லாதவர்களுக்கு பஞ்சஸம்ஸ்காராதிகள் செய்ய மாட்டார்கள். ஆனால் இன்று இவையெல்லாம் எப்படி மாறிக்கொண்டிருக்கின்றன என்பது போன்றவையை ஆர அமர யோசித்தால் காமக்ரோதங்களுக்கு விஷயமே இல்லை.

இந்த மாற்றமெல்லாம் எங்குமுடியுமோ என்று தெரியாமல் எல்லோரும் திக்ப்ரமையிலிருக்கிறார்கள். ஆகையால் தார்மிகர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஜனங்களுக்கு நல்வழியைக் காண்பிக்க வேண்டும். இல்லாவிடில் ஸர்வநாசம் காத்துக்கொண்டிருக்கின்றது. அதிகம் சொல்வானேன்! ஒருவன் பரதேசத்திற்குப் போய் வருவது தலை குனியும் விஷயமாக இருந்தது. இன்று அதே தலை நிமிர்ந்து நடக்குமளவுக்கு பெருமைப்படும் விஷயமாக ஆகியுள்ளது. பணம் தான் எங்கும் பேசுகின்றது. இது அரசியலில் மட்டும்தான் என்று நினைத்துவிடவேண்டாம். தர்மத்திற்குள்ளும் ப்ரவேசித்து விட்டுள்ளது. "यस्यार्थास्तस्य मित्राणि" என்று ஆரம்பித்து "यस्यार्थास्स गुणाधिकः" (ரா மா. 6.83.35-36) என்பதெல்லாம் கண்கூடாக ஆகியுள்ளது. "பணம் நமக்காகவா? நமக்காகப் பணமா?" என்பதை நிர்ணயிக்க வேண்டிய காலம் வந்துள்ளது. பணத்தை நாம் தேடிக் கொண்டு போனால் முடிவு அழிவுதான், சந்தேகம் வேண்டாம். நாம் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்தால், பணம் தானாக நிச்சயம் வரும். இதை முதலில் உலகத்துக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஜனங்களின் மோஹ ப்ரவாஹத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக சிறித்தாவது தடைபோடவேண்டும். தார்மிகர்களின் தலையாய கடமை இது. அதிலும் தார்மிக பீடங்கள் இதை கவனிக்க வேண்டும். காம க்ரோதம் வளரவிடக்கூடாது. கெட்டதால் நல்லது என்றும் வராது.

ஜனங்களின் ஆஸ்திக்யம் வளர முதலில் ப்ரயத்னம் செய்ய வேண்டும். நாஸ்திகம் வளர்ந்ததால் தான் எங்கெங்கும் த்வேஷம் வளர்ந்து கொண்டிருக்கிறது. அதிலும் அப்பிராம்மணர்களுக்கு ப்ராம்மணர்களிடம் உள்ள த்வேஷத்தால் தர்மத்தையும், தெய்வத்தையுமே த்வேஷிக்க ஆரம்பித்து விட்டனர். இந்த ப்ராம்மண அப்ராம்ஹண இயக்கம் தற்சமயம் இந்தியா பூராவும் பரவியுள்ளது. தின தினமும் வளர்ந்து கொண்டுமுள்ளது. இதனால் யாருக்கும் நிச்சயம் நல்லதில்லை. இதை குறைக்க வேண்டும். அதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் - செய்ய முடியும்? என்றெல்லாம் கேட்கலாம் கண்டிப்பாகச் செய்ய வேண்டும். செய்ய முடியும். இது எல்லோருக்கும் முதற்கடமை.

உலகமே ஏதோ ஒரு இக்கட்டான நிலையைக் கடந்து கொண்டிருக்கிற விஷயம் புத்திமான்களே உணர்ந்ததே. இந்த சமயத்தில் தார்மிகர்கள் மிகவும் ஆழமாக ஆலோசிக்க வேண்டும். உலகுக்கு நல்வழியைக் காண்பிக்க வேண்டும். தங்களின் பொறுப்பிலிருந்து தார்மிகர்கள் நழுவினால், நிச்சயம் தெய்வம் வாளாவிராது. கடமையிலிருந்து நழுவியவர்களுக்கு நல்லது ஆகாது.

"புண்யஸ்ய பலமிச்சந்தி புண்யம் நேச்சந்தி மானவ: ந பாபபல மிச்சந்தி பாபம் குர்வந்தி மானவா:।।" என்கிற நியாயம் ஸர்வஸாதாரணமாக ஆகிவிட்டது. அதாவது எல்லோருக்கும் பெரிய பெரிய பதவி முதலியவை வேண்டும். ஆனால் அந்த பதவியிலுள்ள கடமைகள் என்கிற பாரம் வேண்டாம். அரசியலில் இதை எல்லோரும் கண்கூடாகப் பார்க்கின்றனர். தர்ம க்ஷேத்ரத்தில் இது வெகுகாலமாக வேறூன்றிவிட்ட படியால்தான் வெளி உலகிலும் இது வளர ஆரம்பித்து விட்டது. ஆகையால் தார்மிகர்கள் எல்லோரும் விழித்தெழுந்து சிறிது த்யாகம் செய்ய வேண்டும். தர்மம் என்றால் என்ன என்றறிந்து, தாங்களும் கடைப்பிடித்து, உலகிற்கும் வழியைக் காண்பிக்க வேண்டும்.

★ ★ ★ ★ ★ ★

श्रीः

வேதாத்யயனமும் வேதோக்த தர்மங்களும்

(ஸ்ரீ.உ.வே. மஹாவித்வான் நாவல்பாக்கம் வலயப்பேட்டை
ராமாநுஜ தாதாசாரியர் ஸ்வாமி. சு.நாவல்பாக்கம்)

वागक्षरं प्रथमजामृतस्य। वेदानां मातामृतस्य नाभिः।
सानो जुषाणोप यज्ञमागात्। अवन्ती देवी सुहवामे अस्तु।
यामृषयो मन्त्रकृतो मनीषिणः। अन्वैच्छन्देवास्तपसाश्रमेण।
तां देवी वाचं हविषा यजामहे। सा नो दधातु सुकृतस्य लोके॥
विज्ञान तत्त्वविदुषे विविधागमान्त वेद्याय वेदपुरुषाय विधीशपाय।
विद्याधरार्चितपदाय विहङ्गराजरूढाय धातृजनकाय नमः परस्मै॥

எல்லாவற்றிற்கும் காரணமான பரப்ரஹ்மம் என்னும் பெயரை உடைய ஸ்ரீமந் நாராயணனின் நாபீகமலத்திலிருந்து உண்டான ப்ரஹ்மாவின் ஸ்ருஷ்டியில் எல்லா ஜன்மங்களைக் காட்டிலும் ப்ராஹ்மணனாகப் பிறப்பது மிகவும் உயர்ந்ததாகும். அதிலும் வித்யாவானாக பிறப்பது உயர்ந்தது. அதிலும் வேதாத்யயன ஸம்பத்தியுடன் இருப்பது மிக மிக உயர்ந்ததாகும்.

अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्याय विस्तरः।
पुराणं धर्मशास्त्रं च विद्या ह्येता चतुर्दश॥

என்று பதிநான்கு வித்யாஸ்தானங்கள் சொல்லப்பட்டுள்ளன. இவைகளில் வேதம் அங்கியாக இருப்பதால் ப்ரதானமாகும். அக்னிஹோத்ரம், தர்சபூர்ணமாஸம், ஸோமம் (ஜ்யோதிஷ்டோமம்). இவைகள் அங்கியாகும். இவைகளுக்கு ப்ரயாஜம், தீக்ஷணீயம் ப்ராயணீயம் முதலியவை அங்கங்களாகும். அங்கி இராவிட்டால் அங்கத்திற்கு ப்ரயோஜனம் கிடையாது. அதுபோலவே இங்கு வேதங்கள் அங்கியாகவும், அதற்கு சாஸ்த்ரங்கள் அங்கங்களாகவும் சொல்லப்பட்டுள்ளபடியால் வேதங்கள் தான் ப்ரதானமாநது என்று ஏற்படுகிறது.

வேதம் என்பது என்ன? ஸ்வர்கம், பசு புத்ரன் முதலிய இஷ்டத்தை அடைவதற்கும் நரகம் முதலிய அநிஷ்டத்தை அடையாமல் இருப்பதற்கும் உபாயத்தை லோகரீதியில் இல்லாததான ஒரு விஷயத்தை எந்த க்ரந்தம் சொல்கின்றதோ அதுவே

வேதம் எனப்படுகிறது. वेदो नाम - इष्टप्राप्त्यनिष्टपरिहारयोरलौकिकमुपायं यो ग्रन्थो वेदयति स वेदः என்று சொல்லப்பட்டுள்ளது. இதையே

प्रत्यक्षेणानुमित्या वा यस्तूपायो न बुध्यते।
एनं विदन्ति वेदेन तस्माद्वेदस्य वेदता॥

வேதங்களில் "तस्य यजुरेव शिरः" என்று கூறியுள்ளபடியால் "सर्वस्य गात्रस्य शिरः प्रधानम्" என்றும் வேதத்தில் யஜுர்வேதம் ப்ரதானமானது என்றும் ஏற்படுகிறது. "यज्ञस्य मात्रां विमिमीत उत्वः என்கிற மந்த்ரத்தாலும் यजुर्यजतेः" என்கிற யாஸ்க நிர்வசனத்தினாலும் அத்வர்யு வேதம் என்று பெயருள்ள யஜுர்வேதத்திற்கு யாகநிஷ்பாதகத்வம் ஏற்படுகிறது. யஜுர்வேதத்தில் நிஷ்பந்நமான யஜ்ஞ சரீரத்தை உபஜீவித்து அதற்கு அபேக்ஷிதமான ஸ்தோத்ர சஸ்த்ர ரூபமான அவயவங்களை மற்ற இரண்டு வேதங்களான ருக் ஸாம வேதங்கள் பூர்த்தி செய்கின்றன. ஆகையால் ருக் ஸாம வேதங்கள் யஜுர்வேதத்தை உபஜீவிப்பனவாக உள்ளன என்பது ஸித்தம். ருக்லக்ஷணம் "तेषामृङ्मन्त्रार्थवशेन पादव्यवस्था" (எந்த இடத்தில் பாதமாகப் பிரித்து வ்யவஸ்தை செய்யப்பட்டுள்ளதோ அந்த மந்த்ரங்கள் ருக் என்று சொல்லப்படுகின்றன. "गीतिषु समाख्या" என்று ஸாமவேத லக்ஷணம் சொல்லப்பட்டுள்ளது. "शेषे यजुः" என்று யஜுர்வேத லக்ஷணம் சொல்லப்பட்டுள்ளது. ருக்யஜுஸ் ஸாமரூபமான வேதங்களே இஷ்டப்ராப்திக்கும் அநிஷ்ட நிவ்ருத்திக்குமான உபாயங்களைத் தெரிவிக்கின்றன.

வேதாத்யயனம் எதற்காகச் செய்யவேண்டும்? இந்த கேள்வி எல்லோருடைய மனதிலும் தோன்றிக் கொண்டுள்ளது ஜீவனத்திற்கு ஒரு வழி என்று வேதாத்யயனம் செய்வதா? பெயரும் புகழும் கிடைக்கும் என்று எண்ணி செய்வதா? ஆத்ம த்ருப்தி தருவதாக உள்ளது என்று அத்யயனம் செய்ய வேண்டுமா? எதற்காக அத்யயனம் செய்ய வேண்டும்? இந்த கேள்விக்கு விடையும் வேதத்திலேயே சொல்லப்பட்டுள்ளது.

நாம் அனைவரும் வேதத்தை ப்ரமாணமாகப் போற்றுபவர்கள் "स्वाध्यायोऽध्येतव्यः, ब्राह्मणेन निष्कारणो धर्मः षडङ्गो वेदोऽध्येयो ज्ञेयश्च" என்கிற ச்ருதி வாக்யத்தினால் ப்ராஹ்மமனாகப் பிறந்தவன் அவச்யம் வேதத்தை எந்த விதமான பலனையும் உத்தேசிக்காமல் அத்யயனம் செய்ய வேண்டும் என்று

சொல்லப்பட்டுள்ளது. எனவே நாமும் அத்யயனம் செய்ய வேண்டும். முண்டகோபநிஷத்தில் द्वे विद्ये वेदितव्ये इत हस्मयद् ब्रह्मविदो वदन्ति पराचैवापराचेति என்று சொல்லப்பட்டுள்ளது. பரா, அபரா என்று சொல்லப்படும் இரண்டு வித்யைகளையும் ப்ரஹ்மத்தை அடையவேண்டும் என்று விரும்புபவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். ப்ரஹ்ம விஷயத்தில் பரோக்ஷாபரோக்ஷ ரூபமான இரண்டு ஞானங்களும் உபாதேயம். இதில் பர வித்யை என்பது ப்ரஹ்ம விஷயமான வித்யை என்றும் அபரவித்யை என்பது तत्रापरा- ऋग्वेदो, यजुर्वेदः, सामवेदोऽथर्ववेदः शिक्षा, कल्पो व्याकरणं.... ருக்வேதம் முதலிய வேதங்களும் வேதாந்தங்களும் ஆகும். வேதாத்யயனம் இல்லாத இதர வித்யைகள் ப்ரயோஜனமற்றவை. ஆகையால் ப்ராஹ்மணன் முதலில் வேதாத்யயனம் செய்துவிட்டு பிறகுதான் இதர வித்யைகளில் ஈடுபட வேண்டும் என்பது தெளிவாகிறது.

எந்த வேதத்தை அத்யயனம் செய்ய வேண்டும்? ப்ராஹ்மணனாகப் பிறந்தவன் அத்யயனம் செய்ய வேண்டும் என்னும் கேள்விக்கு யாக்ஞ வல்க்யர் பதில் கூறுகிறார். வேதங்கள் முழுவதையுமோ அல்லது அவரவர்களுடைய மேதையை அநுஸரித்து அவரவர்களுடைய சாகை மாத்ரத்தை மட்டுமோ அத்யயனம் செய்ய வேண்டும் என்று. वेदानधीत्य वेदौषा वेदं वापि यथाक्रमम्। என்று ஒரு வேதத்தை மட்டும் அத்யயனம் செய்வதானால் அவரவர்கள் பித்ரு பிதாமஹாதி பரம்பரையாக வந்த சாகையை அத்யயனம் செய்ய வேண்டும். எனவேதான் ஸ்வாத்யாய ப்ராஹ்மணத்தில் स्वाध्यायोऽध्येतव्यः என்று கூறப்பட்டுள்ளது இங்கு स्व சப்தம் ஆத்மகுல பரம்பரையைச் சொல்கிறது. अध्याय சப்தமானது சாகாவச்சிந்ந வேதபரம். அத்யேதவ்ய: என்பதில் अधिपूर्वक ईङ் தாதுவிற்கு அத்யயனம் அர்த்தம். அத்யயனம் என்றால் गुरुमुखोच्चारणपूर्वक शिष्योच्चारणम् - அதாவது ஆசார்யன் சொன்னபிறகு சிஷ்யன் அதைத் திருப்பிச் சொல்வது. இவ்வாறாக குருமுகமாக அவரவர் சாகையை அத்யயனம் செய்ய வேண்டும் என்பது இதன் பொருளாகும். இவ்வாறு இல்லாமல் தன் சாகையை அத்யயனம் செய்யாமல் வேறு ஒரு சாகையை அத்யயனம் செய்தானானால் அவனுக்கு சாகாரண்டன் என்கிற தோஷம் வந்து சேரும். இதையே

यः स्वशाखां परित्यज्य अन्यशाखामधीयते शाखारण्डःस्सविज्ञेयः

என்று கூறியுள்ளார். அதேபோல் வேதாத்யயனம் என்பது நித்யமானது ஆகும் காம்யமில்லை என்றும் ஸ்பஷ்டமாக கூறப்பட்டுள்ளது.

வேதாத்யயனத்தின் பெருமை

தைத்திரீய ஆரண்யகம் இரண்டாவது ப்ரச்னத்தில் अपहतपाप्मा स्वाध्यायो देवपवित्रं वा एतत् ..... என்று துடங்கி வேதாத்யயனத்தின் பெருமையும் அது செய்யாவிட்டால் வரும் இழிவும் சொல்லப்பட்டுள்ளது. "வேதம் வேதாத்யயனம் செய்யும் புருஷனைத் தோழன் போல் காக்கின்றது. இப்பேர்பட்ட வேத ரூபமான ஸகாவை எந்த புருஷன் அத்யயனம் செய்யாமல் விட்டுவிடுகிறானோ அல்லது அத்யயனம் செய்து மறந்து விடுகிறானோ அவனுக்கு நல்லதைப் பேசுவதற்கும் கேட்பதற்கும் உரிமை இல்லை. வேதம் இல்லாதவன் நல்லதைச் சொன்னாலும் கெடுதலாகவே முடியும் ." ஆகையால் நாம் எப்படியாவது வேதாத்யயனம் செய்ய வேண்டும். அர்த்தம் தெரிந்து வேதம் படித்தால் விசேஷ ச்ரத்தை உண்டாகும். அத்யயனம் செய்பவனுக்கு அர்த்தம் தெரியாவிட்டாலும் நம்மால் ஸ்தோத்ரம் செய்யப்படும் தேவதைக்கு பொருள் விளங்குமாதலால் நமக்கு பலனில் எந்த வித குறைவும் வராது. ஆகையால் வித்யா ஸ்தானங்களில் வேதமே ப்ரதானமானது ஆகும். இந்த வேதாத்யயனம் பகவானிடமிருந்து அவிச்சின்னமாக தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது.

வேதாத்யயன வழிமுறைகளில் சில

வேதத்தை அத்யயனம் செய்பவர்களோ, செய்விப்பவர்களோ இருவருமே மிகுந்த ச்ரத்தையுடன் இருக்கவேண்டும். அத்யயனம் செய்வதில் பல நியமங்கள் உள்ளன.அவற்றில் சிலவற்றை (ஸூக்ஷ்மமானதை) சிக்ஷைகளில் கூறியுள்ளபடியும் சிஷ்டாசாரத்தில் இருந்து வருவதையும் இங்கு குறிப்பிடுகிறேன்.

வேதம் சொல்லுவதற்கு முன்பும், முடிவிலும் हरिः ओं என்று சேர்த்துக் கொள்ள வேண்டும். हरिः ओं என்பது வேதத்தை ஆரம்பிக்கும் போது 4 மாத்ரையாகவும் முடிக்கும் போது 3 மாத்ரையாகவும் கணக்கிடப்படுகிறது. ரத்னத்தைப் பெட்டியில் இருந்து திறப்பது போன்றது ஆரம்பத்தில் சொல்வது. பெட்டியில் வைத்துப் பூட்டுவது போன்றது முடிவில் சொல்வது. हरिः ओं என்றுதான் ஆரம்பம். விஸர்க்கத்திற்கும் ஓகாரத்திற்கும் இடையில் ஸந்தி கிடையாது. ஹகாரரேபங்கள் ஸ்வரத்துடன் சிக்ஷையில் சொல்லப்பட்டு சிஷ்டாநுஷ்டானமும் இருந்து வருகின்றது.

வேதத்தில் ஆரம்பிக்கும், நிறுத்தும் இடங்களில் சில நியமங்கள் உண்டு. ऋतुस्था यज्ञा यज्ञियेन, प्रजापतेर्हृदयेन போன்ற இடங்களில் பதங்களின் நடுவில் அதாவது ऋतुस्था, प्रजापतेः என்று நிறுத்தக்கூடாது.

प्र, उत् , नि, आ, निः, सु இந்த பதங்களை மேல் பதங்களோடு சேர்த்துதான் நிறுத்த வேண்டும்.

प्र - तं तेन प्रणुदते भ्रातृव्यान् प्रणुदते।

போன்ற இடங்களில் (तं तेन प्र भ्रातृव्यान् प्र) என்று நிறுத்தக் கூடாது

उत् -स्वायुषोदोषधीनां போன்ற இடங்களில் स्वायुषोत् என்று நிறுத்தக் கூடாது

नि - कर्षतिन्यन्ये போன்ற இடங்களில் कर्षतिनि என்று நிறுத்தக் கூடாது

आ- भवन्त्वाप्रजाय आमा போன்ற இடங்களில் भवन्त्वा என்று நிறுத்தக் கூடாது

निः- दधितन्निरवपत् போன்ற இடங்களில் दधितंनिः என்று நிறுத்தக் கூடாது

सु - मासुभित्था போன்ற இடங்களில் मासु என்று நிறுத்தக் கூடாது

இந்த இடங்களில் அடுத்த பதத்தோடு சேர்த்துதான் நிறுத்த வேண்டும்.

இதே போல் சில இடங்களில் முன்பதத்தோடு சேர்த்துதான் சொல்லவேண்டும். वि, सं, च, न, हि, उ, वा, स्म, ह, तु, ई, वै, नु இவைகளை முன்பதத்தோடு சேர்த்துச் சொல்லவேண்டும். இதற்கு உதாஹரணம் विपाजसा, समितंसंकल्पेथां, वाजश्च, संवदेत न सहासीत् उभिद्धिते, तस्या उ हव्यं यज्ञपतिर्वा, न ह्स्म वै முதலியன.

3வது அநுவாகங்கள் 3வது ப்ரச்னங்கள் அதே போல் மும்மடங்கான 6,9,12 இவைகளுக்கு முன் நிறுத்தக்கூடாது. இவைகளில் ஒரு பஞ்சாதியையோ வாக்யத்தையோ சொல்லித்தான் நிறுத்த வேண்டும்.

வேத பாராயணத்தில் சில ஸம்ப்ரதாயங்கள் பெருமாள் எழுந்தருளும் போது க்ரமபாராயணம் பண்ணும் ஸமயத்தில் கடைசியில் முடிக்கும் போது அநுவாக மத்யத்தில் நிறுத்த வேண்டி வந்தால் முன் பஞ்சாதியின் கடைசி பதத்தையும் அடுத்த பஞ்சாதியின் முதல் பதத்தையும் சேர்த்துச் சொல்லி நிறுத்துவது வழக்கத்தில் இருக்கிறது. உதாஹரணம் प्रतित्वा पृथिवी वेत्तु என்கிற இடத்தில் க்ரமம் சொல்லும்போது, प्रतित्वा, त्वा पृथिवी என்று சொல்லி நிறுத்துகிறார்கள். மறுபடி ஆரம்பிக்கும் போது पृथिवी वेत्तु என்று துடங்குகிறார்கள். இதே போல் சாகையில் அநுவாக மத்யத்தில் நிறுத்த வேண்டி இருந்தால் அடுத்த பஞ்சாதியின் முதல் வாக்யத்தைச் சொல்லி நிறுத்துகிறார்கள். இம்மாதிரி வழிமுறையில் சில கேள்விகளும் அதற்கு ஸமாதானமும் இங்கு சொல்லப்படுகிறது.

அதாவது ப்ராம்மண பாராயணத்தில் அடுத்த பஞ்சாதியின் முதல் வாக்யத்தைச் சொல்லி நிறுத்துவது சரியல்ல. ஸம்ஹிதா பாராயணத்தில் க்ரமபாடம் அவச்யமாக இருப்பதால் முதல் பஞ்சாதியின் கடைசி பதத்தையும் அடுத் பஞ்சாதியின் முதல் பதத்தைச் சேர்த்து சொல்லாவிடில் க்ரமபாட நிஷ்பத்தி ஏற்படாது. ஆதலால் க்ரமபாடத்தில் அம்மாதிரி சொல்வது அவச்யமாகும். மேலும் க்ரமபாடத்தில் இரண்டு தடவை ஒவ்வொரு பதத்தை படிக்க வேண்டும். ஆதலால் க்ரமபாராயண்தில் பதத்திற்கு இரண்டுதடவை பாடமும் உபபந்நமாகிறது. அப்படியே மறுபடியும் ஸமயாந்தரத்தில் ஆரம்பிக்கும் போதும் ஆரம்பத்தில் இரண்டு தடவை பாடமும் உபபந்நமாகிறது. ஆனால் ப்ராம்மண பாகத்தில் பாராயணம் முடிக்கும்போது அடுத்த பஞ்சாதியின் முதல் வாக்யத்தைச் சொல்லி நிறுத்தினாலும், மீண்டும் ஆரம்பிக்கும் போது அந்த பஞ்சாதியின் முதல் வாக்கியத்திலிருந்துதான் ஆரம்பிப்பதால் ஒரே வாக்யம் இரண்டு முறை சொல்லப்படுகிறது. இதற்கு மூலாதாரம் இல்லை என்று ஒரு கேள்வி எழுகிறது.

இதே போன்ற கேள்வி ஸம்ஹிதா பாராயணத்தில் வருகிறது. அதாவது அநுவாகம் முடிவில் வரும் பதத்தை भवतीति भवति என்று க்ரம பாடத்தில் முடிக்கிறோம் இது போல सहस्र वल्शा इति सहस्र वलशाः என்று முடிப்பதே உசிதமாக இருக்கும் போது எதற்காக அடுத்த பதத்தைச் சொல்ல வேண்டும். மறுபடியும் ஆரம்பிக்கும் போது विवयं என்று ஆரம்பித்தால் वि என்பதற்கு ஒரு தடவை தான் பாடம் ஆகும். அதற்காக அடுத்த பதத்தை சொல்லி நிறுத்துகிறோம் என்றால் அநுவாகத்தின் முதல் பதத்திற்கு இரண்டு தடவை பாடம் கிடையாது அதே போல் அடுத்த ஸமயத்தில் ஆரம்பிக்கும் போது विवयं என்று ஒரு தடவை படித்தால் என்ன தோஷம்? என்றும் கேள்வி வருகிறது.

இதற்கு ஸமாதானம் அநுவாகம் வரைதான் ப்ராசீனமான விபாகம். பஞ்சாதியாகவோ, ப்ராம்மணத்தில் பத்து வாக்யங்களாகவோ விபாகம் செய்யப்பட்டது அத்யேதாக்களின் புத்தி ஸௌகர்யத்திற்காக ஏற்பட்டது ஆகும். இது அர்வாசீனர்களால் கல்பிக்கப்பட்டது.

ருக் ஸம்ஹிதையில் மண்டலம், அநுவாகம் ஸூக்தம் என்று ப்ராசீனத்தில் விபாகம் இருந்தது. பிறகு அஷ்டகம் அத்யாயம், வர்கம் என்று அத்யயன ஸௌகர்யத்தை உத்தேசித்து கல்பிக்கப்பட்டது. அதே போல் இங்கும் அத்யயன ஸௌகர்யத்திற்காக பஞ்சாதி என்று கல்பிக்கப்பட்டது என்பது உபபன்னம். அநுவாக பதத்திற்கு யௌகிகமான அர்த்தத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது அநுவாகம் முடியும் வரை ஒரு அம்சம் அதுவரை விபாகம் பண்ணாமல் படிக்க வேண்டும் என்பதை ஸூசனம் பண்ணுகிறது. அசக்த்யாதி வ்யாஜ விசேஷங்களால் அநுவாக மத்யத்தில்

முடித்தாலும், அர்வாசீன விபாகத்தை அநுசரித்து ஒரு பஞ்சாதியின் முடிவில் நிறுத்தினாலும் இது முடிவு ஸ்தானமன்று என்பதைத் தெரிவிப்பதற்காகவே அடுத்த பஞ்சாதியின் முதல் பதத்தைப் படித்து வருகிறார்கள்.

இது இவ்வாறு இருந்தாலும் ப்ராஹ்மண பாடத்தில் அடுத்த பஞ்சாதியின் முதல் வாக்யத்தை இரண்டுமுறை படிப்பது சரியல்ல என்று சங்கை பண்ணினால் அது சரியன்று. ஏனெனில் மந்த்ர பாகத்திலும் (ஸம்ஹிதையில்) இந்த சங்கை ஸமானமே. அநுவாகாரம்பத்திலும் ருக்குகளுடைய உத்தரார்தாரம்பத்திலும் உள்ள பதங்களுக்கு ஒர தடவைதான் பாடம் படிக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் மறுபடி வேறு பஞ்சாதி ஆரம்பிக்கும் போது அது உபக்ரமத்திலிருப்பதால் ஒரு தடவை படிப்பது யுக்தமே என்று சொல்ல வேண்டி வரும். எனவே இங்கு ஸம்ஹிதையிலும், ப்ராஹ்மண பாகத்திலும் தற்பொழுது இருந்து வரும் ஸம்ப்ரதாயம். இது முடிவு ஸ்தானமன்று என்பதை தெரிவிப்பதற்காகவே அடுத்த பஞ்சாதியின் முதல் பதமும், ப்ராஹ்மணத்தில் அடுத்த பஞ்சாதியின் முதல் வாக்யமும் சொல்லப்படுகிறது.

வேதாத்யயனம் செய்வதிலும் செய்விப்பதிலும் எவ்வளவோ நியமங்கள் உள்ளன. அவைகளில் ஸூக்ஷ்மமான சில அம்சங்கள் இங்கு குறிப்பிடப்பட்டன. இவ்வளவு நியமங்களுடன் அத்யயனம செய்யப்படும் வேதம், வேதாத்யயனம் செய்தவர்களும் மற்றவர்களும் அநுஷ்டிக்க வேண்டிய தர்மங்களையும் கூறியுள்ளது. धर्मो विश्वस्य जगतः प्रतिष्ठा என்று கோஷிக்கும் உபநிடதம் எல்லா தர்மத்திற்கும் மூலமான (वेदोऽखिलो धर्ममूलम्) வேதத்தை ரக்ஷணம் செய்தால் ஸகல க்ஷேமங்களும் ஏற்படும் என்று தெளிவுபடுத்துகிறது.

வேதம் காட்டும் தர்ம நெறிகள்

வேதம் தர்மங்களைச் சொல்லும் போது அவைகளை ஆக்யாயிகை. (கதைகள்) மூலமாகத் தெளிவுபடத் தெரிவிக்கின்றது. எவ்வளவோ தர்மங்கள் சொல்லியிருப்பினும் ஸ்தாலீபுலாக ந்யாயேதன ஒரு விஷயம் வேதாத்யயனம் செய்தவர்களும் மற்றவர்களும் அநுஷ்டிக்க வேண்டியதை இங்கு குறிப்பிடுகின்றேன்.

க்ருஷ்ண யஜுர்வேதம் முதல் காண்டம் முதல் ப்ரச்னத்தில் एकताय स्वाहा, द्विताय स्वाहा, त्रिताय स्वाहा என்று மூன்று மந்திரங்கள் உள்ளன. இந்த மந்த்ரம் எதற்காக வந்தது. இதைச் சொல்லி என்ன செய்ய வேண்டும் என்பதையும், செய்யாவிட்டால் என்ன தோஷம் என்பதையும் முதலில் பார்ப்போமாக.

தர்சபூர்ணமாஸ இஷ்டியில் அந்தர்வேதியில் 3கோடு தெற்கு வடக்காக ஸப்யம்

என்று சொல்லப்படும் யக்ஞாயுதத்தால் கீற வேண்டும். அந்த கோட்டின் மேல் एकताय स्वाहा..... முதலிய மூன்று மந்த்ரங்களைச் சொல்லி ஏற்கெனவே தர்சபூர்ணமாஸ இஷ்டிக்காக புரோடாச ரூப ஹவிஸ்ஸை செய்த பாத்ரத்தை நன்கு அலம்பிய தீர்த்தத்தினால் ஹோமம் செய்ய வேண்டும். அதாவது அவிச்சின்னமாக ஸந்தததாரையாக சேசனம் பண்ணுவதைப் போல் ப்ரோக்ஷிக்க வேண்டும். இது ஏகதர்கள் முதலியவர்களுக்குப் போய் சேருகின்றது.

அவர்கள் யார்? எதற்காக அவர்களுக்குக் கொடுக்க வேண்டும்? தேவர்கள் ஹவிஸ்ஸை தயாரித்தார்கள். நெல்லை முதலில் குத்துவது, அரிசியை அறைப்பது, பாகம் செய்வது இவைகளினால் பீஜவதம் செய்த பாபம் உண்டாயிற்று. இந்த பாபத்தை எதில் துடைப்பது (அலம்புவது) என்று அக்னியைக் கேட்டார்கள். அதற்கு அக்னி நான் ஒருவனை உண்டு பண்ணுவேன். அவனிடத்தில் உங்கள் பாபங்களைப் போக்கிக் கொள்ளுங்கள், அதற்கு முன் உங்களுடைய வீர்யத்தை என்னிடத்தில் வையுங்கள்" என்று சொன்னார்கள். தேவர்களும் வீர்யத்தை வைத்தனர். (अग्निस्सर्वा देवताः) அக்னி அந்த சக்தியை (அங்கார ரூபமாக) 3தடவை ஜலத்தில் வீழ்த்தினார். அப்பொழுது ஏகதர், த்விதர், த்ரிதர் என்ற மூவர் உண்டாயினர். இவர்களுக்கு தேவர்கள் பித்ருக்கள். ஜலம் தாய். தேவர்கள் தங்கள் பாபங்களை ஏகதர் முதலியவர்களிடம் விட்டனர் என்று வேதம் கூறுகிறது.

இதை அடியொற்றியே க்ருஹஸ்தர்கள் பஞ்ச மஹாயக்ஞங்களை அநுஷ்டித்து தமது பாபங்களை போக்கிக் கொள்ளவேண்டும் என்று மநுஸ்ம்ருதியில் 3வது அத்யாயத்தில் "पञ्चसूना गृहस्थः" என்றும் ச்லோகத்தில் சொல்லப்பட்டுள்ளது. கொடிய பாபங்களினால் உண்டாகும் ரோகங்கள் வக்ரநகம், தந்த மாலின்யம் முதலியவை ஆகும். இந்த பாபங்கள் அடுப்பில் விறகை எரிப்பதனாலும், பூமியை மெழுகுவதாலும், ஜலம் கொண்டு வரும் ஸமயத்திலும், பெருக்குவதாலும் ஏற்படும் பல ப்ராணி வதங்களால் நம்மை அடைகின்றன. இதைப் போக்க பஞ்ச மஹாயக்ஞும் செய்ய வேண்டும். ஏகதர் முதலியவர்களை அடைந்த பாபம் எங்கு செல்கிறது? இதற்கும் வேதமே பதில் கூறுகிறது. "तत एकतो जायत। ततो द्वितो जायत। ततस्त्रितो जायत।..... शृत कामा इव हि देवाः॥" என்றுள்ளது. ஏகதர்களை அடைந்த பாபம் சூர்யோதய காலத்தில் வேதோதிதமான அநுஷ்டானம் செய்யாமல் தூங்கிக் கொண்டிருக்கும் சூர்யா ப்யுதிதனை அடைகிறது. அவனிடமிருந்து சூர்யாஸ்தமன காலத்தில் வேதோதித செயல்களைச் செய்யாமல் தூங்கிக் கொண்டிருக்கும் சூர்யாபிநிம்ருக்தனை அடைகிறது. அடுத்தபடியாக குநகன், அடுத்து தந்த மாலின்யம் உடையவன்.

அடுத்து அக்ரதிதிஷு (தமக்கை கல்யாணம் ஆகாமல் இருக்கும் போது தங்கையை கல்யாணம் செய்து கொண்டவன்). அடுத்து பரிவித்தன் (தமையனுக்கு கல்யாணம் ஆகாத போது தான் கல்யாணம் செய்து கொண்ட தம்பி) மேலும் இந்த விஷயத்தில் கல்யாணமாகாத மூத்தவன், கல்யாணம் செய்து கொண்ட தம்பி, கல்யாணப் பெண், பண்ணி வைத்த புரோஹிதன், கந்யகாதானம் செய்தவன் ஆகிய ஐவரும் பாபத்தை அடைகின்றனர் என்கிறது ஸ்ம்ருதி. பரதன் ராஜ்ய பாரத்தை ஏற்க மறுப்பதற்கு இந்த தோஷம் வந்து விடுமே என்று காரணம் கூறுகின்றனர்). பரிவித்தனிடமிருந்து வீரஹன், வீரஹனிடமிருந்து ப்ரஹ்மஹன் என்று சொல்லப்படும் ப்ரஹ்மஹத்தி தோஷம் செய்தவனைப் போய் சேர்ந்து அவனிடமே நின்று விடுகிறது. இதைக் காட்டிலும் கொடிய பாபம் வேறு இல்லாதபடியால்.

இங்கு சொல்லப்படும் தர்மங்கள், பாபங்களைப் போக்கடிக்க க்ருஹஸ்தன் பஞ்ச மஹாயக்ஞத்தைச் செய்ய வேண்டும். சூரியோதய, அஸ்தமன காலங்களில் தூங்காமல் வேதோதிதமான கார்யங்களைச் செய்ய வேண்டும். அக்ரதிதிஷுவாகவும், பரிவேத்தாகவும் ஆகக்கூடாது முதலியவை ஆகும். இப்படி தர்மங்களுக்கு எல்லாம் மூலமாக உள்ள வேதத்தை அத்யயனம் செய்து, செய்வித்து ரக்ஷிப்பதனாலேயே லோக க்ஷேமம் உண்டாகும்.

வேத ஸம்ரக்ஷணமும் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவனும் வேத விஹிதமான கர்மாக்களை உலக க்ஷேமத்திற்காக அனுஷ்டித்தும் பிராணிகளுடைய ஸௌக்யத்திற்காக வேதபாராயணங்களைச் செய்தும் வந்த உத்தமர்களைக் குறித்து போஜராஜன் தான் செய்த சம்பூ ராமாயணத்தில் -

उच्चैर्गतिर्जगति सिद्ध्यति धर्मतश्चेत्
तस्य प्रमा च वचनैः कृतकेतरैश्चेत् ।
तस्य प्रकाशन दशा च महीसुरैश्चेत्
तानन्तरेण निपतेत् कनुमत्प्रणामाः ॥

என்று தன்னுடைய ப்ரணாமங்கள் வேதங்களை விளங்கச் செய்யும் ப்ராம்மணோத்தமர்களைத் தவிர எங்கு செல்லும் என்று கேட்கிறார். தத்காலத்தில் ஒரு சில இடங்களில் வேறு ப்ரயோஜனத்தை உத்தேசிக்காமல் அதிகமான நிதி ஆதாரம் இல்லாத சிலரால் வேதங்களை அத்யயனம் செய்வித்தும் ஸ்வயம் அத்யயனம் செய்தும் ரக்ஷிக்கப்பட்டு வருகின்றது.ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் லோக க்ஷேமம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு வேத ஸம்ரக்ஷணத்திற்காக செய்துவரும் கார்யங்கள் மிகவும் போற்றி புகழக்கூடிய விஷயமாகும். ஸ்ரீவைஷ்ணவர்களின் முக்ய க்ஷேத்ரங்களான ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சிபுரம் முதலிய க்ஷேத்ரங்களிலும் ஸ்ரீஸ்வாமி

தேசிகனுக்கு ஞானப்ரதமாயும் மிகவும் திருவுள்ளம் உகந்த க்ஷேத்ரமுமான திருவஹீந்திர புரத்திலும், ஸ்ரீஸாக்ஷாத் ஸ்வாமி திருவுள்ளம் உகந்த ஸ்தலமான வடூர் முதலிய இடங்களிலும் வேத பாடசாலைகளை ஸ்தாபனம் செய்து ஆங்காங்கு அனேக வித்யார்த்திகளுக்கு வேதாத்யயனம் செய்வித்து பலரும் ஸத்தை பெற வழி வகுத்துள்ளார். இந்தப் பாடசாலைகளின் அபிவ்ருத்தியில் தானே நேரடியாக தினமும் ஈடுபட்டு வருவது ரொம்பவும் கொண்டாட வேண்டிய அம்சமாகும். நான் சிறிது நாட்களுக்கு முன்பு திருச்சானூர் பாடசாலை, காஞ்சிபுரம் பாடசாலை உபாத்யாயர்களையும் வித்யார்த்திகளையும் சந்தித்தேன். இரண்டு இடங்களிலும் அத்யாபனமும், வித்யார்த்திகளைக் கொண்டுவரும் முறையும் எல்லோருக்கும் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. இதே போன்றுதான் மீதி பாடசாலைகளிலும் நடைபெறும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. பழந்தமிழ் இலக்கியங்களான பத்துப்பாட்டு, பரிபாடல் முதலியவற்றில் கிராமங்கள் தோறும் வேத ஒலியைக் கேட்டே எல்லோரும் கண் விழித்து கார்யங்கள் செய்யத்துடங்கினர் என்று சொல்லப்பட்டுள்ளது.

"கோதிலாத செஞ்சூட்டுடை வாரணம் கூவ ஞாலத்து
மற்றய தலத்தில் உள்ளவர்கள் விழிப்பார்கள் - ஈதலற்ற
லோடு அறுதொழில் இருபிறப்பாளர்கள் வேதநாதத்தின்
விழிப்பது திவ்ய மாநகர் மக்களே"

என்று கூறியுள்ளபடி எல்லா ஊரையும் வேத ஒலி கேட்டு எழுப்பச் செய்து திவ்யமாநகராக ஆக்கும் பெருமை ஸ்ரீமதாண்டவனுக்கு உரித்தாகும்.

முடிவுரை

ஸ்ரீமந்நாதமுனிகளாலே காண்பிக்கப்பட்டும், ஸ்ரீமந் யாமுன முனிகளாலே சிக்ஷிக்கப்பட்டும், ஸ்ரீபகவத் ராமானுஜ முனியினால் ஸம்ரக்ஷிக்கப்பட்டும் ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் நிஷ்கண்டகீக்ருதமாக்கப்பட்டதுமான ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயமே வைதீக ஸம்ப்ரதாயம் ஆகும். இந்த ஸம்ப்ரதாய ப்ரவர்தகர்களான ஆசார்யர்கள் வைதிக ஸம்ப்ரதாயத்தை நன்கு ரக்ஷித்து வந்துள்ளார்கள்.

நாவல்பாக்கம் ஸ்ரீக்ராமத்திற்கும் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்திற்கும் நெருங்கிய ஸம்பந்தம் உண்டு. ஸ்ரீமத் பெரியாண்டவனுக்கு பூர்வாச்ரமத்தில் ஏழுகரை வகையராகுமார தாதாசாரியார் தனது குமாரத்தி லக்ஷ்மீ என்கிற கந்யகையை தானம் செய்தார். பெரியாண்டவனுக்கு நாவல்பாக்கத்தில் விசேஷ அபிமானம் உண்டு. நாவல்பாக்கம் ஸ்ரீக்ராமத்தில் கலாபகாலத்தில் சில விக்ரஹங்கள் களவு போனதில் ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகனின் விக்ரஹமும் ஒன்றாக இருந்தது. இதையறிந்த ஸ்ரீமத் பெரிய ஆண்டவன் இந்த அபிஜாத அக்ரஹாரத்தில் ஸ்ரீதேசிகன் விக்ரஹமில்லாமல் இருப்பது மிகவும் சோசநீயம் என்று திருவுள்ளம் பற்றி உடனே தனக்கு மாமனார்

க்ருஹத்தில் வரிசையாக ஸமர்ப்பிக்கப்பட்ட மோதிரம் முதலியவற்றைக் கொண்டு ஸ்ரீதேசிகன் விக்ரஹத்தை சிறந்த ஸ்தபதியைக் கொணடு அவதரிப்பித்துத் தாமே கூட இருந்து ப்ரதிஷ்டை செய்து வைத்தார் என்று பெரியோர்கள் ஸாதிப்பதுண்டு.

ஆக்கூர் ஸ்ரீமதாண்டவன் நாவல்பாக்கம் தௌஹித்ரர் ஆவார். நாவல்பாக்கத்தில் சில ஸம்பந்தங்களும் உண்டு. ப்ரக்ருதம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுக்கு நாவல்பாக்கத்தில் விசேஷ அபிமானம் உண்டு. அடியேனுக்கு பால்யம் முதற்கொண்டு ஸ்ரீமதாண்டவனுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. ஸ்ரீமதாண்டவன் தனது வித்யார்த்தி தசையில் தன்னுடைய ஆசார்யனிடத்தில் விசேஷ ப்ரதிபத்தியுடன், ஸோத்ஸாஹம் குரு சுச்ரூஷை பண்ணியதை ப்ரத்யக்ஷமாகப் பார்த்துள்ளேன். "अशिथिल गुरुभक्तिः" என்று ஸ்வாமி தேசிகன் ஸாதித்தது போன்று அந்த குருபக்தியின் தொடர்ச்சியே ஸமீபகாலத்தில் நாவல்பாக்கத்திற்கு எழுந்தருளி ஸாத்விகாக்ரேஸரரான தமது குருவின் (ஸ்ரீக்ருஷ்ண நாதயார்ய மஹாதேசிகனின்) சதமான மஹோத்ஸவத்தை சிறப்புற நடத்தி வைத்ததாகும். வித்யாப்யாஸ காலத்திலேயே எவரேனும் தேசிக ஸம்ப்ரதாயத்தை தூஷித்தால் உடனே தன்னுடைய மேதா விலாஸத்தால் அதற்கு ப்ரதிபந்தி சொல்லி எதிரியை திக்குமுக்காடச் செய்து விடுவார். ஸ்ரீஸ்வாமியின் தேசிக ஸம்ப்ரதாயத்தில் ஈடுபாட்டின் அநுவ்ருத்தியே இன்று ஸ்வாமி தேசிகனின் க்ரந்தங்களை அத்புதமான வ்யாக்யானங்களுடன் ப்ரகாசனம் செய்து உலகத்திற்கு உபகாரமாக இருப்பது ஆகும். இவ்வாறே எப்பொழுதும் பண்டிதர்களிடம் ஸம்ப்ரதாய வைஷம்யம் இராமல் அபிமானம் வைத்து இருந்தார். இன்றும் துரியாச்ரமத்தில் எல்லா ஸம்ப்ரதாய பண்டிதர்களையும் கௌரவித்து நிஷ்பக்ஷபாதமாக நடந்து வருகிறார். ஸ்ரீஸ்வாமியின் குணாதிசயங்களும் ரஸிகத் தன்மையும், ப்ரதிபா விசேஷமும் சொல்லி முடியாது. ஸ்ரீமதாண்டவனின் ஸப்ததயப்தபூர்த்தி விழா மலரில் இந்த வ்யாஸத்தை ஸமர்பித்து, ஸ்ரீமதாண்டவன் பல்லாண்டு பல்லாண்டு ஸம்ப்ரதாய ப்ரவர்த்தனம் செய்ய ஸ்ரீலக்ஷ்மீ ஹயவதனைப் ப்ரார்தித்து நிறைவு பெறுகிறேன்.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

அவரும் இவரும்

(ஸ்ரீமதுபயவே. வில்லூர். நிடாதூர். ஸ்ரீபாஷ்யஸிம்ஹாஸனம்.
சாஸ்த்ரஸாஹிதீவல்லப. கருணாகராசார்யஸ்வாமி, புதுதில்லி)

1. முகப்பு சுலோகம்

वेलामूर्-कीर्तिकरावादी वन्दे यतीशितुर्वाचाम् ।
भावं जिघ्रौ रङ्ग-रामानुज इति समाख्यया जुष्टौ ॥

வேலாமூர்-கீர்த்திகரா-வாதீ வந்தே யதீசிதுர்வாசாம்।
பாவம் ஜிக்ரௌ ''ரங்க-ராமானுஜ'' இதி ஸமாக்யயா ஜுஷ்டௌ ॥

2. ஆதி ரங்கராமானுஜ ஸ்வாமி

நம் திருக்குடந்தை தேசிகன் வழியாய்ப் பல்கிப் பெருகி வரும் எம்பெருமானார் ஸம்ப்ரதாயத்தினர் அனைவர்க்கும் ஸ்ரீபாஷ்யம், மற்றும் கீதாபாஷ்யம் ஆகிய க்ரந்தங்கட்கு உரிய குருபரம்பரையில் இடம் பெறும் ஆசார்யர்களில் உபநிஷத்பாஷ்யகாரர் என்றே ப்ரஸித்தமானவர் ரங்கராமானுஜ மஹாதேசிக ஸ்வாமி. இந்த ஸ்வாமியின் தனியன்

येनोपनिषदां भाष्यं रामानुज-मतानुगम् ।
रम्यं कृतं प्रपद्ये तं रङ्गरामानुजं मुनिम् ॥

யேனோபநிஷதாம் பாஷ்யம் ராமானுஜ-மதாநுகம் ।
ரம்யம் க்ருதம் ப்ரபத்யே தம் ரங்கராமாநுஜம் முனிம் ॥''

என்பதாகும். இதனை திருக்குடந்தை தேசிகன் ஸம்ப்ரதாயத்தினர் அனைவரும் அனுஸந்தானம் செய்து வருகிறோம்.

அடியேனுடைய அறிவுக்கெட்டியவரை நம் ஆசார்ய பரம்பரையில் ''ரங்கராமனுஜ'' என்கிற திருநாமத்தினை முதல் முதலாக ஏற்றவர் இந்த மஹான் தான். எனவே இந்த மஹானை ''ஆதி ரங்க ராமானுஜ ஸ்வாமி'' என்று குறிப்பிடலாம்.

ஸ்ரீமதபிநவதேசிக உத்தமூர் ஸ்வாமியும் இவரையே முதலாம் ரங்க ராமானுஜ ஸ்வாமி என்று தம்முடைய உபநிஷத் பாஷ்ய பரிஷ்கார பூமிகையினில் குறிப்பிட்டு அருளியுள்ளார்.

இல்லை! இல்லை! இந்த மஹானுக்கு முன்பே வேறு ஒரு ரங்க ராமானுஜ ஸ்வாமி இருந்திருக்கிறார் என்று யாரேனும் தங்களிடம் உள்ள தகவலின் அடிப்படையினில் ஆக்ஷேபித்தாலும், இந்த மஹானை **''ஆதி ரங்க ராமானுஜ ஸ்வாமி''** என்று குறிப்பிடுவதை ஆக்ஷேபித்திடவே இயலாயது. ஏன் என்கிறீர்களா?

எம்பெருமானார் ஸம்ப்ரதாயத்தினுடைய மற்றைய கிளைகளிலும் கூட இந்த ஸ்வாமினுடைய உபகாரத்தினை நினைத்து, நன்றி கலந்த நல் வணக்கங்களை இந்த மஹானுக்குச் செலுத்திடுகின்றனர். ஆக எம்பெருமானார் ஸம்ப்ரதாயத்தினர் அனைவராலும் ஆதரித்து ஏற்றுக் கொள்ளப் படுகிறார் இந்த மஹான். இந்த அடிப்படையினில் இந்த மஹானை **''ஆதி ரங்க ராமானுஜ ஸ்வாமி''** என்று குறிப்பிடலாம்.

ஆம்! **''உபாதீயதே இதி ஆதி:''** என்ற அடிப்படையில் **''ஆதரித்து ஏற்றுக் கொள்ளப்படுபவன்''** என்ற பொருளில் ''ஆதி:'' என்ற சொல் வரும்.

இதற்குத் தேவையான இலக்கண விளக்கத்தினைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் அடுத்து (1) முதல் (7) வரை இலக்கம் இடப்பட்ட பத்திகளைப் படிக்கவும். மற்றைய வாசகர்கள் அந்தப் பத்திகளைத் தவிர்த்து அப்பால் உள்ள பகுதிக்குத் தாவிப் போகலாம்!

(1) பாணினி பகவானுடைய அஷ்டாத்யாயியில் மூன்றாவது அத்யாயத்தில் மூன்றாம் பாதத்தில் தொண்ணூற்றி இரண்டாவது ஸூத்திரம் ''உபஸர்கே கோ: கி:'' என்பது ''டுதாஞ்ச்'' என்று ஒரு தாது (வினைச் சொல்லின் வேர்). இது ''கொடுப்பது'' என்னும் வினையினை (செயலை)க் குறிக்கும். ''டுதாஞ்ச் தானே'' என்று தாதுபாடம்.

(2) ''தாதா கு அதாப்'' என்று பாணினி பகவானுடைய அஷ்டாத்யாயியில் முதலாம் அத்யாயத்தில் முதலாம் பாதத்தில் இருபதாவது ஸூத்திரம். இதன்படி ''டுதாஞ்ச் என்ற தாது ''கு'' என்ற எழுத்தினால் அடையாளம் காட்ட (குறிப்பிட)ப் படுகிறது.

(3) ''உபஸர்கே கோ: கி:'' என்கிற ஸூத்திரம், ''கு'' என்று அடையாளம் காட்டப்பட்டதான தாது (வினைவேர்) உபஸர்கங்களான அதாவது தாது (வினைவோ) கட்கு அடைமொழியான ''ஆ, உப'' போன்ற சொற்களுடன் இணைகையில் ''கி:'' என்ற சொல்லிறுதியினைப் பெறும் என்று கூறுகிறது. இதன்படி ''ஆ'' என்னும் உபஸர்கத்துடன் இணைகையில் ''டுதாஞ்ச்'' (இந்த தாது ''டுதாஞ்ச்'' என்று வழங்கப்பட்டாலும் ''டு'' மற்றும் ''ஞ்ச்'' என்கிற எழுத்துக்களை நீக்கி விட்டு ''தா'' என்ற வடிவத்திலேயே செயலாற்றும் என்னும் மரபினை நினைவில் கொண்டிட

வேண்டும்) ''தி'' என்கிற வடிவத்தினைப் பெற்றிடும். இப்பொழுது ''ஆ'' என்னும் உபஸர்கமும் ''தி'' என்னும் வடிவம் பெற்ற ''டுதாஞ்ச்'' என்கிற தாதுவும் இணைந்து ''ஆதி:'' என்ற சொல் வடிவம் பெறுகிறது. இந்த ''ஆதி:'' என்னும் சொல்லிற்கு ''ஏற்கப்படுபவன்'' என்று பொருள்.

(4) அது சரி ''டுதாஞ்ச்'' என்கிற தாதுவிற்குக் ''கொடுப்பது'' என்று பொருள் என்று கூறினாய். இப்பொழுது ''ஏற்பது'' என்கிறாயே என்று ஐயம் வரலாம். உபஸர்கத்துடன் இணைகையில் உபஸர்கங்களின் பலத்தினால் தாதுக்கள் வேறுபட்ட பொருளினைப் பெறுவது வடமொழி மரபு.

(5) ''உபஸர்கேண தாத்வர்த்த: பலாத் அன்யத்ர நீயதே'' என்ற வ்யாகரணகாரிகை ப்ரஸித்தமானது.

(6) ''டுதாஞ்ச் தாரணபோஷணயோ:'' என்று படிக்கப்பட்ட மற்றொரு தாது உண்டு. இந்த தாதுவும் ''டு'' மற்றும் ''ஞ்ச்'' என்கிற எழுத்துக்களை நீக்கி விட்டு ''தா'' என்ற வடிவத்திலேயே செயலாற்றும்.

(7) இந்த ''தா'' தாது

1. நி
2. வி
3. ப்ர
4. பரி
5. ஸம்
6. திர
7. ஆ

என்ற உபஸர்கங்களுடன் இணைந்து எப்படிப் பல வேறு பொருள்களில் செயல்படுகிறது என்பதனைப் பண்டிதராஜ ஜகந்நாதனுடைய கங்காலஹரீயில்

निधानं धर्माणां, किमपि च विधानं नवमुदां,
प्रधानं तीर्थानां, अमलपरिधानं त्रिजगतः ।
समाधानं बुद्धेः, अथ खलु तिरोधानमधियां,
श्रियामाधानं, नः परिहरतु तापं तव वपुः ॥

நிதானம் தர்மாணாம், கிமபி ச விதானம் நவமுதாம்.
ப்ரதானம் தீர்த்தானாம், அமல- பரிதானம் த்ரிஜகத:।
ஸமாதானம் புத்தே:, அத கலு திரோதானமதியாம்,
ச்ரியாமாதானம், ந: பரிஹரது தாபம் தவ வபு:॥

என்ற சுலோகத்தில் காணலாம்.

ஸ்ரீபராசரபட்டர் ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமபாஷ்யமாக அருளிச் செய்த

பகவத்குணதர்ப்பணத்தில் ''பூதாதி:'' என்கிற திருநாமத்தினை விளக்கிடும் பொழுது अपि च स्पृहणीयतमत्वात् भूतैः उपादीयते इति भूतादिः । उपसर्गे घोः किः ।என்று அருளிச் செய்துள்ளார்.

இதனைப் பின் பற்றி எழுந்த நிருக்தியில் இதுவே भूतैर्यः प्राणिभिर्नित्यं स्पृहणीयतमत्वतः। उपादानाद्धि भूतादिः उच्यते सुन्दराकृतिः ॥ என்று காரிகையாகக் காட்டப்பட்டது.

இதன் அடிப்படையில் அழகியமணவாளப்பெருமாள் நாயனார் தம்முடைய அமலனாதிபிரான் வ்யாக்யானத்தில் ''ஆதி'' என்கிற தொடரை விளக்கிடுகையில் ''ஸ்வரூபாதிகளைக் கண்டு எல்லோரும் மேல் விழும்படி இருக்கிற தான்'' என்றும் பொருள் காட்டுவதைக் காணலாம்.

ஆக ''ஆதி:'' என்னும் சொல் ''ஏற்கப்படுபவர்'' என்ற பொருளிலும் வரும் என்பதும் இந்தப் பொருளில் உபநிஷத்பாஷ்யகாரரை ''ஆதி ரங்க ராமானுஜ ஸ்வாமி'' என்று குறிப்பிடுவது மிகப் பொருத்தமானது என்பதும் தெளிவு.

3. ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனும் ஆதி ரங்கராமானுஜ மஹாதேசிக ஸ்வாமியே! எப்படி?

உபநிஷத்பாஷ்யகாரருக்குப் பிறகுப் பல மஹான்கள் ரங்கராமானுஜர் என்னும் திருநாமத்துடன் திகழ்ந்து இருக்கின்றனர். அண்மைக் காலத்தினில் அவனியினை அலங்கரித்தவரும், ''ஸந்ந்யாஸ தர்மமே ஓர் உருவத்துடன் நடமாடுகிறதோ'' என்று அனைவரும் போற்றும் படித்திகழ்ந்தவருமான பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான கோழியாலம் ஸ்வாமியும் இத்திருநாமத்தினையே ஏற்றிருந்தார்.

அந்த ஸ்வாமி தொடங்கித் திருக்குடந்தை ஆண்டவன் வரையிலான பல மஹான்களுடைய அனுக்ரஹத்திற்குப் பாத்திரமானவரும், தற்போது ஸப்ததி மஹோத்ஸவம் கண்டருளுபவருமாகிய நம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனும் ரங்கராமானுஜர் என்னும் திருநாமத்துடன் திகழ்கின்ற படி.

இந்த ரங்கராமானுஜ மஹாதேசிக ஸ்வாமியும், ''ஆதி:'' என்னும் சொல், ஏற்கப்படுபவர் என்ற பொருளிலும் வரும் என்ற அடிப்படையினில் ''ஆதி ரங்க ராமானுஜ ஸ்வாமி'' யே. நம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் தம்முடைய கல்யாண குணங்களால் ஈர்க்கப்பட்ட அனைவராலும் ''எம் ஆண்டவன்'' என்று ஏற்கப் படுகிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

அனைவராலும் ஏற்கப்படுபவர் என்ற அடிப்படையில் ''ஆதி:'' என்னும் சொல் வருவது போல ''அனைத்தையும் ஏற்பவர்'' என்ற அடிப்படையில் ''ஆதி:'' என்னும் சொல் வராதா? எனில், வராது என்று சிலர் கூறுவார்கள். செயப்படுபொருளில் (Passive

Voice-ல்) தான் இத்தகைய சொற்கள் உருவாகும் என்ற பொது விதியின் அடிப்படையினில் எழும் கருத்து இது.

ஆனால் ''உபஸர்கே கோ: கி:'' என்கிற ஸூத்திரத்தினை விளக்கும் பொழுது ஸித்தாந்தகௌமுதீ வ்யாக்யானமான தத்வபோதினீயில் செய் பொருளிலும் (Active Voice-லும்) இத்தகைய சொற்கள் உருவாகலாம் என்று காட்டப் பட்டுள்ளது.

उपसर्गे घो: कि: । बाहुलकात् कर्तर्यपीति माधव: । अत एव उप समीपे स्वधर्ममादधादि इति उपाधि: इति व्याचक्षते ॥ என்று அங்குள்ள வ்யாக்யான வரிகள். உபாதி முதலிய சொற்கள் இந்த அடிப்படையில் உருவாகின்றன என்ற படி.

இந்தக் கோணத்தில் ஆதி: என்னும் சொல் ''அனைத்தையும் ஏற்பவர்'' என்ற பொருளிலும் வரும். உபநிஷத்பாஷ்யகாரர் ஆன ரங்க ராமானுஜ ஸ்வாமி மீமாம்ஸை, வ்யாகரணம், தர்க்கம் ஆகிய அனைத்தையும் ஏற்று அவைகள் அனைத்தையும் கையாளும் அழகினை அவருடைய ப்ரபந்தங்களில் நாம் காண்கிறோம்.

ஸ்வாமிக்கு இருக்கும் இந்த ஆதித் தன்மையினில் சுவைக்க வேண்டியது ஒன்று உண்டு. வேறு ஸம்ப்ரதாயத்தனர் சொல்லியிருப்பது சரியாக இருப்பின், ஸ்வாமி அதனை அப்படியே தயக்கம் ஏதும் இன்றிக் கையாண்டு கொள்வது உண்டு. (தவறாக இருப்பின் சரியானதைக் காட்டாமலும் விடுவதும் கிடையாது)

ஸ்ரீபாஷ்த்தின் வ்யாக்யானமான மூலபாவப்ரகாசிகையிலும், ச்ருதப்ரகாசிகையின் வ்யாக்யனமான பாவப்ரகாசிகையிலும் பல மீமாம்ஸா ந்யாயங்களை அருளியுள்ளார் ஸ்வாமி. அந்த இடங்களில் உள்ள சில பங்க்திகள் கூட அப்படியே அப்பைய தீக்ஷிதருடைய க்ரந்தங்களில் உள்ளவையே. அவைகள் பூர்வ மீமாம்ஸையைப் பொறுத்த மட்டில் சரியான கருத்துக்களைக் கூறுவதால் உபநிஷத்பாஷ்யகார ரங்க ராமானுஜ ஸ்வாமி தயக்கம் ஏதும் இன்றி பாவப்ரகாசிகையில் அவைகளை அப்படியே ஏற்றுக் கொண்டு விட்டார். ஆனால் அப்பைய தீக்ஷிதர் எம்பெருமானாரின் ஸ்ரீபாஷ்யத்தின் சுருக்கமாகத் தாம் இயற்றிய நயமயூகமாலிகையில் ச்ருதப்ரகாசிகையையே சீர் செய்வதாக எண்ணிக் கொண்டு முயற்சி செய்யும் இடங்களில், உபநிஷத் பாஷ்யகார ரங்க ராமானுஜ ஸ்வாமி, ச்ருதப்ரகாசிகையை உரிய முறையினில் விளக்கி, ரக்ஷித்து, அப்பைய தீக்ஷிதருடைய வழி சரி அல்ல என்று பாவப்ரகாசிகையில் காட்டிடும் அழகே தனி.

ஸ்ரீமதபிநவதேசிக உத்தமூர் ஸ்வாமியும் தம்முடைய உபநிஷத் பாஷ்ய பரிஷ்கார பூமிகையினில் இந்த விஷயத்தினை **अप्पय्यदीक्षितोक्तेष्वर्थेषु अभिमतग्रहणस्य अनभिमतखण्डनस्य च स्वग्रन्थेषु कर्ता** என்று குறிப்பிட்டருளியுள்ளார்.

நம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனும் இனிய நல்ல விஷயங்கள் நல்ல கலைகள் என்று அனைத்தையும் ஏற்று அவைகளைத் திறமையுடன் கையாள்கிறார். ஸம்ஸ்க்ருதம் தமிழ் ஆகிய அடிப்படை மொழி இரண்டிலும் உள்ள இலக்கண

இலக்கியங்களிலும் மற்றும் தர்க்கம் முதலிய சாஸ்திரங்களிலும் ஈடு இணையற்ற பாண்டித்யம், சுந்தரத் தெலுங்கில் நல்ல திறமை, ஸங்கீதக் கலையில் வல்லமை, ஆயுர்வேதத்தில் அபாரமான அறிவு, சிற்பக்கலையினில் சீர்மை இப்படி ஸகல கலா வல்லபர் ஆகத் திகழ்வது, மற்றும் நம்மவர், வேறு ஸம்ப்ரதாயத்தவர் என்று பாகுபாடு பார்க்காது திறமையைக் கணிசித்துப் பண்டிதர்களைப் பாரட்டி விருது வழங்கிக் கௌரவிப்பது என்று அடுக்கிக் கொண்டே போகலாம். எனவே நம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனும் இந்தக் கோணத்திலும் ஆதி ரங்கராமானுஜ ஸ்வாமி தான்.

4. வேலாமூருக்குப் புகழளித்தவர்கள்.

இப்படி ஆதி களான இரு ரங்க ராமானுஜ ஸ்வாமிகளில் உபநிஷத் பாஷ்யகாரரான அவர் வேலாமூரில் அவதரித்தருளி அவ்வூருக்குப் புகழ் அளித்தருளியுள்ளார்.

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனாகிய இவர் வேலாமூரிலேயே பல காலம் (பூர்வாச்ரமத்தினில்) வாழ்ந்தருளி.. அவ்வூரில் உபநிஷத் பாஷ்காரருடைய ஸந்நிதியை சீர் பெறச் செய்து, அவ்வூருக்குப் புகழ் அளித்தருளியுள்ளார்.

5. எம்பெருமானாரின் திவ்ய ஸூக்திகள் உட்கருத்தினை நுகர்ந்தவர்கள்.

அவர் மூலபாவப்ரகாசிகை என்ற தலைப்பினில் ஸ்ரீபாஷ்யத்திற்கே நேராக ஒரு வ்யாக்யானம் அருளியுள்ளார். (நம்முடைய துரத்ஷ்டத்தினால் இந்த வ்யாக்யானம் ஸ்ரீபாஷ்யத்தின் முதல் அதிகரணத்திற்குக் கூட முழுமையாகக் கிடைத்திடவில்லை. கிடைத்துள்ள பகுதியே மா நிதி ஆக அமைந்து உள்ளது.) எம்பெருமானாருடைய திவ்யஸூக்திகளுடைய உட்கருத்தினை ஸ்வாமி எப்படி நுகர்ந்து உள்ளார் என்பதனை உணர்த்துகிறது.

அவர் ஸ்ரீபாஷ்யத்தின் ப்ரஸித்த வ்யாக்யானமான ச்ருதப்ரகாசிகைக்கு, வ்யாக்யானமாக பாவப்ரகாசிகை என்ற ப்ரபந்தத்தினை அருளியுள்ளார். அடியேனுக்கு ஸத்வகுணம் ஓங்கிடும் போது, இந்த ப்ரபந்தத்தினை ஸேவிப்பதை விட வாழ்க்கையில் வேறு ஓர் இன்பம் இல்லை என்றே தோன்றும். அப்படி ஓர் இன்பக் களஞ்சியமாகத் திகழும் ப்ரபந்தம் இது. இதன் மூலம் அவர் எந்த அளவுக்கு எம்பெருமானாருடைய கருத்துக்களை நுகர்ந்துள்ளார் என்பதினை நாம் உணர இயலும்.

அவர் ஸ்ரீபாஷ்யத்தின் சுருக்கமாக ஸ்ரீசாரீரக-சாஸ்த்ரார்த்த-தீபிகை என்ற ப்ரபந்தத்தினையும் அருளியுள்ளார்.

ஸ்ரீபாஷ்யத்தில் அதிகரணங்கட்கு விஷயவாக்யங்களாக எடுத்துக் காட்டப்பட்ட உபநிஷத்துணுக்குகளை மட்டுமே தொகுத்து அவைகட்கு எம்பெருமானார் ஸம்ப்ரதாயத்திற்கு ஏற்ற அர்த்தத்தினை விளக்கி விஷய-வாக்ய-தீபிகையை அருளிச் செய்துள்ளார்.

ப்ரஸித்தமான பத்து உபநிஷத்துகட்கும் எம்பெருமானாருடைய கருத்துக்கும்

ஸம்ப்ரதாயத்திற்கும் பொருந்திய முறையினில் பாஷ்யம் இட்டருளியுள்ளார்.

இப்படி அவர், தாமும் எம்பெருமானாருடைய கருத்துக்களை நுகர்ந்து, நம்மையும் நுகர வைத்தருளிய படி.

இவரும், அவர் போலவே (தமக்கு ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் ஸாதித்தருளிய ஆசார்யரான திருக்குடந்தை ஆண்டவன் ஏற்படுத்திப் பல ஆண்டுகள் நடத்திப் போந்த ஸ்ரீபாதுகா விஹார வித்வத் ஸதஸ்ஸினை அத்புதமான முறையில் ஆண்டுதோறும் வளர்ந்து வரும் விபவத்துடன் நடத்தி மற்றும் பல சீடர்கட்கு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸாதித்தருளி) எம்பெருமானாருடைய திவ்யஸூக்திகளின் கருத்துக்களைத் தாமும் நுகர்ந்து, நம்மையும் நுகர வைத்தருளுகிற படி.

6. முகப்பு சுலோகத்தினில் ஓர் இலக்கண நுட்பம்.

இப்படி

அவரும், இவரும்

1. ரங்கராமானுஜர் என்னும் திருநாமத்துடன் இலங்கிடுபவர்கள்
2. வேலாமூர் என்னும் ஊருக்குப் புகழ் தந்தவர்கள்
3. ''ஆதி'' என்ற அடைமொழிக்கு ஏற்ற சிறப்புடையவர்கள்.

மற்றவரையும் நுகர வைத்திடுபவர்கள்.

இந்த இருவரையும் வணங்குகிறேன் ''என்பது இக்கட்டுரையின் முகப்பில் உள்ள அடியேனுடைய சுலோகத்தின் பொழிப்புரை.

இந்த சுலோகத்தினில் ''நுகர்பவர்'' என்ற பொருளினைக் குறித்திட ''முகர்பவர்'' என்ற சொல்லின் ஸம்ஸ்க்ருத வடிவமாக ''ஜிக்ர:(जिघ्र:)'' என்ற சொல்லினைக் கையாண்டிருக்கிறேன்.

''ஜிக்ரன்'' என்ற வடிவத்தில் இந்தப் பொருளில் வரும் சொல்லைப் போல 'ஜிக்ர:' என்னும் வடிவத்தில் உள்ள சொல்லும் உண்டு. ''ஜிக்ர:'' என்னும் வடிவத்தில் உள்ள சொல்லினை இந்தக் கட்டுரையில் முகப்பு சுலோகத்தினில் பயன்படுத்தியதும் உபநிஷத் பாஷ்யகாரரின் கருணையையும், உபகாரத்தினையும், யாவரும் நன்றியுடன் உணர்த்திடவே. எப்படி?

முண்டகோபநிஷத்தில்

யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம்

என்று உள்ள தொடரில் ''பச்ய:'' என்ற சொல்லிற்குப் ''பார்ப்பவன்'' என்று நம் உபநிஷத் பாஷ்யகாரர் பொருள் காட்டியுள்ளார். சங்கரபகவத்பாதரும் தம்முடைய உபநிஷத் பாஷ்யத்தினில் இதே பொருளைத் தான் காட்டியுள்ளார். ஆனால் அவர் ''பச்ய:'' என்ற சொல் அபூர்வமாக இருப்பதைக் கண்டு, ''இந்த சொல் எப்படி

உருவாகியது?'' என இலக்கண நூல்களில் போதிய பயிற்சி அற்றவர்கட்கு வரக்கூடிய ஐயத்தினைத் தீர்க்கக்கூடிய விளக்கத்தினைக் காட்டிடவில்லை. ஆனால், நம் உபநிஷத் பாஷ்யகாரர் पश्यतीति पश्यः । पाघ्राध्माधेट्दृशः इति शप्रत्ययः । शित्त्वात् पश्यादेशः । என்று ஓர் இலக்கண விளக்கம் அருளியிடுகிறார். இதன் சுருக்கமான கருத்து ''பா, க்ரா, த்மா, தேட், த்ருச்,'' என்கிற ஐந்து தாதுக்கட்கு (வினை வேர்ச்சொல்கட்கு) வினையாலணையும் பெயர்கள் ''பிப:(பருகுபவன்)'' ஜிக்ர: (முகர்பவன்), தம: (ஊதுபவன்), தய: (பருகுபவன்), பச்ய: (பார்ப்பவன்) என்ற வடிவத்தினைப் பெறும் என்பதாகும்.

இங்கு ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் திருவருளுடன் தொடர்புடைய ஒரு விஷயத்தினைக் குறிப்பிடாமல் இருக்க இயலவில்லை. எனவே அதனையும் வாசகப் பெருமக்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அண்மையில் அலுவலகத்தில் அடியேனுக்குப் பதவி உயர்வளித்துச் சென்னையில் இருந்து புது தில்லிக்கு மாற்றல் அளித்தார்கள். மாறுதல்களை உடனேயே உளமாற ஏற்க மறுத்திடும் மனிதர்கட்கே உரிய இயற்கையாலும், மற்றும் சில பல அனுஷ்டான அஸௌகர்யங்கள் பற்றிய அச்சத்தாலும், அடியேன் தயங்கிய படியே தான் பதவி உயர்வினை ஏற்றுக்கொண்டேன்.

ஏற்கனவே 1993 முதல் 1996 வரை புதுதில்லியினில் அடியேன் இருந்திருக்கிறேன். அப்பொழுது புது தில்லியினில் காலடி வைத்தபொழுதே அடியேனுக்கு அடைக்கலம் தந்தது ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்தின் ஸ்ரீவைகுண்டநாதப் பெருமாள் ஸன்னிதி தான். புது தில்லி ஸ்ரீமதாண்டவன் ஆச்ரமத்தினை நிர்ஹித்து வரும் ஸ்ரீமான் லக்ஷ்மீ குமார் அடியேனுக்கு ஜாகை கிடைக்கும் வரை தன்னுடைய திருமாளிகையில் தங்க வைத்து, அனுஷ்டானாதிகள் ஸ்ரீவைகுண்டநாதப் பெருமாள் ஸன்னிதியில் நடந்திடும் படி ஏற்பாடு செய்து பார்த்துக் கொண்டார்.

சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் திருத்தகப்பனாருடைய அனுக்ரஹத்தினால், ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுடைய அருளாசியுடன் ஸ்ரீவைகுண்டநாதப் பெருமாள் ஸன்னிதியில் ச்ருதப்ரகாசிகையுடன் ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயம், மற்றும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் ஆகிய க்ரந்தங்களைக் காலக்ஷேபம் சொல்லும் பாக்யம் கிடைத்தது.

இப்படிக் காஞ்சீபுரத்தில் ஹஸ்திகிரியில் தேவாதிராஜப் பெருமாள் போலவே ச்ருதப்ரகாசிகையுடன் ஸ்ரீபாஷ்ய திவ்யஸூக்தியையும், பகவத்விஷய திவ்ய ஸூக்தியையும் பல வர்ஷங்கள் தொடர்ந்து திருச்செவி சாத்தித் திருவுள்ளம் உகந்தருளியவன் என்னும் பெருமையுடன் திகழ்ந்திட ஸ்ரீவைகுண்டநாதன் ஸங்கல்பித்திருந்த படி.

இப்பொழுது மீண்டும் சில ஆண்டுகள் அந்தத் திருப்பணியினை அடியேன் தொடர்ந்திட வேண்டும் என்று ஸ்ரீவைகுண்டநாதன் திருவுள்ளம் இருப்பதனால் பதவி உயர்வுடன் புதுதில்லிக்கு மாற்றம் என்று அடியேன் உணர்ந்திடவில்லை. ஆனால் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுடைய திருவுள்ளப்படி ஆச்ரமத்தின் ஸ்ரீவைகுண்டநாதன் ஸந்நிதியினை நிர்வஹித்து வரும் வதான்ய வாவதூகரான ஸ்ரீமான் லக்ஷ்மீகுமார் அம்ஸை உணர்ந்து கொண்டார். அடியேனுக்கும் உணர்த்தினார். இம்முறையும் அடியேனுக்கு ஜாகை கிடைத்திடும் வரை தம்முடைய திருமாளிகையிலேயே தங்க வைத்து முன்பு போலவே மற்றைய ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார்.

இடையில் புதுதில்லி ஆர்.கே.புரம் திருவேங்கடமுடையான் ஸந்நிதியில் கிணற்றினின்று ஜலம் இழுத்திடவே போய், அடியேனுடைய அஜாக்ரதையினால், உள்ளங் கைகள் இரண்டிலும் பலத்த ரணகாயம் பட்டுக் கொண்டேன். அப்பொழுது பாதுகா தேவியே ஸ்ரீமான் லக்ஷ்மீகுமார் குடும்பத்தினர். ஸ்ரீவைகுண்டநாதன் ஸந்நிதியில் கைங்கர்யம் செய்து வரும் ஆயுஷ்மான் ஸ்ரீராம், ஸ்ரீமான் ஜவஹர் லக்ஷ்மீ நரஸிம்ஹாச்சாரியார். ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுடைய (பூர்வாச்ரமத்து) மைத்துனர் பதரீஸ்வாமி - என இவர்கள் அனைவரையும் அனுப்ரவேசித்து அடியேனைப் பல வகையும் பேணிக் காத்தருளினான்.

இந்நிலையில் அன்றாடம் அடியேன் மனத்தினைத் தைத்த விஷயத்தினை நாள் தோறும் இரவில் ஒரு சுலோகமாக்கி அடியேனுக்குக் கிடைத்த தொடைக் கணியினி (Lap-top)ல் ''ராஜதாநீரஜனய:'' என்ற தலைப்பினில் பதிவு செய்திடத் தொடங்கினேன்.

ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவனுடைய அனுக்ரஹத்தினால் ஸ்ரீவைகுண்டநாதன் ஸந்நிதியில் ஞாயிறு தோறும் (ச்ருதப்ரகாசிகையுடன்) ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் மீண்டும் தொடங்கியது. அது மட்டுமல்ல. இப்பொழுது புது தில்லியினில், ஸ்ரீமதாண்டவனுடைய ப்ரீதிபாத்ரம் மீமாம்ஸா சாஸ்த்ர வல்லுனர் ஸ்ரீமதுபயவே Dr.அளவூர் நடாதூர் ஆராவமுதாசார்ய ஸ்வாமி, மற்றும் வ்யாகரணசாஸ்த்ர வல்லுனர் ஸ்ரீமதுபயவே Dr. கோழியாலம் அனந்தாச்சார்ய ஸ்வாமி என இரு வித்வான்களும் வஸித்து வருகின்றனர். இவர்கள் இருவரும் அடியேனும் பரஸ்பரம் உசாத்துணையாக இருந்து சாபரபாஷ்யம், மஹாபாஷ்யம், ஸ்ரீபாஷ்யம் ஆகிய மூன்று பாஷ்யங்களிலும் மற்றைய நாட்களில் அவகாசம் கிடைத்திடும் பொழுது சிந்தனை செய்யும் பாக்யமும் கிட்டியுள்ளது.

இந்த முறையில் மூவருமாக 26.08.2004-ல் ஸ்ரீபாஷ்யத்தில் ஆவ்ருத்யதிகரணம் சிந்தனை செய்தோம். அந்த அதிகரணத்தில்

யதா பச்ய: பச்யதே ருக்மவர்ணம்

என்னும் முண்ட கோபநிஷத் பகுதியை எம்பெருமானார் மேற்கோளாகக்

காட்டிடுகிறார். அங்கும் பாவப்ரகாசிகையில் உபநிஷத் பாஷ்யகார ரங்கராமானுஜ ஸ்வாமி, பச்ய: என்னும் பதத்திற்கு வ்யாக்யானம் இடுகையில் पश्यतीति पश्य: । पाघ्राध्माधेट्दृश: इति शप्रत्यय: । शित्त्वात् पश्यादेश: ।என்கிற இலக்கணக் குறிப்பினைக் காட்டிடுகிறார். இந்த இலக்கணக்குறிப்பின்படி ''பா,க்ரா,தம,தேட், த்ருச்,'' என்கிற ஐந்து தாதுகட்கு(வினைவேர்ச்சொல்கட்கு) வினையாலணையும் பெயர்கள் ''பிப: (பருகுப வன்), ஜிக்ர: (முகர்பவன்), தம: (ஊதுபவன்) தய: (பருகுபவன்), பச்ய:(பார்ப்பவன்)'' என்ற வடிவத்தினைப் பெறும் என்பதனை நினைவில் கொண்டிடப் பயன்படும் வாய்ப்பாடாக 26.08.2004-க்காக'' ராஜதாநீரஜனய:'' என்னும் தொடரில் கீழ்க் காணும் சுலோகத்தினை இயற்றிப் பதிவு செய்தேன்.

विष्णो: पाद्यस्य पिब-

स्तुलसीजिघ्रो धमोऽशुभस्य धय: ।

कीर्तेर्मङ्गलदिव्य-

श्रीसुषमायास्सदा भवे: पश्य: ॥४७॥२६-०८-२००४॥

''திருமாலின் ஸ்ரீபாததீர்த்தத்தினைப் பருகுபவ(பிப)னாக இரு. திருமாலின் திருத்துழாயினை முகர்பவ (ஜிக்ர)னாக இரு. (இதனால்) அசுபத்தினை ஊதுபவ(தம)னாக இரு. திருமாலுடைய கீர்த்தியினைக் (காதுகளால்) பருகுபவ(தய)னாக இரு திருமாலுடைய மங்கள)-திவ்ய விக்ரஹத்தின் அழகினைக் காண்பவ (பச்ய)னாக இரு''. என்று ஓர் ஆசார்யன் சிஷ்யனுக்குச் செய்திடும் ஹிதோபதேசம் ஆக அமைந்த சுலோகம் இது.

பெருமாளுடைய திருமேனியினை திவ்ய-மங்கள விக்ரஹம் என்று தானே குறிப்பிடுவது வழக்கம். திவ்யமுமாய், மங்களமுமாய் உள்ள விக்ரஹத்தினைக் குறித்திட திவ்யம், மங்களம் என்ற இரண்டு சொற்கள் இணைந்து உருவாகும் கூட்டு (த்வந்த்வ ஸமாஸ)ச் சொல்லில் திவ்யம் என்ற சொல்லினைத் தான் முதலில் இட்டிட வேண்டும் என்று இலக்கண நெறி அல்லவா? நீ அதனை மாற்றி மங்கள-திவ்ய விக்ரஹம் என்று சொல்லாட்சி செய்கிறாயே. இது பிழை அல்லவா? என்று இலக்கணம் பயின்றவர்கள் கருதலாம். அவர்கள் ரஸிப்பதற்காக இங்கு உள்ள இலக்கண நுட்பம் பற்றிய ஆய்வு இதனை அடுத்த (1) முதல் இலக்கம் (8) பத்திகள். இலக்கண விளக்கத்தினைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள் மட்டும் (1) முதல் (8) வரை இலக்கம் இடப்பட்ட இந்தப் பத்திகளைப் படிக்கவும் மற்றைய வாசகர்கள் இந்தப் பத்திகளைத் தவிர்த்து அப்பால் உள்ள பகுதிக்குத் தாவிப் போகலாம்!

(1) '' அல்பாச்தரம்'' என்று பாணினி பகவானின் ஸூத்ரம். இதன் படி, கூட்டுச்

சொல் ஆவதற்காக இணையும் இரு சொற்களில் எதனில் குறைந்த உயிரெழுத்து உள்ளதோ, அந்தச் சொல் தான் கூட்டுச் சொல்லில் முதலாவதாக வர வேண்டும். ''திவ்ய'' என்னும் சொல்லில் ''தி'' என்ற எழுத்தினில் ''த்'' என்கிற மெய்யெழுத்தும் ''இ'' என்கிற உயிரெழுத்தும் உள்ளன. ''வ்'' மெய் எழுத்து. ''ய'' என்னும் எழுத்தில் ''ய்'' என்கிற மெய் எழுத்தும் ''அ'' என்கிற உயிரெழுத்தும் உள்ளன. ஆக ''திவ்ய'' என்னும் சொல்லில் மொத்தம் இரண்டு உயிர் எழுத்துக்கள். இதே முறையில் ''மங்கள'' என்கிற சொல்லில் மூன்று உயிரெழுத்துக்கள் இதனால் தான் ''திவ்ய'' என்னும் சொல்லினை முதலில் வைத்திருப்பதாய் திவ்யமங்கள விக்ரஹம் என்ற வடிவிலேயே இந்த கூட்டுச் சொல் வழக்கில் இருக்கிறது. உன்னுடைய சுலோகத்தில் நீ இதனை மாற்றி மங்கள திவ்ய என்று கூட்டுச் சொல்லினை அமைத்திருக்கிறாயே! என்று சுலோகத்தில் பிழை இருப்பதாகக் கருதிட வேண்டா.

(2) அல்பாச்தரம் என்னும் நெறி கட்டாயமானது அல்ல. அது அநித்யமானது. வ்யாகரண சாஸ்திரம் வல்லவர்கள் இப்படி நிர்ணயம் செய்திருக்கின்றனர். அல்பாச்தரம் என்று ஸூத்ரம் இட்ட பாணினி பகவானே அந்நெறியைக் கடைபிடித்திடவில்லை.

ஸமுத்ராப்ராத்த:, லக்ஷணஹேத்வோ: க்ரியாயா: என்று ஸூத்ரங்கள் இட்டுள்ளார். அல்பாச்தரம் என்னும் நெறியைப் பாணினி பகவான் கட்டாயமாகக் கடைபிடிப்பவர் ஆயின், இந்த ஸூத்ரங்களை அப்ரஸமுத்ராத்த: ஹேது லக்ஷணயோ: க்ரியாயா:, என்று அமைத்திருப்பார். அப்படி அவர் செய்யாததாலேயே இது ஒரு கட்டாயமாகக் கடைபிடிக்கப் பட வேண்டிய நெறி என்று பாணினி பகவான் கருதிடவில்லை என்பது தெளிவு.

(3) அல்பாச்தரம் என்னும் ஸூத்ரத்திற்கு முன் ஸூத்ரம் அஜாத்யதந்தம் என்பது. அந்த ஸூத்ரம் தொடங்கி வரும் ப்ரகரணமே ''அநித்யம்-கட்டாயமானது அல்ல'' என்றே கொள்ளப்படுகிறது.

(4) ஸித்தாந்த கௌமுதீயின் வ்யாக்யானமான தத்வ போதினீயில் अजाद्यदन्तम्। समुद्राभ्राद्ध:, लक्षणहेत्वो: क्रियाया:, इत्यादिनिर्देशात् अनित्यमिदं प्रकरणम् । என்று கூறப்பட்டுள்ளது.

(5) அஜாத்யதந்தம் என்பதின் படி ஔதார்யம் (பொருள் செறிவு) ஸௌஷ்டவம் (தெளிவு) இரண்டும் பொருந்திய ஒன்றைக் குறித்திட ஒரு கூட்டுச் சொல்லை அமைத்திடும் பொழுது ஔதார்யம் என்னும் சொல் தான் முதலில் இடம் பெறும். ஏனெனில் அதன் முதல் எழுத்து ''அச்'' என்னும் வாய்ப்பாட்டினால் குறிப்பிடப்படும் உயிர் எழுத்தில் ஒன்றான ஔ (அதாவது அது அஜாதி) அதன் இறுதி

எழுத்து ''அத்'' என்னும் வாய்ப்பாட்டினால் குறிக்கப்படும் ''அ'' என்கிற எழுத்து (அதாவது அது அதந்தம்). அப்படி இருந்தும் மஹாகவி பாரவி கிராதார்ஜுனீயத்தில் முதல் ஸர்கத்தில் மூன்றாம் சுலோகத்தில்

स सौष्ठववौदार्यविशेषशालिनीं विनिश्चितार्थामिति वाचमाददे ॥

என்று ''ஸௌஷ்டவம்'' என்கிற சொல்லினை முதலில் இட்டு, ''ஔதார்யம்'' என்ற சொல்லினைப் பின்னிற்குத் தள்ளிக் கூட்டுச் சொல்லினை அமைக்கிறார். பாணினி பகவான் இந்த நெறியைக் கட்டாயமாகக் கருதிடவில்லை என்பதால் தான் இப்படி அமைத்தார் மஹாகவி.

(6) கிராதார்ஜுனீயத்திற்கு வ்யாக்யானமாக மஹாமஹோபாத்யாய மல்லிநாதர் வரைந்துள்ள கண்டாபதத்தில் இதை மிகத் தெளிவாக

अत्र औदार्यशब्दस्यअजाद्यदन्तत्वेऽपि लक्षणहेत्वोः क्रियायाः इत्यत्राल्पस्वरस्यापि हेतुशब्दस्य पूर्वनिपातमकुर्वता सूत्रकृतैव पूर्वनिपातस्यानित्यत्वज्ञापनात् न पूर्वनिपातः । उक्तं च काशिकायाम्-अयमेव लक्षणहेत्वोरिति निर्देशः पूर्वनिपातव्यभिचारचिह्नम् ॥ என்று நிலைநாட்டியுள்ளார்.

(7) வேதவ்யாஸபகவானும் ''உத்தர - பூர்வாகயோ:'' என்று ப்ரஹ்மஸூத்ரத்தில் அருளியபடி.

(8) எனவே ''மங்கள திவ்ய'' என்ற ப்ரயோகம் பிழையானது அல்ல.

தய : என்ற தனிச் சொல்லினைப் பருகுபவன் என்ற பொருளில் மஹாகவி ஸ்ரீஹர்ஷன் ப்ரயோகம் செய்திருப்பதையும் பாருங்கள்

विदर्भसुभ्रूस्तनतुङ्गतास्पृधे घटानिवापश्यदलं तपस्यतः ।
फलानि धूमस्य धयानधोमुखान् स दाडिमे दोहदधूपिनि द्रुमे ॥

(நைஷதீய சரிதம் முதல் ஸர்கம் 82-ம் சுலோகம்) ''நளசக்ரவர்த்தி தோட்டத்தினைப் பார்வையிடும் காட்சி. தோட்டத்தினில் மாதுளைச் செடிகள் உள்ளன. அவைகளில் மாதுளைக் கனிகள் தொங்கிடுகின்றன. அந்தச் செடிகள் நிறையப் பழுப்பதற்காக செடிகளைச் சுற்றிப் புகைமூட்டம் இட்டுள்ளனர். தலைகீழாகத் தொங்கும் மாதுளைக் கனிகள் மீது அந்தப் புகை படர்ந்திடுகிறது. மாதுளைக் கனிகள் புகையினைப் பருகுவது போலப் படுகிறது. மாதுளைக் கனிகள் குடங்கள் போல உள்ளன. தமயந்தியின் மார்பகங்கள் போலத் தாங்களும் ஆக வேண்டும் என்று தலை கீழாகத் தொங்கிக் கொண்டு, தீயின் இடையில் குடங்கள் தவம் செய்பவை போலவும் அப்பொழுது புகையினைப் பருகும் நிலையில் அவை இருப்பது போலவும் தோற்றம் தரும் காட்சியினைக் கண்டான் நளசக்ரவர்த்தி.'' என்கிறான் மஹாகவி. இங்குப் புகையினைப் பருகுகின்ற (குடங்கள்) என்பதைக் காட்ட மஹாகவி ''தூமஸ்ய தயான்'' என்று சொல்லாட்சி செய்கிறான். தயான் என்பது

தய: என்பதின் இரண்டாம் வேற்றுமையில் பன்மையில் வரும் வடிவம்.

பிப: என்ற சொல்லினைப் பருகுபவன் என்ற பொருளில் அடியேனுடைய பிதாமஹனும் ப்ரசார்யனும் மஹாவித்வானும் மஹாகவியுமான வேங்கடசேஷார்ய மஹாதேசிக ஸ்வாமி

ஊர்ந்த சகடமுதைத்த பாதத்தன், பேய்முலை
சார்ந்து சுவைத்த செவ்வாயன், என்னை நிறை கொண்டான்
பேர்ந்தும் பெயர்த்தும் அவனோடன்றி ஓர் சொல்லிலேன்
தீர்ந்த என் தோழீ! என் செய்யும் ஊரவர் கவ்வையே?

என்னும் திருவாய்மொழிப் பாசுரத்திற்குத் திருவாய்மொழிக்கு சுலோகமயமான ஸம்ஸ்க்ருத மொழிபெயர்ப்பாகத் தாம் அருளிச் செய்த ப்ரதிபிம்பலஹரீயில்

उपेतशकटासुरप्रहरदंघ्रिकः पूतना-
स्तनादर-पिबा-रुणाधरदलस्तु मत्पूर्णताम् ।
जहार सगतागता गतवचोत्तरा तं विना
मदेककृतिनिश्चये! सखि! जनापवादेन किम्? ॥

என்று அருளிக் காட்டியுள்ளபடி. சுலோகத்தில் "ஸ்தனாதரபிப" என்ற தொடர் "சார்ந்து சுவைத்த" என்பதற்கான மொழிபெயர்ப்பு.

7. திருக்குடந்தை ஆண்டவன் திருவுள்ளம்

பாதுகா விஹார வித்வத் ஸதஸ்ஸினைத் தொடங்கி வைத்துப் பல ஆண்டுகள் அதனைத் தம்முடைய ஆத்யக்ஷத்தினில் நடத்தி வைத்தருளிய திருக்குடந்தை ஆண்டவன் தான் நம் ஸம்ப்ரதாயத்தில், வித்வத்ஸபையில் அன்வயிக்கும் வித்வான்கட்குப் பொதுவான ஸம்பாவனையினை முதல் முதலாக ரூபாய் 150/- என்ற அளவிற்கு உயர்த்தியாயிற்று.

1981-ல் ராஜமன்னார்குடியில் திருக்குடந்தை ஆண்டவன் நடத்தியருளிய பாதுகா விஹார வித்வத் ஸதஸ்ஸில் இந்த உயர்வு தொடங்கியது.

அடியேன் கார்யாலயப் பணியினில் இருப்பதால், முடிந்த வரையில் விடுமுறை நாட்களினைத் தேர்ந்து எடுத்து அல்லது ஸதஸ்ஸுக்கு இடையில் வரும் ஞாயிற்றுக்கிழமையினில் ஸதஸ்ஸில் கலந்து கொள்ளும் வழக்கத்தினைக் கடைபிடித்திட வேண்டிய நிர்பந்தம். அந்த வழக்கப்படி மேற்படி மன்னார்குடி ஸதஸ்ஸிற்கு அடியேன் ஒரு ஞாயிற்றுக் கிழமையில் சென்றேன். ஸதஸ்ஸிற்கு ஆண்டவன் எழுந்தருள்வதற்கு முன்னரேயே, தனியாக ஆண்டவனை தண்டன் ஸமர்ப்பிக்கும் ஸதாசாரத்தினையும் அனுஷ்டித்திடப் போதுமான அவகாசம் இருந்தது.

அடியேனைக் கடாக்ஷித்துப், "பானு-வாஸர-வித்வான்!" எனத் தனக்கே உரிய

புன்முறுவலுடன் மெல்லிய குரலில் கூறியதாயிற்று. ''பானுவாஸரம்'' என்றால் ஞாயிற்றுக்கிழமை அல்லவா? அன்று ஒரு தினம் மட்டுமே ஸதஸ்ஸில் பங்கேற்கும் வித்வான் அடியேன் என்பதனையும், ஸதஸ்ஸில் மற்றை நாட்களில் அடியேன் பங்கேற்பதில்லை என்பதனால் தனக்குக் குறை என்பதனையும், உணர்த்திடவே அவ்வாறு குறிப்பிட்டு அருளியதாக அடியேன் புரிந்து கொண்டேன்.

''க்ஷமித்தருளவேண்டும். அடியேன் அரசுப் பணியினில் உள்ள ஊழியன். ஸேவா ச்வ வ்ருத்தி: என்றாரே மநு! அந்த வசனப் படி நாய்ப்பிழைப்பு அல்லவா அடியேனுடையது.'' என்று விண்ணப்பம் செய்தேன். உடனே அந்த தனக்கே உரிய புன்முறுவலுடன்'' வருந்த வேண்டா. பானு-பாஸ்ர-வித்வான் என்று சொல்ல வந்தேன். வயதாகி விட்டதல்லவா? வாய் குழறிவிட்டது. பானுவாஸர வித்வான் என்று வந்து விட்டது'' என்று ஸமாதானம் செய்தாயிற்று.

''பானு-பாஸ்ர-வித்வான்'' என்ற தொடருக்கு ஸூர்யனைப் போல ஒளிரும் வித்வான் என்று பொருள்!

ஒரு வினாடி அந்த சமத்காரம் அடியேனைத் திகைக்க வைத்தது. பிறகு ஒருவாறு தேறி ''அவ்விடத்து ஆசீர்வாதத்தினால் அப்படியே அது உண்மை ஆகிடல் வேண்டும்'' என்று வினயத்துடன் விண்ணப்பம் செய்தேன். திருக்குடந்தை ஆண்டவன் ''அந்த ஆசீர்வாதம் காளிதாஸன் சொன்னது போல உமக்குப் புனருக்த-பூதம் ஆகுமே!'' என்று அருளியாயிற்று.

மஹாகவி காளிதாஸனுடைய ரகுவம்சத்தில் ஐந்தாம் ஸர்கத்தில் 34-ஆம் சுலோகத்தினில் வருகிறது ''புனருக்த-பூதம்'' என்ற தொடர். கௌத்ஸர் என்னும் முனிவர் ரகு சக்ரவர்த்தியின் கொடை உதவியினைப் பெற்றவுடன் அவனுக்கு நன்றி தெரிவித்திடும் காட்சியினை வர்ணிக்கிறான் மஹாகவி.

आशास्यमन्यत् पुनरुक्तभूतं श्रेयांसि सर्वाण्यधिजग्मुषस्ते ।
पुत्रं लभस्वात्मगुणानुरूपं भवन्तमीड्यं भवतः पितेव ॥

என்பது சுலோகத்தின் முழு வடிவம் ''அனைத்து நன்மைகளையும் அடைந்து இருக்கின்ற உனக்கு ஆசீர்வதிக்கத் தக்க எதனை ஆசீர்வாதமாகச் சொன்னாலும் அது ''கூறியது கூறல்'' தான் ! ஆகவே உன்னுடைய தகப்பனார், புகழ்க்குரிய உன்னைப் புதல்வனாகப் பெற்றது போல, நீயும் உனது பண்புக்குத் தகுந்த புதல்வனைப் பெறுவாய் ஆக!'' என்கிறார் கௌத்ஸர். (அந்த ஆசீர்வாதம் ரகுவிற்குப் பலித்தது. அஜன் பிறந்தான். இந்நிகழ்ச்சியினை ஒட்டி அடியேனுக்கும் புத்ரன் பிறந்தநாள் ! இதனைப் பிறகே அடியேன் உணர்ந்து கொண்டேன்!)

அடியேனுடைய திருத்தகப்பனார் மற்றும் திருத்தாயார் பற்றிய குசலப்ரச்னங்கள் என்று ஸல்லாபத்தினைத் தொடர்ந்தாயிற்று. ஸதஸ்ஸம் பாவனை பற்றியும் பேச்சு வந்தது. அடியேன் அதிகப்ரஸங்கியாக ''ஸம்பாவனையை ரூ 150 ஆக்கியுள்ளது.

சின்மயீ ஆகச் செய்வது பொருத்தமாக இருக்குமே'' என்று விண்ணப்பம் செய்தேன்.

திருக்குடந்தை ஆண்டவன் ''சுபாசீ ஆகவே ஸம்பாவனை செய்ய வேண்டும் என்று தான் எனக்கு ஆசை. என்னுடைய சதாபிஷேகத்தில் அப்படிச் செய்யத் திட்டம் உள்ளது. நான் அது வரை ஜீவித்திருந்தால்'' என்று அருளியாயிற்று.

(ஸ்ரீபாஷ்யப் படி ப்ரஹ்மஸூத்ரங்களின் எண்ணிக்கை 545, கடபயாதி முறையில் சுபாசீ என்ற சொல் 545 என்கிற தொகையினைக் குறிக்கும். ஸ்ரீபாஷ்யப் படி 156 அதிகரணங்கள் சின்மயீ என்ற சொல் கடபயாதி முறையில் 156 என்ற தொகையினைக் குறிக்கும்.

सौत्री संख्या शुभाशी:, अधिकृतिगणना चिन्मयी ब्रह्मकाण्डे ।

என்று அதிகரண்ணஸாராவலீ.)

வித்வத்ஸதஸ் காலம் வரவே, ஸதஸ்ஸிற்கு எழுந்தருளியாயிற்று. அப்பொழுது அடியேனிடம் ''இந்த ஸதஸ்ஸிற்கு ரூ. 30, 000 வரை செலவு ஆகிறது (இது அப்பொழுதைய நிலவரப் படி). உன்னைப் போலச் சில வித்வான்கள் தான் என் எதிர் பார்ப்பிற்கு ஏற்ப இந்த வாய்ப்பினை நன்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள்'' என்று அருளிய படி.

ஸதஸ்ஸில் அடியேன் முதல் அத்யாயத்தில் மூன்றாம் பாதத்தில் முதலாம் அதிகரணமான த்யு-ப்வாத்-யதிகரணத்தில் வாக்யார்த்தம் விண்ணப்பம் செய்தேன்.

''ப்ரஹ்மஸூத்ரங்களில் முதல் அத்யாயத்தில் ப்ரபஞ்சம் அனைத்துக்கும் காரணமான பொருளினைக் காட்டும் வேதவாக்யங்களினை ஆய்வு செய்கிறார் வேத வ்யாஸ பகவான். அதில் கடந்த இரண்டாம் பாதத்தில் ப்ரபஞ்சம் அனைத்துக்கும் காரணமான பொருள் ஜீவாத்மாவாகவோ அல்லது மூலப்ரக்ருதியாகவோ இருக்கலாம் என்று ஐயம் வரும்படி அவைகளையும் ஒரு வண்ணம் உணர்த்துவது போன்ற மங்கலான (அரசல்புரசலான) அடையாளங்களைத் தம்மகத்தே உடைய வேத வாக்யங்களைத் தேர்ந்து எடுத்து ஆய்வு செய்தார். இப்பொழுது மூன்றாம் பாதத்தில்-காரணமான பொருள் ஜீவாத்மாவாகவோ அல்லது மூலப்ரக்ருதியாகவோ இருக்கலாம் என்று ஐயம் வரும் படி அவைகளையும் தெளிவாகவே உணர்த்துவது போன்ற ஸ்பஷ்டமான (ஒளிரும்) அடையாளங்களைத் தம்மகத்தே உடைய வேத வாக்யங்களைத் தேர்ந்து எடுத்து ஆய்வு செய்கிறார் என்று எம்பெருமானாரே வேதாந்ததீபத்தில் விளக்கியுள்ளார்.'' என்று கடந்த பாதத்திற்கும் இந்த பாதத்திற்கும் இருக்கும் தொடர்பினை (ஸங்கதியை) விண்ணப்பம் செய்தேன்.

''ப்ரமாணமான வேதத்தினிலியே இப்படி வகைகள்-தாரதம்யம்-காட்டிடும் முறையினை மேலையார்கள் (முன்னோர்கள்) இசைந்திருக்கின்றார்களா?'' என்று திருக்குடந்தை ஆண்டவன் கேட்டருளியாயிற்று.

''ஆம்'' என்று உறுதியுடன் கூறி, அதற்கு உரிய அத்தாட்சியினை உடனேயே

காட்டிட இயலாத நிலையில் அடியேன் ''எம்பெருமனார் இப்படி அருளியிருக்கிறபடியால் இது முன்னோர் இசைந்த முறையாகவே இருக்க வேண்டும்'' என்று மென்று விழுங்கினேன்.

''ஸபையில் யாரேனும் பதில் ஸாதிக்கலாமே'' - திருக்குடந்தை ஆண்டவன்.

அப்பொழுது ஸதஸ்ஸில் எழுந்தருளியிருந்தத வித்வான்களில் எந்தத் திருநாமமும் இதற்குப் பதில் இறுக்க முன் வரவில்லை.

''ஆண்டவனே பதில் அருளி அனுக்ரஹித்திட வேண்டும்'' என ஒரே குரலாக அனைவரும் வேண்டினோம்.

''நான் பதில் சொல்லப் போவதில்லை. ஆனால் பதில் இருக்கும் இடத்தை மட்டும் சொல்கிறேன்., நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள். அதிகரணஸாராவலீ வ்யாக்யானமான சிந்தாமணியில் பதில் இருக்கிறது.'' என்று அருளி ''மேலே வாக்யார்த்தம் தொடரவும்'' என்று அடியேனை நியமித்தாயிற்று.

வாக்யார்த்தம் நிறைந்தது.

ஸ்ரீகார்யம் ஸ்வாமியிடம் ''ஸம்பாவனையை இவர் சொன்னபடி சின்மயீ அதாவது ரூபாய் 156 ஆகவே செய்து விடுவோமா?'' என்று கேட்டாயிற்று.

''செய்யலாம் ஆனால் ஏற்கனவே ஸபையில் அன்வயித்துச் சென்று விட்டப் பல ஸ்வாமிகட்கு ரூபாய் 150 தானே செய்திருக்கிறது'' என்றார் அவர் ''சரி அடுத்த ஸதஸ் முதல் வித்வான் தொடங்கி ஞாபகமாக சின்மயீயாகவே ஸம்பாவனை செய்து விடுவோம்'' என்று ஸாதித்தாயிற்று.

''இதுவே சுபாசீ(சுபமான ஆசீர்வாதம்)'' என்று ஸம்பாவனையைப் பெற்றுக் கொண்டேன்.

ஊருக்குத் திரும்பிய கையுடன், அதிகரணஸாராவலீயையும் அதன் வ்யாக்யானமான சிந்தாமணி மற்றும் (அடியேன் பெரியபிதாமஹனும், பிதாமஹனின் ஆசார்யரும், ஸ்ரீமதண்ணயார்யமஹாதேசிகனின் அந்தரங்க சிஷ்யர்களில் ஒருவருமான ஸ்ரீஸுந்தரார்ய மஹாதேசிகன் அருளியதும், அடியேன் பிதாமஹன் க்ரந்தாக்ஷரத்தினில் அச்சிட்டு வெளியிட்டதுமாகிய) ஸஹ்ருதயஹ்ருதயப்ரகாசிகை, முதலிய வ்யாக்யானங்களையும் ஸேவித்தேன். பதில் அதிகரணஸாராவலீயின் 80-ஆவது சுலோகத்தில் கிடைத்தது. சுலோகம்

अस्पष्ट-स्पष्टरूप-स्फुटतर-चिदचिल्लिङ्गवत्-वाक्यचिन्ता
भाष्ये दीपावतारेऽप्यगणि नयगणैस्संप्रवृत्ता त्रिपाद्याम् ।
अत्यन्ता स्पष्ट-लिङ्गान्वितविषयमुशन्त्याद्यपादं तु केचित्
तत्रेदं तारतम्यं नियतनिजबलैः कर्म-तार्तीय-मानैः ॥

இந்த சுலோகத்தின் கடைசி அடியில் ப்ரமாணமான வேதத்திலேயே

காணப்படும் காரணத்தினைக் காட்டும் தொடர்களை

1. மங்கிய நிலையில் உள்ள அடையாளங்களைத் தன்னகத்தே வைத்துக் கொண்டு ஜீவாத்மா அல்லது ப்ருக்ருதியினைக் காரணமாகக் காட்டுவது போல் இருப்பதால், ப்ரஹ்மம் தான் காரணம் என்கிற ஸித்தாந்தத்துக்கு அதிக வலிமை ஊட்டும் - மிக வலிமை உடையவை.

2. தெளிவான நிலையில் உள்ள அடையாளங்களைத் தன்னகத்தே வைத்துக் கொண்டு ஜீவாத்மா அல்லது ப்ருக்ருதியினைக் காரணமாகக் காட்டுவது போல் இருப்பதால் ப்ரஹ்மம் தான் காரணம் என்கிற ஸித்தாந்தத்துக்கு வலிமை ஊட்டும் - வலிமை உடையவை.

3. மிகத்தெளிவான நிலையில் உள்ள அடையாளங்களைத் தன்னகத்தே வைத்துக் கொண்டு ஜீவாத்மா அல்லது ப்ருக்ருதியினைக் காரணமாகக் காட்டுவது போல் இருப்பதால், ப்ரஹ்மம் தான் காரணம் என்கிற ஸித்தாந்தத்துக்கு சிறிதே வலிமை தரும் - குறைந்த வலிமை உடையவை,

என்று வகைப் படுத்தும் முறையை ஜைமிநி முனிவர் காட்டிய வழியினைப் பின்பற்றிய எம்பெருமானார் ஏற்றார் என்று காட்டிடுகிறார் ஸ்வாமி தேசிகன்.

ஜைமிநி முனிவர் கர்ம மீமாம்ஸையில் மூன்றாம் அத்யாயத்தில் மூன்றாம் பாதத்தில் 13-ஆவது ஸூத்ரமாக அருளியது.

श्रुति-लिङ्ग-वाक्य-प्रकरण-स्थान-समाख्यानां समवाये पार-दैर्बल्यं अर्थ-विप्रकर्षात् ॥

(இந்த ஒரு ஸூத்ரத்திற்கு ஆறு அதிகரணங்களை அத்வரகுதூஹலவ்ருத்தி யில் வாஸுதேவதீட்சிதர் அமைக்கிறார். பொதுவாக ஓர் அதிகரணத்திற்குப் பல ஸூத்ரங்கள் இருப்பதைப் பார்க்கிறோம். ஆனால் பல அதிகரணங்கட்கு ஒரு ஸூத்ரம் என்கிற நிலையினை இங்கே இவர் வ்யாக்யானத்தில் ரஸிக்கலாம்.)

இந்த ஸூத்ரத்தின்படி வேதப்ரமாணம் ச்ருதி, லிங்கம், வாக்யம்..... என்று பலபடியாக வகைபடுத்தப்படுகிறது. ச்ருதி மிக வலிமையானது லிங்கம் அதனை விடக் குறைந்த வலிமை உடையது. வாக்யம் அதனை விடக் குறைந்த வலிமை உடையது..... என்றும் தாரதம்யம் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு நெடிய மரம். அதன் உச்சிக் கிளையில் ஒரே ஒரு கனி பழுத்துத் தொங்கிடுகின்றது. அதனைப் பறித்துச் சுவைத்திட விழைகின்றனர் இருவர். மரத்தினில் ஓர் ஏணி சாத்தி வைக்கப் பட்டிருக்கிறது. இருவரில் ஒருவர் அப்படிகளில் மேற்படியினில் நிற்கிறார். மற்றவர் கீழ்ப்படியில்! இருவரும் படிகளை ஒரே வேகத்தில் ஏறும் வலிமை உடையவர்களே! இருவருக்கும் தடங்கல் ஏதும் ஏற்படாத நிலை தான். கனியினைப் பறித்திட ஏணிப் படிகளில் இருவரும் ஏறத் தொடங்கிடுகின்றனர். இப்பொழுது கனியினை மேற்படியினில் உள்ளவர் தானே பறித்துக் கொள்வார்!

ஊற்றவர் வெறுங்கையினராகத் தானே மீள்வார்.

ப்ரமேயம் என்பதே அந்த உச்சாணிக் கனி. அதனைத் தான் காட்டிய வழியில் உணர்த்திட வேண்டும் என்று ச்ருதி என்று கொள்ளப்படும் வேதப்பகுதியும், லிங்கம் என்று கொள்ளப்படும் வேதப்பகுதியும் போட்டி இடுகின்றன. இரண்டுமே வேதப் பகுதிகள் என்பதால் ஸமமானவையே . ஆனாலும் மேற்படியில் இருப்பவரே பழத்தினைப் பறித்துக் கொண்டு வெற்றி பெறுவது போல ச்ருதியே ப்ரமேயத்தினை நிர்ணயம் செய்யும். அதனை எதிர்த்து லிங்கம் செய்ய மாட்டாது.

இப்படியே வாக்யம் என்று கொள்ளப்படும் வேதப்பகுதியும், லிங்கமும் போட்டி இடுகையில் மேற்படியில் உள்ள லிங்கமே வெற்றிக் கனியினைப் பெறும் என்றிப்படியே மே லே அமைப்பு வரிசை.....

இப்படி நாடகக்காட்சியாகவே இந்த மீமாம்ஸா சாஸ்த்ர நுட்பத்தைச் சுலோகங்களில் தருகிறார் குமாரிலபட்டர் தம்முடைய சுலோகவார்த்திகத்தில் அந்த சுலோகங்கள்

निश्रेण्यारोहणप्राप्यं प्राप्तिमात्रोपपादि च ।
एकमेव फलं प्राप्तुमुभावारोहतो यदि॥

अधस्सोपानमेकोऽन्य उत्तरं तु तयोश्श्रितः ।
उभयोस्तु जवस्तुल्यः प्रतिबन्धश्च नान्तरा ॥

आरोहतोस्तदेको हि तत्फलं प्राप्नुयात्तयोः ।
प्रथमेन गृहीतेऽस्मिन् पश्चिमोऽवतरेन्मुदा ॥

இவ்வாறு கர்மகாண்டத்தில் வேதப் பகுதிகளில் தாரதம்யம் காட்டப்பட்டது. இப்படியே ப்ரஹ்மகாண்டத்தில் வேறு ஒரு வகையில் தாரதம்யம் காட்டப்படுகிறது!

அடுத்தப்பாதுகாவிஹார ஸதஸ் 1982-ல் திருக்குடந்தையில் நடந்தது. அதில் ஸ்ரீபாஷ்யம் முதலாம் அத்யாயம் மூன்றாம் பாதம் மூன்றாம் அதிகரணமாகிய ஈக்ஷதிகர்மாதிகரணம் விண்ணப்பம் செய்தேன்.

முந்தைய ஆண்டில் போல ஸங்கதியை விண்ணப்பம் செய்தேன். ''சென்ற ஸதஸ்ஸில் ஸ்ரீமதாண்டவன் காட்டிக் கொடுத்த விஷயம்'' என்று ஞாபகப் படுத்தி மேற்படி அதிகரணஸாராவலீ சுலோகத்தினையும், அதன் விளக்கத்தினையும் விண்ணப்பித்தேன். ஸ்ரீமதாண்டவன் திருச்செவி சாத்திப் போர உகந்தாயிற்று.

''சென்ற ஸதஸ்ஸில் நடந்ததை நினைவில் வைத்துக் கொண்டு நீர் செயல் பட்டது போல நானும் செய்ய வேண்டும் ஆனாலும் 156 என்பதை விட 150 என்பது என்பது

கணக்கிடுகையில் வஸதியாக இருக்கும் என்பதால் 150 என்றே ஸம்பாவனை தொடர்கிறது. ஆனால் ரஸகனமா (சுவைமிகுந்ததாக)கவும் வாக்யார்த்தம் சொன்னபடியால் ரஸம் கூடிய ஸம்பாவனை உமக்குத் தருகிறோம்'' என்று அடியேனுக்கு ரூ 156 ஸம்பாவனை செய்தாயிற்று (ரஸம் என்ற சொல் 6 என்ற தொகையினையும் குறிக்கும்.)

பிறகு சதாபிஷேக ஸதஸ்ஸில் சுபாசீயை ஒட்டிய தொகையான ரூ. 500-ஐப் பொது ஸம்பாவனையாகச் செய்தாயிற்று.

அவருடைய திவ்யகடாக்ஷத்தினால் பாதுகா ஸாம்ராஜ்யத்தினைப் பாதுகாக்கும் தொண்டுக்குக் கோலம் பூண்ட ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் இரண்டு மூன்று மடங்கு சுபாசீகளை ரூ 1000, 1500 என்றிப்படி ஸதஸ்ஸில் ஸ்ரீபாஷ்ய வித்வான்கட்கு ஸம்பாவனை செய்து தம்முடைய ஆசார்யன் திருவுள்ளம் உகக்கும் வகையில் எம்பெருமானாருடைய ஸ்ரீபாஷ்யத்தினைப் பூஜித்து மகிழ்ந்தாகிறது.

தேர்ந்து எடுத்துச் சிறந்த வித்வான்கட்கு பத்து சுபாசீகளைக் கூட ஸம்பாவனை செய்தாகிறது. குலபதிகளான மஹான்களைப் ப்ரோத்ஸாஹனம் செய்து சததூஷணி போன்ற பூர்வாசார்ய க்ரந்தங்கட்கு விரிவான தெளிவான வ்யாக்யானங்களை எழுத வைத்து அதனை அச்சேற்றி வெளியிட்டு விலைமதிக்க முடியாத அந்தப் புத்தகங்களை வித்வான்கட்கு விலையில்லாமலேயே கொடுத்தருளி அந்த மஹான்களுக்கும் பல சுபாசீகளை ஸம்பாவனை செய்து கௌரவித்து வித்யாப்ரசாரம் செய்தாகிறது. இங்கு ஒரு காரிகை!

शुभेन मनसा ध्यातं शुभाशीस्पर्शनं गुरोः ।
कुर्वन् बहुगुणं भाति रङ्गरामानुजो मुनिः ॥

சுபேன மனஸா த்யாதம் சுபாசீஸ்பர்சனம் குரோ :।
குர்வன் பஹுகுணம் பாதி ரங்கராமானுஜோ முநி: ॥

இந்தக் காரிகையின் பொருள்:

''தம் ஆசார்யனுடைய சுபமான திருவுள்ளத்தினில் எழுந்த - ஸ்ரீபாஷ்யவித்வான்கட்கு ப்ரஹ்மஸூத்ரங்களின் எண்ணிக்கை ஆன - 545-ஐ - சுபாசீ யினை - ஸம்பாவனையாக அளித்தல் - என்பதனைப் பல மடங்கில் செய்து கொண்டு ரங்கராமானுஜமுனிவர் (ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன்) விளங்குகிறார்.'' என்பது

இந்த சுலோகத்தில் உள்ள ''சுபேன மநஸா த்யாதம்'' என்ற தொடர் ஸ்ரீவிஷ்ணு-புராணத்தில் ஐந்தாம் அம்சத்தில் ஆறாவது அத்யாயத்தில் 28-ஆவது சுலோகத்திலிருந்து கையாளப் பட்டுள்ளது. சுலோகத்தின் முழு வடிவம் :

बृन्दावनं भगवता कृष्णेनाक्लिष्टकर्मणा।
शुभेन मनसा ध्यातं गवां सिद्धिमभीप्सता ॥

ப்ருந்தாவனம் பகவதா க்ருஷ்ணேனாக்லிஷ்டகர்மணா ।
சுபேன மனஸா த்யாதம் கவாம் வ்ருத்திமபீப்ஸதா ॥

கண்ணன் ப்ருந்தாவனத்தினைப் பசுக்களின் நலனைக் கருதி சுபமான திருவுள்ளத்தினாலே நினைத்திட்டான்! (நெருஞ்சி முள் காடாக இருந்த ப்ருந்தாவனம் பசுமையான புல் நிறைந்த பூங்காவாக மாறிவிட்டது.!)

பூர்வாச்மரத்தில் கண்ணன் என்ற திருநாமத்தினாலேயே ப்ரஸித்தராய் இருந்த திருக்குடந்தை ஆண்டவனுடைய திருவுள்ளத்தின் வலிமையால் ஆச்ரமத்திற்கு ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் கிடைத்தார். இப்படிப் பலமடங்கில் சுபாசீகளை வழங்கி ஸம்ப்ரதாயத்தினை வளரச்செய்தருளுகிறார் என்பதையும் குறிக்கவே ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் உள்ள ''சுபேன மநஸா த்யாதம்'' என்ற தொடரைப் பயன்படுத்திக் காரிகையினை அமைத்திட்டேன்.

காரிகையில் உள்ள சுபாசீஸ்பர்சனம் என்கிற தொடருக்கு சுபாசீயினை அளித்தல் என்று பொருள். ''ஸ்ப்ருச'' என்கிற தாது சுராதி கணத்தில் உபயபதியாய் அளித்தல் என்ற பொருளினில் வரும் ஸ்பர்சயதி அல்லது ஸ்பர்சயதே என்று ரூபம் மஹாகவி காளிதாஸன் ரகுவம்சம் இரண்டாம் ஸர்கம் 48-ஆம் சுலோகத்தில்

गाः कोटिशस्सपर्शयता घटोधीः।

என்று ப்ரயோகம் செய்வது காண்க. இங்கு ''ஸ்பர்சயதா'' என்னும் சொல் ''கொடுப்பவனால்'' என்ற பொருளில் வந்திருக்கிறது. இந்த தாதுவிலிருந்து ''அளித்தல்'' என்ற பொருளில் ''ஸ்பர்சனம்'' என்ற சொல் வருகிறது.

8. நிறைவுரை

இப்படிப் பல வகையில் ஆதி ரங்கராமானுஜ முனியாகவே திகழும் ஆதிரை வந்த இந்த ரங்கராமானுஜமஹாதேசிகஸ்வாமியாம் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் இப்போது ஸப்ததி கண்டாகிறது. சித்திரையில் ஆதிரை நாள் வந்து தோன்றிய ராமானுஜமுனி இரண்டு ஷஷ்ட்யப்த பூர்த்தியை இந்நிலவுலகில் கண்டது போல, வைகாசியில் ஆதிரை நாள் வந்து தோன்றிய இந்த (ரங்க) ராமானுஜமுனியும் இரண்டு ஸப்ததியை இந்நிலவுலகில் கண்டிடப் பாதுகாதேவீ அருளிட வேண்டும்.

நேரிசை வெண்பா ஒன்றின் மூலம், இந்த எழுபது பாதி ஆயுளாக, அதாவது முழு ஆயுள் 140-ஆக ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் வாழ்ந்தருள வேண்டும் என்று ப்ரார்த்தனை செய்யப்படுகிறது.

மாதவ ஆதிரை மண்ணுலகில் நீ வர
மாதவம் செய்திட்டாள் மற்றென்ன? - மாதவீ

கோதில் ஞான குருவே! எழுபதிது
பாதியாய் வாழ்க நீ பார்.

(குறிப்பு மாதவ ஆதிரை - வைகாசித் திருவாதிரை. மாதவீ-பூமி.பார்-பாரில்)

शास्त्रसाहितीवल्लभाख्यया येन दत्तया कीर्तिमानहम् ।
तस्य सप्ततौ तस्य पादयोरर्पितोपदो भानि सत्तया ॥

(अर्पितोपदः-अर्पिता उपदा येन सः । उपायनमुपग्राह्यं उपहारस्तथोपदा । इत्यमरः)

சாஸ்த்ர ஸாஹிதீ வல்லபன் என்ற அடியேனுக்கு ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் பட்டம் அளித்தருளியாயிற்று. அந்தப் பட்டத்தால் புகழ் பெற்ற நிலையில் உள்ளேன். அந்த ஆண்டவனுடைய ஸப்ததியில் அவருடைய திருவடிகளில் இந்தக் காணிக்கையினை ஸமர்பித்திட்டு ஸத்தை பெற்றுப் பொலிவேனாக!

★ ★ ★ ★ ★ ★

श्रीः

आचार्यः

(ஸ்ரீ வைஷ்ணவஸிம்ஹம், குலபதி ஸ்ரீ.உ.வே. உ.ஷ: பாக்கம் ராஜகோபாலாச்சாரியார், மாம்பலம்)

श्रीशश्रीपूतनेशशोभनमुखीं दिव्योल्लसन्मध्यमां
श्रीमच्छ्रीवकुलेशनाथमुनिराट् श्रीभाष्यकारादिभिः।
श्रीमद्देशिकतत्पदाब्जमहितैराचार्यवर्यैः श्रये
पादाम्बोजवतीं शुभैकफलदामाचार्यपङ्क्तिश्रियम्।।1।।

பகவான் பிராட்டி சேனை முதலியார் ஆகியோரால் ப்ரகாசமான முகம் உடையவளும், ஆழ்வார், நாதமுனிகள் முனீந்திரரான ஆளவந்தார், ஸ்ரீ பாஷ்யகாரர் முதலியோரால் சிறப்பாகப் ப்ரகாசிக்கும் இடைப்பகுதியை உடையவளும், ஸ்ரீ ஸ்வாமி தேஸிகன் மற்றும் அவரது தாமரைத் தாள்களைக் கொண்டாடும் ஆசார்யர்களையே திருவடித் தாள்களாய் கொண்டவளும், சுபமான நற்பலன்களையே ஈந்தருளுபவளுமான 'ஆசார்யபங்க்தி ஸ்ரீ' எனும் தேவியை அடைகிறேன். (1)

मुक्तायज्ञोपवीतं निटिलतटलसच्छुद्धपुण्ड्रं शिखावत्
हस्ते सव्येतरे स्वे धृतघनदुरितक्षेपणोद्दण्डदण्डम्।
भाष्यव्याख्याक्षमास्यं फणिपतिसुभगप्रोल्लसत्कायकान्ति
वस्त्रे नान्यत्र रागि प्रलसतु हृदये मे यतीन्द्रस्य रूपम्।।2।।

முத்து போன்று ப்ரகாஸிக்கும் யக்ஞோபவீதம் உடையதும், நெற்றிப் பகுதியில் ப்ரகாஸிக்கும் ஒளிமிகுந்த தூய திருமண்காப்பு உடையதும், சிகை கொண்டதும், தனது வலது திருக்கையிலே பாபங்களைப் போக்கக்கூடிய த்ரிதண்டம் தாங்கியதும், ஸ்ரீபாஷ்யவ்யாக்யானம் சொல்லும் திறன் படைத்த திருவாய் கொண்டதும், ஆதிஸேஷன் போன்று அழகுறப் ப்ரகாஸிக்கும் உடல் காந்தி கொண்டதும், வஸ்த்ரம் தவிர வேறெங்கும் ராகம் (சிவப்பு) கொள்ளாததுமான ஸ்ரீபாஷ்யகாரரின் திருவுருவம் அடியேன் உள்ளத்தில் விளங்கட்டும். (2)

यतीन्द्रमतवाटिकावृत्तिरनेकदुर्वादिनां
कुतर्करचनापशुप्रबलभीतिसन्दायिनी।
यया कृतसुरक्षणा बहुफला सुमाढ्या च सा
मदीयहृदयेऽनिशं सुभगदेशिकाख्या वसेत्।।3।।

அனேக துர்வாதிகளுடைய குதர்க்கங்களால் அமைந்த க்ரந்தங்களாகிற ப்ராணிகளுக்கு அதிகமான பயத்தை ஏற்படுத்தக் கூடியதான, ஸ்ரீபாஷ்யகார ஸித்தாந்தம் என்ற தோட்டத்திற்கு வேலி ஒன்று விளங்குகிறது. அவ்வேலியால் ரக்ஷிக்கப்பட்டதாய் அத்தோட்டம் நிறைய பழங்களையும், புஷ்பங்களையும் கொண்டு விளங்குகிறது. அப்படிப்பட்ட 'ஸ்ரீ ஸ்வாமி தேஸிகன்' எனும் பெயருடைய அவ்வேலி அடியேனது ஹ்ருதயத்திலேயே எப்போதும் வஸிக்கட்டும். (3)

आचार्यवर्ये करुणालयेऽस्मिन् नान्यत्रसंलब्धसुखप्रवेशः।
शब्दोऽपि सद्देशिक आदरेण वज्रेण सम्लिप्त इव प्रसक्तः।।4।।

வேறெங்கும் எளிதாக தனக்குப் ப்ரவேஸம் கிடைக்காததாய் 'தேஸிகன்' எனும் பதம் வஜ்ரத்தினாலே போட்டு ஒட்டப்பட்டது போல் கருணையின் இருப்பிடமான இவ்வாச்சார்யனிடம் ஆதரவுடன் வந்து ஒட்டிக் கொண்டுள்ளது. (4)

निरूपाधिकमाचार्यशब्दश्चामुमुपाश्रितः।
इति रूपयितुं वाञ्छा पद्यैरेव यथामति।।5।।

'ஆசார்யன்' என்ற ஸப்தமும் நிருபாதிகமாய் இவரையே வந்து அடைந்துள்ளது என்பதை இங்கு யதாமதி ஸ்லோகங்களாலேயே நிரூபிக்க விரும்புகிறேன். (5)

देशिकाचार्यगुरवः शब्दाश्चैकार्थबोधकाः।
सूक्ष्मभेदस्तथाप्येषां दृश्यते सुविचारतः।।6।।

தேஶிகன், ஆசார்யன், குரு முதலிய ஶப்தங்கள் ஒரே பொருளைக் குறிப்பனவாய் அமைந்தாலும், இவற்றுள் அர்த்தத்திலே ஸூக்ஷ்மமான பேதம் உள்ளது என்பது ஆழ்ந்து நோக்குதலால் தெரியவருகிறது. (6)

गुकारोऽन्धप्रवाची च रुशब्दस्तन्निवर्तकः।
अज्ञानान्धप्रहा तस्मात् गुरुर्लोके निगद्यते।।7।।

குருஶப்தார்த்த வ்யுத்பத்தி:- 'கு' எனும் எழுத்து அந்தகாரத்தையும் 'ரு' எனும் எழுத்து அதைப் போக்குவதையும் குறிக்கிறது. எனவே இருட்டைப் போக்குதல் எனும் பொருளிலே 'குரு' எனும் ஶப்தம் உலகில் உபயோகப்படுத்தப் படுகிறது. (7)

सर्वेषां गुरुता प्रायः युज्यते व्याख्ययानया।
यतो जना मिथोऽज्ञानभेदका बहुवस्तुषु।।8।।

இவ்வ்யாக்யானத்தினால் உலகில் பெரும்பாலோரும் குருவாகக் கருதப்பட்டிடுவர். ஏனெனில் பல்வேறு விஷயங்களில் தமக்கு இருக்கும் அக்ஞானத்தை பரஸ்பரம் மக்கள் போக்கிக் கொள்கின்றனர். (8)

बहुषु ग्रन्थजातेषु सिद्धं शास्त्रार्थमुत्तमम्।
सङ्कलय्य प्रदातृत्वमाचार्यस्याद्य लक्षणम्।।9।।

ஆசார்ய ஶப்தார்த்த விசாரம்:- பல்வேறு க்ரந்தங்களில் ஆங்காங்கு சிதறிக் கிடக்கும் உத்தமமான ஶாஸ்த்ரார்த்தங்களை ஒன்று சேர்த்து ஒருசேர ஶிஷ்யனுக்கு அளிப்பதுவே ஆசார்யனின் முதன்மையான லக்ஷணமாகும். (9)

कृत्याकृत्येषु शास्त्रोक्तशुभाचारेषु शीलिनम्।
प्रवृत्तौ च निवृत्तौ च शिष्यं प्रस्थापयेत् ततः।।10।।

மேலும், சீலவானான ஒரு ஶிஷ்யனை, ஶாஸ்த்ரங்களில் செய்ய வேண்டுவனவாகக் கூறப்பட்ட செயல்களில் ஈடுபடுத்துதலும், செய்யக் கூடாததாய் நிஷேதிக்கப்பட்ட செயல்களில் இருந்து திருப்பி விடுவதும் ஆசார்யனின் க்ருத்யமேயாகும். (10)

स्वेनोपदिष्टमन्येषां कृते मार्गं स्वयं चरन्।
ये यान्त्यादर्शतां तेषामाचार्यत्वं सुसङ्गतम्।।11।।

மேலும் பிறருக்காகத் தன்னால் உபதேஶிக்கப்பட்ட நல்வழியில் தானே நடந்து காட்டி எவர்கள் முன்னோடிகளாய் ஆவரோ, அவர்களுக்கு 'ஆசார்ய'கத்வம் மிகப் பொருத்தமாய் அமைந்துள்ளது . (11)

एवं प्रदर्शितं पूर्वैराचार्यत्वोपपादकम्।
लक्षणं विश्रुतं लोके 'आचिनोतीति' पद्यतः।।12।।

பூர்வாசார்யர்களால் ஆசார்யகத்வத்திற்குச் சேர வெளிப்படுத்தப் பட்ட லக்ஷணம் 'आचिनोति.....'எனும் ஶ்லோகத்தால் ப்ரஸித்தமாய் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.(12)

அந்த ஶ்லோகம்.

'आचिनोति हि शास्त्रार्थान् आचारे स्थापयत्यपि।
स्वयमाचरते यस्मात् तस्मादाचार्य उच्यते।।' என்பதாகும்.

कवितार्किकसिंहादि बिरुद्भिस्समलङ्कृते।
तोषाद्देवोपदत्तैः श्रीवेङ्कटेशे गुणालये।।13।।

'आचार्य' इति शब्दोऽसौ निरूपाधिकवाचकः।
भगवच्छब्दवत् श्रीशे गौण्यान्यत्रोपचर्यते।।14।।

எவ்வாறு பகவான் எனும் ஶப்தம் எம்பெருமான் ஒருவனை மட்டுமே முக்யமாய்க்குறித்து, பிறரிடம் உபசாரத்தினாலேயே பொருந்துகிறதோ, அவ்வாறு ஆசார்யன் எனும் சொல்லும், ஸந்தோஷத்தினால் பகவானால் அளிக்கப்பட்ட கவிதார்க்கிக ஸிம்ஹம் முதலிய பிருதுகளைக் கொண்ட குணக்கடலாம் ஸ்வாமி தேஶிகனிடம் மட்டுமே நிருபாதிகமாய் பொருந்தும் ஶப்தமாய் அமைந்துள்ளது. (13, 14)

रहस्यग्रन्थजातेषु शास्त्रार्थानाचिनोच्छुभान्।
विक्षिप्तान् वैदिकान् मन्त्रान् वेदव्यासो ऋषिर्यथा।।15।।

எப்படி வேதவ்யாஸர் ஆங்காங்கு சிதறிக் கிடந்த வேதமந்த்ரங்களை ஒன்று சேர்த்திட்டாரோ, அவ்வாறே, ஆங்காங்கு சிதறுண்டு கிடந்த பல்வேறு சிறந்த ஶாஸ்த்ர விஷயங்களை தமது ரஹஸ்யம், ஶாஸ்த்ரம் மற்றும் வ்யாக்யான க்ரந்தங்களில் ஸ்வாமி ஒன்று திரட்டினார். (இதனால் 'आचिनोति हि शास्त्रार्थान्' என்பது சொல்லப் பட்டதாயிற்று). (15)

श्रीसच्चरित्ररक्षादि ग्रन्थप्रणयनादसौ।
आचारे स्थापयामास जनांस्तानुज्जिहीर्षया।।16।।

ஶ்ரீ ஸச்சரித்ரக்ஷை, ஶ்ரீவைஷ்ணவ தினசரி, பன்னிரு நாமம் முதலிய க்ரந்தங்களை இயற்றியதால் ஸ்வாமி ஜனங்களை உத்தரணம் பண்ண எண்ணி அவர்களை ஸதாசாரத்தில் வழிநடத்தியருளினார். (இத்தாலே 'आचारे स्थापयत्यपि' என்பது குறிக்கப்பட்டது. (16)

श्रीवैष्णवप्रयुक्तेषु विशेषादुल्लसद्गुणः।
'सात्विकत्याग' आख्यातः फलभोक्तृत्वहा जने।।17।।

ஸ்ரீ வைஷ்ணவத்வத்தை ஏற்படுத்தக் கூடிய குணங்களுள் சிறப்புற்றதாய் ஜீவனின் கர்ம பலனை அனுபவிக்கும் தன்மையை நஶிப்பிக்கும் 'ஸாத்விகத் த்யாகம்' எனும் குணம் உணர்த்தப்பட்டுள்ளது. (17)

सर्वेषु मुख्यग्रन्थेषु सात्विकत्यागमब्रवीत्।
आचचारात्मना प्रोक्तमित्यस्मात् ज्ञायते सुखम्।।18।।

தனது அனைத்து முக்ய க்ரந்தங்களிலும் ஸ்வாமி 'ஸாத்விக த்யாகத்தை' குறித்துள்ளார் என்பதால் தன்னாலே போதிக்கப்பட்டவற்றை தானும் கடைபிடித்தார் என்பது स्थालीपुलाक न्याயத்தாலே எளிதிலே அறியப்படுகிறது.

தயாஶதகத்தில் 'वेदान्तदेशिकपदे.....' எனும் ஶ்லோகத்தினாலும், பாதுகாஸஹஸ்ரத்தில், 'इत्थं त्वमेव.....' என்ற ஶ்லோகத்தினாலும், ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில் 'வெள்ளைப் பரிமுகர்.....' எனும் பாசுரத்தாலும், அதிகரணஸாராவளியில் 'प्रज्ञाधम्मिल्ल.....' என்ற ஶ்லோகத்தினாலும் மற்றும் பல இடங்களிலும் இந்த ஸாத்விகத் த்யாகம் சொல்லப்பட்டுள்ளது. (இத்தால் 'स्वयमाचरते यस्मात्' என்றது சரிதார்த்தமாகிறது). (18)

आचार्यलक्षणं प्रोक्तं 'सिद्धं.....' श्लोके यदात्मना।
सङ्गच्छते हि तत्सर्वं गुरौ वेदान्तदेशिके।।19।।

'सिद्धं सत्सम्प्रदाये.....'எனும் ஶ்லோகத்தில் தன்னாலேயே கூறப்பட்ட ஆசார்ய லக்ஷணம் அனைத்தும் நிகமாந்த குருவான ஸ்வாமி தேஶிகனிடத்திலேயே ஸ்வாமியினிடத்திலேயே காணப்படுகிறது. (19)

शब्देन देशिकाख्येन समाकारादसौ किल।
पात्रमेकं तयो रूढ्येत्येवं सम्यङ्विनिश्चितम्।।20।।

'ஆசார்யன்' எனும் இந்த ஶப்தம் 'தேஶிகன்' எனும் ஶப்தத்திற்கு ஈடானதாய் அமைந்துள்ளதால், 'ஸ்வாமி தேஶிகன்' எனப்புகழ் பெற்ற இவரே அவ்விரு ஶப்தங்களுக்கும் ஒரே இருப்பிடம் என்பது தெளிவாய் நிஶ்சயம் ஆகிறது. (20)

देशिकेन्द्रमनुध्यायन् श्लोकान् कांश्चिद्विरच्य च।
तच्छ्लाघारूपिणो मन्ये पवित्रीकृतमानसम्।।21।।

ஸ்வாமியைப் பற்றி எண்ணியிருத்தலாலும், அவரை ஸ்தோத்ரிக்கும் ரூபமாய் சில ஶ்லோகங்களை எழுதியும் அடியேனை சுத்தமானவனாய் கருதிக்கொள்கிறேன். (21)

श्रीरङ्गरामानुजसन्मुनीन्द्रः सिद्धान्तदीपं करयोर्हि धृत्वा।
अज्ञानभेत्ता पुरतः प्रयाति विश्रान्ति हीनः सहशिष्यबृन्दः।।22।।

ஶ்ரீரங்கராமாநுஜ முனிவர் (ஸப்ததி காணும் நம் ஆண்டவன்) ஸித்தாந்தம் எனும் தீபத்தை இரு கைகளிலும் ஏந்தி, இருட்டை அழிக்கும் முகமாய் ஶிஷ்ய கூட்டத்துடன் ஓய்வின்றி முன்னே செல்கிறார். (22)

भ्राजतां हि शरदश्शतं मुनी राजतां निगममौलिदेशिकः।
उल्लसेन्मुनि परिष्कृतं मतं देवदेवकरुणाक्षिवीक्षणात्।।23।।

தேவதேவனான பகவானது கருணாகடாக்ஷத்தினால் ஸப்ததி காணும் ஆண்டவன் ஶதமானோத்ஸவத்தையும் கண்டருளட்டும்77. ஸ்வாமி தேஶிகனின் (யஶஸ்) மேலும் ஒளிரட்டும். ஶ்ரீ பாஷ்யகாரர் அனுக்ரஹித்த ஸித்தாந்தம் மேலும் ப்ரகாஶிக்கட்டும். (23)

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ முகஸ்ரீ

(நாவல்பாக்கம் வ. கண்ணன், ஹைதரபாத்)

சாத்திரங்களில் நுண்ணறிவு பெற்றவர்க்கு இலக்கியப்புலமை இருப்பதில்லை என்ற கருத்து பொதுவானது. ஆனாலும் இதற்குச் சில விதிவிலக்குகளும் உண்டு என்கிறார் விச்வகுணாதர்சகாரர். ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவனின் இலக்கியப் புலமையை அனுபவிப்பதன் மூலம் இவரும் அத்தகைய விதிவிலக்குகளில் ஒருவர் என்பதைத் தெளிவிக்க வருகிறது இந்தக் கட்டுரை.

சென்ற ஆண்டு ஸ்ரீ.உ.வே. நாவல்பாக்கம் என்.எஸ்.ஆர் ஸ்வாமி இயற்றிய சததூஷணீவ்யாக்யாநத்தின் முதற்பகுதியை வெளியிட்டு எம்போன்றோருக்குப் பேருதவி செய்தருளினார் ஸ்ரீமத் ஆண்டவன், அந்த நூலின் முகப்பில் தம் ஸ்ரீமுகத்தில் ச்லேஷம், ப்ராஸம், முதலிய அலங்காரங்களால் அழகிய ஒரு சிறிய முன்னுரையை ஸம்ஸ்க்ருத ரசிகர்கள் வியந்து மகிழும்படி அமைத்தருளியிக்கிறார். அதிலிருந்து மூன்றே மூன்று இருபொருட்சொற்களின் நயத்தைச் சுவைப்போம் இந்தக் கட்டுரையில். வடமொழி வல்லுனர் அல்லாதாரும் ஸ்ரீமத் ஆண்டவனின் பாண்டித்யத்தைப் புரிந்துகொள்ளும் வகையில் விளக்க முயல்கிறேன் அடியேன். அதற்காக இதே பதங்களில் விளையாடும் பத்து வெவ்வேறு காவ்யங்களின் ச்லோகங்களை ரஸிக்க முற்படுகிறேன்.மேலும், இந்தச் சொற்களின் பொருள்களில் ஆராய்ச்சியாளர் செய்யும் விவாதங்களையும் தெரிவிக்கிறேன். ஆக, ஆராய்ச்சியை ஆதரித்தல், ஆன்றோர் கவிதையை ஆஸ்வாதித்தல், ஆண்டவன் புலமையை அபிநந்தித்தல், என்ற இந்த முன்றுமே இக்கட்டுரையின் நோக்கங்கள் ஆகும்.

மயா என்ற பதத்தின் பொருள் வரலாறு

அதில் ஒரு தொடர் मायया मया च सहितं स्मृत्वा मया विरम्यते என்பது. ஸ்ரீமுகத்தின் முடிவில் இருப்பது. இதில் மயா ஸஹிதம் என்றும் மயா விரம்யதே என்றும் இரண்டு இடங்களில் மயா என்ற பதம் இரு வெவ்வேறு அர்த்தங்களில் உள்ளது. அஹம் என்ற சொல்லுக்கும், மா என்ற சொல்லுக்கும் மூன்றாம் வேற்றுமை ஒருமையில் மயா என்று ஒரே மாதிரி வரும். என்னால் என்றும் லக்ஷ்மியோடு என்றும் இரண்டு அர்த்தங்கள், மயா என்பதற்கு. லக்ஷ்மியோடு கூடியவனைத் தியானம் பண்ணி என்னால் நிறுத்திக் கொள்ளப்படுகிறது என்பது ''மயா ஸஹிதம் ஸ்ம்ருத்வா மயா விரம்யதே'' என்று வந்தது.

இது தொடர்பாக ஒரு இலக்கிய விவாதமும் உண்டு. மா என்றால் திருமகள் என்ற அர்த்தம் இருப்பது நம்மிடையே மிகப் பிரசித்தம். ஆயினும், சில

அகராதிகளில் இந்த அர்த்தம் காணவில்லை. ஆகையால் இந்தச் சொல்லின் சரித்திரத்தை அலசுவது தகும்.

யாதவாப்யுதயத்தில் மயா: மயா என்ற பதத்துக்கு லக்ஷ்மியால் என்றும் என்னால் என்றும் இரண்டு அர்த்தங்களையும் ஒருசேரக் கையாளும் ஒரு ச்லோகம் ஸ்வாமி தேசிகனின் யாதவாப்யுதய மஹா காவ்யத்தில் இருக்கிறது.

स्थिरधर्म तया गिरिराद्रियते स मया समयासमया समया என்பது அந்த ச்லோகத்தில் ஒரு பாதி. ஸமயா என்பது சேர்ந்தாற்போல் நாலு தடவை வந்துள்ளது. எப்படி அர்த்தம் சொல்வது என்பதில் விவாதம் உண்டு. மயா என்ற சொல்லின் இருபொருள் நுட்பத்தைப் பயன் படுத்தாமலே வேறுவிதமாகச் சமாளித்துவிட்டார் உரையாசிரியரான அப்பய்யதீக்ஷிதர். ஸ: (அந்தக் கோவர்த்தனமலையா ஸமயா தயா (எந்த ரஸை -பூமி - அருகிலுள்ளதோ அதனால்) மயா (என்னால்) ஆத்ரியதே (ஆதரிக்கப்படுகிறது) ஸமயாஸம (சாத்திரங்களில் இணையற்றவரே!) என்று அர்த்தம் சொல்கிறார். இந்த அர்த்தத்தில் குறையில்லை; நாமும் ஏற்கலாம். ஆனால் இன்னொருவிதமாக அர்த்தம் சொல்வது நன்கு பொருந்தும். இதைக் காட்டுகிறார் உத்தமூர் ஸ்வாமி. முன் பாதியில் (இந்த மலையின் செழிப்பைப் பேசியதால் அங்கு லக்ஷ்மீ ஸாந்நித்யம் இருப்பதை இந்தப் பாதியில் நேரடியாகக் கவி சொல்வதாக. கோவர்த்தனமலைக்குத் தனிச் சிறப்பு என்னவென்றால், பெருமாளும் தாயாரும் அதைத் தன் க்ஷேத்ரமாக ஆதரிப்பது தான். பெருமாள் சொல்கிறார்: ஸ்திரதர்மதயா (தர்மம் நிலைபெற்ற தன்மையால்) ஸ: (அப்படிப்பட்ட) கிரி: (கோவர்த்தனமலை) மயா (என்னால்) ஆத்ரியதே (ஆதரிக்கப் படுகிறது). மேலும், ஸ: (அது) ஸமயா (நிஷ்பக்ஷபாதியான) அஸமயா (இணையற்ற) மயா (லக்ஷ்மியாலும்) ஆத்ரியதே.

இப்படி மயா என்பதன் இருபொருள் நுணுக்கத்தை ரசிப்பவர்கள் ஸ்ரீமதாண்டவனின் ''மயா ஸஹிதம் ஸம்ருத்வா மயா விரம்யதே'' என்ற பதப்ரயோகத்தையும் ரசிப்பர்.

சொல்பொருள் ஆராய்ச்சி : மயா என்ற சொல் மா என்ற பதத்தின் மூன்றாம் வேற்றுமை ஒருமை என்றும் மா என்பதற்கு லக்ஷ்மி என்று அர்த்தம் என்றும் சொன்னோமே, அதில் ஒரு விவாதம் உண்டு. இந்த அர்த்தம் இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் கிடையாது என்கிறார்கள் சில ஆய்வாளர்கள். எப்படியானால் ஸாகேதம் என்ற சொல் அயோத்தியைக் குறிப்பதாகவும், கோதண்டம் என்ற சொல் ராமனுடைய வில்லுக்குப் பெயராகவும் (ஸ்ரீமத் ராமாயணத்தில் இல்லாமலேயே) பிற்கால வழக்கு எப்படி ஏற்பட்டதோ, அது போல மா என்றால் லக்ஷ்மி என்பதும் பிற்கால வழக்கு என்பது

அவர்களின் வாதம். இதை ஏற்காத நம்மவர்கள் தொன்மையான இலக்கியங்களிலேயே மா என்றால் லக்ஷ்மி என்று இருப்பதை எடுத்துக் காட்டுகிறார்கள். அது வருமாறு:

வால்மீகி ராமாயணத்தில் மா:

मा निषाद प्रतिष्ठां त्वं अगमश्शाश्वतीस्समाः ।
यत् क्रौञ्चमिथुनात् एकं अवधीः काममोहितम् ॥

என்ற சலோகம் பிரசித்தமானது. ஆதிகாவ்யம் அவதரித்த சந்தர்ப்பத்தை விளக்குவது. இதில் தொடக்கச்சொல்லானது மா என்பது. இதற்கு அர்த்தம் என்ன? இதை ஒரு துணைவினையாகக்கொண்டு அகம: என்ற வினைச்சொல்லுடன் சேர்த்து மா அகம: என்பதற்கு அடையாதே, அடையலாகாது என்ற அர்த்தம் ஸர்வஸம்மதமானது. இதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் நம்மவர்களின் உரைகளில் இன்னொரு அர்த்தமும் காணக்கிடைக்கிறது. மா என்றால் லக்ஷ்மி. மாநிஷாத என்றால் ஸ்ரீநிவாஸனே என்று விளி. பக்ஷியைக்கொன்ற வேடனைப் பழிக்கவந்த ச்லோகத்தில் ராவணவதத்தால் ச்ரிய:பதி ப்ரதிஷ்டை பெற்றதும் கூடவே அமைந்துவிட்டது.

கோசங்களில் மா: அமரகோசத்தில் **इन्दिरा लोकमाता मा क्षीरोदतनया रमा** என்று ஸ்பஷ்டமாகவே மா என்றால் ரமா என்ற அர்த்தம் சொல்லப்பட்டது.

मा स्त्री माने मृतौ वेळामेधाश्रीमध्यमातृषु என்று ரத்நமாலை என்னும் கோசத்தில் இருக்கிறதாம். இதில் பெண்பால் பெயர்ச்சொல்லான மா என்பதற்கு மட்டும் ஏழு அர்த்தங்கள் இருப்பதாகத் தெரிகிறது. அவற்றுள் லக்ஷ்மி என்பதும் ஒன்று.

मः शिवे मा रमायां स्यात् என்கிறது விச்வம் என்றொரு கோசம். மா என்றால் ரமா என்றர்த்தமாம்.

क्षीरोदतनया मा च शब्दज्ञैरिन्दिरा स्मृता என்கிறது ஹலாயுதகோசம்

लक्ष्मीः पद्मा रमा या मा என்கிறது அபிதாந சிந்தாமணி.

ஸாஹித்யதர்பணத்தில் மா: அலங்காரக்ரந்தங்களில் ப்ரசித்தமான ஸாஹித்யதர்பணத்தில் பத்மபந்தம் என்னும் சித்ரகாவ்யத்தை விளக்குவதற்காகச் சொந்தமாக ஒரு உதாரணம் தரப்படுகிறது:

मा रमा सुषमा चारु रुचा मारवधूत्तमा । मात्तधूर्ततमावासा सा वामा मेऽस्तु मा रमा ॥
இதில் மாரமா என்று தொடக்கத்திலும் முடிவிலும் இருக்கிறது. ஆரம்பத்திலுள்ள மாரமாவுக்கு மன்மதனின் தாய் என்று அர்த்தம். கடைசியில் உள்ள மாராமாவுக்கு மா என்றும் ரமா என்றும் பெயர் கொண்டவள் என்று அர்த்தம். இந்த ச்லோகத்தில்

மா என்ற எழுத்து திரும்பித் திரும்பி வருவது நம் கண்களிலிருந்து தப்ப முடியாது. எல்லா அஷ்டதலபத்மபந்தச்லோகங்களிலும், முதல் எழுத்து, ஆறாவது, பதினொன்றாவது, பதினாறாவது, பதினேழாவது, இருபத்திரண்டாவது, இருபத்தேழாவது, முப்பத்திரண்டாவது, என்று எட்டுதடவை ஒரே எழுத்து அமையும். இன்னும் சில விதிகளும் உண்டு. இத்தனைக்கும் உட்பட்டுத் தான் ஸ்வாமி தேசிகன், வெங்கடாத்வரி போன்ற மஹாகவிகள் சித்ரகாவ்யங்களில் அமைத்திருக்கிறார்கள். அதன்படி இங்கு வந்த ''மா'' வுக்கு வேறு அர்த்தங்களும் உண்டு.

ஸஹஸ்ரநாமத்தில் மா: ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் மாதவ: என்ற திருநாமத்துக்கு அர்த்தம் என்ன? மா என்றால் லக்ஷ்மி. அவளது கணவன் என்று அர்த்தம் மாதவன் என்பதற்கு. இவ்வாறு உரையாடுகிறார் சங்கரர். பராசரபட்டரும் பகவத்குணதர்பணத்தில் **माधव: । माया: श्रिय: धव: स्वामी श्रिय: पति:** என்று உரையிடுகிறார்.

லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் மா: வெங்கடாத்வரியின் லக்ஷ்மீஸஹஸ்ர காவ்யத்தில் **मा या सा मम यायामा** என்றொரு ச்லோகபாதம் தலைகீழாகப் படித்தாலும் மா யா ஸா மம ஸாயாமா என்று மாறுபடாமல் வரும். எவள் மா என்பவளோ அவள் எனக்கு நீட்சி கொண்டவள் (நீண்டகாலம் இருப்பவள்) என்று அர்த்தம். இங்கேயும் மா என்றால் லக்ஷ்மி என்று அர்த்தம்.. இப்படி ஏராளமான சுவையான கவிப்ரயோகங்களைக் காட்டிக்கொண்டே போகலாம். அனால் ஆய்வு செய்பவர்கள் இதற்கெல்லாம் மசிவதில்லை. அவர்கள் வேதங்களில் மா என்பதன் அர்த்தத்தை முதலில் பார்க்கிறார்கள். **मया पत्या जरदष्टिर्यथास:** என்ற கல்யாணப்பஞ்சாதியிலும் **मया पत्या प्रजावती त्वं जीव शरदश्शातम्** (மந்த்ர ப்ரச்நம்) என்பதிலும் **यन्मया भुक्तमसाधूनां** (உபநிஷத்து) என்பதிலும் **अहिंसितौ पितरौ मया तत्** (அச்சித்ரம்) என்பதிலும் **मया त्वा सयुजा युजा युनज्मि** (தைத்தீரீய ஸம்ஹிதை 4 - 4) என்பதிலுமாகப் பல வேதவாக்கியங்களில் மயா என்பதற்கு என்னால் என்று அர்த்தம். ஆனால் ஒரு வேதவாக்கியத்தில் கூட மயா என்பதற்கு லக்ஷ்மியோடு என்ற அர்த்தம் காணவில்லை. மா என்பதற்கு லக்ஷ்மி என்றதொரு அர்த்தமே வேதங்களில் இல்லையோ என்று சந்தேகிக்க இடமுண்டு. எத்தனையோ இடங்களில் இந்தப் பதம் வருகிறது. **पाहि मा मा मा हिंसी:** என்ற இடத்தில் மா என்பது இரண்டு அர்த்தங்களில் கூட வந்துள்ளது. (என்னை என்றும் வேண்டாம் என்றும்.) **मा नो महान्तं** என்றும் **मानस्तोके** என்றும் தொடங்கும் ருத்ரப்ரச்ந மந்த்ரங்களிலும் மா என்பது திரும்பத் திரும்பப் பலமுறை வருகிறது; அர்த்தம் ஒன்றே தான்.

இப்படி ஏராளமான ப்ரயோகங்கள் இருந்தாலும் ஒன்றில் கூட லக்ஷ்மி என்ற அர்த்தம் கிடையாது. இவற்றிலெல்லாம் மா என்பது அவ்யயமாகவோ த்விதீயாந்தமாகவோ இருக்கிறது. ப்ரதமைகவசனமாய் இருந்தால் தானே லக்ஷ்மி என்ற அர்த்தத்துக்கு வாய்ப்பு?

இது ஆய்வாளர்களின் வாதம்

இதை ஏற்காத பிரதிவாதிகளின் குறுக்கீடு என்னவென்றால்:

வேதங்கள் அனந்தங்கள். நமக்குக் கிடைத்துள்ள பகுதி சிறியது. இதில் காணாத மாத்திரத்தாலேயே வேதஸாஹித்யத்தில் இந்த அர்த்தம் கிடையாது என்னலாகாது. நமக்குத்தெரிந்தவரையில் காணவில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் ஸ்ரீமத் ராமாயணம், மஹாபாரதத்திலுள்ள ஸஹஸ்ரநாமம், யாதவாப்யுதயம், ஸாஹித்யதர்பணம், லக்ஷ்மீஸஹஸ்ரம், என்ற காவ்யங்களில் மட்டுமன்றி, அமரம் முதலிய எல்லாக் கோசங்களிலும் காணப்படும் அர்த்தத்தை எளிதில் திரிஸ்கரிக்க முடியுமோ? மேலும், மா என்பது ப்ரதமைக வசனத்தில் வேதத்தில் मा छन्दः प्रमा छन्दः என்றவிடத்தில் இருப்பதை வாதி மறந்து விட்டார். இதே போல் லக்ஷ்மி என்ற அர்த்தமும் வேறெங்காவது இருக்குமோ என்னவோ?

இதற்கு ஆராய்ச்சியாளர் சொல்லும் உத்தரம்: ராமாயணத்தில் மாநிஷாத என்றவிடத்திலும் மாம் வித்தி ஜநகாத்மஜாம் என்றவிடத்திலும் வ்யாக்யாதாக்கள் தான் லக்ஷ்மி என்று அர்த்தம் சொல்லுகிறார்கள். மூலகாரர் சொல்லவில்லை. வேறு பொருளும் வரும்படி வாக்கியம் அமைந்திருப்பதை வ்யாக்யாதாக்களும் ஒப்புக் கொள்கிறார்கள். இதே போல் ஸஹஸ்ரநாமத்தில் மாதவ: என்பதற்கு வேறு அர்த்தமும் சொல்லலாம் என்று சங்கரரே சொல்கிறார். கேட்கப்போனால், லக்ஷ்மீஸஹஸ்ரநாமத்தில் ஆயிரம் பெயர்களில் மா என்பது இல்லவே இல்லை. இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால் மா என்பதற்கு லக்ஷ்மி என்ற அர்த்தம் புதிதாக முளைத்ததென்று தோன்றுகிறது. அமரம் முதலிய எல்லாக் கோசங்களும் 2000 வருஷங்களுக்குள் வந்தவை தானே? லக்ஷக்கணக்கான வருஷங்களாகச் செழிக்கும் ஸம்ஸ்க்ருதபாஷைக்குக் கடந்த இரண்டாயிரம் வருஷங்களில் ஏற்பட்டதெல்லாம் நூதனத்தில் தானே சேரும்?

இதற்கு ப்ரதிவாதியின் பதில் வருமாறு: அ என்ற ஒரெழுத்துச் சொல் விஷ்ணுவைச் சொல்லும் என்பது தொன்மையான கருத்து. ஆய்வாளரும் இதை மறுப்பதற்கில்லை. ஆனால் அது விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் ஒரு பெயராக இல்லையே? இன்னும், ராகவன், சேஷசாயீ, க்ஷீராப்திநாதன், முதலிய எத்தனையோ பெயர்கள் விஷ்ணுஸஹஸ்ரநாமத்தில் இல்லாவிட்டாலும், மஹாபாரதகாலத்துக்கு முன்னரே அவை நிலவிவந்ததை மறுக்க முடியுமோ?

அதனால் இந்த மாதிரி வாதங்களை நிறுத்திக் கொள்வது நல்லது.

மயா என்ற சொல்லின் சிலேடையை ரஸித்துக் கொண்டிருக்கும் நாம் ஒரு புது சித்ரகவி-ச்லோகத்தையும் ரசிக்கலாமே. இதில் மயா என்பது எட்டு தடவை வருகிறது. ச்லோகத்தின் ஐம்பது சதவீதத்தை மயா மட்டுமே நிரப்பிவிட்டது.

स मया रमया जुष्टोऽ समया क्षमया युतः । समयाचि मयाऽपास्या मम या यमयातना ॥

அர்த்தவிளக்கம் இப்போது வேண்டாம். எளிது தான்.

ஜாதம் என்ற பதத்தின் பொருள் வரலாறு

ஸ்ரீமதாண்டவனின் ஸ்ரீமுகத்தில் முதல் வரியில் तन्नादजातरूपजातरूप वादजातरूपेण என்ற சொற்றொடர் அற்புதமாக அமைந்திருக்கிறது. இதில் ஜாத என்பதற்கும் ஜாதரூப என்பதற்கும் இரண்டிரண்டு அர்த்தங்கள். ஹயக்ரீவரின் நாதப்பொன்னில் வடிவெடுத்த வாதத்தொகுப்பின் உருவானது சததூஷணி என்று தமிழில் அர்த்தம் சொல்லிப் பார்த்தால் எந்தப் பதமும் இரண்டு முறை வரவில்லை. ஆனால் வடமொழியிலோ ஜாத என்பது மூன்று முறை வந்துள்ளது. ஜாத என்பதற்கு உண்டான என்பது பிரசித்தமான அர்த்தம். சமூஹம் (அதாவது வர்க்கம், ப்ருந்தம், கணம், என்ற ஒருங்கிணைந்த கூட்டம்) என்பது இரண்டாவது அர்த்தம். வேதங்களில் முதல் அர்த்தம் மட்டுமே உண்டு; இரண்டாவது கிடையாது என்று சொற்பொருள் அறிஞர்களின் கருத்து. जातं जातवेदसि என்று மூன்றாம் கர்ண்ட முடிவுப்பஞ்சாதியிலும்

जातं च मे जनिष्यमाणं च मे என்று சமகப்ரச் நத்திலும்

यस्य जातं जनमानं च केवलम् என்று ஸ்வஸ்திவாசநத்திலும்

अङ्गदङ्गात् लोम्नो लोम्नो जातं पर्वणि पर्वणि என்று ஏகாக்நிகாண்டத்திலும்

यस्य पुत्रो जातस्स्यात् என்று முதல் காண்டத்திலும்

இப்படியாக ஏராளமான இடங்களில் ஜாத என்ற பதம் வருவதை யஜுர்வேததிகள் அறிவர். அர்த்தம் மட்டும் ஒன்றே தான். வேதஸாஹித்யத்தில் ஜாதம் என்பதற்கு ஒரு அர்த்தம் மட்டுமே என்கின்றனர் அறிஞர்கள். ஆனால் இந்த நிலை ஆதிகாவ்யம் தொடங்கி மாறுபடுகிறது.

ஸ்ரீமத்ராமாயணத்தில் ஜாதம்: पुष्ये जातस्तु भरतः முதலிய பல இடங்களில் ஜாத என்பதற்கு ''உண்டான'' என்று அர்த்தம். ஆனால் இரண்டு அர்த்தங்களையும் கொண்டு சொல்வேடிக்கை செய்த ஒரு ச்லோகம் ஆரண்யகாண்டத்தில் உள்ளது. कान्तस्मिता लक्ष्मण जातहासा त्वामाह सीता बहु वाक्यजातम् என்கிறார் ராமர் லக்ஷ்மணனிடம். ஒரு பாறையைக்காட்டி

''லக்ஷ்மணனே! இங்கு முன்பொருமுறை புன்னகையழகியான ஸீதைக்கு ஹாஸம் (சிரிப்பு) ஜாதம் (உண்டானது). அவள் உன்னிடம் சொன்னாள் வாக்ய ஜாதம். (பேச்சுகளின் சமூஹம், நிறைய பேச்சு).'' ஹாஸம் ஜாதமாகும்போது வாக்யஜாதம் சொன்னாள் அவள். ஜாதம் என்ற பதத்தின் இரண்டு அர்த்தங்களைக்கொண்டு பிற்காலக்கவிகள் நிறைய வேடிக்கைகள் பண்ணியிருக்கிறார்கள்.

லக்ஷ்மீஸஹஸ்ரத்தில் ஜாதம்: ஐந்து இடங்களில் இந்தச் சிலேடையைக் கையாளுகிறார் வெங்கடாத்வரி. ஐந்தில் ஒவ்வொன்றிலும் புதுப்புது ஸ்வாரஸ்யம். அதில் ஒன்றை மட்டும் இப்போது ரசிப்போம். ஸௌந்தர்யஸ்தபகத்தில் லக்ஷ்மியின் கடாக்ஷப்பெருமையை வருணிக்கிறார்.

त्रैलोक्यसन्त्रायिणि तावकीनः ध्रुवं कटाक्षो धृतराष्ट्रजातः ।
कल्याणि कर्णप्रणयी कथं वा पुष्णाति कृष्णार्जुनदीप्तियोगम् ॥

லக்ஷ்மியே! உன் கடாக்ஷம் ராஜ்யஸமூஹத்தை நிலையாகத் தரிக்கிறது. அதனால் த்ருதராஷ்ட்ர ஜாதமானது. வேறு அர்த்தம் சொன்னால் த்ருதராஷ்ட்ரனின் மகனான துர்யோதனனாகியது. உன் காதுவரை நீண்டபடியால் கர்ண ப்ரணயீ அது. வேறு அர்த்தில் கர்ணனிடம் அன்பு கொண்டது. மேலும் வெளுப்பான கண்ணின் நடுவே கருவிழியால் காந்தி பெறுவதால் க்ருஷ்ணார்ஜுந தீப்தியால் வளம் பெற்றது. வேறொரு அர்த்தத்தில் கிருஷ்ணனும் அர்ஜுனனும் பிரகாசிக்கச்செய்வது. அது எப்படி கர்ணனிடம் அன்பு கொண்டவனும் திருதராஷ்ட்ரனின் மகனுமானது கிருஷ்ணார்ஜுனர்களுக்கு ஒளி கூட்டலாம்? இந்த வேடிக்கையின் நடுவே நமக்கு இப்போது தேவையான விஷயம் ஜாதம் என்ற பதம் இரண்டு அர்த்தங்களில் ஆளப்பட்டிருப்பது.

சததூஷணியில் ஜாதம்: மற்ற கிரந்தங்களுக்குப் போவானேன்? இந்த ஸ்ரீமுகம் சததூஷணிக்கு.

அந்தச் சததூஷணியில் இரண்டு அர்த்தங்களுமே காண்கிறோம். ஆறாவது வாதத்தின் ஆரம்பச்லோகத்தில் दृष्टानुश्रविकार्थे जातविमुखान् என்றுள்ளது. ऐहिकामुष्मिकफलनिवहविरक्तान् मुमुक्षून என்று இங்கே வ்யாக்கியானம். ஜாதம் என்பதற்கு நிவஹம் (ஸமூஹம்) என்று அர்த்தம். அதே வாதத்தில் विविदिषेच्छायां जातायां என்றவிடத்தில் ஜாதா என்றால் உண்டானது என்று அர்த்தம். பத்தாவது வாதத்தில் पदजातं श्रुतं सर्वं என்றவிடத்தில் பதஜாதம் என்பதற்குப் பதஸமூஹம் என்று அர்த்தம். அடுத்த வாதத்தில் आत्मा देवो जातः कर्मभिः என்றவிடத்தில் உண்டான என்று அர்த்தம். இப்படிச் சததூஷணியில் இரண்டு அர்த்தங்களிலும்

பலமுறை ப்ரயோகிக்கப் பட்டுள்ளது ஜாதம் என்பது.

இன்னும் சில கிரந்தங்களில் ஜாதம்: இதுபோலவே காளிதாஸனின் ரகுவம்சத்தில்

निश्शेष विश्राणित कोशजातम् என்றும்

பட்டிகாவ்யத்தில் चिचीषयन्तोऽध्वरपात्रजातम् என்றும்

மநுஸ்ம்ருதியில் सर्वेषां धनजातानां आद्दीताग्र्यमग्रजः என்றும்

ஏராளமான ப்ரயோகங்களில் ஜாதம் என்பதற்கு ஸமூஹம் என்கிற இரண்டாம் அர்த்தம். அதே மநுஸ்ம்ருதியில் सुबीजं चैव सुक्षेत्रे जातं सम्पद्यते यथा என்கையில் ஜாதம் என்பதற்கு உண்டான என்கிற அர்த்தம்.

கோசங்களிலும் இந்த அர்த்தத்வயத்துக்கு அங்கீகாரம் உண்டு.

जातं कदम्बके न स्त्री त्रिषूत्पन्ने जनौ तु नपुं என்று வாங்மயார்ணவத்திலும்

जालं निवहसञ्चयौ । जातं तिरश्चां तद्यूथमू என்று அபிதாநசிந்தாமணியிலும்

மற்றும் சிலவற்றிலும் இருந்தாலும் அமரகோசத்தில் இரண்டாவது அர்த்தம் காணவில்லை.

வைதிகாஸாஹியத்தில் ஜாதம்: வேதஸம்ஹிதைகள், பிராம்மணங்கள், உபநிஷத்துக்கள், ப்ராதிஸாக்யம், யாஸ்க நிருக்தம், வேதாங்க ஜ்யோதிஷம், கல்ப ஸூத்ரங்கள் முதலிய பலவும் சேர்ந்தது வைதிக ஸாயித்யம் என்பது. இந்த வைதிகஸாஹியத்தில் ஜாதம் என்பதற்கு இரண்டாவதாகச் சொன்ன ஸமூஹம் என்கிற அர்த்தம் கிடையாதாம். ஆராய்ந்த சிலர் சொல்கிறார்கள். உண்மையாக இருக்கலாம். ஆனால் இந்த ஆராய்ச்சியால் காவ்யரஸிகர்களுக்கு ஆவது ஒன்றுமில்லை.

இப்படி ராமாயணத்திலும் லக்ஷ்மீஸஹஸ்ரத்திலும் இருப்பது போலவே இந்த ஸ்ரீமுகபங்க்தியிலும் ஜாத என்பது இரண்டு அர்த்தங்களில் வந்து சுவையைக் கூட்டுகிறது.

ஜாதரூபம் என்ற பதத்தின் வரலாறு

अगनौ विवर्णं परितप्यमानम् किट्टं यथा राघव जातरूपम् என்று சுக்ரீவன் அழும்போதும் अक्षतं जातरुपं च प्रियङ्गु मधुसर्पिषी என்று ஸுக்ரீவ பட்டாபிஷேகத்துக்கான ஸம்பாரங்களைச் சொல்லும் போதும் अक्षतं जातरुपं चगावः कन्यास्सहद्विजाः என்று ராமனின் ஊர்வலத்தை வருணிக்கும் போதும் जातरुपमयैः मत्स्यैः என்று ஸ்வயம்ப்ரபையின் குஹையை வருணிக்கும்போதும் மற்றும் பல

சந்தர்ப்பங்களிலும் வால்மீகி ஜாதரூபம் என்ற பதத்தைத் தங்கம் என்னும் அர்த்தத்தில் ஆளுகிறார்.

காதம்பரியில் ஜாதரூபம்: ஜாதரூபம் என்பதற்குத் தங்கம் என்பது தவிர இன்னொரு அர்த்தமும் உண்டு. ஜாத என்றும் ரூபம் என்றும் தனியாகப் பிரிப்பதால் கிடைப்பது அது. உண்டான வடிவம் என்பது. ஸ்ரீமதாண்டவனின் ஸ்ரீமுகத்தில் இரண்டு அர்த்தங்களுமே கையாளப்பட்டுள்ளன. இந்த அர்த்தத்வயத்தால் பாணன் என்ற ப்ரஸித்த கவி பண்ணியிருக்கும் ஒரு வேடிக்கையை இப்போது பார்ப்போம். காதம்பரி என்னும் சிறந்த கத்யகாவியத்தில் உஜ்ஜயினி நகரத்தை வருணிக்கும் பகுதி. அந்த நகரம் ஒரு கிழவியை ஒத்திருக்கிறதாம் ஒரு வகையில். வெறும் சமத்காரத் துக்குத் தான், கிழவிக்கும் உஜ்ஜயினிக்கும் அப்படி என்ன ஒற்றுமை? என்று கேட்டால், இதோ கவியின் பதில்: वृद्धेव जातरूपक्षया இரண்டுமே ஜாதரூபக்ஷயா. என்கிறான். உஜ்ஜயினியில் தங்கமயமான வீடுகள் இருப்பதால் அது ஜாதரூபக்ஷயா கிழவிக்கு அழகு குறைந்து விட்டதால், ரூபக்ஷயம் ஏற்பட்டுவிட்டதால், அவளும் ஜாதரூபக்ஷயா. க்ஷயம் என்பதற்கும் இரண்டு அர்த்தங்களை க்கையாண்டுவிட்டான். அது போகட்டும், ஜாகரூப என்பதற்கு இரண்டு அர்த்தங்களை வைத்து உஜ்ஜயினி கிழவி போல் என்ற கவி, இதே உஜ்ஜயினி ஒரு வகையில் ஸந்த்யை போலவும், விடியற்காலை போலவும், கருடமூர்த்தி போலவும், பார்வதி போலவும் ஹரிவம்சக்கதை போலவும், இன்னும் பல போலவும் இருப்பதாக அடுக்கிக்கொண்டே போகிறான். எல்லாமே வார்த்தைவிளையாட்டுகள் மூலம் தான். அதிலுள்ள ஸ்வாரஸ்யம் இந்த ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீமுகத்திலும் நமக்கு ஏற்படுகிறது.

யாதப்யுதயத்தில் ஜாதரூபம்: ஜாதரூபம் என்ற பதத்தின் இரண்டு அர்த்தங்களையும் ஸ்வாமி தேசிகன் வேறு விதமாகக் கையாள்கிறார். **निशाकरस्य स्फटिकेषु इहाधिकं सुजातरूपाश्रयतो विभासिता । रविप्रभा च स्पृशतीव सान्ध्यतां सुजातरूपाश्रयतो विभासिता ॥** ॥ இந்தக் கோவர்த்தன மலையில் படிகங்களில் சந்திரனுக்கு ஆவது என்ன? சூரிய ஒளி செம்மை அடைவது எப்படி? என்ற இரண்டு கேள்விகளுக்கும் ஒரே பதில்: ஸுஜாதரூபாஶ்ரயதோ விபாஸிதா என்று. வார்த்தை ஒன்றானாலும் அர்த்தம் வெவ்வேறு. முதல் கேள்விக்குப் பதில் சொல்லும் போது, ஶ்ரயத: (மலையை அடைந்த சந்திரனுடைய) விபா (ஒளியானது) ஸு-ஜாத-ரூபா (அழகிய உரு பெற்று) ஸிதா (வெண்மையானது) என்று அர்த்தம் சொல்லவேண்டும். ஆனால் இதே சொற்றொடரை இரண்டாம் கேள்விக்குப் பதிலாக்கும் போது, ஸு(நல்ல) ஜாதரூப(தங்கத்தில்) ஆச்ரயத: (சேர்வதால்) விபாஸிதா (ஒளிர்வது) என்று அர்த்தம் சொல்லவேண்டும்.

என்று அர்த்தம் சொல்லவேண்டும். ஆனால் இதே சொற்றொடரை இரண்டாம் கேள்விக்குப் பதிலாக்கும் போது, ஸு(நல்ல) ஜாதரூப(தங்கத்தில்) ஆச்ரயத: (சேர்வதால்) விபாஸிதா (ஒளிர்வது) என்று அர்த்தம் சொல்லவேண்டும். எப்படியோ, ஒரே வார்த்தையால் இரண்டு கேள்விகளுக்கும் பதில் வந்தது வேடிக்கை தான்.

நைஷத காவ்யத்தில் ஜாதரூபம்: இரண்டு அர்த்தங்களில் ஜாதரூபம் என்ற சொல்லை ஸ்ரீஹர்ஷன் என்னும் மஹாகவியும் ப்ரயோகிக்கிறான் இதே न जातरूपच्छदजातरूपता द्विजस्य दृष्टेयमिति स्तुवन्मुहुः என்கிற ச்லோகத்தில். விரிவு இப்போது வேண்டாம்.

ஆராய்ச்சி விவாதம் இல்லை. ஜாதரூபம் என்ற சொல்லுக்கு இரண்டு அர்த்தங்களுமே தொன்றுதொட்டே உண்டு என்று ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஏனென்றால் ப்ருஹதாரண்யக உபநிஷத்திலேயே இந்தப் பதம் இருக்கிறது. நிகண்டுவும் சாதகமாக இருக்கிறது. தங்கத்துக்கு ஜாதரூபம் என்ற பெயர் வரக்காரணமே அதற்கு உண்டான அழகு தானே? ஆகையால் நல்லவேளையாக, இதில் கருத்து வேற்றுமை கிடையாது.

அதனால் चामीकरं जातरूपं முதலிய பல கோசவாக்கியங்களைக் காட்டத் தேவையில்லை.

முடிவுரை. இந்த ஸ்ரீமுகத்தில் ரசிக்கவேண்டியவை இன்னும் எத்தனையோ உண்டு. பெருமாளுக்கு அவர் இடும் மூன்று அடைமொழிகளைப் பார்த்தால், ஸர்வலோகஹிதம் என்றும் ஸர்வதைவமஹிதம் என்றும், மயயா மயா ச ஸஹிதம் என்றும், ப்ரஸாம் மிளிர்வதைக் கவனிக்கலாம். அதைவிட முக்கியமாக, சததூஷணியில் ஸ்வாமி தேசிகன் அருளிய பல கருத்துக்கள் இந்த ஸ்ரீமுகத்திலும் இடம் பெற்றுள்ளதைக் கவனிக்கலாம். இன்னும் எவ்வளவோ சிறப்பம்சங்கள் உண்டு இந்த ஸ்ரீமுகத்தில். ஆனாலும் மொத்தத்தையும் இப்போது விவரிக்க இயலாது. இதே மாதிரி ரஸிகரஞ்ஜகமான ஸூக்திகளை அருளிக்கொண்டு ஸ்ரீமதாண்டவன் பல்லாண்டு வாழ ஸ்ரீரங்கநாத திவ்யமணிபாதுகைகளைப் பிரார்த்திப்போம்.

★ ★ ★ ★ ★ ★

ஈச்வர ஸ்வாதந்த்ர்யம்

ईश्वर स्वातन्त्र्यम्

(புதுக்கோட்டை வித்வான் J. சேஷாத்ரியாசாரியர், மதுராந்தகம்)

ईश्वरोऽपि स्वतन्त्रोऽपि भगवान् भक्तवत्सलः ।
भूत्वा भक्तपराधीनः तद्दास्यमभिवाञ्छति ॥

நம் தர்சன ஸ்தாபகரான பகவத்ராமாநுஜர் (श्रीरङ्ग) திருவரங்கத்தில் ஸ்ரீரங்கநாயகியுடன் எழுந்தருளிய ஸ்ரீரங்கநாதன் திருவோலக்கத்தில் ஶரணாகதி கத்யம் அருளிச்செய்தார்.

அதில் स्वाधीन त्रिविधचेतनाचेतनस्वरूपस्थिति प्रवृत्तिभेदं ஸ்வாதீன த்ரிவித சேதநா சேதனஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்தி பேதம் என்று பகவானைச் சிறப்பித்துக் கூறினர்.

(बद्ध, मुक्त नित्य) பக்தர்கள், முக்தர்கள், நித்யர்கள் என்று மூன்று விதமான ஆத்மாக்களுடையவும். (प्रकृतिकालशुद्धसत्व) ப்ரத்ருதிகாலம் சுத்தஸத்வம் என்று மூன்று வகைப்பட்ட அசேதனங்களுடையவும், ஸ்வரூபம், அதன் நிலைத் திருக்கை, அதன் செயல்பாடுகள் இம்மூன்றும் பகவானுக்கு அதீனமானவையாக சொல்லப்படுகிறது.

குயவன் தனது திறமையால் குடத்தின் ஸ்வரூபத்தை செய்கிறான், அதில் தண்ணீர் கொண்டு வருவது முதலிய உபயோகங்களைப் பண்ணுகிறான். அதை உடையாமல் பத்திரப்படுத்தி வைக்கிறான். இப்படியே எல்லா வஸ்துக்களும் பகவானால் உருவம்பெற்று நிலை பெற்று தனது செயல்களைச் செய்கின்றன.

यतोवा इमानि भूतानि जायन्ते, येन जातानि जीवन्ति, यत्प्रयन्त्यभिसंविशन्ति, - तद्ब्रह्मेति, என்று உபநிஷத்தும் பரப்ரம்மத்தின் லக்ஷணமாக இவற்றையோ சொல்லிற்று.

ஆனால் பகவானுடைய ஸ்வரூபம், நிலைமை, செயல்பாடு எல்லாம் அந்த பகவானுக்கு அதீன (अधीन) மானதே தவிர அவனுக்கு மேற்பட்ட பொருள் ஒன்றும் கிடையாது. அவன் தனது இச்சை (விருப்ப)ப்படியே அனைத்தையும் நடத்துகிறான்.

नतस्य कार्यं करणंच विद्यते, नतत्समश्चाभ्यधिकश्च दृश्यते, सकारणं करणाधिपाधिपो नचास्यक श्चिज्जनिता नचाधिपः । என்று ச்வேதாச்வதர உபநிஷத் சொல்லிற்று

''ஒத்தாரை மிக்காரை இலையாய மாமாயா'' என்றும் ''ஈடுமெடுப்பு மிலீசன் மாடுவிடா தென்நெஞ்சே'' என்றும் நம்மாழ்வார் அருளிச்செய்தார்.

(निस्समाभ्यधिक) நிஸ்ஸமாப்யதிகஞுகையாலே ஈச்வரன் நிரங்குஶ ஸ்வாதந்த்ர்யம் பெற்றவன் என் பதில் மறு மொழிக்கு இடமே இல்லை.

ஆகையால் எல்லா சேதனர்களும் (ஜீவாத்மாக்கள்) பகவானுக்கு அத்யந்த பரதந்த்ரர்கள் எனவும் ஒப்புக்கொள்ளவேண்டியதே.

(ईष्टे (लोकान् सर्वान्) इति ईश्वरः) ஈஷ்டேலோகான் ஸர்வாந்இதி ஈச்வரः। எல்லாரையும் அடக்கி ஆள்பவன்.

பகவத்கீதையும் ईश्वरः सर्वभूतानां हृद्दे शेऽर्जुनतिष्ठति, भ्रामयन्सर्वभूतानि यन्त्रारुढा निव मायया । ஈச்வரஸ் ஸர்வபூதாநும் ஹ்ருத்தேசேர்ஜுன திஷ்டதி ப்ராமயன் ஸர்வபூதானி யத்ராரூடானி மாயயா என்று பேசிற்று.

अन्तः प्रविश्यशा स्ताजनानां सर्वात्मा, तमादेशमप्राक्ष्यः ?

அந்த ஂப்ரவிஷ்டச் சாஸ்தா ஜனானாம் ஸர்வாத்மா, தமாதேச மப்ராக்ஷ்ய: என்று இவ்வாருக பகவானை சாஸிதா, ஆதே ச: என்று உபநிஷத் அவனுடைய ஆளும் திறமையைச் சொல்கிறது, ''ஆள்கின்ருன் ஆழியான் ஆரால் குறைவிலம்?'' என்று நம்மாழ்வாரும், ''பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமல் ஆள்கின்ற'' என்று ஆண்டாளும் அருளிச் செய்தனர். ஆகையால் ஈச்வரன் என்று பகவான் ஒருவனையே சொல்லலாம்.

அப்படியாகில் ருத்ரனுக்கும் ஈச்வரன், ஈசானன், ஈசன் என்றெல்லாம் உலகில் ப்ரஸித்தி இருக்கின்றதே? என்ருல் அவனுக்கு அது உபாதி (उपाधि) ப்ரயுக்தமான ஈச்வரத்வத்தால் வந்தது. ப்ருஹ்மதேவனுடைய படைப்பிற்கு உள்பட்ட பொருள்களுக்கு ஈசன் அவன், பகவான் ஸர்வேச்வரன்.

महादेवः सर्वमंधेमहात्मा हृत्वात्मानं देवदेवोबभूव என்று ஸர்வமேதயாகத்தால் பகவானை ஆராதித்து பகவத் க்ருபையால் அவன் ஐச்வர்யம் பெற்ருன் என்பதை பூர்வா சார்யர்கள் ஸாதித்துள்ளனர்.

ஆகையாலே அவன் ஸத்ய ஸங்கல்பன் என்றும் சொல்லப்படுகிருன். अप्रतिहतसङ्ल्प (அப்ரதிஹதஸங் கல்ப : என்று பொருள் கூறுவர்) யாரும் தடுக்க முடியாதபடி தனது பூர்ணமான இச்சையால் எல்லாவற்றையும் நடத்துபவன். अन्योह्यन्यन्चित्रयति स्वच्छन्दं वि यथाम्यहं அந்யோஹ்யன்யச்சிந்தயதிஸ்வச்சந்தம் விததாம்யஹம் என்று எம்பெருமான் வாக்யம். பிறர் வேறுவிதமாக நினைத்தாலும் நான் என் இஷ்டப்படிதான் நடத்துகிறேன். இப்படிச்சொல்வதால் நிரங்குஶஸ்வா

தந்தர்யம் (निनङ्क्ष स्वानन्त्र्यं) என்று சொல்லப்படும் ஸ்வாதந்த்ரியம் உடையவனுகிருன். ஆழ்வானும் (स्वावन्त्र्यमै श्वरमपर्यनुयोज्यमाहु:) ஸ்வாதந்ரியமை ச்வரமபர்யனு யோஜ்யமாஹு: என்றருளிச்செய்தார்.

இப்படி ஸ்வதந்த்ரனை எம்பெருமானுக்கு சேஷ பூதனை ஜீவாத்மாவின் செயல்கள் யாவும் பராதீனமே என்பதை परात्मतच्छ्रुते: என்கிற ஸூத்ரவியாக்யானம் பண்ணுமிடத்தில் ஸ்ரீ பாஷ்யத்தில் பகவத்ராமாநுஜர் பகவானுக்கு ப்ரேரகத்துவம் முதலான தன்மைகளை விளக்கிக் கூறினர்.

ஸத்வித்யா (सद्विद्या) ப்ரகரணத்தில் (अद्वितीय) அத்வி தீயம் என்னும் சொல்லுக்கு (अधिष्ठात्रन्तररहित:) அதிஷ்டா த்ரந்தரரஹித: என்று விளக்கம் கூறப்பட்டது. பகவானை நியமிக்கும் இன்னெரு சேதநன் கிடையாது என்று பொருள்.

இப்படிப்பட்ட பகவானும் ஆச்ரிதர்கள் (அவனை அடைக்கலம் புகுந்தவர்கள்) விஷயத்தில் அவர்களை அனுக்ரஹம் (அருள் பாலிக்க) பண்ண நினைத்து, தான் அவர்களுக்கு பரதந்த்தரன் ஆகி அவர்கள் இடும் ஆணையை நிறைவேற்றி மகிழ்கிருன். இதுவும் அவனது க்ருபாப்ரவாஹமேயாகும்.

ஸ்ரீக்ருஷ்ணபகவான்

दास्यमैश्वर्यं योरोनज्ञातीनांच करोम्यहं ।
अर्थभोकता चभोगानां वाग्दुरुक्तानि चक्षमे ॥ என்று

தாஸ்யமைச்வர்ய யோகேந ஜ்ஞாதீநாம் சகரோம்யஹ்ம் அர்தபோக்தாச போகாநாம் வாக்துருக்தானிசக்ஷமே॥ என்று அருளிச்செய்தான். எனது பந்துக்களுக்கு நான் தொண்டு செய்கிறேன். அதற்கு எனது சுதந்திரத்தன்மையே காரணம். அவர்கள் சொல்லும் கடும் சொற்களையும் பொறுத்துக் கொள்கிறேன். அவர்கள் உண்ட மீதி உணவை ப்ரஸாதமாக ஏற்றுக்கொள்கிறேன் என்கிறர். अहंवो बान्धनो जात: -என்று தன் திருவுள்ளத்தால் இடையர்களை பத்துக்கள் என நினைப்பதை வெளியிட்டருளினன். கோபிமார்களுக்குத்தான் வசமாகி 'வண்ணக்கருங்குழல் ஆய்ச்சியரால் மொத்துண்டு கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டான் காணேடி'' என்ற திருமங்கை மன்னன் ஸ்ரீஸூக்தி. க்ருஷ்ணவதாரத்தில் गोपी जनवल्लभ: பெயரையும் பெற்றான்.

सेनयोरुभयोर्मध्ये रथंस्थापयमेऽच्युत । यावदेतान् निरीक्षेऽहं योद्धुकामानवस्थितान् ॥ ஸேனமயோருபயோர் மத்யேரதம் ஸ்தாபயமே ச்யுத! யாவதேதாந் நிரீக்ஷேஹம், யோத்துகா மாந் அவஸ்ஸிதான் என்று, ஏ அச்யுதனே? இரு படைகளின் நடுவே என்னுடைய தேரை நிறுத்தக் கடவாய். போர் புரிய வந்தவர்களை நான் காண வேண்டும். என்று அர்ஜுநன் நியமித்தான் கண்ணபிரானை. அப்போது கண்ணன் தன்னை அர்ஜுனனுக்குப் பணியாளனாக ஆக்கிகொண்டு அவனுக்கு

ஏவல் தொழில் புரிந்தான். (पार्थसारथिः) பார்த்தஸாரதி என்கிற பெயரைப்பெற்றுன். ''அவனே பின்னேர்தூது ஆகி மன்னர்க்காகிப் பெருநிலத்தார் இன்னுர்தூதனென நின்றுன்'' என்று திருமங்கை மன்னன் அனுபவப்படி (पाण्डवदूतः) பாண்டவதூதன் என்ற பெயரையும் பெற்றுன்.

சாந்தோக்ய உபநிஷத்தில் தஹரவித்யை (दहरविद्या) உபதேசிக்கப் படுகிறது. அதே போல் வாஜஸனேயக உபநிஷத்திலும் ஒதப்படுகிறது.

அங்கு (सर्वस्य वशी सर्वस्येशानः) ஸர்வஸ்யவசீஸர்வ ஸ்யே சாந: என்று உள்ளது, ஸ்ரீபாஷ்யத்தில் காமாத்யதி கரணத்தில் (कामाद्यधिकरणं) இதை விசாரிக்கிறுர் ஸ்வாமி எம்பெருமானுர். பகவான் ஈச்வரனுயும் ஸத்யஸங்கல்பனாயும் விஸ்வஸ்ய பதி எனவும் இருக்கிறவனே. எல்லோருக்கும் வஶமானவன் என்று சொல்கிறது. அப்படி இருப்பதற்கெல்லாம்அவனுடைய (स्वातन्त्र्यं) ஸ்வாதந்த்ர்யம் தான் காரணம்.

பகவான் அகில உலகங்களுக்கும் ஸ்ருஷ்டிகர்தாவா கையால் எல்லோருக்கும் பிதாவாகிறுன். எல்லா சேதனர்களும் புத்ரர்கள் இப்படி இருக்க (पितरं रोचयामास तदा दशरथं नृपं) பிதரம் ரோசயாமா ஸததா தசரதம் ந்ருபம் என்றபடி தசரதமஹாராஜனை தனக்கு ப்பிதாவாக செய்து கொள்ளவிரும்பினுன். வேதமும் (पिता पुत्रेणपितृमान् योनियोनौ) பிதாபுத்ரேண பித்ருமான் யோனியோனௌ என்று இவ்விஷயத்தையே சொல்கிறது. (अजायमानोबहुधा विजायते)| அஜாயமானோ பஹுதாவிஜாயதே. கர்மபரவஶர்களாய் நாம் பிறக்கிறோம், அப்படிப் பிறவியில்லாத பகவான் நம்மைக்கடத்தேறும் படி செய்யத்தான் பிறக்கிறுன். ராமா வதாரத்தில் ஸர்வஜ்ஞனான தான் வஸிஷ்ட விச்வாமித்ரர்களுக்கு சிஷ்யனாகி ஆயுதவித்யையை கற்றுக்கொண்டான். விஸ்வாமித்ர முனிவரிடம் इमौ स्म मुनि शार्दूल किङ्करौ समुपस्थतौ இமௌஸ்ம முனிசார்தூல கிங்கரௌ ஸமுபஸ்திதௌ: தன்னை அவருக்கு கிங்கரனுகச் சொல்கிறுன். இப்படி தன் ஸ்வாதந்த்ர்யத்தை கருணை முதலிய குணங்களால் மறைத்துக் கொள்கிறுன். வாத்ஸல்யம், தயை முதலிய குணங்கள் சிக்ஷணத்திற்கு உறுப்பான ஸ்வாதந்த்ரியத்தை ரக்ஷணத்திற்கு உறுப்பானதாகச் செய்கிறது.

ஸ்வாமி தேசிகன் (दया शतकं) தயா ஶதகத்தில் இவ்விஷயத்தைரஸமாக அருளிச் செய்கிறுர்.

अनन्याधीनः सन् भवति परतन्त्रः प्रणमतां
कृपे सर्वद्रष्टा नगणयति तेषामपकृतिम् ।
पतिस्त्वत्पारार्थ्यं प्रथयति वृषक्ष्माधरपतिः
व्यवस्थां वैयात्यादितिविधटयन्ती विहरति ॥

அனந்யாதீனஸ்ஸன் பவதிபரதந்த்ர : ப்ரணமதாம் க்ருபேஸர்வத்ரஷ்டா நகணயதி தேஷாமபக்ருதிம்।

பதிஸ்த்வத் பாரார்த்யம் ப்ரதயதிவ்ருஷக்ஷ்மா தரபதி: வ்யவஸ்தாம் வையாத்யாத் இதிவிகடயந்தீ விஹரதி.

ஒ வேங்கடவனின் க்ருபையே? உனக்கு என்ன துணிச்சல். பகவான் ஏற்படுத்திய வியவஸ்தையை ஒருகட்டுப்பாட்டை உடைத்து எறிந்து விளையாடுகிருயே? அதெப்படி ? என்கிருயா? பகவான் யாருக்கும் அதீனமாகிக் கீழ்படுவான் அல்லன். ஆனல் உனது கட்டளையினல் தன்னை அடிபணிந்தோர்க்கு தான் பரவ சனுகிருன். எல்லாப் பொருள்களையும் எப்பொழுதும் ப்ரத்யக்ஷ மாகப் பார்ப்பவன், ஆஸ்ரிதர்கள் செய்யும் குற்றங்களைக் காணமாட்டான். அவர்கள் செய்யும் அபராதத்தைக்கண்டு கொள்வதில்லை. ஆகையால் அவர்களுக்கு தண்டனையும் தருவதில்லை. எல்லோருக்கும் பதியாக ஸ்வாமியாக இருப்பவன் உனக்கு ப்பரவசனுக நீ சொல்வதைச் செய்கிருன். என்று தயா தேவியை (दयादेवी) விளித்து சொல்கிறபடி.

பெண்களுக்கு ஸ்வரூபம் பதிபாரார்த்யம், (पतिपारार्थ्यं) (स्तीत्वैकान्तान्मृदिम पतिपारार्थ्यकरुणा क्षमादीन्) என்று பட்டர் அருளிச் செய்கிருர். அவ்வகையில் பெரியபிராட்டியாரும் எம்பெருமானுக்கு பரவசப்பட்டவளே, ஆதிலும் பகவான் பிராட்டியின் முகபாவங்களுக்கு அதீனமாகி அவள் விருப்பத்துக்கிணங்க உலகைப்படைக்கிருன். (यद्भूभङ्गाःप्रमाणं स्थिरचररचनातारतम्ये मुरारे) என்று பட்டரும் அருளிச்செய்தார். யத்ப்ரூபங்கா:ப்ரமாணம் ஸ்திரசரரசனுதாரதம் யேமுராரே: சரா சரங்களை உயர்வுதாழ்வாகப் படைப்பதில் பிராட்டியின் புருவநெரிப்புகளே ப்ரமாணம் ஆகிறது.

பொதுவாக எந்த விதிக்கும் விலக்கு ஒரிடத்தில் உண்டு (सर्वोऽपिविधिः सापवादः) ஸர்வோபி விதி : ஸாபவாத என்று ந்யாயம் (शत्रुनिरसनं) ஶத்ருநிரஸனம் பண்ணும் போது உள்ள ஸ்வாதந்த்ர்யத்திற்கு ஶரணாகதரக்ஷணம் (शरणागतरक्षणं) பண்ணும் போது விதிவிலக்க உண்டு. ஆகையால் தன் அடியார்களை தன் அடியார்களான பாகவதர்களுக்கும் அடியார்களாகவும் ஆசார்யர்களுக்கும் (आचार्य) அடியார்களாக வினியோகித்துக் கொள்கிருன்.

(स्वतन्त्रस्वामित्वात् स्वबहुमतिपात्रेषुथहुलं, श्रिय:कान्तो देव: सखलु विनियुङ्क्ते यिदचिदौ।) ஸ்வந்த்ரஸ்வாமித்வாத் ஸ்வபஹுமதி பாத்ரேஷுநியதம், ஸ்ரிய: காந்தோதேவ: ஸகலு விநியுங்க்தே நிதசினதள என்று ஸ்வாமி தேசிகனும் அருளிச் செய்கிருர்.

இப்படி ஸ்வாதந்த்ர்யத்தை மறைத்துக் கொண்டு (अर्च्ये सर्वसहिष्णुरर्चक पराधीनाऽ खिलात्मास्थिति:) அர்ச்ய: ஸர்வஸஹிஷ்ணு: அர்சக பராதீனாகிலாத்மஸ்திதி : என்றப்பட்டர்வாக்கின் படி தன் நிலைகளையெல்லாம் அர்ச்சகருக்கு அதீனமாக ஆக்கிக்கொண்டு இந்த பூமண்டலத்தில் உகந்தருளின திவ்யதேசங்களிலும் பாகவதர்களுடைய க்ருஹங்கள்தோறும் அர்ச்சாஸ்ரீமூர்த்தியாய் அவதரித்து ஆராதிப்பவர்களின் ஸமஸ்தா பராதங்களையும் பொறுத்துக்கொண்டு அவர்கள் ஸமர்பிப்பவைகளை (पत्रं पुष्पं फलंतोयं योमे भक्त्याप्रयच्छति । तदहं क्त्युपहृतं अश्नामि प्रयतात्मन: ॥) பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோமே பக்த்யா ப்ரயச்சதி, ததஹம் பக்த்யுபஹ்ருதம் அச்னாமி ப்ரயதாத்மந: என்று கீதையில் சொன்னபடி ஆதரவுடன் ஏற்றுக்கொண்டு அனுக்ரஹிக்கிருன்.

''நாட்டில் பிறந்து படாதன பட்டுமனிசர்க்காய் நாட்டை நலியும் அரக்கர்களை நாடித்தடிந்து'' உயிரளிப்பான் என் நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய் இமையோர் தலைவா'' என்று ஆழ்வார் அருளிச்செய்தபடி பிறந்து மனிதர்களோடு தானுமொருமனிதனுய் (आत्मानंमानुषंमन्ये) ஆத்மானம் மாநுஷம் மந்யே, என்று மனிதபாவனை செய்து ஸம்ஸாரத்தில் உழல்கின்ற ஜனங்களை உய்யும்படி செய்கிருன். (स्वातन्त्र्यमैश्वरमपर्यनुयोज्यमाहु:) ஸ்வாதந்த்ர்யமை ஸ்வரமபர்யனு யோஜ்யமா ஹு: என்றபடி அவனை ஏன் பிறக்கிருய்? ஏன்பாடுபடுகிறாய் என்று தட்டிக்கேட்பவர்கள் யாரும் கிடையாது.

இப்படியே இக்கலியுகத்தில் ஸம்ஸாரி சேதனர்களை உய்விக்கும் பொருட்டு, அகஸ்த்யமஹர்ஷி விரும்பி வாழ்ந்த திராவிடதேசத்திலே தாமிரபரணி முதலான நதிக்கரைகளில் அமைந்து அக்ரஹாரங்களில் அநேக திவ்யதேசங்களில் பல தேசிகர்கள் வடிவாக அவதரித்து தத்வ ஹிதபுருஷார்த்தங்களை உபதேசித்து சேதனர்களை உய்விக்கிருன்.

(साक्षात्नारायणोदेव: कृत्वामर्त्य मयींतनुं । मग्नानुद्धरते लोकान् कारुण्या च्छास्तपाणिना ॥) ஸாக்ஷாந்நாராயணோ தேவ : க்ருத்வா மர்த்யமயீம் தனும் மக்நாந் உத்தரதே லோகாந் காருண்யாத் ஸாஸ்த்ர பாணினா என்ற படி பகவானைப்போல் ஸஸ்த்ரங்களை (ஆயுதங்களை) கொண்டு ரக்ஷிக்காமல் கருணைமிகுதியால்

மனுஷ்யஶரீரத்தை ஆச்சாரியர்கள் உருவத்தை எடுத்து ஶாஸ்த்ரத்தை கையிலெடுத்துக் கொண்டு ஸம்ஸாரக்கடலில் முழ்கியுள்ள சேதனர்களைக்கரை சேர்க்கிருன் பகவான்.

அப்படிப்பட்ட பகவானே ஸ்ரீமுஷ்ணமெனும் திவ்யதேசத்தில் அந்தஸ்தலத்து எம்பெருமான் திருநாமத்துடன் அவதரித்து ஸ்ரீரங்கநாதனுடைய திவ்யாஜ்ஞையால் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமத்தில் பரமஹம் ஸேத்யாதி பிருதாலங்க்ருதனுய் ப்ரக்ருதம் ஸ்ரீமதாண்டவன் ரங்க ராமாநுஜமஹா தேசிகனுக ஆச்ரமஸ் வீகாரம் செய்தும் கொண்டு விஜயயாத்ரை செய்து சேதனர்களை கரையேற்றும் படியை நாம் அனுபவிக்கிரேம். இதுவும் எம்பெருமான் ஸ்வேச்சையால் செய்யும் உபகாராதிஶயமே. அப்படிப்பட்ட ஆசாரியரின் ஸப்ததிவர்ஷ திருநக்ஷத்ர மஹோத் ஸவத்திற்கு அங்கமாக வெளியிடப்படும் மலருக்கு அடியேனுடைய இச்சிறுவசிக கைங்கர்யத்தை காணிக்கையாக ஸமர்பிக்கிறேன். வாசகப்பெரியோர்கள் குற்றங்களை ஒதுக்கிவிட்டு ஏற்றுக்கொண்டு இன்புற வேண்டுகிறேன்.

ஶுபமஸ்து

★ ★ ★ ★ ★ ★

சோகமற்ற ஸரீரி

(நாவல் பாக்கம் ஸ்ரீ Dr. V. வாஸுதேவன், திருவனந்தபுரம்)

நம் ஸித்தாந்தத்தின் தனிப்பெரும் கொள்கை ஸரீர-ஸரீரிபாவம் ஆகும். எல்லா சேதங்களுக்குள்ளும், அசேதநங்களுக்கு உள்ளும் ஆத்மாவாக பகவான், உள்ளே இருந்துகொண்டு நியமனம் செய்கிருன். அதாவது ஆட்சி செய்கிருன். பரமாத்மாவான பகவானுக்கு உலகம் முழுவதும் ஸரீரம் ஆகும். (ஸரீரம் - உடம்பு)

வேதம் இந்த விஷயத்தைத் தெளிவாகவே சொல்கிறது. ஆனலும், பிற மதத்தினர் இதை ஏற்கவில்லை. பரமாத்மாவுக்கு ஸரீரம் உண்டு எனச் சொல்லவே பயந்தார்கள். ஸரீரம் என்பது, சுகத்தையோ துக்கத்தையோ அனுபவிப்பதற்காகத்தானே இருக்கிறது ! பரமாத்மாவுக்கு ஸரீரம் உண்டு என்ருல். அவனுக்கும் சுக-துக்கம் உண்டு என்று ஆகிவிடுமே! இதனல் பயந்து விட்டனர். நம்மைப் போல் சுக-துக்க அனுபவம் அவனுக்கு கிடையாது என்பதற்காக, ஸரீரமே கிடையாது எனச் சொல்லிவிட்டனர்.

ஆனல் வேதமோ மிக நன்ருகவே சொல்லிவிட்டது.

எல்லாமே பரமாத்மாவான ஸ்ரீமந்நாராயணனது ஸரீரம் தான். வேதாந்த ஸாஸ்த்ரம் அருளிய ஸ்ரீவ்யாஸ பகவான் அழகாக இவ்விஷயத்தை சாதித்துள்ளார். பகவானுக்கு ஸரீர-ஸம்பந்தம் இருந்தாலும் சுக-துக்க-அனுபவம் கிடையாது (வாராது) என்பதைப் பலவிதமாக விளக்கி அருளுகிறார்.

ஸ்ரீ வ்யாஸர் அருளிய வேதாந்த ஸூத்ரத்தில் முக்கியமாக மூன்று இடங்களில் இவ்விஷயம் உள்ளது.

1) முதல் அத்யாயத்தில் - सर्वत्रप्रसिद्धयधिकरणम् ।

2) இரண்டாவது அத்யாயத்தில் - भोक्त्रापत्त्यधिकरणम् ।

3) மூன்றாவது அத்யாயத்தில் - उभयलिङ्गाधिकरणम् ।

ஸ்ரீ வ்யாஸர் அருளிய ஸூத்ரம், அதற்கு எம்பெருமானுர் அருளிய ஸ்ரீபாஷ்ய உரை, அதற்கு ஸ்ரீ ஸுதர்ஸநஸூரி சாதித்த ஸ்ருதப்ரகாஸிகை வ்யாக்யாநம், அதற்கு உபநிஷத் பாஷ்யகாரர் அருளிய பாவப்ரகாஸிகை வ்யாக்யாநம் இவற்றின் தாத்பர்யத்தை மஹான்கள் சாதித்தபடி விஜ்ஞாபநம் செய்து கொள்கிறேன்.

முதல் அத்யாத்தில்

1. सर्वत्र प्रसिद्धयधिकरणम् - ஸர்வத்ர ப்ரஸித்த்யதிகரணம்

सूत्रं-संभोगप्राप्तिरिति चेन्न वैशेष्यात् (1-2-8)

முன் விஷயம் - பரமாத்வை த்யாநம் செய்பவனுடைய உடலுக்குள், அவனது ஹ்ருதயத்தில் பரமாத்மா இருக்கிருன். அங்கே இருந்து கொண்டு அனுக்ரஹம் செய்கிருன்.

ஆக்ஷேபம் - ஜீவாத்மா தான் ஸரீரத்துக்குள் ஹ்ருதயத்தில் தான் இருக்கிருன். ஸரீரஸம்பந்தம் இருப்பதால் சுக-துக்கங்களை அனுபவிக்கிருன். அதேபோல், பரமாத்மாவுக்கும் ஸரீர ஸம்பந்தம் உண்டு என்ருல், அவனுக்கும் நம்மைப் போல் சுக துக்க அனுபவம் உண்டு என ஆகிவிடும்.

ஸமாதாநம்-அப்படி ஆகாது. ஸரீரத்தில் இருப்பதால் மட்டுமே சுக-துக்கம் வந்துவிடாது. புண்ய பாபங்களாகிற கர்மம் தான் சுக-துக்க-அனுபவம் வரக் காரணமாகும். பரமாத்மாவுக்கோ கர்மம் கிடையாது. அவனை "அபஹத பாப்மா" என வேதம் ஒதுகிறது. கர்ம ஸம்பந்தமற்றவன் என்று அர்த்தம். எனவே, சுக-துக்க அனுபவம் வரமுடியாது.

2) இராண்டாவது அத்யாயத்தில் भोक्त्रापत्त्यधिकरणम्

सूत्रं - भोक्त्रापत्तेरविभागश्चेत् स्याल्लोकवत् (2-1-14)

விஷயம் : சேதநர்கள் (ஜீவர்கள்), அசேதநங்கள் எல்லாமே பகவானுக்கு ஸரீரம்; பகவானே ஆத்மா. எப்போதுமே ஸரீரத்தின் தன்மைகள் வேறு; ஆத்மாவின் தன்மைகள் வேறு. எனவே ஜீவர்களின் தோஷத்தன்மைகள், பரமாத்மாவான பகவானுக்குக் கிடையாது. இருவருக்கும் ஸ்வபாவத்தில் (தன்மையில்) பெரிய வித்யாஸம் இது தான்.

ஆக்ஷேபம் : ஜீவாத்மா, ஸரீரத்தில் இருப்பதால், ஸரீர ஸம்பந்தம் காரணமாக சுக துக்கங்களை அனுபவிக்கிருன். அதுபோல், பரமாத்வுக்கு எல்லாமே ஸரீரம் என்ருல், ஸரீரஸம்பந்தம் காரணமாக அவனுக்கும் சுக துக்க போகம் வர நேரிடும். ஜீவனுக்குள்ள தன்மை ஈஸ்வரனுக்கும் உண்டு என ஆகிவிடும். இருவருக்கும் ஸ்வபாவத்தில் வித்யாஸம் சொல்லமுடியாது.

ஸமாதாநம் : அப்படியன்று. ஜீவனுக்கு வரும் சுக துக்கத்துக்குக் காரணம் ஸரீரஸம்பந்தம் அன்று. மோக்ஷநிலையில் கூட ஜீவனுக்கு ஸரீர ஸம்பந்தம் உண்டு. தேவையானுல் ஸரீரங்களைத் தானே ஜீவன் பெற்றுக்கொள்வான். ஆனலும் அப்போது சுக துக்க அனுபவம் கிடையாது. எனவே ஸரீர ஸம்பந்தமே காரணம் எனச் சொல்லமுடியாது. புண்ய பாபமாகிற கர்மம் தான் காரணம். மோக்ஷத்தில் கர்மம் கிடையாதாகையால் சுகதுக்கம் கிடையாது. அந்த ரீதியில் பரமாத்மாவுக்கும் கர்மம் கிடையாது என்பதால், சுக துக்க அனுபவம் கிடையாது.

உதாஹரணமாக, ராஜாவின் கட்டளைக்கு உட்படும் ப்ரஜைகள் (குடிமக்கள்) சுகதுக்கங்களைப் பெறுகின்றனர். ராஜாவின் கட்டளைப்படி நடந்தால் ஸுகம்; மீறினுல் தண்டனையும் துக்கமும். அவர்கள் தமது சரீரத்தின் மூலமாக இப்படி ஸுக-துக்கங்களைப் பெறுகின்றனர். ராஜாவுக்கோ, இவர்களைப் போலவே ஶரீரம் இருந்தாலும், இவர்களைப் போல சுகதுக்கம் கிடையாது. ஏனெனில், ராஜாவின் கட்டளைக்கு வசப்பட்டவர்களுக்குத்தானே அதனுல் சுகமோ, துக்கமோ வரும். ராஜாவோ, கட்டளை இடுபவன்; கட்டளைக்கு வசப்பட்டவன் அல்ல. எனவே சுகதுக்கமில்லை.

இப்படித்தானே உலகில் பார்க்கிறோம். இதை வைத்தே புரிந்துகொள்ளலாம் என வ்யாஸர் சாதிக்கிறார். ஸர்வேஶ்வரன்தானே எல்லார்க்கும் ராஜா! நாம்தான் அவன் கட்டளைக்கு வசப்பட்டவர்கள்; புண்ய பாபத்துக்கு வசப்பட்டவர்கள். எனவே நமக்கே (ஜீவர்களுக்கே) சுக துக்க அனுபவம் வரும். ஈஶ்வரனே புண்ய பாபத்துக்கு வசப்படாதவன். எனவே, ஶரீரத்துடனே இருந்தாலும் கூட, அவனுக்கு சுகதுக்கம் கிடையாது. இப்படியாக இருவருக்கும் ஸ்வபாவத்தில் வித்யாஸத்தை நன்கு அறியலாம்.

மூன்றும் அத்யாயத்தில் - उभयलिङ्गाधिकरणम्

(सूत्रं - न स्थानतोऽपि परस्योभयलिङ्गं सर्वत्र हि - (3-2-11))

முன் விஷயம் - விழிப்பு, ஸ்வப்நம், தூக்கம் முதலிய நிலைகளில் ஜீவனுக்கு பல வித தோஷங்கள் உண்டு.

ஆக்ஷேபம் - ஶரீரத்தில் இருக்கும் போது தான் ஜீவனுக்கும் இதுபோன்ற நிலைகள் வருகின்றன; தோஷங்கள் வருகின்றன. அதேபோல, அதே நிலைகளில் உள்ள அதே ஶரீரத்துக்குள் பரமாத்மாவும் உடன் இருக்கிறான். ஆகவே, ஜீவனுக்கு தோஷம் உண்டு என்றுல் பரமாத்மாவுக்கும் உண்டு என்று ஆகும். அந்தந்த நிலையிலுள்ள ஶரீரத்தில் இருத்தல் என்பதுதானே காரணம். இந்த காரணம் பரமாத்மாவுக்கும் இருப்பதால் அவனுக்கும் தோஷம் வர நேரிடும்.

ஸமாதானம் - பரமாத்மாவும் கூடவே இருந்தாலும், அவனுக்கு தோஷம் எதுவும் கிடையாது. வேதமே இதைத் தெரிவிக்கிறது. ஒரு தோஷமுமற்றவன், அனந்த கல்யாண குணங்களையுடையவன் என்று பலகாலும் ஓதுகிறது.

எனவே ஶரீரத்தில் இருப்பதால் மட்டும் தோஷம் வராது. கர்மம் காரணம். அது இல்லாததால் பரமனுக்கு தோஷமில்லை.

ஸ்ரீபாஷ்யத்தில் விசாரம்

கேள்வி : முன்பே, முதல் அத்யாயத்தில் இந்த விஷயத்தை விசாரம் செய்து நிச்சயம் செய்தாகிவிட்டது. இதே ஆக்ஷேபமும் ஸமாதாநமும் வந்தாயிற்று. பிறகு மறுபடியும் இங்கு இரண்டாவது அத்யாயத்தில் ஆக்ஷேபமே வராது. இந்த விசாரம் எதற்காக வந்தது?

பதில் : அங்கும், இங்கும், விசாரத்தில் வித்யாஸம் உள்ளது. முதல் அத்யாயத்தில், த்யாநம் செய்பவரது ஸரீரத்துக்குள் இதயத்தில் பரமாத்மா இருக்கிருன் என்று சொன்னுர். அப்படியானுல், ஸரீரஸம்பந்தம் இருப்பதால் சுகதுக்க அனுபவம் வரட்டுமே என ஆக்ஷேபம் வந்தது. அதற்குப் பதில் சொல்லப்பட்டது.

இரண்டாவது அத்யாயத்தில், எல்லாமே அவனுக்கு ஸரீரமாக, இந்த ஸரீரத்தின் சொந்தக்காரனுக அவன் ஆளுகிருன் என்று விஷயம். அப்படியானுல் சுக துக்க அனுபவம் வரட்டுமே என ஆக்ஷேபம் வருகிறது; பதில் சொல்லப்படுகிறது.

ஸரீரத்தில் இருக்கிருன் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு, முதலில் விசாரம் வந்தது. ஸரீரத்தின் சொந்தக்காரனுக இருக்கிருன் என்பதை வைத்து, இரண்டாவதில் விசாரம் வருகிறது.

இந்த இரண்டு விஷயத்துக்கும் வித்யாஸம் உண்டு. உதாஹரணமாக வீட்டில் இருக்கிருன் என்பது வேறு; வீட்டின் சொந்தக்காரன் என்பது வேறு. நாமே ஒரு கார்யத்துக்காக வேறொருவருடைய க்ருஹத்தில் போய் இருக்கலாம். ஆனுல் நாம் சொந்தக்காரர் இல்லை. சொந்தக்காரருக்கான கடமையோ, கஷ்டமோ நமக்கு வராது.

அதுபோல், ஈஸ்வரன், ஸரீரத்தின் உள்ளே இருக்கிருன் என்பதால் மட்டும் விசாரம் வந்தது முதலில். அங்கு ஒருபடி ஸமாதாநம் வந்தது. ஆனுலும் ஸரீரத்தின் சொந்தக்காரன் ஈஸ்வரன் என்று சொன்னுல் மீண்டும் ஸந்தேஹம் வரும்; விசாரம் வரும். அது இந்த இரண்டாவது அத்யாயத்தில் உள்ளது.

ஸ்ருதப்ரகாஸிகையில் விசாரம்

கேள்வி : இரண்டு இடத்திலும், கேள்வி எது வேண்டுமானுலும் ஆகட்டும், பதில் ஒன்று தான். புண்யபாபமாகிற கர்மம் தான் சுகதுக்கத்துக்குக் காரணம் என்பது தான் பதில். இந்த பதிலை முதல் அத்யாயத்திலேயே சொல்லியாகிவிட்டது. பிறகு இரண்டாவது அத்யாத்தில் விசாரம் எப்படி வரும்? கர்மம் இல்லாததால் பரமாத்மாவுக்கு சுகதுக்கமில்லை என்ற பின், மீண்டும் என்ன விசாரம் உள்ளது?

பதில் : முதலில் அந்தந்த ப்ரகரணங்களை (context) ஆராய்வோம்.

முதல் அத்யாயத்தில், ஸர்வத்ர ப்ரஸித்த்யதிகரணத்தில் இந்த விஷயம் உள்ளது. அந்த அதிகரணம் இந்த விஷயத்தைத் தீர்மானிப்பதற்காக ஏற்பட்டதன்று; வேறொரு உபநிஷத் வாக்யத்தின் பொருளைத் தீர்மானிக்க வந்தது. (முதல் அத்யாயம் முழுவதும் அப்படித்தான்)

இராண்டாவது அத்யாயத்தில் போக்த்ராபத்த்யதிகரணத்தில் இந்த விஷயம் உள்ளது. இந்த அதிகரணம், இந்த விஷயத்தைத் தீர்மானிக்கவே ஏற்பட்டது. (இராண்டாவது அத்யாயம் இதுபோலத்தான்). கர்மம் தான் சுகதுக்கத்துக்குக் காரணம் என்ற தீர்மானம் இங்குதான் கிடைக்கிறது.

முதல் அத்யாயத்தில், வேறொரு விஷயத்தைச் சொல்லும் போது, நடுவில் இதே போல ஒரு ஆக்ஷேபம் வர, அதற்கு ஸமாதானம் சொல்லவேண்டி வந்தது. அப்போது, இரண்டாவது அத்யாயத்தில் தீர்மானிக்கப்போகும் இந்த விஷயத்தையே அதற்கு ஸமாதானமாக அருளிச் செய்தார்.

எனவே இரண்டாவது அத்யாயத்தில் விசாரம் வீண் எனச் சொல்லக் கூடாது. ஏனெனில், இங்கு தான் இவ்விஷயமே ஏற்படுகிறது. முதல் அத்யாயத்திலேயோ, வேறொரு விஷயமே ப்ரதானமாக உள்ளது. எனவே இரண்டும் வீணல்ல.

கேள்வி : இரண்டு அதிகரணங்களும் வேறுவேறு விஷயத்தைச் சொல்ல வந்தன என்பது சரி. ஆனால் இரண்டு ஸூத்ரங்கள் எதற்கு? சுகதுக்கத்துக்குக் காரணம் கர்மமே என்பதால், பரமாத்மாவுக்கு சுக துக்கம் இல்லை என்பது விஷயம். ஒரு விஷயத்தைச் சொல்ல இரண்டு ஸூத்ரங்கள் எதற்கு? ஒரு இடத்தில் சொன்னால் போதும். அதே விஷயம் மற்றொரு இடத்திலும் வந்துவிடும்.

பதில் : இரண்டு விதமாக இங்கு ஆக்ஷேபம் வந்தது. அதனால் இரண்டு ஸூத்ரம் வந்தது. விஷயம் ஒன்று தான். ஆனால், வேறுவிதமாக மீண்டும் ஆக்ஷேபம் முளைத்தாலும் அதே பதிலே என்று உணர்த்துகிறார்.

மஹான்களின் நிர்வாஹம்

கேள்வி : ஆனாலும் இங்கு நெருடுகிறது. ஸமாதானம் ஒன்றுதான். அதைச் சொல்லியாகிவிட்டது என்றால், வேறுவிதமாக எப்படி ஆக்ஷேபம் வரும்? எனவே முதலில் சொன்ன ஸமாதானத்தை மீறி, அதிகப்படியாக ஒரு ஆக்ஷேபம் சொல்லவேண்டும். அதற்கு ஸமாதானம் வரவேண்டும். அப்படிச் சொன்னால்தான், ஸூத்ரம் சரியாகும். இல்லாவிட்டால் ஸூத்ரம் வீணாகிவிடும்.

பதில் : அதிகப்படியான ஆக்ஷேபம் உள்ளது என்பதுதான் ஆசார்யர்களின்

திருவுள்ளம். ஸ்ரீபாஷ்யத்திலும், ச்ருதப்ரகாசிகையிலும் மறைமுகமாக உள்ளது.

கர்மம்தான் சுகதுக்கத்துக்குக் காரணம் என்பதை முதலில் சொல்லியாகி விட்டது. அதற்கு மேல் ஒரு அதிகப்படி ஆக்ஷேபம் - கர்மம் மட்டுமே காரணம் எனச் சொல்லக்கூடாது. சரீரத்துடன் (சொந்தக்காரனுக) இருத்தல் என்பதும் கூட காரணம் எனச் சொல்லவேண்டும். ஏன் ? வேதமே இதைத் தெளிவாகச் சொல்வதால்! ''न ह वै'' என்றொரு வேதவாக்யம் சொல்கிறது. ''சரீரம் இருந்தால் சுகதுக்கம் கட்டாயம் உண்டு; சரீரம் இல்லையெனில் இல்லை'' என்று சொல்கிறது. எனவே சரீர ஸம்பந்தமும் கூட காரணம் என ஆகும். கர்மம், சரீரம் இரண்டுமே காரணம், இரண்டில் எது இருந்தாலும் சுகதுக்கம் உண்டு என ஆகும். அப்படியானால் ஈச்வரனுக்கு, கர்மம் இல்லாவிட்டாலும், சரீரம் இருப்பதால் சுகதுக்க அனுபவம் வர நேரிடும்.

மேலும், கர்மம் என்றுமே நேரிடையாக சுகதுக்கத்தை விளைவிக்க முடியாது. சரீரத்தின் மூலமாகவேதான் சுகதுக்க அனுபவம் வரும். எனவே சரீர ஸம்பந்தம் தான் காரணம்; கர்மம் காரணமில்லை என்று கூடச் சொல்லி விடலாம். கர்மமும் ஒரு காரணம் என்றால், அதுவே நேராக பலன் தரட்டுமே! முடியுமா? எனவே சரீரஸம்பந்தமே காரணம்; அதனால் பரமாத்மாவுக்கு சுகதுக்க அனுபவம் வரட்டும் என்று கூட ஆக்ஷேபம் வரும்.

இதற்கு ஸமாதானம் - சரீர ஸம்பந்தமும் காரணம் என்றால் மோக்ஷதசையிலும் கூட சுகதுக்க அனுபவம் உண்டு என ஆகிவிடும். எனவே சரீரஸம்பந்தம் காரணமன்று. கர்மம் தான் காரணம். இதற்கு நல்ல உதாஹரணமாகத்தான் ''ராஜா'' வைப் பற்றிச் சாதித்தனர். இந்த உதாஹரணம் மிகப்பழையதான த்ரமிட பாஷ்யத்திலேயே உள்ளது. ராஜாவுக்கும், குடிமக்களைப் போல் சரீரம் உண்டு; ஆனால் அவர்களைப் போல் தண்டனையோ. துக்கமோ, சுகமோ கிடையாது. ஏனெனில் அவன் ஸ்வதந்த்ரன் கட்டளைக்கு வசப்படாதவன். அதேபோல்தான் பரமாத்மாவும்.

न ह वै என்கிற வாக்யத்தின் அர்த்தம் நாலாவது அத்யாத்தில் உள்ளது. சரீரஸம்பந்தம் இருவிதமாகும். அவரவரது கர்மத்தின் பயனாய் சரீரத்தை எடுத்தல் ஒன்று அப்படியில்லாமல் தானே சரீரத்தை ஏற்றுக் கொள்ளுதல் இரண்டாவது. இதில், கர்மத்தின் பயனாக சரீர ஸம்பந்தமிருந்தாலே சுகதுக்கம் வரும். இல்லாவிட்டால் வராது. கூட்டிக் கழித்துப் பார்த்தால், கர்மம்தான் காரணம், சரீர ஸம்பந்தம் காரணமில்லை எனத் தெளிவாகும். (அது ஒரு வழி என்பது மட்டுமே)

न ह वै என்கிற வாக்யமும் இப்படி, கர்மத்தின் பயனுக வந்த ஸரீரத்தைப் பற்றியே சொல்கிறது. ह वै என்பதெல்லாம் இவ்விஷயம் ப்ரஸித்தம் என்பதைக் குறிக்கின்றன. கர்மபயனான ஸரீரமும், அதனுல் சுகதுக்கமும் தான் நமக்கு ப்ரஸித்தம். அதையேதான் இது சொல்கிறது. கர்மபயனுய் வராத ஸரீரத்தை இங்கே குறிக்கவில்லை. எனவே கர்மமே காரணம் என்பது கருத்து

மூன்றாம் அத்யாயத்தில் விசாரம்

கேள்வி : நமக்கெல்லாம் ஸரீரஸம்பந்தம் கர்மத்தால் வந்தது. ஆனுல் பரமாத்மாவுக்கோ தானே ஸங்கல்பம் செய்து ஏற்றுக்கொண்டது. எனவே இது தோஷத்தைத் தராது. கர்மத்தின் பயனுய் வரும் ஸரீர ஸம்பந்தமே தோஷத்துக்குக் காரணம் என்பதையும் முன்னுல் சொல்லியாயிற்று. அதற்கு மேல் மூன்ரும் அத்யாயத்தில் என்ன விசாரம்?

பதில் : இப்படிச் சொல்ல முடியாது. கர்மத்தின் பயனுக வந்தாலும் சரி, தானுகவே ஏற்றுக் கொண்டாலும் சரி, எப்படியானுலும் ஸரீரம் துக்கத்தையே தரும். அதன் ஸ்வபாவம் அப்படி என்று இங்கே ஆக்ஷேபம்.

உதாஹரணமாக, ஒருவன் செய்த குற்றத்துக்காக மரண தண்டனை பெறுகிரூன். கத்தி வெட்டுப் பெறுகிரூன். இவனது குற்றத்தால் இவனுக்குக் கிடைத்த கத்தி-வெட்டுதான், இவனது மரண துக்கத்துக்குக் காரணம்.

மற்ரொருவன் குற்றம் செய்யவில்லை. தானே கத்தியை எடுத்து தன்னை வெட்டிக் கொள்கிரூன். அதுவும் தான் மரணதுக்கத்தைக் தரும்.

''குற்றத்தின் பயனுய் வரும் கத்திவெட்டுதான் மரணதுக்கம் அளிக்கும், தானே செய்து கொள்ளும் கத்திவெட்டு மரண மளிக்காது'' எனச் சொல்ல முடியுமோ? அதே போல் தான் இங்கும்.

அந்தந்த பொருள்களின் ஸ்வபாவத்துக்கேற்ப அவை பலன் அளிக்கும். அதை மாற்ற முடியுமோ? மரண துக்கமளிப்பது கத்தியின் ஸ்வபாவம். யார் வெட்டினுலும், தானுகவே வெட்டினுலும் அப்படித்தான். அதனுல்தானே ''கத்தியால் மரணதண்டனை'' என விதிக்கிரூர்கள்! கத்திக்கு இந்த ஸ்வபாவம் உண்டு என்பதால் தானே இப்படி விதிக்கிரூர்கள்.

கர்மம் கூட தானே நேரிடையாகப் பலனளிப்பதில்லை. ஸரீரத்தின் மூலமாகவே பலனளிக்கிறது. அது ஏன்? ஸரீரத்துக்கு சுக-துக்கம் அளிப்பது ஸ்வபாவம் என்பதால் தான். எனவே பரமாத்மா, தானுகவே ஸரீர ஸம்பந்தத்தை ஏற்றுக்கொண்டாலும் கூட, ஸரீரத்துக்கு சுகதுக்கமளிப்பதே ஸ்வபாவம்

(தன்மை) என்பதால், பரமாத்மாவுக்கும் அது சுகதுக்கத்தை அளிக்கும். எனவே தோஷமற்றவன் எனச் சொல்லமுடியாது.

இப்படி ஒரு ஆக்ஷேபம் வருகிறது. இதற்கு ஸமாதானம் தான் இந்த அதிகரணத்தில் உள்ளது.

இதற்கு ஸமாதானம் - எந்தப் பொருளுக்குமே, துக்கமளிப்பதுதான் ஸ்வபாவம் என்று சொல்லிவிட முடியாது; சுகமளிப்பது தான் ஸ்வபாவம் என்பதும் கிடையாது. ஒரே பொருளே, ஒருவருக்கு சுகமளிக்கும், மற்றொருவருக்கு துக்கமளிக்கும். ஒருவருக்கே கூட ஒரு ஸமயம் சுகமளிப்பது, மற்றொரு ஸமயம் துக்கமளிக்கலாம். உதாஹரணமாக, நெருப்பின் பக்கத்தில் இருந்தால் குளிர்காலத்தில் சுகம், வெய்யில் காலத்தில் துக்கம். இதெல்லாம் பொருளின் ஸ்வபாவமன்று. ஸ்வபாவம் என்றுல் மாறவே கூடாது; ஒரே மாதிரி இருக்க வேண்டும். இதை ஸ்ரீ விஷ்ணுபுராணம் அழகாகச் சொல்கிறது.

எனவே, அவரவரது கர்மத்துக்கேற்பவே சுகமோ, துக்கமோ வருகிறது. பொருளின் ஸ்வபாவத்தால் வருவதில்லை. ஜீவன் கர்மவஶப்பட்டவன். எனவே, ஶரீரம் சுகதுக்கமளிக்கிறது. ஈஶ்வரனுக்கு கர்மம் கிடையாது. எனவே, ஶரீரம் சுகதுக்கமளிக்காது.

சிறையில் பத்து வருடம் தண்டனை அனுபவித்து, பின் விடுதலை பெற்றுன் ஒருவன். போகும் போது சிறை அதிகாரியிடம் - ''போகிறேன், நண்பா! என்றுன். சிறை அதிகாரிக்கு கோபம்.

''என்னை எப்படி நண்பன் என்கிறுய்?'' என்றுர். அவன் சொன்னுன். ''பத்து வருடமாக நீங்களும் நானும் ஒரே சிறையில் தான் இருக்கிறோம். என்னை மாதிரியே என் கூடவே சிறையில் இருக்கிறீர்கள். அதனுல் எனக்கு ஸமமாக நினைக்கிறேன்'' என்றுனும்.

இது எப்படி இருக்கிறது! தவறு செய்தால் சிறையில் அடைக்கப்பட்டு சிறைவாசம் அனுபவிப்பவன் எங்கே ? சிறைச்சாலையை வழிநடத்துவதற்காக, தானே அதை ஏற்று சுதந்திரமாக இருக்கும் அதிகாரி எங்கே? இருவரும் ஒன்றுகிவிடுவரா? சிறைதான், இவனுக்கு துக்கமளிக்கிறது. அதிகாரிக்கோ நல்ல பொழுது போக்காக, ரஸமாக இருக்கிறது.

அதேபோல் தான் ஶரீரத்தில் இருப்பதும் கூட. இதுவும் ஒரு சிறைவாசம். கர்ம வஶப்பட்ட நமக்கு தண்டனையாயுள்ளது. வழிநடத்தும் ஈஶ்வரனுக்கோ லீலாரஸத்தைக் தருகிறது.

எனவே எல்லாமே பரமாத்மாவுக்கு ஶரீரமாஞலும், அவனுக்கு ஒரு தோஷமும் கிடையாது. வேதம் இதைச் சொல்கிறது. புராணம் விளக்கமளிக்கிறது. தகுந்த யுக்தி (காரணம்) ஶ்ரீபாஷ்யம் காண்பிக்கிறது. வேறு என்ன வேண்டும்?

இதே விஷயத்தில் स्थित्यदनाभ्यां च (1-3-6), अपि चैवमेके (3-2-13) முதலிய ஸூத்ரங்களையும் ஸேவித்து அனுபவிக்கலாம். மஹான்கள் சாதித்ததையே எழுதியுள்ளேன். ஶ்ரீமதாண்டவன் திருநக்ஷத்ர மலரில் இதை அநந்த ப்ரணாமங்களுடன் ஸமர்பித்து தன்யனாகிறேன்.

★ ★ ★ ★ ★ ★

॥श्रीः॥

ஸாமவேதம் - உத்கீதம்

(திருமலை - சங்கபுரம் வேளியநல்லூர் நாராயணாசார்யர்)

தர்மங்கள்

இவ்வுலகில் நாம் தர்மம் எனக் கருதுபவைகள் யாகம், ஹோமம், தானம், த்யானம் மற்றும் அனைவருக்கும் உபகாரமாயிருக்கும் நற்செயல்களே. இவையனைத்திற்கும் மூலமாயும், ப்ரமாணமாயும் விளங்குவது வேதமேயாகும். ஏனெனில் இவையனைத்தும் வேதத்திலிருந்தே அறியப்படுகின்றன. ஆகையினாலேயே சாஸ்த்ரங்களின் ப்ரவர்த்தகர்களான மஹர்ஷிகள் "வேதோऽகிலதர்மமூலம்" என்றும் "சோதனாலக்ஷணோऽர்த்தோ தர்மः" என்றும் "சாஸ்த்ரயோநித்வாத்" என்றும் அருளிப்போந்தனர்.

வேதங்கள்

தர்மம் முதலியவற்றை போதிக்கிறபடியால் வேதங்கள் (வேதயதீதி) என்றும், காதால் கேட்டே அத்யயனம் செய்கிறபடியால் ச்ருதி என்றும் இவற்றிற்கு பெயர் வந்தது. இவை ரிக், யஜுஸ், ஸாம, அதர்வணம் என்று நான்கு வகைகளாகப் பிரிக்கப் பட்டுள்ளன என்பதும் அனைவரும் அறிந்ததே. இவைகளில் பல பிரிவுகள், அப்பிரிவுகளிலும் பல உட்பிரிவுகள் என வேதம் என்பது மிகப்பெரியதாயும் மிகவும் உயர்ந்தநோக்கங்கள் கொண்டவற்றை உபதேசிப்பதாகவும் உள்ளது.

நோக்கம்

யஜுர்வேதத்தில் அறியப்பட்ட யாகாதிகளை அனுஷ்டிக்கும்போது அந்தந்த தேவதைகளை ப்ரகாசப் படுத்தும் ரிக்குகளை (மந்த்ரங்களை) கொண்டவை ரிக்வேதம். இந்த யாகத்திற்கு இந்த தேவதையெனில் அத்தேவதையைக் குறித்த மந்த்ரங்களை ரிக்வேதிகள் உச்சரிப்பார்கள். அவ்வாறே ஸாமவேதமும் யஜுர்வேதமும் உபகாரமாயிருக்கும். இவ்வாறு யாகாதிகளை அனுஷ்டித்தலையும் அதன் த்ரவ்யம், தேவதை, பலன், முறை இப்படி அனைத்து விஷயங்களையும் தன்னிடத்தில் ஒருங்கே கொண்டது வேதம். ஒரு யாகம் செய்யும் போது இவ்வேதங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்தே பூர்த்தி செய்விக்கும்.

ஆக வேதங்களின் முக்கிய நோக்கம் ஏதென்னில் லோகத்தில் தர்மத்தை நிலைநிறுத்துதல், அதர்மத்திலிருந்த ஜீவர்களை மீள்வித்தல் ஸுபிக்ஷத்தை உண்டாக்குதல் இவை போன்றவைதான்.

ஸாமவேதம் அதன் பெருமை

இவ்வேதங்களில் ஸாமவேதம்தான் மிகப் பெரியதாகும். ஆயிரம் சாகைகள் கொண்டது. கானம்தான் ப்ரதானம் இதற்கு. கானத்திற்கு ஆட்படாதவர் எவருளர் ப்ரதமாசார்யனும் கீதாசார்யனுமான எம்பெருமான் वेदानाम् सामवेदोऽस्मि (வேதானாம் ஸாமவேதோऽஸ்மி) என்றல்லவா அருளினான். முக்திதசையில் முக்தர்கள் ஸாமகானம் செய்துகொண்டிருப்பார்கள் என தைத்தரீயோபநிஷத் **'ஸாமகாயன்னாஸ்தே'** என ஓதுகிறது. ப்ரஷ்னோபநிஷத் ஸாமங்களுடன் எழுந்தருளப் பண்ணப்படுகிறான் முக்தன் என்று 'ஸ ஸாமா உந்நீயதே' என ஓதுகிறது.

இவ்வாறு எம்பெருமானுக்கும் முக்தர்களுக்கும் லீலாவிபூதியில் உள்ளவர்களுக்கும் இந்த ஸாமமானது திருவுள்ளத்திற்கு உகப்பாயுள்ளதால் இதன் பெருமை எல்லையற்றது என்பதில் ஐயமில்லை.

அதன் அமைப்பு

முதலில் யஜுர்வேதத்தில் மூலத்தில் உள்ளதுபோல், ஸாமத்தில் ரிக் என்பது மூலமாய் இருக்கும். இதற்கும் ரிக்வேதத்திற்கும் ஸம்பந்தம் கிடையாது. அது வேறு, இது வேறு. இதன்மேல்தான் ஸாமகானம் செய்கின்றனர். அதன் பேரில் பதம் அதற்கும் மேல் பதஸ்தோமம் என்ற க்ரமத்தையுடைத்தாயுள்ளது இந்த ஸாமவேதம்.

இவ்வாறு ரிக், பதம், பதஸ்தோமம் என்றிருந்தாலும் கானத்திலேயே இதன் வைஷிஷ்ட்யம் உள்ளது. ஆகையினாலேயே ஸாமகானம் என்றே ப்ரஸித்தமாய் விட்டது.

ஜைமினி மஹர்ஷியின் திருவுள்ளம்

ரிக் ஸாமம் முதலியவற்றின் லக்ஷணத்தை நிர்ணயம் செய்த ஜைமினி மஹர்ஷி ஸாமத்திற்கு **"கீதிஷு ஸாமாக்யா"** (गीतिषु सामाख्या) என்று இரண்டாம் அத்யாயத்தில், கானம் செய்யப்படுபவைகளுக்கு (கீதி விசேங்களுக்கு) ஸாமம் என்று பெயர் அருளிச் செய்தார்.

ஸாமமானது "ரதந்தரம் காயதி" போன்ற வாக்யங்களில் கானத்தில் ப்ரயோகம் பண்ணப்பட்டதால் கானத்திலேயே ஸாமலக்ஷணத்தை அருளினார் என பார்த்தஸாரதி மிச்ரர் சாஸ்த்ரதீபிகையில் கூறியுள்ளார். ஸாமாசார்யர் என்று பெயர்பெற்ற ஜைமினி மஹர்ஷி ஸாமத்திற்கு லக்ஷணம் கூறுவது எவ்வளவு பொருத்தமாயுள்ளது! அவர்தான் எவ்வளவு பெரிய பாக்கியம் செய்தவர்! அவருடைய பெயரில் பெரிய ஸாமவேதம் ஒன்றுள்ளது. பெரிய மீமாம்ஸா சாஸ்த்ரம் அவராலேயே ப்ரவர்த்திக்கப்பட்டது.

ப்ரஹ்மகாண்டத்தில் அவருடைய திருவுள்ளம் என பலதத்துவங்களை அவர் ஆசார்யரான வ்யாஸ பகவான் அருளிச்செய்திருக்கிறார். இவ்வளவு உயர்ந்த மஹானை நன்றாக நமஸ்கரித்து விட்டு மேலே தொடரலாம்.

இதன் பிரிவுகள்

இது ஆயிரம் சாகைகள் உடையது என முதலிலேயே கூறப்பட்டுள்ளது. ஆனால் இப்போது கிடைப்பது மூன்று என்றும் சிலர் நான்கு என்றும் கூறுகின்றனர். ஆயிரத்தில் மூன்றுதான் உள்ளது என கஷ்டமும், மூன்றாவது உள்ளனவே என்று ஆனந்தமும் மாறி மாறி வருகிறது.

அந்த மூன்று சாகைகள் 1.கௌதுமீய சாகை(कौथुमीयशाखा), 2.ராணாயனீய சாகை (राणायनीयशाखा) 3.ஜைமினீய சாகை(जैमिनीयशाखा) என்பவையே.

அவ்வாறு மீதமுள்ள மூன்றிலும் மிகவும் ப்ரஸித்தமாயுள்ளது இப்போது நாம் கேட்டு ஆனந்திக்கும் கௌதுமீய சாகையே. இதை ஓதுபவர்கள் அதிகமாக உள்ளனர். இன்னும் ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரமம் ஸ்ரீமத் அஹோபிலமடம் போன்ற திவ்ய ஸம்ஸ்தைகளில் விசேஷ காலங்களில் இஸ்ஸாமகானத்தை நாம் கேட்டு இன்புறலாம்.

இந்த கௌதுமீய சாகையின் உட்பிரிவுகள் பல. இந்த ஸாம சாகையில் ஓதப்படும் கானங்களுக்கு விதவிதமான பெயர்கள் இருக்கும். ரதந்தரம், உத்கீதம் வாரவந்தீயம் எனப் பலவகை உள்ளன. இவற்றை ஸாமம் என்கிறார்கள். ரதந்தர ஸாமம், உத்கீதஸாமம் என ப்ரஸித்தமாயுண்டு.

பங்திகள்

மேலும் ஸாமங்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து விதமாகவும் ஏழுவிதமாகவும் பிரிக்கப்பட்டிருக்கும். இதை பங்திகள் என்கின்றனர். பங்தி என்றால் பொதுவாக பிரிவு என்று பொருள். ஆனால் இங்கு அவ்வர்த்தம் கூறப்படுமாயினும், ஒவ்வொரு பங்திக்கும் ஒரு அதிஷ்டான தேவதையுண்டு. அது ஸாமாந்ய தேவதையோ, ஸர்வாந்தர்யாமியோ ஏதோ ஒன்று. அதை பங்திபாவத்தோடு கானம் செய்தால் பலனைப் பெற்றுத் தருவதால் இவற்றை பங்தி என்று அழைக்கின்றனர்.

ஐந்து எனில் 1.ப்ரஸ்தாவம் 2.உத்கீதம் 3.ப்ரதிஹாரம் 4.உபத்ரவம் 5.நிதனம் என்பவையாகும். ஏழெனில் ப்ரணவத்தையும் ஹீங்காரம் என்ற இரண்டையும் ஐந்துடன் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அதன் உத்தேசம்

இவ்வாறு பிரிப்பதெல்லாம் யாகங்களுக்காகத்தான். யாகங்கள் பலவுண்டு. அவற்றில் ஸாமகானமும் செய்யப்படும் என்று முன்பே குறிப்பிடப் பட்டுள்ளது.

இவ்வாறெல்லாம் செய்வது எம்பெருமானுடைய ப்ரீதிக்காகத்தான். யாகங்களை ஏதாவது பலனைக்குறித்து அனுஷ்டித்தால் அதனால் ப்ரீதியடைந்த எம்பெருமான் வேண்டிய பலனை அருள்வான். பலனைக் குறித்தல்லாமல் ப்ரஹ்மவித்யையைக் குறித்து அங்கமாக அனுஷ்டித்தால் அது ப்ரஹ்மவித்யையை பூர்த்தி செய்வித்து எம்பெருமானுக்கு ப்ரீதியை உண்டு பண்ணி நம் பாபத்தைப் போக்கி மோக்ஷ பர்யந்தமாக பலனைக் கொடுக்கும்.

ஆக எப்படி அனுஷ்டித்தாலும் யாகாதிகள் எம்பெருமானுக்கு ப்ரீதியை உண்டுபண்ணும் ஆராதனங்களாக இருக்கும்.

ரித்விக்குகள் விவரம்

யாகத்தை நடத்தி வைப்பதற்காக அதன் யஜமானனால் வரிக்கப் படுபவர்கள் ரித்விக்குகள் னெப்படுவர். அவர்களில் நான்கு கணங்கள் உண்டு. 1.ஹோத்ருகணம் 2.அத்வர்யுகணம் 3.உத்காத்ரு கணம் 4.ப்ரஹ்ம கணம் என்பவையே அவை. ஒவ்வொரு கணத்திற்கும் நால்வர் உள்ளனர்.

1. முதலாவது ஹோத்ருகணம்.

இவர்கள் ரிக்வேதத்திற்கு அதிகாரிகள். யாககாலத்தில் ரிக்வேதத்தை (மந்த்ரங்களை) பாராயணம் செய்பவர்கள் ஆவர்.

2. அத்வர்யுகணம்

இக்கணத்தைச் சேர்ந்தவர்கள் யஜுர்வேதிகள் ஆவார்கள். இவர்கள் யாககாலத்தில் யஜுர்வேதத்தைச் சேர்ந்த மந்த்ரங்களை உச்சரிப்பவர்கள். (பாராயணம் செய்பவர்கள்).

3. உத்காத்ருகணம்

ஸாமவேதத்தைச் சேர்ந்தவர்கள் இவர்கள். யாககாலத்தில் இவர்கள் ஸாமகானம் செய்வார்கள்.

4, ப்ரஹ்மகணம்

இவர்கள் யஜுர்வேதத்தைச் சேர்ந்தவர்கள்தான்.

இந்த நான்கு கணங்களைச் சேர்ந்த ரித்விக்குகளே யாகத்தை நடத்தி வைப்பர். இங்கு ஸாமவேதத்தைப் பற்றி எழுதுவதால் ஸாமவேதத்தைச் சேர்ந்த ரித்விக்குகளைப் பற்றிப் பார்ப்போம்.

இவர்கள் உத்காத்ரு கணத்தைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நால்வர் 1.ப்ரஸ்தோதா 2.உத்காதா 3.ப்ரதிஹர்த்தா 4.ஸுப்ரஹ்மண்யம் என்பவர்களே அவர்கள்.

இவர்களில் இரண்டாவதாக உள்ள உத்காதா என்பவர்தான் ப்ரதானமானவர். ஏனெனில் இவர்தான் அதிககார்யம் செய்பவர். முன்கூறப்பட்ட ப்ரஸ்தாவம், உத்கீதம்,

ப்ரதிஹாரம், உபத்ரவம், நிதனம் என்ற ஐந்து பங்திகளில் உத்கீதத்தையும் உபத்ரவத்தையும் இவர்தான் கானம் செய்வார். அதிலும் உத்கீதம்தான் அதிக இடங்களில் வரும். இவ்வாறு இரண்டு ஸாமபங்திகளை கானம் செய்யுமிவர் நிதனம் என்னும் ஐந்தாவது பங்தியையும் அனைவருடன் சேர்ந்து கானம் செய்வதால் நிறைய கார்யம் இவருக்கு. ஆதலால் நிறைய கார்யம் செய்து, ப்ரதானமாகிவிட்டபடியால் இவர் பெயரைக்கொண்டே இக்கணம் வழங்கலாயிற்று.

இதில் முதல் பங்தியான ப்ரஸ்தாவத்தை ப்ரஸ்தோதா என்பவர் கானம் செய்வார். ப்ரஸ்தாவம் என்பது ஆரம்பம்தான். அதை செய்துவைத்தால் இவர் கார்யம் முடிந்துவிடும்.

அடுத்தான உத்கீதம் என்னும் பங்தியை சளைக்காமல் கானம் செய்பவர் உத்காதா என்பவர் என்று முன்னமே கூறப்பட்டது.

அடுத்து ப்ரதிஹாரம், இதை ப்ரதிஹர்த்தா என்பவர் அளவாகச் செய்துவிடுவார்.

அடுத்து வருவது உபத்ரவம் என்பது. இதையும் உத்காதாவே கானம் செய்வார்.

கடைசியாக உள்ளது நிதனம் என்பது. இதை நான்கு உத்காத்ருகணத்தைச் சேர்ந்தவர்களும் கானம் செய்வர்.

இவ்வாறு ரித்விக்குகள் சேர்ந்து நடத்திக் கொடுத்த யாகத்தால் யஜமானனுக்கு அவன் கோரிய பலன் கிடைக்கும்.

உத்கீதம்

இவ்வாறு பங்திகள் கூறப்பட்டதில் இரண்டாவதாக உள்ளது உத்கீதம் என்று பெயர்பெறும் என்று முன்பே கூறப்பட்டது. இதற்கு பொருள் வாசஸ்பத்யம் முதலிய கோசங்களில் அழகாகப் பதம் பிரித்து உரைக்கப்பட்டுள்ளது. உத்-கை -தக்(उद्-गै-थक्) எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இதற்கு உச்சஸ்வரத்தில் கானம் செய்யப்படுவது என்பது பொருளாகும்.

இதில் ஒரு விசேஷம். ஸாமத்தை "உச்சை: ஸாம்னா" என்று உச்சஸ்வரத்தால் ஸாமகானம் செய்யவேண்டும் என்றே நியமம் உள்ளது. இதன்மேல் உத்கீதம் என்பதற்கும் உச்சஸ்வரத்தால் கானம் செய்யப் படவேண்டும் என்று எவ்வாறெனில், உத்கீதத்தின் ஏற்றம் அவ்வாறு உள்ளது. மற்றொன்று பெயர் அந்த ஸாமத்திற்கு அவ்வாறு உள்ளது. அதற்கு பதம் பிரித்துக் கூறும் போது பொருள் அவ்வாறு வந்துள்ளது. பெயரினாலேயே இந்த ஸாமத்திற்கு இவ்வளவு பெருமை கிடைத்து

விட்டது. மற்ற ஸாமங்களுக்கு உச்சை: ஸாம்னா என்ற விதியினால் உச்சஸ்வரம் வரும். உத்கீத்திற்கோ அச்சொல்லினாலேயே வந்து விடுகிறது என்பது எவ்வளவு பெருமை!

சொல்லிலேயே பெருமையெனில் அதன் ஸ்வரூபத்தால் எவ்வளவு பெருமை அதற்கு! அனைத்து ஸாமங்களிலும் இது உயர்ந்தது. ஸாமவேதத்தில் இதுவே அதிகமாக வரும். இது யாகத்தில் கடைசியாக கானம் செய்யப்பட்டு அதன் பலனாக யஜமானனுக்கு அம்ருதத்தைக் கொடுக்கும் என வேதமே கூறுகிறது.

மேலும் சிலது யாகாதி கர்மாக்களில் அங்கமாக இருக்கும். சிலது ப்ரஹ்மவித்யைகளில் அங்கமாக இருக்கும். இவ்வுத்கீதமோ இரண்டிலும் அங்கமாக இருக்கும்.

இதிலும் ஒரு விசேஷம்: யாகாதிகளில் அங்கமாகும் போது இதற்கு உத்கீத ஸாமா என்று பெயர். ப்ரஹ்மவித்யையில் அங்கமாகும் போது உத்கீதவித்யை என்ற பெயர் வந்து விடுகிறது.

இவ்வித்யைக் கொண்டு அனுஷ்டிக்கப் படும் அனைத்தும் வீர்யத்துடன் கூடியதாக இருக்கும் என உபநிஷத் கூறுகிறது. அது யாகமோ உபாஸனமோ எதுவாயினும் இவ்வித்யையைக் கொண்டு அனுஷ்டித்தால் அவைகளுக்கு வரும் தடைகள் நீங்கிவிடும். மோக்ஷம் முதலான பலன்களை அவைகள் கொடுத்து விடும். அவ்வளவு சக்தி வாய்ந்த வித்யை இது.

இவ்வாறெல்லாம் கூறுவது ஸாமவேதத்திற்காக உள்ள உபநிஷத்தான சாந்தோக்யம் ஓதுகிறது. ஸாமவேதத்தைச் சேர்ந்த உபநிஷத் ஆகையால் ஸாமவேதத்தில் உள்ள ஸாமங்களில் முக்கியமான அங்கமான உத்கீதையைக் கொண்டு ஆரம்பமாகிறது இவ்வுபநிஷத்.

எட்டு அத்யாயங்கள் அல்லது ப்ரபாடகம் என்று பிரிக்கின்றனர் இவ்வுபநிஷத்தை. ப்ராம்ஹணம் என்றும் கூறுவர். இதில் முதல் இரு அத்யாயங்கள் ஸாமவேதத்தைப் பற்றியதாகும்.

இவ்விரண்டில் முதலாவதில் ஸாமத்திற்கு அங்கமான உத்கீதத்தைப் பற்றி பதிமூன்று கண்டங்களில் (பிரிவுகளில்) பல விஷயங்கள், பல உபாஸனங்கள் உபதேசிக்கப்பட்டுள்ளன. இரண்டாவது அத்யாயத்தில் ஸாமத்தைப் பற்றிய உபாஸனங்கள் இருபதிற்கும் மேற்பட்ட கண்டங்களில் உபதேசிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கூறப்பட்ட உபாஸனங்கள் த்ருஷ்டிவிதிகள் எனப்படும். த்ருஷ்டிவிதி என்பது ஒன்றில் மற்றொன்றின் பார்வை. அதாவது ஒருவனிடத்தில் ஏதோ ஒரு தர்மத்தையிட்டு அவனைக் காட்டிலும் உயர்ந்தவனாகப் பார்த்தல். ஒரு

வேலைக்காரனைப் பார்த்து நீ ராஜா மாதிரி இருக்கிறாய் என்னும் போது கீழே உள்ள வேலைக்காரனிடம் மேலே உள்ள ராஜா என்ற பார்வை த்ருஷ்டிவிதியாகும்.

இவ்விரு அத்யாயங்களில் கூறப்பட்ட உபாஸனங்கள் அனைத்தும் இவ்வகையானவையே. இவையெல்லாம் பெரும்பாலும் அங்க உபாஸனங்களாக இருக்கும். உதாஹரணமாக ப்ரணவம் - ஓங்காரம் , இதனை ஆரம்பமாக உடையது உத்கீதம். அதனால் உத்கீதத்திற்கு அவயவம் போலுள்ளது ப்ரணவம். முழு அவயவியான உத்கீதத்தைக் காட்டிலும் அவயவமான ப்ரணவம் சற்று கீழே உள்ளது. அதனால் ப்ரணவத்தை உத்கீதமாகப் பார்க்க வேண்டும். ப்ரணவத்தை உத்கீதமாக பாவித்து உபாஸனம் செய்யவேண்டும் என்கிறது இவ்வுபநிஷத்.

இம்மாதிரி செய்தோமானால் (உபாஸனம் செய்வதால்) ப்ரஹ்மவித்யை முதலானவை வீர்யவத்தரமாக உள்ளதாகிவிடும் என்று ஓதுகிறது. உத்கீதத்திற்கு அங்கமான ப்ரணவத்தை உத்கீதமாகப் பார்த்தல் அப்ப்ரணவத்தில் முக்கிய ப்ராணத்ருஷ்டி உத்கீதத்தில் ஆத்யனாக த்ருஷ்டி உத்கீதத்தை ஆகாச ப்ராணசப்தவாச்யனான பரமாத்மத்ருஷ்டி என பல த்ருஷ்டிவிதிகள் இவ்வுபநிஷத்தின் முதலாவது அத்யாயத்தில் ஓதப்பட்டுள்ளது.

முதல் அத்யாயத்தில் முதல் கண்டத்தில் மிக அழகாக உத்கீத குணங்களைக் கூறுவதைப் பாருங்கள். ரஸாநாம் ரஸதம: பரம: பரார்த்ய: அஷ்டம: யதுத்கீத: என்கிறது உபநிஷத்.

அதாவது ப்ருதிவீ, ஜலம், ஓஷதிகள், புருஷன், வாக் முதலியவற்றின் ரஸத்தைக் காட்டிலும் அதிசயிதரஸத்தை உடையது இவ்வுத்கீதம். இதன் ரஸத்தைக் காட்டிலும் வேறு ரஸம் ஸமமானதோ உயர்ந்ததோ கிடையாது. இவ்வுத்கீதம் பரமாத்மாவைப் போல் பூஜிக்கத் தகுந்தது என்று இவ்வாக்கியத்திற்கு பொருள்.

இவ்வாறு ஆரம்பித்த உபநிஷத் கதை ரூபமாகவும் உத்கீதத்தின் மேன்மையைக் கூறுகிறது. பல த்ருஷ்டிகள் இவ்வாறு உள்ளன. அவற்றில் ஒன்றுதான் அந்தராதித்ய வித்யை என்பதாகும். இவ்வித்யையில் ஆதித்ய மண்டலத்தில் உள்ள திவ்யபுருஷனைப் பற்றிய விசாரம் இங்கு வருகிறது. இதில் ப்ரகாசிக்கும் திவ்ய மங்கள விக்ரஹம், அவனுடைய ஜ்வலிக்கும் தன்மை, அது எதனால் வந்தது என்று எல்லாம் மிக விவரமாகக் கூறுகிறது இவ்வுபநிஷத்.

அத்திவ்ய புருஷன் எப்பொழுதும் ஜ்வலிக்கும் ஹிரண்மயமான விக்ரஹத்தை உடையவன். நீலமேக வர்ணத்தை உடைய எம்பெருமானுக்கு எப்படி இப்படிப் பட்ட திவ்ய தேஜஸ் வந்தது என்று கேட்டுக் கொண்டு அங்கு ச்ருதப்ரகாசிகையில் (வேதார்த்த

ஸங்க்ரஹவ்யாக்யானத்தில்) ரஹஸ்யார்த்தம் என்று அருளி உபதேசத்தாலேயே தெரிந்து கொள்ள வேண்டுமென்று அருள்கிறார். அதாவது எம்பெருமாட்டியினுடைய சேர்க்கைதான் எம்பெருமானுக்கு விசேஷம் என்று உபநிஷத் ரஹஸ்யமாக உபதேசித்து अप्रमेयं हि तत्तेजः यस्य सा जनकात्मजा (அப்ரமேயம் ஹி தத்தேஜः யஸ்ய ஸா ஜனகாத்மஜா) என்ற ச்லோகத்தில் ஏற்பட்ட பொருளேயாகும் அது. இ து வு ம் இவ்வுத்கீதத்தில் விசேஷமாகும்.

இவ்வித்தையிலேயே கப்யாஸம் என்கிற சொல் எம்பெருமானுடைய திருக்கண்களை வர்ணிக்கிறது. இதுதான் நம் ஸம்ப்ரதாயத்திற்கு எம்பெருமானாரை யாதவப்ரகாசரிடமிருந்து விலக்கி ஒரு ஜகதாசார்யனை வழங்கிற்று. ஜலத்தில் விகஸித்துக் கொண்டிருக்கும் செந்தாமரையை ஒத்த திருக்கண்கள் எம்பெருமானுக்கு என்கிற அற்புதமான பொருளை அருளியது இச்சொல்லிற்குத் தான். இதுவும் உத்கீத வித்தையிலேயே வருகிறது.

மேலும் ஆகாசம், ப்ராணன் என்று நாம் உலகில் வழங்கும் சொற்கள் ஸாதாரணமாக பூதாகாசத்தை, - வாயுவையே கூறும். ஆனால் இவை பரமாத்மாவைக் கூறும் சொற்கள் என வருவதும் இவ்வுத்கீதவித்யையை விளக்கும் முதல் அத்யாயத்தில்தான்.

இவ்வாறு பல விஷயங்கள் வருவது இந்த இரண்டு அத்யாயங்களில்தான். இதிலேயே பல வாக்கியங்களைக் கொண்டு பல அதிகரணங்களில் விசாரம் செய்தருள்கின்றனர் ஸூத்ரகாரரிலிருந்து அனைத்து ஆசார்யர்களும். மேலும் பல விஷயங்கள் இருந்தாலும் விரிவுக்கஞ்சி இத்துடன் இவ்வ்யாஸத்தை முடிக்கிறேன். பெரியோர்கள் குறைகளைப் பொறுத்து நிறைகளை ஏற்றுக் கொள்வார்களாக.

★ ★ ★ ★ ★ ★

மதுரகவிகள்

(ஸ்ரீ.உ.வே. தி. ஈ. ரங்கநாதாச்சார் ஸ்வாமி, நங்கநல்லூர், சென்னை)

வையகமெண் பொய்கைபூதம் என்ற வரிசையில் ஆறாவது இடத்திலுள்ளவர் இவ்வாழ்வார். அவதாரக்ரமத்திலே ஐந்தாமவர். பொய்கை, பூதம், பேயார், மழிசையர்கோன், மதுரகவி என்ற இவ்வைவரும் த்வாபரயுகத்தில் அவதரித்தவர்கள். நம்மாழ்வார் முதலிய மற்றவர்கள் கலியுகத்தில் அவதரித்தவர்கள். मेषे चित्रासमुद्भूतं पाण्ड्यदेशे गणांशकम्। श्रीपराङ्कुशसद्भक्तं मधुरं कविमाश्रये ।। என்கிறது திவ்யஸூரிஸ்தோத்ரம். "தேறியமாஞானமுடன்" எனத்தொடங்கும் ப்ரபந்தஸாரப்பாட்டு இவ்வாழ்வார் திருக்கோளூர் என்ற திவ்யதேசத்தில் சித்திரை மாதம் சித்ராநக்ஷத்ரத்தில் தோன்றினார் எனத் தெரிவிக்கிறது. ஆழ்வார் திருநகரிக்கு மிக அருகிலுள்ளது திருக்கோளூர். எம்பெருமானுடைய பாரிஷதர்களில் முதல்வரான குமுதரின் அம்சத்தோடு சேர்ந்த கருடனின் அம்சம் என்று சொல்லுவர். நம்மாழ்வார் அவதரிப்பதற்கு முன்பே அவதரித்த இவர் கல்விகேள்விகளில் சிறந்து விளங்கினார். இனியபாடல்களை இயற்றும் திறமை பெற்றிருந்ததால் மதுரகவி என்றழைக்கப்பட்டார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. ஆங்காங்கு புண்யஸ்தலங்களில் தங்கி புனிதநீராடி வாழ்நாட்களைக் கழித்து வந்தார். ஒருமுறை இவர் அயோத்தையில் தங்கி இருந்தபோது தாம் பிறந்த ஊரான திருக்கோளூர் எம்பெருமானைத் தென்திசை நோக்கிக் கைதொழுதார். அப்போது தென்திசையில் சோதி ஒன்று தென்பட்டது. பலநாட்கள் சோதி தொடர்ந்து தெரியவே அது என்ன என்பதைக் கண்டறிய தெற்கு நோக்கிப் பயணித்தார். முடிவில் ஆழ்வார் திருநகரி சென்று சேர்ந்ததும் சோதி மறைந்தது. திருப்புளியாழ்வார் அடியில் யோகத்தில் இருந்த ஆழ்வாரைக் கண்டார். இவர் கண் திறப்பரோவென்று பார்க்கச் சிறுகல்லை அருகே எறிந்தார். ஆழ்வார் கண்கள் திறந்தன. இவர் பேச்சுத்திறன் உடையவரா என்றறிய "செத்ததன் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்" என்றார். அதாவது செத்தது உயிரில்லாதது. அசேதனம். அசேதனமான உடலைச் சார்ந்த அணுவான ஜீவாத்மா எதை அனுபவித்துக்கொண்டு எங்கே இருக்கும் என்று கேட்டார். நம்மாழ்வாரிடமிருந்து "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்று பதில் வந்தது. அதாவது அந்த உடலைச் சேர்ந்த இன்பதுன்பங்களை அனுபவித்துக் கொண்டு அங்கேயே இருக்கும். ஆழ்வாரின் அறிவுக்கூர்மையை அறிந்து மதுரகவி அவரே தமது ஞானநல்லாசிர்யர் எனத்துணிந்து அவரை ஆச்ரயித்தார். ஆழ்வாரும் அவரைச் சீடராக அங்கீகரித்து மந்த்ரமந்த்ரார்த்தங்களை உபதேசித்தார். ஆழ்வார் தமது அனுபவ பரீவாஹமாக அருளிச்செய்த ப்ரபந்தங்கள் நான்கையும் பட்டோலை கொண்டு அவற்றைப் பரப்பினார் மதுரகவி. ஆழ்வார் 35 பிராயத்தில் திருநாடலங்கரித்த பின்பு திருக்குருகூரில்

ஆழ்வாரின் அர்ச்சாவதாரத்தைப் ப்ரதிஷ்டை செய்து உத்ஸவாதிகளை நடத்தி வந்தார். மதுரையில் இயங்கி வந்த தமிழ்ச் சங்கம் ஆழ்வார் உடைய திருவாய்மொழியை ஏற்றுக் கொண்டாடியது. நம்மாழ்வாரிடத்துத் தமக்குள்ள பக்தியை வெளியிடும் ப்ரபந்தம் ஒன்றை அருளிச் செய்தார். 11 பாசுரங்களைக் கொண்ட அப்பிரபந்தம் "கண்ணிநுண் சிறுத்தாம்பினால்" என்று தொடங்குவதால் முதற்குறிப்பு என்ற இலக்கணத்தின்படி அதுவே இப்பிரபந்தத்திற்கு பெயராயிற்று. திருப்பல்லாண்டு, அமலனாதிபிரான் என்பது போல.

ஒரு காலத்தில் அருளிச்செயல்கள் வழக்கிலில்லாத போது நாதமுனிகள் "ஆராவமுதே" என்ற பதிகத்தைக் கேட்டார். "ஓராயிரத்துள் இப்பத்து" என்று கூறப்படுதலால் மிகுதி பாசுரங்களைத் தேடி ஆழ்வார் திருநகரிக்குச் சென்றார். அங்கு "கண்ணிநுண் சிறுத்தாம்பு" மட்டுமே ஓதப்படுவதைக் கண்டு அதனை உபதேசம் பெற்று பன்னீராயிரம் முறை ஜபம் செய்ய நம்மாழ்வார் ப்ரத்யக்ஷமாகி நாதமுனிகளுக்கு நாலாயிர திவ்யப்ரபந்தத்தை உபதேசித்தார் என்பது ஸம்ப்ரதாயம். நாலாயிரம் பாசுரங்களாகிய திவ்யப்ரபந்தங்கள் நமக்குக் கிடைக்கக் காரணமாயிருந்தது மதுரகவிகள் அருளிச்செய்த கண்ணிநுண் சிறுத்தாம்பு. அந்த வகையில் மதுரகவிகளுக்குப் பெருமை.

நம்மாழ்வாரின் துதியாக அமைந்த கண்ணிநுண் சிறுத்தாம்பை, எம்பெருமானுடைய ஸ்தோத்ரமாக அமைந்த அருளிச்செயல்களின் இடையே நாதமுனிகள் எவ்வாறுச் சேர்த்தார் என்ற ஐயம் எழக்கூடும். பகவத்பக்திக்கு எல்லைநிலம் பாகவதபக்தி. அதனாலேயே ஆழ்வார்களுடைய அருளிச்செயல்களுக்கு நடுவே நண்ணாதவாளவுணர், கண்சோர, பயிலும் சுடரொளி, நெடுமாற்கடிமை போன்றபதிகங்கள் இடம்பெற்றன. இவற்றின் அர்த்தத்தை வெளியிடுகையாலே கண்ணிநுண் சிறுத்தாம்பையும் திவ்யப்ரபந்தங்களின் நடுவே நாதமுனிகள் சேர்த்தார். மேலும் முத்தாலான ஹாரத்தின் நடுவிலே கோர்த்த நாயகக்கல் ஹாரத்தை ஒளிரச்செய்வது போல் இப்பிரபந்தம் மற்ற அருளிச்செயல்கள் நிறம் பெறும் படிச் செய்கிறது.

அந்தாதித் தொடையில் அமைந்தது இப்பிரபந்தம் 96 வகைப் ப்ரபந்தங்களில் ஒன்று. பத்துப்பாசுரங்களைக் கொண்டிருப்பதால் இது பதிற்றந்தாதி என்ற வகையில் சேரும். நூற்றந்தாதியும் உண்டு. எம்பெருமானைப் போலவே ஆசார்யர்களும் கொண்டாடப்படவேண்டியவர்கள் என்ற அர்த்தத்தை விளங்கக் காட்டியவர் மதுரகவிகள். அவர் நம்மாழ்வாரை எம்பெருமானைக் காட்டிலும் ஒருபடி உயர்ந்தவராகவே கருதினார் என்கிறார் ஸ்வாமி தேசிகன். மதுரகவிகள் இவ்வுலகில் வாழ்ந்திருந்த காலத்தில் விபவத்தில் கண்ணன் எழுந்தருளியிருந்தான். வடநாட்டிலிருந்த மதுரகவிகள் எளிதில் கண்ணனை ஆச்ரயித்திருக்கலாமாகிலும்

அவ்வாறு செய்யாமல் நம்மாழ்வாரை ஆச்ரயித்தார். இதனை ஸ்வாமி தேசிகன் காட்டுகிறார். "அன்பர்க்கே அவதரிக்குமாயன் நிற்க அருமறைகள் தமிழ்செய்தான் தாளே கொண்டு துன்பற்ற மதுரகவி". அவர்நமக்கு आचार्यनिष्ठै என்றொரு வழியைக் காட்டினார். இவ்வழி இவர் கண்டுபிடித்தது அன்று. தொல்வழி. பழமையான மார்கம். அதனைத் தோன்றக் காட்டினார் மதுரகவிகள். அத்தனையே.

எம்பெருமான் விஷயத்தில் ஆழ்வார்கள் எப்படியெல்லாம் ஈடுபட்டார்களோ அப்படியெல்லாம் ஆழ்வார் விஷயத்தில் ஈடுபடுகிறார் மதுரகவிகள். அதிகாரஸங்க்ரஹத்தின் இரண்டாவது பாசுரத்தில் இதனைச் சுருக்கிக் காட்டுகிறார் ஸ்வாமி தேசிகன். "இன்பத்தில் இறைஞ்சுதலில் இசையும் பேற்றில், இகழாத பல்லுறவில் இராகம் மாற்றில் தன் பற்றில், வினைவிலக்கில் தகவோக்கத்தில் தத்துவத்தை உணர்த்துவதில் தன்மையாக்கில்" என்று பத்து ஸம்பந்தங்களைக் காட்டுகிறார். அவற்றை சற்று விவரமாகப் பார்ப்போம்.

இன்பத்தில் - பகவத்ஸ்வரூபம் आनन्दमयम् ஆனந்தம் என்னும் குணநிறை மிகுதியாக உடையவன் எம்பெருமான். மநுஷ்யானந்தம் முதல் நூறு நூறு மடங்காகக் கணக்கிட்டுப் பேசிய உபநிஷத் स एको ब्रह्मण आनन्दः என்று முடித்தது. निरतिशय ஆநந்தமுடையவன் எம்பெருமான் என்றதாயிற்று. "மத்துறுகடைவெண்ணெய் களவிடை உரவிடையாப் புண்டு எத்திறம்" என்று ஆழ்வாரை மோஹிக்கச் செய்த சரிதையிலே ஈடுபட்டுப் பேசுகிறார். கண்ணனின் செயல் ஆழ்வாருக்கு போக்யமாயிருந்தது. ஆனால் மதுரகவிகளுக்கோ அண்ணிக்கும் அமுதூறும் எந்நாவுக்கே என்றபடி நம்மாழ்வாருடைய திருநாமம் போக்யதரமாயுள்ளது. இதனை இன்பத்தில் என்று ஸங்க்ரஹித்தார். "நாவினால் நவிற்றி இன்பமெய்தினேன்". என்று இரண்டாம் பாட்டிலும் இதனை அனுவதிக்கிறார்.

"இறைஞ்சுதலில்" பக்தர்கள் எம்பெருமான் திருவடிகளைச் சரணமாய் பற்றுவர். "நாகணைமிசை நம்பிரான் சரணே சரண் நமக்கென்று" இருப்பர் நம்மாழ்வார். மதுரகவிகள் நம்மாழ்வார் திருவடிகளைச் சரணமாகப் பற்றுகிறார். மேவினேன் அவன் பொன்னடி என்கிறார்.

"இசையும் பேற்றில்" - இசையும் ஒப்புக்கொள்ளும் புருஷார்த்தத்தில் பகவானை அடைந்து அவனுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா அடிமை செய்யவேண்டும் என்று அதனையே பரமபுருஷார்த்தமாகக் கொள்வர். ஆனால் மதுரகவிகள் இசைந்த பேறு எதென்னில் பெரியவண்குருகூர் நகர் நம்பிக்கு ஆளுரியனாய் அடியேன் பெற்ற நன்மையே என்றபடி ஆழ்வாருடைய அடிமையே

அவருக்கு பரமபுருஷார்த்தம். முதலிரண்டு அடிகளிலே தேவபிரானுடை கரிய கோலத் திரு உருக்காண்பன் என்று கூறுகிறாரோ என்று ஐயப்பாடு வேண்டாம். ஆழ்வார் உகந்த விஷயமென்று பகவத்விஷயத்தை இசைகிறேனேயொழிய ஆழ்வார் ஸம்பந்தத்தை அறுத்துக்கொண்டு பகவத்விஷயம் எனக்கு இசையக்கூடிய புருஷார்த்தமன்று என்று தாத்பர்யம்.

"இகழாத பல்லுறவில்" - எக்காலத்திலும் சிதையாதது பகவானோடு நமக்குள்ள உறவு. ஒழிக்க ஒழியாத உறவு அது. "சேலேய் கண்ணியரும் பெருஞ்செல்வம் நன்மக்களும் மேலாத்தாய்தந்தையரும் எம்பெருமானே ஆவான்" என்பது ஆழ்வாரின் கருத்து. மதுரகவிகளோ ஆழ்வாரே தமக்கு ஸகலவிதபந்துவும் என்கிறார். அன்னையாய் அத்தனாய் என்னையாண்டிடும் தன்மையான்.

"இராகம் மாற்றில்" - தகாதவற்றில் ஆசையை ஒழித்தல் परमात्मनि यो रक्तो विरक्तो अपरमात्मनि என்றபடி எம்பெருமானுக்கு அடிமை பூண்டவன் மற்றவற்றில் கண் செலுத்தான். மதுரகவிகள் தம் நிலையைக் கூறுகிறார். பிறர் நன்பொருள் தன்னை மடவாரையும் முன்னெலாம் நம்பினேன். ஆனால் திருக்குருகூர் நம்பிக்கு அன்பு பூண்டபின்பு அவற்றில் ஆசை ஒழிந்தது. சதிர்பெற்றேன். தன்யனானேன் என்கிறார்.

"தன்பற்றில்" - தகாதவற்றிலிருந்து என்மனம் திரும்பித் திருந்தியது மட்டுமல்ல, தானே தன்னிடத்தில் பற்றை உண்டாக்கினார் ஆழ்வார் என்கிறார். ददामि बुद्धियोगं तं येन मामुपयान्ति ते என்று கீதையிலே கண்ணன் மொழிந்தபடி தன்னையடையத் தக்க புத்தியைத் தானேதருவன் எம்பெருமான். அதனாலே ஆளவந்தார் भगवन् भक्तिमपि प्रयच्छ मे என்று வேண்டுகிறார். மதுரகவிகளுக்கோ ஆழ்வாரே அதனைத் தந்தார். இன்று தொட்டும் எழுமையும் எம்பிரான், நின்றுதன்புகழ் ஏத்த அருளினான், என்பதால் இது தெரிகிறது.

"வினைவிலக்கில்" பாபங்கள் போக்குதலில் எம்பெருமானைச்சரண் அடைவரேல் அவன் எல்லாப்பாவங்களையும் போக்குவன் . अहं त्वा सर्वपापेभ्यो मोक्षयिष्यामि என்று சரமச்லோகத்தில் அவனே அருளிய வார்த்தை. மதுரகவிகள் தன் விஷயத்தில் நம்மாழ்வாரே எல்லா வினைகளையும் போக்கிறார் என்கிறார். காரிமாறப்பிரான் பண்டைவல்வினை பாற்றியருளினான் என்பது அவர் வாக்கு.

"தகவோக்கத்தில்" தயையின் உயர்வில் மிக்கக்க்ருபை உடையவறாயிருக்கையாலே எம்பெருமான் करुणाजलधिः கருணை என்ற ஒரு குணம் அவனிடம் இல்லாது போனால் மற்ற திருக்கல்யாண குணங்களெல்லாம் தோஷமாகும் என்கிறார் ஸ்வாமி தேசிகன். वृषगिरिगृहमैधिगुणाः बोधबलैश्वर्य वीर्यशक्तिमुखाः। दोषाभवेयुरेते यदिनामदये त्वया विना भूताः என்பது தயாசதக ஸ்ரீஸூக்தி. எம்பெருமான் தனக்கு அருளால் செய்ததைவிட ஆழ்வார் தம்மிடம் காட்டிய கருணை பெரிது என்கிறார். அன்னமதாயிருந்து அருமறை பயந்தான் எம்பெருமான். அவ்வருமறையின் பொருள் விளங்கும்படி செய்தவர் ஆழ்வார். "அருளிணான் அவ்வறுமறையின் பொருள்". அதுமட்டுமோ! இன்னார் இளையார் என்ற வேற்றுமையின்றி அனைவரும் கற்றுத்தெளியும்படி அவ்வருமறையின் பொருளை "அருள் கொண்டு ஆயிரம் இன்தமிழ்" பாடினான். இவ்வுலகில் ஆழ்வாரின் அருளன்றோமிக்கிருப்பது. எம்பெருமான் செய்யும் உபகாரத்தை விட ஆசார்யன் செய்யும் உபகாரம் பெரியது என்பதை அமுதனார் காட்டுகிறார். "சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து முன்னாள் அந்தமுற்று ஆழ்ந்தது கண்டு அவை என்தனக்கு அன்று அருளால் தந்த அரங்கரும் தன் சரண் தந்திலன் தானதுதந்து எந்தையிராமாநுசன் வந்தெடுத்தனன் இன்றென்னையே".

"தத்துவத்தை உணர்த்துதலில்"- தத்துவத்தை உணரும்படி செய்தல்- ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் வேதவிளக்கைக்கொடுத்தான். சாஸ்த்திரங்களை ப்ரவர்த்திப்பித்தான். அவதாரங்கள் செய்து அவற்றின்படி நடந்து காட்டினான். ஸம்ஸாரிகளின் வஞ்சநெஞ்சிலே இவ்வர்த்தங்கள் நிலைக்கவில்லை. உலகோர் அவனை ஸர்வஸ்வாமியாக प्राप्य प्रापक னாக, ரக்ஷகனாகக்காணவில்லை. அவனை ஆச்ரயிக்கவில்லை, अवजानन्तिमां मूढाः मानुषीं तनुमाश्रितम् என்று நெஞ்சாறல் பட்டு தன்னடிச்சோதிக்கு எழுந்தருளினார். மதுரகவிகள் விஷயத்தில் "வேதத்தின் உட்பொருள் நிற்கப்பாடி" அவர் நெஞ்சிலே தத்துவத்தை உணர்த்தினர் ஆழ்வார் . காண இல்லா உலகோர்கள் எல்லாம் அண்ணலிராமாநுசன் வந்து தோன்றியவப்பொழுதே நண்ணருஞானம்தலைக்கொண்டனர்.

"தன்மையாக்கில்" ஸ்வரூபம் விகஸிதமாகும்படி செய்தல். எம்பொருமானிடம் அன்பு பூண்டவர்கள் ஸ்வரூபத்தை உணர்ந்து அவனுக்கு அடிமை செய்வதையே பரமபுருஷார்த்தமாகக்கொள்வர் "தீர்ந்த அடியவர் தம்மைத்திருத்திப் பணிகொள்ளவல்ல ஆர்ந்த புகழ் அச்சுதன்" அவன். செயல் நன்னாக திருத்திப்பணிகொள்வான் என்று ஆழ்வார் தம்மை திருத்திப்பணி கொண்டதை மதுரகவிகள் கொண்டாடுகிறார்.

அமலனாதிபிரானுக்கு முனிவாஹன போகம் என்றொரு வ்யாக்யான மிட்ட ஸ்வாமி தேசிகன் கண்ணிநுண்சிறுத்தாம்பிற்கு ஒரு வ்யாக்யானம் அருளிச்செய்தார்.

அதற்கு மதுரகவி ஹ்ருதயம் என்று பெயர் கூறுவர். அந்தரஹஸ்யத்தைச்சேர்ந்த பாசுரமாயிருக்கலாம் இன்பத்தில் என்ற பாசுரம் என்று நம்ப பெரிதும் இடமுண்டு. தேசிக திவ்ய ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தில் திருக்குடந்தை தேசிகன் श्रीमन्मधुरकव्युक्तिगाथा व्याख्यान दक्षिणः (333) என்றருளிச்செய்கிறார்.

மதுரகவிகள் காட்டிய आचार्यनिष्ठैயாகிற நெறியை - மார்கத்தை பின்புள்ளார் களும்கைக்கொண்டனர். கம்பன் ராமசரிதத்தை தமிழ் பாக்களாலே இயற்றி அக்காலத்தில் ஸ்ரீவைஷ்ணவஸ்தாபகராயிருந்த நாதமுனிகள் தலமையில் தன்நூலை அரங்கேற்றவிரும்பினார். நாதமுனிகள் அப்போது நம் சடகோபனைப்பாடினையோ என்று கேட்டார். கம்பரும் நம்மாழ்வார் விஷயமாக சடகோபரந்தாதி என்றநூலை இயற்றினார். அதன் பாயிரமாக அமைந்த இப்பாட்டு கம்பன் மதுரகவிகளின் மார்கத்தை அநுசரித்தார் என்கிறது. மன்றே புகழும் திருவழுந்தூர் வள்ளல் மாறனை முன்சென்றே மதுரகவிப்பெருமாள் தென்த்தமிழ்த்தொடையில் , ஒன்றே பதிகமுறைத்து அவன்பொன்னடியுற்று நின்றான், என்றே பதிகம் பதிகமாக இசைத்தனனே.

மதுரகவிகளைப்பின்பற்றி அமுதனார் ராமாநுஜநூற்றந்தாதியையும், குமாரவரதாசார்யர் பிள்ளையந்தாதியையும் அருளிச்செய்தார்கள்.

மற்றையாழ்வார்களிலும் பரமவிலக்ஷனர் மதுரகவிகள், எங்கனே என்னில் எம்பெருமானுக்கு அடிமைப்படுவதில் காட்டில் பாகவதர்களுக்கு அடிமைப்படுதலே பரமபுருஷார்த்தம் என்ற ரஹஸ்யார்த்தத்தை நன்குணர்ந்தது மட்டுமன்றி அந்நிலையில் ஊன்றி நின்றமையாலே மற்றய ஆழ்வார்கள் பாகவத சேஷத்வம் பரமபுருஷார்த்தம் என்பதனை உணரவில்லையோ எனில் உணர்ந்திருந்தார்கள். இல்லாது போனால் "அவனடியாரடியேகூடும் இதுவல்லால்" "விடுமாறென்பதன்" என்றும், "தண்சேறை எம்பெருமான் தான் தொழுவர், காண்மின் என் தலை மேலாரே" என்றும், "அடியன் என்றருளி உன் அடியார்க்கு ஆட்படுத்தாய்" என்றும், "அடியார்க்கு என்னை ஆட்படுத்தவிமலன்" என்றும் கூறியிருக்கமாட்டார்கள். அவர்கள் பாசுரங்களில் பகவத் சேஷத்வத்தோடு கலந்துகட்டியாக பாகவதசேஷத்வம் பேசப்பட்டது. ஆனால் கண்ணிநுண்சிறுத்தாம்பில் தீர்மானமாக தம் ஆசார்யனான நம்மாழ்வாரது சரணாரவிந்தமல்லாது வேறொன்றை நினையாது तदेकनिष्ठ ராயிருத்தமை காட்டினார் மதுரகவிகள். ஆகையால் இவர் மற்ற ஆழ்வார்களைக்காட்டிலும் விலக்ஷணர். இதனை நாதமுனிகள் அருளிச்செய்த கண்ணிநுண்சிறுத்தாம்பின் தனியன்கள் விளக்கும். अविदितविषयान्तरः शठारेः, उपनिषदामुपगानमात्रभोगः, अपि च गुणवशात्तदेकशेषी- என்ற விலக்ஷணங்கள்

மதுரகவிகள் நம்மாழ்வாரைத்தவிர வேறொன்றை அறியாதவர். நம்மாழ்வார் அருளிச்செய்த வேதஸாரங்களான திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி திவ்யபிரந்தங்களைப்பாடுவதையே போகமாக உடையவர், நம்மாழ்வாரின் குணங்களிலே ஆழங்கால்பட்டு அவர் ஒருவரையே சேஷியாகக்கொண்டவர் என்பதை காட்டுகிறது. நாதமுனிகளே அருளிச்செய்த தமிழிலேயுள்ள தனியனும் இவ்வர்த்தத்தை த்ருடீகரிக்கிறது. வேறொன்றும் நானறியேன் வேதம் தமிழ் செய்த மாறன் சடகோபன் வண்குருகூர் ஏறு எங்கள் வாழ்வாம் என்றேத்தும் மதுரகவி என்பதால் இது விளங்கும்.

முமுக்ஷுவான ஒருவருக்கு ஆதரிக்கத்தக்கவர் நால்வர். அவர்கள் எமபெருமானும் பிராட்டியும் ஆசார்யர்களும், ஸ்ரீவைஷ்ணவர்களும். கரணகளேபரங்களை இழந்து நின்ற ஜீவனுக்கு தன்கிருபையாலே அவற்றைக்கொடுத்து கரைசேர்ப்பிப்பவராகையாலே எம்பெருமான் ஆதரணீயர். தாயென்றமுறைமையுடைவளாகையாலே வாத்ஸல்யமுடைய பிராட்டி இவன் குற்றங்களை தான் காணாதிருப்பதுமட்டுமின்றி வேண்டுமெனக்கேட்டு மீண்டவை கேட்பித்து ஈண்டிய வினைகள் மாண்டிட முயன்று, தன்னடிசேர்ந்த தமறுனை அணுக எம்பெருமானோடு சேர்ந்து நின்று உபாயமாகவும், உபேயமாகவும், புருஷாகாரமாயும் நிற்பவளாகையாலே ஆதரிக்கத்தக்கவள். ஆசார்யன் இவனுக்கு பகவத்விஷயத்தையும் பிராட்டியின் பெருமையையும் உபதேசித்து, தான் அநுஷ்டித்துக்காட்டி சிஷ்யனை அநுஷ்டிக்கச்செய்து (आचारे स्थापयत्यपि, स्वयमाचरतेयस्तु) பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத்திருத்திப்பணிகொள்வானாகையாலே ஆதரணியர். முதலிலே ருசியை உண்டாக்கி, ஆசார்யனிடம் சேரப்பண்ணி, அவர் உபதேசித்த ஞானத்தை அபிவிருத்தி பண்ணுமவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்கள். இவன் செய்யும் தவறுகளை திருத்தவல்லர். ஆகையால் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஆதரிக்கத்தக்கவர்கள். இவர்கள் நால்வரில் மிகவும் ஆதரிக்கத்தக்கவர் யார் எனில் ஆசார்யனே, ஏனெனில் ஆசார்யனை அடைந்து அவன் அங்கீகாரம் பெற்றபின்பே இவனுக்குத்தாயும்தந்தையுமாய் விளங்கும் திவ்யதம்பதிகளுடையவும் உசாத்துணையான ஸ்ரீவைஷ்ணவர்களுடையவும் வைபவஜ்ஞானமுண்டாகிறது. ஆகையால் ஆசார்யனே மிகவும் ஆதரணீயர். இதனை விளக்கிக்காட்டியவர் மதுரகவிகள்.

தர்மத்தை அநுஷ்டித்துக்காட்டி நிலைநிறுத்த எண்ணிய எம்பெருமான் தயரதன் தன் மகனாய்த்தோன்றினான். பித்ருவசன பரிபாலனம் முதலியவற்றைச்செய்துகாட்டி பெறியோர்களிடம் சிறியோர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறையைக்காட்டினான் இராமபிரான். சேஷிவிஷயத்தில் கைங்கர்யமே சேஷனுக்கு ஸ்வரூபம் என்பதை अहं सर्वं करिष्यामि जाग्रतः स्वपतश्च ते என்று சொன்னபடி அனுஷ்டித்துக்காட்டினான்

இளையபெருமாள். இவருக்கும் பரதனுக்கும் சேஷசேஷிபாவத்தில் வித்தியாசமில்லை ஆயினும் பரதனுடைய சேஷத்வம் விலக்ஷணமானது . இளையபெருமாள் ராமபிரானை वैधर्म्यं "नेह विद्यते" என்று நிர்பந்தித்து தனக்கபிமதமான கைங்கர்யத்தைப்பெற்றார். அவ்வாறின்றி தனக்குத்துன்பத்தையும் அபவாதத்தையும் விளைவிக்கும் என்று தெரிந்தும் சேஷியான ராமன் உகந்த கைங்கர்யம் என்று ராஜ்யபாரத்தை ஏற்று சித்ரகூடத்திலிருந்து திரும்பி வந்த பரதன் அதி விலக்ஷணர். ஆழ்வாரும் "படியில் குணத்து பரதநம்பிக்கு அன்று அடிநிலை ஈந்தான்" என்று கொண்டாடினார் . இப்படிப்பட்ட பரதனைத்தவிர வேறொன்றையறியாதவராய் ஸ்ரீபகவத் சேஷத்வகாஷ்டையான ஸ்ரீபாகவதசேஷத்வகாஷ்டையை அநுஷ்டித்துக் காட்டினார் சத்ருக்னர். நித்ய சத்ருக்னன் என்று வால்மீகியாலே பாராட்டப்பெற்றார். ராமாயண புருஷர்களிலே சத்ருக்னனின் நிலையிலே நின்றவர் மதுரகவிகள் அவரைப்போற்றுவோமாக.

"தேறியாஞானமுடன் திருக்கோளூரில்
சித்திரையில் சித்திரை நாள் வந்து தோன்றி
ஆறிய நல் அன்புடன் குருகூர் நம்பிக்கு
அனவரதம் அந்தரங்க அடிமை செய்து
மாறனை அல்லால் என்றும் மறந்தும் தேவு
மற்றறியேன் எனும் மதுர கவியே - நீமுன்
கூறிய கண்ணிநுண்சிறுத்தாம்பு அதனில் பாட்டு
குலவு பதினொன்றும் எனக்கு உதவுநீயே"

★ ★ ★ ★ ★ ★

பாஞ்சராத்ராகமங்கள்

புரிசை. வீரவல்லி வரததேசிகாசாரியார் (பாண்டிச்சேரி)

நாள்தோறும் நாம் பல பல காரியங்களைச் செய்கிறோம். அவற்றுள் சில நல்லவை, சில கெட்டவை. அவை பயன் தாராமல் இரா. அவற்றை சுவைப்பதே வாழ்க்கை . கெட்ட பயனை அநுபவிக்கும்போது துன்பப்படுகிறோம். நல்ல பயனிலும் துன்பங்கள் கலந்திருக்கின்றன. துன்பம் கலவாத இன்பம் மட்டும் சுவைக்கவிரும்புகிறோம். நம் செயல்கள், எண்ணங்கள் யாவும் கடவுளைப் பற்றியதாகவே இருக்கவிரும்புகிறோம். இதற்கு வழிவகுக்கவே பாஞ்சராத்ராகமங்கள் புறப்பட்டன.

பௌர்ணமி நிலவின் கவர்ச்சியில் இயற்கையின் வனப்பை கண்டுகளிக்க அவா. தனியாக வீட்டுமாடியில் இருந்தும் சுவைக்கலாம். அதனைவிட ஆற்றின் திட்டுகளிலோ, கடற்கரைகளிலோ சென்று நிலவிலும் இயற்கையிலும் நம்மை மறந்து இருப்பது நல்லது. ஆனால் தனியாக இருக்க அச்சம். பலர் கூடி இருக்கவேண்டும். எல்லோரையும் ஓரிடத்தில் எப்படி சேர்ப்பது. அதற்காகவே தெப்போத்சவம், மாசிமகம், சித்ராபௌர்ணமி, இவைபோன்ற விழாக்களை ஆகமங்கள் வரையறுத்தன. கடவுள் பொது. அவருடன் எல்லோரும் ஆற்றின் இடையிலோ, கடற்கரைகளிலோ, ஒன்று சேருவர்.

உலக இன்பங்களுடன் பகவதின்பத்தையும் அநுபவிக்கவே திருவிழாக்கள். தனியான உலக இன்பம் தீங்குவிளைக்கும். பகவானுடன் சேர்ந்து அநுபவிக்கும்போது உணர்ச்சிகள் கட்டுப்பாட்டுக்குள் அடங்கும். நீரில் நீந்த மிதவையை கொடுப்பதுபோல் பேரின்பக்கடலில் நீராட உத்சவங்கள் என்னும் மிதவையினை ஆகமங்கள் கொடுத்திருக்கின்றன.

அழகியபூக்களிலும், அவற்றின்மணங்களிலும் இன்பம் வேண்டுமா? தவனோத்சவம், வசந்தோத்சவம் முதலியவிழாக்கள்.

பலவகையான நகைகளின் அழகைக்காண விழைகிறோம். மக்களுக்கு அணிவித்தும் இன்புறலாம். பகவானுக்கு அணிவித்து மகிழ்ந்தால் தீய உணர்வுகள் ஒழிந்து தூய இன்பம் திளைக்கும்.

சங்கீதங்களையும், நடனங்களையும் கோவில்களில் காண்பதுதான் கண்படைத்த பயனாகும்.

காலையில் விழித்ததுமுதல் இரவில் தூங்கும் வரை ஒவ்வொரு செயலும் கடவுள் மயமாக இருப்பதற்கு நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்ஸரோத்ஸவங்கட்கு ஆண்டுவிழா திட்டம் தீட்டுகிறது ஆகமம்.

உபநிடதங்கள் மனிதனுடைய வாழ்க்கை ப்ரஹ்மமயமாக இருக்கவேண்டும் எனக் கூறி வாளா இருந்துவிட்டன. எப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் ப்ரஹ்மமயமாக (கடவுள்மயமாக) அமைவது என்பதற்கு வழிமுறைகளைவகுக்கின்றன ஆகமங்கள். வேதங்கள் கொள்கையை வகுத்தன. ஆகமங்கள் அவற்றிற்குச் செயல்வடிவம் தந்தன.

நாள் முழுவதையும் கடவுள்மயமாக்குவதற்கு நாளினையே ஐந்தாக பிரிக்கின்றன ஆகமங்கள். அபிகமநம், உபாதாநம். இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்பவையே அவை.

1. அபிகமநம்- காலைக்கடன்களை முடித்துக்கொண்டு, கௌஸல்யா ஸுப்ரஜாராம என்று இறைவனது அருட்பார்வை நம்மீதுபடவேண்டிக்கொண்டு, நம்மையும், நம்செயல்களையும், அவற்றின் விளைவுகளையும் அவனிடம் ஒப்படைப்பதான உறுதியை அறிவிப்பதே அபிகமநகாலக்கடமை. இதற்காக ஒதுக்கப்பட்ட நேரம் காலை 8 அல்லது 8.30 மணி அளவு.

2. உபாதானம் - பகவானது ஆராதனத்திற்குத் தேவையான பூ, துளசி, முதலிய பொருள்களை ஒன்று சேர்ப்பது முதலியகாரியங்களைச்செய்யவேண்டும். இக்காலப்பிரிவில். காலை 8.30 முதல் 11.30 வரையிலான நேரத்தை இதற்காகச் செலவிடலாம். வேதம் ஓதலும், ஓதுவித்தலும் இதிலடங்கும்.

3. இஜ்யை- காலை 11.30 முதல் 1.30 அல்லது 2மணி வரையிலான நேரம். பகவதாராதநமும், போஜனமும். பகல் உணவு இதில் இடம் பெறும்.

4. ஸ்வாத்யாயம்- (பிற்பகல் 2 முதல் இரவு தொடங்கும் வரை உள்ள நேரம்) இதிஹாஸபுராணங்கள் ஆழ்வார் அருளிச்செயல்கள், அவற்றின் உரைகள், இரகசிய க்ரந்தங்கள் ஆகியவற்றின் ஆராய்ச்சியில் இந்நேரத்தைப்போக்கலாம்.

5. யோகம்- இரவில் உறங்குவதை யோகம் என்கிறது பாஞ்சராத்ரம். யோகம்- ஒன்றுசேர்தல் ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஒன்றுசேர்வதே யோகமெனப்படும். இதயத்தாமரையில் பகவான் கட்டைவிரல் அளவில் இருப்பதாகவும், அவனுடன் ஜீவாத்மா ஒன்றுபட்டுவிட்டதாகவும் எண்ணிக்கொண்டிருப்பதே யோகமாகும். தூங்கும்வரை இவ்வெண்ணம் மாறாமலிருக்கவேண்டும்.

மறுநாள் எழுந்திருக்கும்போது ஹரிஹரி என்று 7 முறை சொல்லிக்கொண்டே கண்விழிக்கவேண்டும்.

வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரி என்ற பேர் அரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்து- என்றாள் ஆண்டாளும்.

ஸர்வம் ப்ரஹ்மமயம் என்ற உபநிடதக்கொள்கைக்கு ஆகமங்கள் கொடுத்த வடிவம் இஃதே. இஃதே ஆத்மாவை தூக்கும் வழி. தூங்குவதால் உடல் தூக்கப்படலாம். உடலை மட்டுமன்றி ஆத்மாவையும் தூக்கும் முறையினை ஆகமங்கள் கற்றுக்கொடுக்கின்றன. பாஞ்சராத்ரத்தை உண்மை நூலாகக் கருதாத ஸ்ரீசங்கரரும் அவற்றில் குறிப்பிடப்பட்ட இவ்வைந்து காலப்பிரிவை (பஞ்சகால ப்ரக்ரியை) மறுக்கவில்லை.

பாஞ்சராத்ரத்தின் சிறப்பைக் கருதியே இதனை பாஞ்சராத்ரம் என்று கூறாமல் ஸ்ரீபாஞ்சராத்ரம் என்றே பெயரிட்டு எழுதுகிறார் தேசிகர் ரஹஸ்யத்ரயஸாரத்தில் சரமச்லோகாதிகாரத்தில். பாஞ்சராத்ரரக்ஷை என்று ஒரு க்ரந்தமும் அருளிச் செய்திருக்கிறார்.

பலபெயர்களும் பொருளும்

பகவச்சாஸ்த்ரம், தந்த்ரம், ஸித்தாந்தம், ஆகமம் எனும் பலபெயர்களால் பாஞ்சராத்ரம் சுட்டப்படுகிறது.

பகவச்சாஸ்த்ரம்

पञ्चरात्रस्य कृत्स्नस्य वक्ता नारायणः स्वयम्। (பஞ்சராத்ரஸ்ய க்ருத்ஸ்னஸ்ய வக்தா நாராயணः ஸ்வயம்) என்று பஞ்சராத்ரத்தை இயற்றியவர் நாராயணனே என்று மஹாபாரதம் கூறுகிறது.

प्रवक्ता छन्दसां वक्ता पाञ्चरात्रस्य यः स्वयम्। (ப்ரவக்தா சந்தஸாம் வக்தா பாஞ்சராத்ரஸ்ய யஸ்ஸ்வயம்) என்று தேசிகரும் பாஞ்சராத்ரம் அருளியவர் பகவானே என்கிறார். அதனால் பாஞ்சராத்ரம் பகவச்சாஸ்த்ரம் என்ப்படுகிறது. எல்லா ஆகமங்களும் பகவானால் அருளிச் செய்யப்படாதன. ஆயினும் பகவானால் அருளிச்செய்யப்பட்ட சில ஆகமங்களின் விரிவே மற்ற ஆகமங்கள் ஆனபடியாலும், எல்லா ஆகமங்களும் பகவதாராதனத்தையே பேசுவதாலும் பகவச்சாஸ்த்ரம் எனும் பெயர் பொருந்தும்.

தந்த்ரம்

இந்த ஆகமங்கள் வழியே பகவதாராதனம் செய்பவன் ஸம்ஸாரத்திலிருந்து காப்பாற்றப்படுவதால் **तन्त्रम्** தந்த்ரம் என்ற பெயர். **तं** =தம் அவனை **त्र** =காப்பாற்றுவது

तन्त्रेण तेन मार्गेण यो मां नित्यं समर्चयेत् ।
तं त्रायतीति संसारात् तन्त्रमित्यभिधीयते॥ (विष्णुतन्त्रम्)

தந்த்ரேண தேன மார்கேண யோ மாம் நித்யம் ஸமர்சயேத்।
தம் த்ராயதீதி ஸம்ஸாராத் தந்த்ரமித்யபிதீயதே।।

ஸித்தாந்தம்

இப்பாஞ்சராத்ரத்திற்கு ஸித்தாந்தம் என்கிற பெயரும் உண்டு என்று பௌஷ்கரஸம்ஹிதையிலிருந்து புலப்படுகிறது.

एवं नानागमानाञ्च सामान्यं विद्धि सर्वदा।
नामद्वयं वा सिद्धान्तपञ्चरात्रेति पौष्कर॥

ஏவம் நாநாகமானாஞ்ச ஸாமான்யம் வித்தி ஸர்வதா।
நாமத்வயம் வா ஸித்தாந்தபஞ்சராத்ரேதி பௌஷ்கர।।

கோடிப்பிறவிகளில் ஸித்திபெற்ற ஸித்தர்களுக்கும், அவர்களின் பிறவிக்கு முடிவு (அந்தம்) பஞ்சராத்ராகமவழிபாட்டால் ஏற்படுவதால் இதற்கு ஸித்தாந்தம் என்று பெயர்.

ये जन्मकोटिभिः सिद्धाः तेषामन्तोऽत्र जन्मनः।
यस्मात् तस्मात् विवेदैष सिद्धान्ताख्यो यथार्थतः॥ (पारमेश्वर-१९.५४४)

யே ஜன்மகோடிபிः ஸித்தாः தேஷாமந்தோத்ர ஜன்மனः।
யஸ்மாத் தஸ்மாத் விவேதைஷ ஸித்தாந்தாக்யோ யதார்ததः।।

ஆகமம்

ஆசார்யசிஷ்யபரம்பரையில் அத்யயனம் செய்யப்பட்டு வருவது ஆகமம். இது வேதத்திற்கும் பொது. ஆனாலும் பாஞ்சராத்ரத்திற்கு இடுகுறியாக (யோகரூடம்) வழங்கப்படுகிறது. பாஞ்சராத்ரத்தில் ஆகம, மந்த்ர, தந்த்ர, தந்த்ராந்தர என்ற நான்கு ஸித்தாந்தங்கள் உண்டு. அவற்றுள் ஒன்று ஆகமம். இருப்பினும் நான்கினையும் ஆகமம் என்லாம்.

ஸாத்வதம்

सन्तः (ஸந்தः)=ஞானிகள் (எல்லாமறிந்தவர்)

तद्वान् (தத்வாந்) सत्वान् (ஸத்வாந்) = பகவான்

तदीयम् (ததீயம்) सात्वतम् (ஸாத்வதம்) = பகவானைச் சேர்ந்தது..

பாஞ்சராத்ரம்
பாஞ்சராத்ரசொற்பொருள்

முன்கூறிய பெயர்களை விட 'பாஞ்சராத்ரம்" என்ற பெயரே வழக்கில் இருக்கிறது. இப்பெயரின் பொருளையும் விவரிக்கிறோம்.

स एतं पुरुषमेधं पञ्चरात्रं यज्ञक्रतुमपश्यत् (ஸ ஏதம் புருஷமேதம் பஞ்சராத்ரம் யஜ்ஞக்ரதுமபச்யத்) என்று சதபத ப்ராஹ்மணத்தில் (13.6.1) ஒரு சொற்றொடர் காணப்படுகிறது. அந்த பஞ்சராத்ரயஜ்ஞமுறையினைப் பின்பற்றிப் பாஞ்சராத்ர ஆகமங்கள் எழுதப்பட்டிருப்பதால் பாஞ்சராத்ரம் என்று பெயர் பெற்றது என்ற ஊகம் உண்டு. ஆனால் சதபதப்ராம்ஹணத்தில் சொல்லப்பட்ட பாஞ்சராத்ர யஜ்ஞமுறை யாது என்று அறிந்தால்தான் அதற்கும் ஆகமங்கட்கும் ஒற்றுமையும் அதனடிப்படையில் பெயர்பொருத்தமும் விளங்கும். அதுவரை இக்கொள்கையினை ஆராய்ச்சிப் பகுதியில்தான் சேர்க்கலாம்.

த்விராத்ரம், த்ரிராத்ரம், சதூராத்ரம் போல் பாஞ்சராத்ரமும் ஒரு யஞ்ஜம். சதபதப்ராம்ஹணத்தில் கூறப்பட்ட பாஞ்சராத்ரக் குறிப்பு

पुरुषो ह वै नारायणोऽकामयत, अतितिष्ठेयं सर्वाणि भूतानि अहमेवेदं स्यामिति। स एतं पुरुषमेधं पञ्चरात्रं यज्ञक्रतुमपश्यत्। तमाहरत्। तेनेष्ट्वाऽत्यतिष्ठत् सर्वाणि भूतानि। इदं सर्वमभवत्। अतितिष्ठति सर्वाणि भूतानि, इदं सर्वं भवति, य एवं विद्वान् पुरुषमेधेन यजर्त, यो वा एतदेवं वेद।

இங்கு பஞ்சராத்ரமான புருஷமேதயஞ்ஜத்தை செய்ய எல்லோரையும் தூண்ட நாராயணனே இந்த யஜ்ஞத்தை செய்ததாகப் புகழப்பட்டிருக்கிறது. இந்த யாகத்தின் பலன் எல்லாமாகுதல். அஃதாவது எல்லா பொருளிலும் தர்மபூதஞானத்தால் பரந்து கிடத்தல். ஏறக்குறைய பகவானைப் போல் ஸர்வஞ்ஜதை எனலாம். அது மோக்ஷமோ அது போன்ற வேறு பலனோ இருக்கலாம். த்விராத்ர, த்ரிராத்ர, சதூராத்ர யாகங்களில் இவ்வாறான பலனைக் கூறாமல் பஞ்சராத்ரயாகத்தில் மட்டும் இவ்வாறான பலன்

சொல்லப்பட்டிருக்கிறது. பஞ்சராத்ர ஆகமங்களின் பலனும் இவ்வாறான மோக்ஷபலனே. இது கொண்டு பஞ்சராத்ரயாகத்தின் பெயர் ஆகமங்களுக்கும் ஏற்பட்டிருக்கலாம்.

பலனில் ஒற்றுமை இருப்பினும் பஞ்சராத்ரயாகம் செய்யும் முறையிலும், பஞ்சராத்ர ஆகமபூஜாவிதிகளிலும் ஒற்றுமையை விவரிக்காமல் பெயர்க்காரணத்தை ஊகிப்பது நன்று அன்று. அதனால் யாகத்திற்கு பாஞ்சராத்ரம் என்ற பெயர் ஏற்பட்டது என்பது இன்னும் ஆராயப்படவேண்டிய குறிப்பே.

2. மண், நீர் முதலிய ஐந்து பூதங்களும் அவற்றின் பண்புகளுமாகிய ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் (சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்த) என்னும் ஐந்தும் மனிதனை அறியாமையில் மூழ்க்குவதால் ஐந்து ராத்ரிகள். அந்த இரவைப் (ராத்ரியைப்) போக்கும் ஒளி போன்றதால் பஞ்சராத்ரம் எனப்பெயர் பெற்றது. இவ்வாறு பரமஸம்ஹிதையில் (1-39,40) பகரப்பட்டிருக்கிறது.

3. வேதங்கள் நான்கு. இதிஹாஸ புராணங்களாகிய உபப்ரும்ஹணம் ஒன்று. ஆகிய இவ்வைந்தும் ராத்ரியைப் போல் உண்மையை மறைக்கின்றன. அவற்றால் பரதத்துவத்தையும், பரமஹிதத்தையும் கண்டறிவது மிகவும் கடினம். ஆகமவிளக்கின் முன் அவை ஐந்தும் ராத்ரிகள். அதனால் பஞ்சராத்ரம் எனப்பெயரென்று பாத்மஸம்ஹிதை கூறுகிறது.

पञ्चेतराणि शास्त्राणि रात्रीयन्ते महान्त्यपि।
तत्सन्निधौ समाख्याऽसौ तेन लोके प्रवर्तते॥ (पाद्मसंहिता. ज्ञा – १)

பஞ்சேதராணி சாஸ்த்ராணி ராத்ரீயந்தே மஹாந்த்யபி।
தத்ஸந்நிதௌ ஸமாக்யாஸௌ தேந லோகே ப்ரவர்ததே॥

வேதங்களின் விளக்கமும் இதிஹாஸபுராணங்களின் விளக்கங்களும் இரவு போன்றனவா என்னும் ஐயம் எழலாம்.

साङ्गेषु वेदेशु निष्ठामलभमानः शाण्डिल्यः पञ्चरात्रमधीतवान्। (ஆறு அங்கங்களுடன் கூடிய வேதங்களில் உறுதியை பெறாமல் சாண்டில்யர் பாஞ்சராத்ரத்தை அத்யயனம் செய்தார்) என்று கூறப்பட்டிருக்கிறது. இதனால் வேத இதிஹாஸங்களிலிருந்து உண்மையைத் தேடுதல் இரவில் பொருளைத் தேடுதல் போன்றது.

இதனை வேதங்களைக் குறை கூறுவதாகக் கொள்ளக்கூடாது. பஞ்சராத்ரத்தை புகழ்வதிலேயே உட்கருத்து எனக் கொள்ளவேண்டும். இதனை न हि निन्दान्यायम् (ந ஹி நிந்தா ந்யாயம்) என்பர். வேதமுறைகளை விட ஆகமமுறைகளே பொதுமக்களைக் கவரக்கூடியன என்பது உட்கருத்து.

இரவையும் பகலையும் சேர்த்து द्व्यहम्, त्र्यहम् (த்வ்யஹம், த்ர்யஹம்) என்று குறிப்பிடுவதுண்டு. இங்கு அஹ என்ற சொல்லுக்கு இரவு பகல் இரண்டும் சேர்ந்த ஒருநாள் என்பது பொருள். அம்மாதிரி ராத்ரி என்ற சொல்லும் இரவு பகல் இரண்டையம் குறிக்கலாம். இந்த பாஞ்சராத்ரசாஸ்த்ரம் ஐந்து நாட்களில் ஐந்து புருஷர்களால் அத்யயனம் செய்யப்பட்டது. அதனால் இதற்கு பாஞ்சராத்ரம் எனப்பெயர் எனவும் கூறுவர்.

சாண்டில்யர், ஔபகாயனர், மௌஞ்சாயனர், கௌசிகர், பாரத்வாஜர் என்னும் யோகிகள் ஐவருக்கும் தனித்தனியே பகலிலும் இரவிலும் இச்சாஸ்த்ரத்தைக் கற்பித்தார் பகவான். அதனால் இதற்குப் பாஞ்சராத்ரம் எனப்பெயர் என்பர்.

पञ्चायुधांशास्ते पञ्च शाण्डिल्यौपगायनः।
मौञ्जायनः कौशिकश्च भारद्वाजश्च यौगिनः।

.....

पञ्चापि पृथगेकैकं दिवारात्रं जगत्प्रभुः।
अध्यापयामास यतः पञ्चरात्रमितीर्यते॥ (ईश्वरसंहिता)

பஞ்சாயுதாம்சாஸ்தே பஞ்ச சாண்டில்ய: சௌபகாயன:
மௌஞ்சாயன கௌசிகஸ்ச பாரத்வாஜ ச யோகின:

.....

பஞ்சாபி ப்ருதகேகைகம் திவாராத்ரம் ஜகத்ப்ரபு:
அத்யாபயாமாஸ யத: பஞ்சராத்ரமிதீர்யதே (ஈச்வரஸம்ஹிதை)

5. பகலையும் இரவையும் சேர்த்து ராத்ரி என்று கூறுவது போல் நாளின் சிறு சிறு பிரிவுகளையும் ராத்ரி எனக்கூறலாம். ஒருநாளை ஐந்து காலமாகப் பிரித்து (அபிகமன, உபாதான, இஜ்யா, ஸ்வாத்யாய, யோக) அவ்வக்காலங்களில் செய்ய வேண்டிய பகவதாராதனமுறையினை வகுப்பதால் பாஞ்சராத்ரம் எனப்பெயர் பெற்றது எனக் கூறலாம். இப்பொழுது ராத்ரி = நாளின் உட்பிரிவு.

6. சப்த, ஸ்பர்ச, ரூப, ரஸ, கந்த (ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம்) என்ற ஐவகை அறியாமையையும் அகற்றி, இந்த ஐவகை உணர்வுகளையும் பகவானைப்

பற்றியவையாக மாற்றுவது எப்படி என உரைப்பதால் பாஞ்சராத்ரம் எனப் பெயர் எனவும் கூறலாம். இப்பொழுது 'ராத்ர' என்ற சொல்லுக்கு ஞானம் (அறிவு) என்று பொருள்.

रात्रञ्च ज्ञानवचनं ज्ञानं पञ्चविधं स्मृतम्।
तेनेदं पञ्चरात्रं हि प्रवदन्ति मनीषिणः॥ (नारदपञ्चरात्रम्)

ராத்ரஞ்ச ஞானவசனம் ஞானம் பஞ்சவிதம் ஸ்ம்ருதம்।
தேநேதம் பஞ்சராத்ரம் ஹி ப்ரவதந்தி மநீஷிணः॥

7. பர (வைகுண்ட நிலை) வ்யூஹ (வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்த நிலை) விபவ (அவதாரங்கள்), அந்தர்யாமி (எங்கும் பரவி இருக்கும் நிலை) அர்ச்சை. (ஒருவடிவத்திலிருத்தல்) இவ்வாறு பகவானது வடிவத்தை ஐந்தாகப் பிரித்து விவரிப்பதால் பாஞ்சராத்ரம் எனப்பெயர் எனவும் கூறலாம்.

இங்கு ராத்ர என்ற சொல் விபாகம் (பிரிவு) எனப்பொருள்படும். ஸனத்குமாரஸம்ஹிதையில் அந்த ஸம்ஹிதையின் பிரிவுகள் ராத்ரம் என்றே பெயரிடப்பட்டிருக்கின்றன. ப்ரம்ஹராத்ரம், இந்த்ரராத்ரம், எனப்பிரிவுகட்குப் பெயர் தரப்பட்டிருக்கின்றன.

பாத்மஸம்ஹிதையில் ஞானபாதம், யோகபாதம், க்ரியாபதம் சர்யாபாதம் எனப்பிரிவுகள் பாதம் எனப்படுகின்றன. பாரமேச்வரஸம்ஹிதையில் பிரிவுகள் காண்டம் எனப்படுகின்றன. அதே போல் பஞ்சராத்ரம் என்பதில் ராத்ர என்பது பிரிவு என்று பொருள்படும்.

8. ஒருசமயம் ஸங்கர்ஷணரால் ப்ரசுரிக்கப்பட்ட (அறிவிக்கப்பட்ட) ஏகாயனசாகை மறைந்துவிட்டது. அப்பொழுது வாச்சாயநர் அல்லது அபாந்தரதபா என்னும் ரிஷி வேதங்களை உலகில் பரவச்செய்தார். கபிலர் சாங்கியத்தையும், ஹிரண்யகர்ப்பர் யோகத்தையும் பசுபதி பாசுபதத்தையும் பரவச்செய்தனர். பிறகு விஷ்ணு வேதங்களின் சாற்றினை எடுத்து பரவ்யூஹவிபவஹார்தஅர்ச்சை என்னும் ஐந்து வடிவங்களை விரித்து உரைக்கும் பாஞ்சராத்ரஆகமத்தினை உருவாக்கினர் என அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஸாங்க்யம், யோகம், பாசுபதம், வேதம், ஏகாயனசாகை ஆகிய ஐந்தும் ஆகமங்களுக்கு முன் இரவுபோல் ஒளிமங்கி இருக்கிறது என்னும் பொருளும் பாஞ்சராத்ரம் என்ற பெயருக்கு பொருந்தும். பாஞ்சராத்ர ஆகமங்கள் இல்லை எனின் ஏகாயனசாகையின் பொருளும் விளங்காது என்பது இதனால் தெரிகிறது.

9. பாஞ்சராத்ர ஆகமங்களில் ஆகமம், மந்த்ரம், தந்த்ரம், தந்த்ராந்தரம் என்ற நான்கு ஸித்தாந்தங்கள் உண்டு. இவற்றைத் தவிர தீக்ஷை பெற்றுச் செய்யப்படும் பகவதாராதனமுறையும் கூறப்பட்டிருக்கிறது. அதனால் பாஞ்சராத்ரம் எனப்பெயர்.

ஆகப் பாஞ்சராத்ரம் என்ற பெயரில் ராத்ரி என்னும் சொல் இரவு, இரவும் பகலும் சேர்ந்த நாள், நாளின் உட்பிரிவு, ஞானம், நூலின் பகுதி என்ற பல பொருள்களில் விளக்கப்பட்டிருக்கிறது.

நவரத்னம் - பஞ்சரத்னம் - ரத்னத்ரயம்

ஆகமங்களில் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றை நவரத்னம், பஞ்சரத்நம், ரத்னத்ரயம் என வழங்குகின்றனர்.

பாத்மம் - விஷ்ணு தந்த்ரம் - காபிஞ்சலம் - ப்ரம்ஹ ஸம்ஹிதை - மார்கண்டேயஸம்ஹிதை - பரமஸம்ஹிதை- பாரத்வாஜம்- நாராயணதந்த்ரம்- பாரமேஸ்வரம் எனும் ஒன்பதும் நவரத்னங்கள் என்று விஷ்ணு தந்த்ரத்தில் ப்ரஹ்மோத்ஸவாத்யாயத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

பாத்மத்தில் சர்யாபாதத்தில், பாத்மம், ஸாநத்குமாரம், பரமஸம்ஹிதை, பத்மோத்பவம், மாஹேந்த்ரம் எனும் ஐந்தும் பஞ்சரத்னங்கள் என விவரிக்கப்பட்டிருக்கின்றன.

ஸாத்வதம், பௌஷ்கரம், ஜயாக்யம் என்ற மூன்று தந்திரங்களே பகவானால் நேர்முகமாகச் சொல்லப்பட்டவை என்பது நம்முடைய ஆசார்யர்களது முடிவு.

இவற்றைத் தவிர ஸனத்குமாரஸம்ஹிதை, விஷ்வக்ஸேனஸம்ஹிதை, ஸாத்யகிதந்த்ரம், அஹிர்புத்ந்யஸம்ஹிதை முதலியவை ப்ரபன்ன பாரிஜாதத்தில் ஸ்ரீவாத்ஸ்யவரதாசார்யாராலும், பாஞ்சராத்ரரக்ஷையில் தேசிகராலும் மேற்கோளாக எடுத்து ஆளப்பட்டிருக்கின்றன. பரம ஸம்ஹிதை ஸ்ரீபாஷ்யத்தில் பாஞ்சராத்ராதிகரணத்தில் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

இக்கட்டுரையில் முதல் பதினைந்து பாராக்களைத் தவிர மற்றவை ஸ்ரீ உ.வே.உத்தமூர் ஸ்வாமி அருளிய ஸ்ரீபாஞ்சராத்ரார்க்ஷாபூமிகையின் தமிழாக்கமே.

உபநிஷத்தும் ஆகமங்களும்

இனி உபநிஷத்துக்களில் இருக்கும் ப்ரம்ஹவித்யைகளின் த்யானமுறையினையும் ஆகமங்களில் கூறிய த்யானமுறையினையும் பற்றிச் சிறிது விளக்குவோம்.

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது உபநிஷத்துக்கள் பகவத்குணங்களை த்யானம் செய்யவேண்டும் என்றும் ஆகமங்கள் வ்யூஹம், விபவம் முதலான திருமேனிகளைத் த்யானம் செய்யவேண்டும் என்றும் விவரிப்பதாகத் தோன்றுகிறது.

ஸத்வித்யை, தஹரவித்யை, பூமவித்யை முதலியவற்றில் குணங்களின் உபாஸனமே சொல்லப்பட்டதாகத் தெரிகிறது. அவ்வித்யைகளில் திருமேனியின் தொடர்பு எவ்வகையானது என்பது புலப்படவில்லை.

ஸர்வகாரணத்வம் (யாவற்றையும் படைத்தல், காத்தல் முதலியன) என்பது பகவானுடைய கல்யாணகுணங்களில் ஒன்று. ஸத்யத்வம், ஞானம், அநந்தத்வம் போல் ஸர்வகாரணத்வம் என்னும் குணமும் எல்லாவித்யைகளிலும் த்யானம் செய்யவேண்டிய குணம். இக்குணத்தை த்யானம் செய்யும் போது திருமேனியின் த்யானம் கட்டாயமா என்பதும் புலப்படவில்லை. திருமேனியின் த்யானமும் தேவை என்றால் திருமேனி குடத்திற்கு மண் போலுபாதான காரணமா அல்லது தண்டம், சக்ரம் போல் நிமித்த காரணமா. திருமேனியை உபாதானகாரணமாக ஒப்புக்கொண்டதாகத் தெரியவில்லை. திருமேனி நிமித்த காரணம் என்றால் அது ஏன் நிமித்த காரணமாக இருக்க வேண்டும். திருமேனியில்லாமல் ஸங்கல்பத்தினால் மட்டும் பகவான் உலகைப் படைக்கமாட்டானா? பகவான் குயவனைப் போன்றவனா? இவ்வாறெல்லாம் பல ஐயங்கள் உபநிஷத்தில் கூறப்பட்ட ப்ரம்ஹவித்யைகளில் ஏற்படலாம்.

ஆனால் பகவான் அநிருத்த திருமேனியுடன் தான் உலகைப் படைப்பதாக பாஞ்சராத்ரம் பகர்கிறது. இவ்வாறு காத்தல் அழித்தல் தொழில்களுக்கும் ப்ரத்யும்ன, ஸங்கர்ஷணத் திருமேனிகள் சொல்லப் பட்டிருக்கின்றன.

ஒன்று மட்டும் உறுதி. பகவானை எந்த குணங்களுடன் த்யானம் செய்கிறோமோ அக்குணங்களே ஆன்மாவில் பதிந்து உடலைச் செயல்படுத்தும். இதனைத் தர்க்கசாஸ்த்ரிகள் ஞானம், இச்சை, க்ருதி (அறிவு, விருப்பம், செயல்) என்பர். ஒன்று செய்ய வேண்டுமானால் அதனைப் பற்றிய அறிவும், அதனைச் செய்யவேண்டும் என்ற விருப்பமும் தேவை. நாம் எப்படி உலகில் வாழவேண்டுமோ எப்படி ஆக வேண்டுமோ அந்த முறையினை முதலில் அறிந்து கொள்ள வேண்டும் இப்படி இருக்க ஆசையும் வேண்டும்.

तत् प्रतिष्ठेत्युपासीत। प्रतिष्ठावान् भवति। तन्मह इत्युपासीत। महान् भवति। तन्मन इत्युपासीत। मानवान् भवति। तन्नम इत्युपासीत। नम्यन्तेऽस्मै कामाः। तद्ब्रह्मेत्युपासीत। ब्रह्मवान्भवति। तद्ब्रह्मणः परिमर इत्युपासीत। पर्येणं म्रियन्ते द्विषन्तः सपत्नाः। परि येऽप्रियाः भ्रातृव्याः॥ (तैत्तरीयोपनिषत्)

லக்ஷ்மீபதித்வம், (இலக்குமிக்கு கணவனாயிருத்தல்) முதலிய சிலகுணங்கள் தவிர மற்ற குணங்கள் ஆத்மாவிற்கு ஏற்படவேண்டுமாயின் அந்த அந்த குணங்களுடன் பகவானைத் த்யானம் செய்யவேண்டும் என்று முன்கூறிய உபநிஷத்தின் போக்கிலிருந்தும் தத்க்ரது ந்யாயத்திலிருந்தும் குணோபஸம்ஹாரபாதம்

என்னும் பெயரிலிருந்தும் ஊஹிக்கவேண்டியிருக்கிறது.

ஆனால் பாஞ்சராத்ராகமங்கள் வாஸுதேவ, ஸங்கர்ஷண முதலிய விக்ரஹத்யானத்தையே அழுத்தமாகக் கூறுகின்றன. இந்த ஆகமங்களுக்கு பகவத்குணத்யானத்தில் நோக்கம் இல்லையா? இருக்குமாயின் விக்ரஹத்யானத்தை முக்கியமாக விவரிப்பதில் உட்கருத்து யாது? உபநிஷத்த்யானங்களையும், பாஞ்சராத்ரத்யானங்களையும் ஒற்றுமைப் படுத்துவது எவ்வாறு? இப்பொருள்கள் பற்றி ஆழ்ந்து சிந்திப்போம்.

வாஸுதேவ ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்த வடிவங்களுடனேயே பகவான் உலகைப் படைத்து காத்து அழிக்கிறார் என்பது பாஞ்சராத்ரத்தின் கொள்கை என்பதனை ஸ்ரீபராசரபட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் அருளிச் செய்கிறார்.

षाड्गुण्याद्वासुदेवः पर इति स भवान् मुक्तभोग्यो बलाढ्यात्
बोधात्सङ्कर्षणस्त्वं हरसि वितनुषे शास्त्रं ऐश्वर्यवीर्यात्।
प्रद्युम्नः सर्गधर्मौ नयसि च भगवन् शक्तितेजोऽनिरुद्धे
विभ्राणः पासि तत्त्वं गमयसि च तथा व्यूह्य रङ्गाधिराज॥

ஆகமங்களில் இதன் விளக்கம்
விசாகயூபம்

ஸ்ரீவைகுண்டத்தில் ரஜஸ்தமஸ் பண்புகள் கலக்காத ஸத்த்வகுணமே வடிவான விசாகம் என்னும் தூண் ஒன்று உண்டு. இதற்கு கைகால்கள் இல்லை. வைகுண்டத்தில் இருக்கும் பகவானுடைய வடிவங்களுள் இதுவும் ஒன்று.

இத்தூணில் நான்கு பகுதிகள் உள. அவற்றிற்கு ஜாக்ரத், ஸ்வப்ன, ஸுஷுப்தி துரீயம் என்று பெயர். தூணின் அடியிலிருந்து சிறிது மேலே இருக்கும் பகுதிக்கு ஜாக்ரத் (விழித்திருத்தல்) என்று பெயர். அதற்கு சிறிது மேல் இருக்கும் பகுதிக்கு ஸ்வப்னம் (கனவு) என்று பெயர். அதற்கு கொஞ்சம் மேலே இருக்கும் பகுதிக்கு ஸுஷுப்தி (தூக்கம்) என்று பெயர். அதற்கும் மேலே துரீயம் (நான்காவது) என்னும் பகுதி இருக்கிறது.

1. ஜாக்ரத் (விழிப்புப்) பகுதி

விசாகத்தூணின் கீழ்ப்பகுதியில் இருக்கும் இடம் இது. இப்பகுதிக்கு ஜாக்ரத் வ்யூஹம் என்று பெயர். இதன் கிழக்கில் வாஸுதேவரும், தெற்கில் ஸங்கர்ஷணரும்,

மேற்கில் ப்ரத்யும்னரும் வடக்கில் அநிருத்தரும் மரத்தின் நான்கு கிளைகள் போலிருக்கின்றனர். படைத்தல், காத்தல், அழித்தல், இவர்களின் தொழில்கள். நல்ல சிவப்பு, நல்ல கறுப்பு, நல்ல வெளுப்பு ஆகியவை இவர்களுடைய நிறங்கள். ஒவ்வொருவருக்கும் சங்கு சக்ரம், முதலிய ஆயுதங்கள் உண்டு. குடை, கொடி, சாமரம், திருச்சின்னம், கோலவிளக்கு, விதானம் முதலிய பிருதுகளும் உண்டு.

2. ஸ்வப்னபகுதி (கனா)

அடியிலிருக்கும் விழிப்புப் பகுதிக்கு மேலே ஸ்வப்னப் பகுதி இருக்கிறது. இங்குள்ள நான்கு வடிவங்களும் ஸ்வப்னவாஸுதேவர் , ஸ்வப்னஸங்கர்ஷணர், ஸ்வப்னப்ரத்யும்னர், ஸ்வப்ன அநிருத்தர் என்றே பெயர் பெற்றிருக்கின்றனர். இவை நான்கு திசைகளிலும் நான்கு கிளைகள் போலிருக்கின்றன. இவ்வடிவங்கள் படைப்பு முதலிய தொழில்களைச் செய்வதில்லை. ஆனால் செய்யும் விருப்பம் உண்டு. இவைகளிலிருந்தே விழிப்பு நிலையிலிருக்கும் நான்கு வடிவங்களும் படைக்கப் படுகின்றன. கறுப்பு சிவப்பு முதலிய நிறங்களும் இவற்றிற்கு மங்கலாயிருக்கும். ஆயுதங்கள் உண்டு. கொடி சாமரம் முதலிய பிருதுகள் இல்லை.

3. ஸுஷுப்திநிலை (தூக்கம்)

விசாகத்தூணின் மூன்றாவது பகுதி இது. ஸுஷுப்தி (துயில்) என்ற பெயருடன் வாஸுதேவ, ஸங்கர்ஷண, ப்ரத்யும்ன, அநிருத்த எனும் நான்கு வ்யூஹவடிவங்கள் கிழக்கு முதலிய நான்குதிசைகளிலும் இருக்கின்றன. இவற்றிற்கு படைத்தல் முதலிய விருப்பம் கிடையாது. இவர்கள் தங்களைத் தாமே அனுபவிக்கும் ஆனந்த நிலையில் இருப்பர். இங்கு கிழக்கில் இருக்கும் வாஸுதேவருக்குக் கைகால்களுடன் கூடிய உடல் கிடையாது, சுத்தஸத்த்வபொருளே கிளைபோல் தோன்றும். ஞானம், சக்தி முதலிய ஆறுகுணங்கள் உண்டு. தெற்கு முதலிய திசைகளிலிருக்கும் சங்கர்ஷணர் முதலிய வ்யூஹங்களுக்குக் கை கால்கள் முதலிய உறுப்புக்கள் உண்டு. அவற்றில் சங்கு முதலிய ஆயுதங்கள் இல்லை. அவர்களின் கைகளில் சங்கு முதலியவற்றின் கோடுகள் மட்டுமே இருக்கும். கருப்பு, சிவப்பு முதலிய நிறவேற்றுமைகளும் இல்லை.

4.துரீய(நான்காவது) வடிவம்

துரீயம் என்னும் பெயருடன் விசாகத்தூணின் உச்சிப் பகுதியில் வாஸுதேவஸங்கர்ஷண முதலிய நான்கு வ்யூஹங்கள் கிழக்கு முதலிய திசைகளில் இருக்கின்றன. நான்கு வ்யூஹங்கட்கும் கை கால் முதலிய உறுப்புக்களுடன் கூடிய உடல் கிடையாது. உடலை நினைவூட்டும் கோடுகள் உண்டு. அறிவுடைமைக்கு வேண்டிய அறிகுறிகள் தென்படா. கிழக்கில் இருக்கும் வாஸுதேவருக்கு ஞானம். சக்தி முதலிய ஆறுகுணங்களும் இருப்பன போல் தோன்றும். மற்ற மூன்று வ்யூஹங்கட்கும் இரண்டு இரண்டு குணங்களே.

லக்ஷ்மீதந்த்ரத்திலும் ஸாத்வத ஸம்ஹிதையிலும் இவற்றின் விரிவுகளைக் காணலாம்.

விசாகத்தூண் விளக்கத்தின் சுருக்கம்

1. அடியில் இருக்கும் ஜாக்ரத் (விழிப்பு) வ்யூஹங்கள் படைத்தல், முதலிய தொழிலைச் செய்கின்றன. திருமேனி, நிறம், ஆயுதங்கள், குடை, சாமரம் போன்ற பிருதுப் பொருள்கள் யாவும் இவற்றிற்கு உண்டு.

2.அதற்கு மேலே இரண்டாமிடத்தில் இருக்கும் நான்கு வ்யூஹங்களும் படைத்தல் முதலியன செய்யா, ஆனால் செய்ய விருப்பம் உண்டு. நிறமும் உடலும் மங்கியிருக்கும். சாமரம் முதலிய பிருதுகள் கிடையா,

3.அதற்கும் மேலே மூன்றாமிடத்தில் இருக்கும் நான்கு வ்யூஹங்களுக்குப் படைத்தல் முதலியவற்றின் விருப்பமும் கிடையாது. ஆயுதங்களும் இல்லை.

4.அதற்கும் மேலிருக்கும் துரீயநான்கு வ்யூஹங்கட்கும் உடலும் கிடையாது. உடல் போன்ற கோடுகள் தென்படும். படைத்தல் முதலியவற்றின் அறிவும் இல்லாவிடினும் அவற்றின் அடிச்சுவடு புலப்படும்.

மேல் வ்யூஹங்களிலிருந்து கீழ் வ்யூஹங்கள் உண்டாகின்றன. அஃதாவது எல்லாவற்றிற்கும் மேலே இருக்கும் நான்கிலிருந்து மூன்றாவதும், மூன்றாவதிலிருந்து இரண்டாவதும் இரண்டாவதிலிருந்து முதலாவதும் உண்டாகின்றன.

நான்காவதான மூர்ச்சை போன்ற பகுதியிலிருந்து தூக்கப்பகுதியும் தூக்கப் பகுதியிலிருந்து கனாப் பகுதியும் கனாப்பகுதியிலிருந்து விழிப்புப் பகுதியும் உண்டாகின்றன.

விசாகத்தூணின் மறைபொருள்

கண்ணுக்குத் தெரியாதநுண்ணிய பரம்பொருள் கொஞ்சம் கொஞ்சமாப் பருத்து, தாயின் வயிற்றில் கரு வளர்வது போல் ஸங்கர்ஷண ப்ரத்யும்ன அநிருத்த வடிவங்களைப் பெற்றுப் படைத்தல் முதலிய தொழில்களைச் செய்கிறது. இஃதே விசாகத்தூண் அறிவிக்கும் உண்மை.

From Abstract to concrete எனும் பொதுக்கொள்கை பின்பற்றப்பட்டு இருக்கின்றது.

மண்ணில் கண்ணுக்குத் தெரியாமல் இருக்கும் ஆலமரத்தின் சத்து, விதை

முளை, மரமாக மாறுவது போல் , கண்ணுக்குத்தெரியாத பரம்பொருள் வளர்ந்து உலகுக்குக்காரணமாகிறது என்பது பாஞ்சராத்ரக்கொள்கை.

கவனிக்கவேண்டியது

ஆன்மாவிற்கு இவ்வாறான மாற்றங்கள் ஏற்கமுடியாது. இவ்வாறு மாறினால் அஃது ஆன்மாவாக இருக்கமுடியாது. அதனால் பகவானுடைய சுத்தசத்துவமயமான ப்ரக்ருதியே வாசுதேவன் முதலிய நான்கு வடிவமாய் மாறி படைத்தல் முதலிய தொழில்களுக்கு காரணமாகிறது என்பதனை விசாகத்தூண் உருவகத்தின் மூலம் பாஞ்சராத்ரம் அறிவிக்கிறது. அவ்வடிவங்கள் உபாதானகாரணமா (முதற்காரணமா) நிமித்தகாரணமா (துணைக்காரணமா) என்பது கேள்விக்குறி?

ஆகமங்களிலும் குணங்களுக்கு த்யானம்

உபநிஷத்துக்கள் பகவானுடைய குணங்களையே த்யானம் செய்யச்சொல்கின்றன. இப்படிப்பட்ட த்யானமே ஆன்மாவில் பதிந்து தத்க்ரதுந்யாயப்படி மோக்ஷத்திலும் பகவத்குணங்களை அநுபவிக்க உதவும். விக்ரஹத்தை மட்டும் த்யானம் செய்தால் தத்க்ரதுந்யாயப்படி மோக்ஷத்தில் குணாநுபவம் கூடுமா? ஆகமவிதிப்படி குணாநுபவத்திற்கு ஒப்புதல் உண்டா? இல்லை என்றால் ஆகமங்களில் சொல்லப்பட்ட த்யானம் உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட த்யானங்கட்கு முரணானதாகாதா? இவ்வாறு பல ஐயங்கள் எழலாம்.

ஆகமங்களில் சொல்லப்பட்ட வ்யூக-விபவ-அர்ச்சை த்யான முறைகளும் குணங்களின் த்யானமே-குணாநுபவமே- என்பது கூர்ந்து நோக்கில் விளங்கும். ஆகமங்களில் சித்தரிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வடிவமும், உறுப்பும், ஆயுதமும், வாகனமும் மறைமுகமாக குணங்களையே சுட்டுகின்றன.

காயத்ரி தேவிக்கு காலையில் ஹம்ஸ (அன்னம்) வாகனமும், நடுப்பகலில் (மத்யாஹ்னத்தில்) ரிஷப (எருது) வாகனமும், சாயங்காலத்தில் கருடவாகனமும் என த்யானம் செய்கிறோம். அவற்றிற்கான த்யானச்லோகங்களையும் சந்த்யாவந்தனத்தில் சொல்லுகிறோம். இவ்வாகனங்கள் வடிவம் மட்டும் அல்ல, குணங்களையும் குறிப்பிடுகின்றன.

ஹம்ஸம் பாலிலிருந்து நீரைப் பிரித்து எடுக்கிறது. நாமும் காலையில் விலக்க வேண்டிய தீயவைகளையும், செய்ய வேண்டிய நல்லவைகளையும் பகுத்து அறிய வேண்டும். இவ்வாறு பிரித்தறியும் ஆற்றலை நமக்கு அளிக்கும் குணங்களை உடையவளாக காயத்ரி தேவியைக் காலையில் த்யானம் செய்வதே ஹம்ஸ வாஹனத்தில் காயத்ரி தேவியைத் த்யானம் செய்வதன் உட்கருத்து ஆகும்.

இப்படி பகுத்தறிந்த நல்லவைகளுக்காக பகலில் மாடு மாதிரி உழைப்பதே ரிஷபவாஹனத்தில் காயத்ரிதேவியை த்யானம் செய்வது ஆகும். நமக்கு உழைக்கும் சக்தியைக் கொடுக்கும் குணம் கொண்டவளாகக் காயத்ரிதேவியை த்யானம் செய்வதே ரிஷபவாஹனத்தில் காயத்ரி தேவியைத் த்யானம் செய்வது ஆகும்.

ஸாயங்காலத்தில் கருடவாஹனத்தில் காயத்ரிதேவியைத் த்யானம் செய்கிறோம். கருடர் ஆகாயத்தில் பறப்பவர். நம் எண்ணங்களும் கருடர் போல் உயர உயரப் போகவேண்டும். உயர்வதற்கு வேண்டிய எண்ணங்களைத் தரவேண்டும் என்ற த்யானமே கருடவாஹனத்தில் காயத்ரிதேவியை த்யானம் செய்வதாகும். அவ்வாறான சக்தியைக் கொடுக்கும் குணம் கொண்டவளாக காயத்ரியை ஸாயங்காலத்தில் த்யானம் செய்யவேண்டும்.

இவ்வாறே ப்ரம்ஹோத்ஸவத்தில் பகவானுக்கு வகுக்கப் பட்டிருக்கும் ஹம்ஸம், சிங்கம் , சேஷன் முதலிய வாஹநங்களின் உட்பொருளை அறிந்து அக்குணங்களுடன் பகவானைஸேவிப்பதே ப்ரம்ஹோத்ஸவத்தில் பகவானை ஸேவிப்பதாகும். இக்குணங்களை நினைவூட்டவும், அக்குணங்களை நாம் பெறவுமே ப்ரம்ஹோத்ஸவம் செய்ய பஞ்சராத்ரங்கள் கூறுகின்றன.

ஐந்து தலை ஏழுதலை ஆதிசேஷனில் பகவானை ஸேவிக்கும் போது பாம்பு போன்ற மக்களின் நடுவில் இருந்தாலும் அல்லது இருந்து கொண்டே பகவானை அடையலாம் என்பதை அறியவேண்டும். விஷமயமான ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றும் குணமுடையவர் பகவான் என்று த்யானம் செய்வதே சேஷவாஹனத்தில் பகவானை ஸேவிப்பதாகும்.

பாஞ்சராத்ரத்தில் விதிக்கப்பட்ட ஒவ்வொரு ஆராதனமுறையும் உட்பொருள் பொதிந்த எழுத்தோவியங்களே.(Cartoon) ஓவியங்களைப் பார்த்து மகிழ்வது மட்டுமின்றி,குறிப்புப் பொருள்களையும் கண்டறிவது பகுத்தறிவின் பயன்.

பகவானுடையத் திருக்கைகள் மேல்நோக்கியும் கீழ்நோக்கியுமிருக்குமாயின் அவற்றில் பதியவைத்திருக்கும் வைரக்கற்களைக் கண்டு நாம் வியக்கிறோம். தன் திருவடியை நம்பினவனைக் கைவிடாத கல்யாண குணமுடையவன் என்ற த்யானம் ஏற்படுவது இல்லை.

பகவானுக்கு ஆயுதங்களும் தத்வங்களின் அறிகுறிகளே. கௌஸ்துபமணி ஜீவாத்மாக்களையும் ஸ்ரீவத்ஸம் என்னும் மார்பில் இருக்கும் மறு ப்ரக்ருதியையும் கதை மஹத் என்னும் தத்துவத்தையும் கத்தி ஞானத்தையும் சங்கம் அஹங்காரம் என்னும் தத்துவத்தையும் சக்ரம் மனதினையும் அம்புகள் இந்திரியங்களையும் வனமாலை பஞ்சபூதங்களையும் நினைவூட்டவே பகவானுக்குச் சார்த்தப் படுகின்றன.

திவ்யாயுதங்களுடனும், திவ்யாபரணங்களுடனும் கூடிய பகவானைக் கோவில்களில் ஸேவிக்கும் போது சேதனாசேதனவிசிஷ்டப்ரம்ஹத்யானத்தில் (உயிரற்ற உயிருடன் கூடிய பொருள்களைப் பிரியாமல் தாங்கிக் கொண்டிருக்கும் பகவானுடைய த்யானத்தில்) நாம் நம்மை மறக்க வேண்டும்.

புருடன் மணி வரமாகப் பொன்றா மூலப்
பிரகிருதி மறுவாக மான் தண்டு ஆகத்
தெருள்மருள்வாள் உறை ஆக ஆங்காரங்கள்
சார்ங்கம் சங்கு ஆகமனம் திகிரி ஆக
இருடீகங்கள் ஈரைந்தும் சரங்கள் ஆக
இருபூதமாலை வனமாலை ஆகக்
கருடன் உரு ஆமறையின் பொருளாம் கண்ணன்
கரிகிரி மேல் நின்று அனைத்தும் காண்கின்றானே.

என்றார் தேசிகரும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தில். ஆகமங்கள் விக்ரஹவழிபாட்டை வலியுறுத்துவனவாகத் தோன்றினாலும் அவை குணங்களோடு கூடிய பகவானுடைய த்யானத்தையே (குணவிசிஷ்டப்ரம்ஹத்யானத்தையே) உட்பொருளாகக் கொண்டன என்பது தெளிவு.

ஆகமத்யானமுறை உபநிஷத்த்யானமுறைக்கு முரணானது அன்று. உபநிஷத்துக்களில் மூன்று வகையான த்யானங்கள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவை ஒன்றுக்கொன்று முரணானவை என்று சொல்வது இல்லை. அவ்வாறே ஆகமத்யானமுறையும் ஒரு வகையானது. முரணானது அன்று.

साङ्गेषु वेदेषु निष्ठामलभमानः शाण्डिल्यः पञ्चरात्रमधीतवान्। (என்கிற வாக்யம் நம் ஆசார்யர்களால் மேற்கோளாக எடுத்து ஆளப் படுகிறது. சாண்டில்யர் என்னும் மஹானுக்கு வேதங்களினாலே நிஷ்டை ஏற்படவில்லை. பாஞ்சராத்ர அத்யயனம் செய்தார் என்பது இதன் பொருள். சாண்டில்யருக்கு வேதங்களில் தெளிவு (நிஷ்டை) ஏற்படவில்லை என்று இதற்கு பொருள் கொள்ளக் கூடாது.அது சாண்டில்யருடையவும் வேதங்களுடையவும் பெருமைக்கு இழுக்கு, வேறு யாது பொருள் எனில் உபநிஷத் த்யானமுறையில் சாண்டில்யருக்கு நிஷ்டை=மன ஒருமைப்பாடு (ஏகாக்ரதை Concentration) ஏற்படவில்லை. ஆகமமுறையினைப் பின்பற்றித் திவ்யமங்கள சுபாச்ரயத்தை த்யானம் செய்யத் தொடங்கியபின் நிஷ்டை (ஏகாக்ரதை) ஏற்பட்டது என்பதே இதன் பொருளாகக் கொள்ள வேண்டும்.

உபநிஷத்துக்கள் குணங்களின் த்யானத்திற்கு முதலிடம் தருகின்றன. உபநிஷத்த்யானங்களில் விக்ரஹத்திற்கும் இடமுண்டு. பாஞ்சராத்ரத்யானங்களில் குணங்களுக்கும் இடமுண்டு. எது முன் எது பின் என்பதிலேயே வேற்றுமை. வேற்றுமையில் ஒற்றுமை காண்பது நம் கடமை.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ:

ஸ்ரீமதே ரங்க ராமானுஜ மஹாதேசிகாய நம:

புருஷ ஸூக்தம்

உத்தர நாராயணானுவாக:

(ஸ்ரீ.உ.ப. வே. நாட்டேரி கிடாம்பி ராஜகோபாலாச்சாரியார், ஸம்பாதகர்,
ஸ்ரீரங்கநாதபாதுகா)

வேதத்திலும் வைதீக கர்மாக்களிலும் முக்யமாக நித்ய கர்மானுஷ்டானத்திலும் மிக உன்னத ஸ்தானத்தைப்பெற்றுள்ள ஸூக்தம் புருஷ ஸூக்தம்.

"इदं पुरुष सूक्तं हि सर्ववेदेषु पठ्यते" இதம் புருஷ ஸூக்தம் ஹி ஸர்வ வேதேஷு பட்யதே. (பாத்ம புராணம்) இந்த புருஷ ஸூக்தம் எல்லா வேதங்களிலும் இடம் பெற்றிருக்கும் தனிப் பெருமை பெற்றது.

வாயினால் சொல்லக்கூட கூசவேண்டிய அதிநீசமான பாவச் செயல்களுக்கும் கூட மிகச் சக்திவாய்ந்த ப்ராய:சித்தமாக யமஸ்ம்ருதியில் புருஷஸூக்தத்தின் ஒருமுறை ஜபம் சொல்லப்பட்டுள்ளது. ஜலத்தில் மூழ்கி இருந்து 3முறை ஜபம் செய்தால் எத்தனையோ பாபங்களுக்கு ப்ராய:சித்தமாக போதாயநர் கூறியுள்ளார்.

விஷ்ணுபுராணம், விஷ்ணுதர்மோத்தரம், மநுஸ்ம்ருதி மற்றும் ஸகல புராணங்களிலும் புருஷஸூக்தம் மிகவும் புகழப்பட்டு அதன் அர்த்தம்கூட புராணங்களிலேயே விளக்கப்பட்டும் உள்ளது.

பாகவதம் 2ம் ஸ்கந்தம், அணிர்புத்ந்ய ஸம்ஹிதை, ஸாத்பதஸம்ஹிதை, புருஷஸம்ஹிதை, முத்கலோபநிஷத்துக்களிலும் புருஷஸூக்தம் விரிவாகவே விளக்கப்பட்டுள்ளது.

தைத்திரீயகம் ஆரண்யகத்தில் 3ம் ப்ரச்னத்தில் இரண்டு அனுவாகமாக புருஷ ஸூக்தம் ஓதப்பட்டிருந்தாலும் இதில் முதல் அனுவாகமே புருஷஸூக்தம் என்ற பெயரில் பலவேத பாகங்களில் இடம் பெற்றுள்ளது. இரண்டாவது அனுவாகம் 6மந்த்ரங்கள் கொண்டது. இது உத்தர நாராயாணானுவாகம் என்றும் அறியப்படுகிறது.

மிகவும் ப்ரஸித்தமாக உள்ள புருஷஸூக்தம் அத்யயனத்தில் ப்ரஸித்தி

பெற்றுள்ளதே ஒழிய அர்த்த நிர்ணயம் செய்வது மிகச் சிரமமாக உள்ளது. மஹான்களின் வ்யாக்யானங்கள் பொதுவாகவே வித்யாஸப்படுகின்றன. ஆனால் இங்கு சொல்லப்பட்டுள்ள வைபவம் எல்லாம் "புருஷன்" என்று சொல்லப்படும் புருஷோத்தமனான நாராயணனைப் பற்றியதே என்பதில் யாரும் மாறுபட்ட கருத்துகொள்ள முடியாதபடிக்கு புராணங்களும், பெரியோர்களும் ஏகோபித்து இசைந்துள்ளனர்.

இந்த பரம புருஷனைப்பற்றி பரவும் ஸூக்தம் ஆனதால் புருஷஸூக்தம் எனவும் பேர் பெறுகிறது.

முதல் அனுவாகத்தின் பொருள் சுருக்கம்

அத்யாச்சர்யமாய் உபயவிபூதியையும் அநாயஸமாக வியாபித்த விக்ரஹத்தை உடையவனாய், ப்ராக்ருத அப்ராக்ருத லோகங்களுக்கு ஆத்மாவாய் முடிவற்று விரிந்த பரமபுருஷன் இந்த அண்டத்தை ஸ்ருஷ்டித்து, நான்முகனை ஸ்ருஷ்டித்து, அவனைக்கொன்று எவ்வுலகும், எவ்வுயிரும், எத்தெய்வமும் படைத்து சூழ்ந்தகன்றாழ்ந்துயர்ந்துள்ள முடிவில் பெரும்பாழான ஸம்ஸார மண்டலத்துக்கு மேலான கலங்காப் பெருநகரிலே பரமஜ்யோதிஸ்ஸாக விளங்கும் பரமபதநாதனே முமுக்ஷுக்குகளுக்கு உபாஸ்யன்.

அவனாலேயே முக்தி, வேறு மார்க்கம் இல்லை. என்று அறுதியிட்டு முடித்தது முதல் அனுவாகத்தில் புருஷஸூக்தம்.

முதல் அனுவாகத்தின் தொடர்ச்சியே இரண்டாவது அனுவாகம். புருஷன் என்று மட்டும் முதல் அனுவாகத்தில் புகழப்பட்ட ஜகத் காரணன் இன்னான் என்று நிர்ணயித்து துளியும் ஸம்சயமில்லாமல் விளக்குகிறது இரண்டாவது அனுவாகம். முதல் அநுவாகத்தில் தெளியாதவர்களை பரமக்ருபையுடன் இரண்டாவது அநுவாகம் தெளிவித்து நமக்கு பரமபுருஷனை ச்ரிய:பதி என்று அடையாளம் காட்டி மகிழ்கிறான் வேதபுருஷன்.

முதல் அனுவாகத்திற்கும் இரண்டாவதான உத்தரநாராயண அனுவாகத்திற்கும் தொடர்பு இல்லையோ என்று ப்ரமிக்காமல் இருக்க வேண்டும் என்பதற்காக முதல் அனுவாகத்தில் சொல்லப்பட்ட விஷயத்தையே இரண்டாவது அனுவாகத்தில் முன்கதைச் சுருக்கம் போல் உபன்யஸித்து விட்டு மேலே விஷயத்தைத் தொடரும் வேதபுருஷனுக்கு நன்றி செலுத்திவிட்டு உத்தரநாராயணானுவாகத்திற்கு வ்யாக்யானம் செய்ய முற்படுகிறோம். மஹான்கள் கடாக்ஷித்து அருளவேணும்.

உத்தர நாராயணானுவாகத்தின் பொருள் சுருக்கம்:-

புருஷ சப்தத்தினால் சொல்லப்படும் பரம்பொருள் அண்டத்தை ஸ்ருஷ்டி செய்து, நான்முகனையும் படைத்து, நாமரூப வ்யாகரணங்களையும் செய்தருளி, ஸர்வ வ்யாபகனாயும் ஸர்வாதாரனாயும் எப்பொருட்கும் சொல்லாகி, ஸர்வசேஷியாய், ஸர்வவேதங்களின் பொருளாய், மஹாபுருஷனாய், பாஸ்கரன்போல் ஜ்யோதிர்மயமாய், குறைகள் அற்றவனாய், தமஸ்ஸுக்கு மேலிடத்தானாய், உள்ளான். அவனை உபாஸித்தல் மட்டுமே மோக்ஷோபாயம். அவனையொழிந்த உபாயம் ஒன்றுமே இல்லை. இப்படிப்பட்ட பிறப்பில் பெருமாள் தர்மஸம்ஸ்தாபனார்த்தம் பல்பிறவிப் பெருமானாய், எந்நின்றயோநியிலும் ஸ்வேச்சயாய் கருணையின் வசப்பட்டு அவதரிக்கிறான், இவனுடைய அவதார ரஹஸ்யத்தின் ரஸாநுபவத்தை மஹான்கள் அறிந்தறிந்து திகைக்கின்றனர். இதையொத்த பகவத் அநுபவங்களில் மீட்சியில்லாது குமிழ்நீருண்ணும் ஸம்ஸாரிகளின் திரளில் நமக்கும் பெறவாகாதோ? என்று அண்டாதிபதிகளான ப்ரஹ்மாக்களும் பாரித்த வண்ணம் உள்ளனர். இந்த பரமபுருஷன் அவதாரதசையிலும் மோக்ஷப்ரதன். ஆசார்யனாகவும் அவதரித்து பகவானே உபகரிக்கிறான். நமக்காக முன்னிவந்தவன் நின்றிருந்து அருள்வான். இவன் அருள்பெற்று இவ்வறிவு பெற்ற முமுக்ஷுக்கள் தேவர்களுக்கும் உபாஸ்யர். நம் தேவாதிதேவன் திருமடந்தை மண்மடந்தை இரீபாலும் என்றும் திகழ அவதாரம் உள்பட எந்த மூர்த்தியாக விளங்கும்போதும் காலத்தைக் கடந்தவனாய், உபயவிபூதி நிர்வாகனாய், ஸர்வப்ரஸித்தாவாய் தன்பால் ஆதரம் பெருக வைக்கும் அழகனாய், விளங்குபவன். இவன் தன் சீர்மிகுந்த திருவடிகளை அடைவித்து அடிமையென்னும் பேரமுதம் அருந்திவாழ ஆட்கொண்டு ஸர்வதேச, ஸர்வகால, ஸர்வாவஸ்தைகளிலும் தன்னோடு ஒக்க உகப்பித்துக் கொண்டிருக்க வேணும் என்று முமுக்ஷுக்கள் ப்ரார்த்திக்கின்றனர்.

இதுவரை உத்தரநாராயணாநுவாகத்தின் பொருள் சுருக்கம் கண்டோம். இனி மந்த்ரங்களையும், பதங்களையும், பதங்களின் பொருள்களையும் காண்போம்.

நம் இராமாநுஜ ஸம்ப்ரதாய அநுகுணமான "ஸ்ரீ கூர நாராயணீயம்" என்ற இதி ன் பாஷ்யத்தை ஸ்ரீ அபிநவதேசிக ஸ்வாமி பதிப்பித்து பரமோபகாரம் செய்தருளியுள்ளார். தாமுமே அத்புதமான பரிஷ்கார உரையும் அருளியுள்ளார். வேதாந்த புஷ்பாஞ்ஜலி என்கிற தம் க்ரந்தத்திலும் பதபதார்த்தம் அருளியுள்ளார். இன்னும் பல பெரியோர்கள் இம்மந்த்ரங்களின் ஸமுதாய அர்த்தங்களையும் அனுபவித்து எழுதியுள்ளனர். இவைகளை அனுஸரித்து கருடன் உருவம் மறையின் பொருளான கண்ணனை கீழே விளக்குவோம்.

புருஷ ஸூக்தம், உத்தர நாராயணானுவாகம், தைத்திரீய ஆரண்யகம் 3-ம் ப்ரச்னம் 13.ம் அனுவாகம்.

முதல் மந்த்ரம்

अद्भ्यः संभूतः पृथिव्यै रसाच्च
विश्वकर्मणः समवर्तताधि।
तस्य त्वष्टा विदधद् रूपमेति
तत्पुरुषस्य विश्वमाजानमग्रे।।

பதவுரை

விச்வகர்மண:	--	ஸர்வஜகத் ஸ்ருஷ்டி கர்த்தாவான பகவானுடைய
ரஸாத்	--	லீலா ரஸத்தினால், காருண்ய ரஸத்தினால்
ச	--	ஜீவாத்மாக்களுடைய கர்ம பரிபாகத்தின் காரணத்தினாலும்
ப்ருதிவ்யை	--	உலகின் (ஸ்ருஷ்டியின்) பொருட்டு
அத்ப்ய:	--	நெடுவெள்ளத்தினின்றும்
ஸம்பூத:	--	உண்டான நான்முகன்
அதி	--	(பகவத் ஸங்கல்பத்தினால்) (அதிகமாக) மிகவும்
ஸமவர்த்தத	--	நன்கு செயல்பட்டால்
த்வஷ்டா	--	நாமரூபங்களை செய்விக்கும் பகவான்
தஸ்ய	--	அந்த நான்முகன் தன்னுடைய
விததத்	--	விவிதமாக ஸ்ருஷ்டிக்கும் (ஸ்ருஷ்டிக்கப்படும்)
ரூபம்	--	(சேதனாசேதன) உருவங்களை
ஏதி	--	(அந்தர்யாமியாக) வ்யாபிக்கிறார்
தத்	--	அதனால்
புருஷஸ்ய	--	பரமபுருஷனுடைய (தே)
விச்வம்	--	(ஸ்ருஷ்டிக்கப்பட்ட) இந்த ஜகத் (என்று)
அக்ரே	--	(நாமரூபவிபாகமற்று இந்தஜகத்) அதி ஸூக்ஷ்மமாய் கிடந்தது முதலே
ஆஜானம்	--	எல்லாம் நான் அறிவேன் (என்று வேதபுருஷன் சொல்கிறார்)

எல்லையின்றி விரிந்து கிடக்கும் அண்டவெளியும், ஓயாது இயங்கும் கதிரவனும், சந்திரனும், கண்சிமிட்டும் தாரகைகளும், கோள்களும், இந்த வானவீதியில் மெல்லியசிறகை விரித்து சுற்றும் பறவைகளும், நீரில் மட்டுமே திளைத்துவாழும் இனங்களும், கட்டாந்தரையில் மட்டுமே வாழத்தெரிந்த மனிதனும், வேரூன்றி பெயரகில்லாது வளர்ந்து சாயும் தாவர இனங்களும் இப்படி ஆயிரம் கோடி விந்தைகள்

மனிதனின் மனத்தில் விடை காணாத கேள்வியை ஒலிக்கச் செய்து கொண்டே இருக்கிறது. யார் இந்த வியத்தகுபாரின் படைப்பின் முதல் பொருள். (அதுவா? அவனா?) உயிருள்ளதா, உணர்வற்றதா? செய்விக்கும் திறன் பொருளா? செயப்படும் கருப்பொருளா? உருப்பொருளா? அருப்பொருளா? பொருள்தானா?ஏதுமில்லையா?

உள்ளுணர்வில் ஒருபதில் கிடைத்துவிட்டது. இந்த காரண ரஹஸ்யத்தை அறிந்து விட்டால், முதல் பொருளான அதைப் பற்றிக்கொண்டோ அல்லது அதற்கு அகப்படாமல் அதை கடந்து தூர நின்றோ உலகியல் துன்பங்களை கடந்து விடலாம்.

இத்தகு சிந்தனை ஓட்டங்களால் அவிழ்ந்த நெல்லிக்காய் மூட்டைபோல் சித்தாந்தங்கள் சிதறினவே அன்றி புலன்களைக் கடந்து காலங்களைக் கடந்து சுயமுயற்சியால் யாராலும் விடைகாண முடியாத இந்த நுண் புதிருக்கு யார்தான் கதி?

புருஷ ஸூக்தம்தான். இது தன் ஆழ்தரையையும் காட்டும் தெள்ளத்தெளிந்த ஒரு விரிநீர்கடல். முதல் அநுவாகத்தில் ஜகத்காரணப் பொருளை நன்குகாட்டி, ஜகத் ஸ்ருஷ்டியின் வரிசைகளையும் காட்டிவிட்டு அந்த பரமபுருஷனை உபாஸிப்பதே மோக்ஷோபாயம் என்று அறுதியிட்டுவிட்டு இரண்டாவது அநுவாகத்தை ஆரம்பிக்கும் போது முதல் அநுவாகத்தின் முதல் 15 மந்த்ரங்களையும் சுருங்க ஒரே மந்த்ரத்தால் அர்த்தாநுஸந்தானம் பண்ணுகிறது இங்கு.

அத்ப்ய:- என்ற பஹுவசனம் பெருவெள்ளமாய் கிடந்த ப்ரஹ்மாண்ட நீரைச் சொல்கிறது. கடல் நடுவுல் அறிதுயில் அமர்ந்த நாராய்ணன் தன்னுந்தித் தாமரையில் நான்முகனைப் படைத்தான் என்பதை **ஸம்பூத:** என்று சொல்லிற்று.

ப்ருதிவ்யை- நான்முகனை --- உலகெல்லாம் படை என்று முதல் படைத்தாய் (திருவாய்மொழி 3-1-7) என்றார் போல் உலகின் படைப்புக்காக நான்முகன் படைக்கப்பட்டான் என்று அர்த்தம் சொல்லிற்று.

ரஸாத் - பரிபூர்ண பரப்ரஹ்மத்திற்கு ஜகத்தை ஸ்ருஷ்டிக்க வேண்டிய காரணம் ஏதும் காணமுடியாது. புதிதாக அவனுக்கு என்னவும் வேண்டாமே? அவன் ஏன் காரணமாக வேண்டும்?

அவனுடைய கருணாரஸமேகாரணம். ஸ்வாமி தேசிகன் "ஜாதநிர்வேதா" என்று காட்டினாற்போல் கரைபுரண்ட கருணைக்கடலுக்கு காரணம் வேறும் வேணுமோ? பரிபூர்ணனுக்கு லீலாரஸமும் ஒருகாரணமாகலாமே விநோதம் அல்லவா லீலாரஸத்தின் ஸ்வாரஸ்யம்.

ச- என்பது நிச்சயத்தை, அவதாரணத்தைச் சொல்வதாக லாம். அல்லது,

ஜீவாத்மாக்களின் கர்மா பக்குவப்பட்டவாறே கர்மானுரூப பலப்ரதனான பரமபுருஷன் ஜீவர்களின் கர்மானுகுண பல ப்ரதானார்த்தம் கூட ஜகத்தை ஸ்ருஷ்டி செய்ய முற்பட்டான் ஆகலாம். இக்காரணமும் சேர்ந்தாயிற்று ஜகத் ஸ்ருஷ்டிக்கப்பட்டது.

விச்வகர்மண: ரஸாத் ச - என்று அன்வயம். ஜகத்காரணன் ஒருவனே. பலர் சேர்ந்து பண்ணும் பலசரக்கு சமையல் இல்லை படைப்பு என்று காட்ட விச்வகர்மண: என்று ஏகவசனம் **"பரஞ்சோதி நின்னுள்ளே படருலகம் படைத்த எம்பரஞ்சோதி கோவிந்தா"** என்றாரிரே நம்மாழ்வார்.

அதி:- என்றபதம் அதிகமாக அல்லது அத்யக்ஷகராக அல்லது அதிகாரமாக என்ற பொருளை உணர்த்தும். பகவானால் ஏவப்பட்டு வெகு கார்யங்களை செய்தார். இது ஸமவர்த்தத என்ற பதத்தினால் தெளிவாகிறது. ஸம் என்கிற உபஸர்க்கம் ப்ரஹ்மாவின் செயல்பாடு மிகச்சிறப்பாக உள்ளதை காட்டும். "த்வஷ்டாரூபாணி பிப்ரது" என்று வேதம் த்வஷ்டா சப்தம் ரூபகரணம் செய்பவரைச் சொல்லும். "நாம ரூபே வ்யாகரவாணி" என்று பகவான் நாமரூப வ்யாகரணம் செய்தருளினதை த்வஷ்டா சப்தம் இங்கு உணர்த்தும்.

தஸ்ய -விதத் ரூபம்- என்பது ப்ரஹ்மாவினுடையதான செயல்பாட்டினால் படைக்கப்பட்ட பதார்த்தங்கள் எல்லாவற்றையும் லக்ஷிக்கிறது.

ஏதி- என்றபதம் பகவான் இவற்றையெல்லாம் அடைவதைச் சொல்லும். வர்த்தமான நிர்தேசம் எப்போதும் அந்தர்யாமியாய் அடைந்து கரந்தெங்கும் பரந்துளன் என்று சொல்லிற்று.

அக்ரே- அர்த்வா இதம் அக்ர ஆஸீத் என்பதாக முதன்முதலில் நாமரூபங்கள் ஏதுமற்று வெறும் தமஸ்ஸாக இருந்த ஜகத்தின் நிலை முதல் ஆஜாநம் - ஆ + அஜானம் ஸமந்தாத் எல்லாம் அறிவேன் என்று வேதபுருஷன் ஸத்யப்ரதிக்ஞை பண்ணுகிறார்.

தத் புருஷஸ்ய விச்வம் ஆஜாநம்- என்பதினால் தத் சப்தம் தஸ்மாத் என்று காரண நிர்ணயம் செய்கிறது. பரமபுருஷனுடைய தே விச்வம் என்று ஜகத் சேஷி பரமபுருஷன் என்றோ பரமபுருஷனே விச்வஸ்ருஷ்டி காரணன். வேறில்லை என்றோ ப்ரதிக்ஞை. இப்படி இங்கு உத்தராநுவாகத்தின் முதல் மந்த்ரம். புருஷஸூக்த முதல் அநுவாகத்தில் முதல் 15மந்த்ரங்களையும் சுருக்கி அண்ட ஜலசாயி அநிருத்த நாராயணன் ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்து அவனை போஷித்து வளர்த்து ஸ்ருஷ்டிக்கு அதிகாரியாக செயல்படவைத்து தான் எல்லாப் பொருள்களுக்கும் நாம ரூபங்களைக் கொடுத்து தான் உள்ளுறைகிறான். இப்பரமபுருஷனே ஜகத் சேஷி, ஜகத் ஸ்ருஷ்டிகாரணன் என்று ஓதிற்றாயிற்று.

இனி இரண்டாம் மந்திரம்.

"சொல்லினால் படைக்க நீ படைக்க வந்து தோன்றினார்.
சொல்லினால் சுருங்க நின் குணங்கள் சொல்ல வல்லரே."
(திருச்சந்தவருத்தம்-)

என்று திருமழிசையாழ்வார் அருளியபடி யாரும் இல்லாக் காலத்தே தனி நாயகனான எம்பிரான் எம்மான் நாராயணனாலே உலகு படைக்கப்பட்ட விந்தையை யாரே நேரே அறியவல்லார் அறியாதவர்தான் சொல்லவல்லரோ? "நீ யோனிகளைப் படை" என்று நிறை நான்முகனைப் படைத்ததையும் கண்டிருந்த வேதபுருஷன்தான் அறிந்ததைச் சொல்லவல்லவன். "சேயோன் எல்லா அறிவுக்கும்" என்னப்பட்டவனை பெரியானை பிரமனை முன்படைத்தானை வானுயர் இன்பம் மன்னிவீற்றிருந்த "தோற்றமாய் நின்ற சுடரை" சிந்தை சொல் செய்கை கொண்டு என்றும் மகிழ்வார்களே தம் பிறவித்துயர் அறுப்பர் என்ற செஞ்சொல் இரண்டாம் மந்திரமாம்:

மந்திரம் - 2

वेदाहमेतं पुरुषं महान्तम् ।
आदित्यवर्णं तमसः परस्तात्॥
तमेवं विद्वानमृत इह भवति।
नान्यः पन्था विद्यते ऽयनाय॥

பதவுரை

ஏதம்	- (ஜகத் ஸ்ருஷ்டிகாரணனாய் ஜகத் சேஷியாய் இப்படி ஓதப்பட்ட) இந்த
மஹாந்தம்	- பெரியோனை
ஆதித்யவர்ணம்-	சுடரொளியாய் நிற்கும் எழில் கொள் சோதியை
புருஷம்	- (இந்த ஸஜிக்த நாயகனான) ஆண்மையானை
தமஸ:	- முடிவில் பெரும்பாழான ஸம்ஸாரமண்டலத்திற்கு
பரஸ்தாத்	- அப்பால் (உள்ளவனாக)
அஹம்	- (வேதபுருஷனான ஸர்வஜ்ஞனான) நான்
வேத	- (ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தாலேயே) அறிவேன்
ஏவம்	- (நான் அறிந்தபடி) இவ்வாறே
தம்	- அந்த பரமபுருஷனை

வித்வான் - அறிபவர், உபாஸிப்பவர்
இஹ ஏவ - இவ்வுலகிலேயே
அம்ருத: - (ப்ரஹ்மானந்தம் பெற்ற) இனியராய்
பவதி - இருப்பர்.
அயநாய - (பகவானிடம்) செல்வதற்கு
அந்ய: - வேறு
பந்தா: - மார்க்கம் (உபாயம்)
ந வித்யதே - இல்லை.

முதல் அநுவாகத்தில் காணும் நான்கு வரிகளைக் கொண்டே இந்த மந்த்ரம் கிடைத்துள்ளது. முதல் அநுவாகத்தில் புருஷன் என்று மட்டும் பேசப்பட்ட பெருந்தெய்வம் இன்னான் என்று காட்டவே இந்த அநுவாகம் என்றுள்ள அநுவாகத் தொடர்பை அறிவிலாரும் தெளியும்படி வெளிச்சம் போட்டுக் காட்ட இந்த முறையை வேத புருஷன் கருணையோடு கையாள்கிறான். நெஞ்சிலே நீதியுள்ளார். தன் ஆத்மாவைத் தானே வஞ்சித்துக் கொள்ள நினையாதார். உண்மை அறத்தை மட்டுமே உகப்போர், போலித்தனமான ஸித்தாத்தங்களை தம் நெஞ்சறிய விதைத்து வினை வளர்க்காதார் ச்ரிய: பதியே பரமபுருஷன் என்று தெளிய வேண்டாவா என்ற கருணை உள்ளத்தாலும் இந்த இரண்டாம் மந்த்ரத்தில் உள்ள பதங்களின் பொருட் சுவையிலும் இனிது மகிழ்ந்து மீண்டும் முதல் அநுவாகத்தில் காணும் அதே சில வரிகளைப் பேசி நம்மை உய்விக்கிறான்.

பொருள் விளக்கம்

அஹம் வேத:- அத்தனை ஆத்மாக்களும் அறிவிருண்டு நின்ற காலத்தே கருணைக்கடலான புருஷன் செய்த நல்தொழிலாம் ஜகத் ஸ்ருஷ்டியை, இன்னான் அருள்கொண்டு நடத்தினான் என்ற இவ்வர்த்தத்தை, தனி ஒருவனாய் நின்று நான் வியந்து மூச்சடைத்து நின்றதை உங்களுக்குச் சொல்லாமல் போகாது. என் நெஞ்சில் வியப்பின் கனம் வடியச் சொல்லித்தான் தீர்வேன். நீங்கள் கேட்டுத்தான் தீரவேண்டும். என்வியப்பு எனக்குத் தாங்காது. உங்கள் இழவு எனக்குப் பொறுக்கவில்லை. அறிந்தநான் (வேதபுருஷன்) முக்த கண்டமாய் சொல்கிறேன்.

ஏதம்- பூர்ணபுருஷனாய் இருக்கச்செய்தே தன் நெஞ்சில் கருணையின் நோவு பொறுக்காது அல்லாடி உலகைச் செய்யும் இந்த உத்தமனை

மஹாந்தம்- கல்யாணகுணங்கள் ஒவ்வொன்றும் கடலாய் கரைகாணாது தனக்கே தானே எக்கணத்தும் பெரியோன் அன்றோ! மலையைத்தாங்க எலியோ! இப்பெரியோனைச் சொல்ல நானோ!

புருஷம்- "ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியும் அல்லன்" என்ற

நம்மாழ்வார் ஸ்ரீஸூக்திக்கு பொருள் யாரோ? "ஒரு வழியும் அல்லவென்றால் ஆபாஸமிறே" என்றார்க்கு "பெண்ணல்லள் அலியும் அல்லது" என்னாமல் பெண்ணல்லன் அலியும் அல்லன் என்று ஆண்மையையிட்டு நிர்தேசித்த நேரிலே ஆண் அல்லன் என்றது கண்டீர்காணும் என்று நம் பெரியோர் சொன்னார்களிறே. பாபபிண்டமாய் ரத்தத்தில் ஆண்மை நீர் கலந்து கசிவதாலே புருஷன் என்று பேருக்கு சொல்பெற்ற மாம்ஸக் கூடல்லவே இப்பெரியான். தேஹமாம்ஸத்தில் உள்ள ஆண்மை அல்லவிறே இது. ஆத்ம தத்வத்தின் ஆண்மை கண்டீர். எம்பிரான் ஒருவனிறே ஆண்மையுள்ள ஆத்ம தத்வம். ஒரே ஒரு ஸ்வதந்த்ரன் காணும். மற்றெல்லாம் நம் பாரதந்த்ர்யத்துக்கும் அவனிட்ட பிச்சைசோறு வேண்டித் தின்றாக வேண்டும். அதாவது நம் பாரதந்த்ரயமும் கூட அவனிசைவாலேதான். அவன் இசைவின்றேல் உருமாய்ந்து போகுமே மற்றெல்லாம்.

(புருஷ சப்த நிருக்தி முதல் அநுவாக உரையில் கண்டிருக்கும் என்று இங்கு விடப்படுகிறது)

ஆதித்யவர்ணம்- முடிச்சோதியும், முகச்சோதியும், பல மார்பினில் சோதியும், அடிச்சோதியும், வலத்துறையும் சுடராழிச்சோதியும், மற்றெல்லாச் சோதியும் "நாபச்யந் கம் திச:க்ஷோணீம் ஆத்மாநம் ச குதோவிபும்" என்று விஷ்ணுபுராணத்தில் அம்ருதமதன ப்ரகரணத்தில் தேவர்களெல்லாம் கண்கூசிப்போய் தங்கள் கைகால்களைக்கூடக் காணமுடியாமல் கண்கூசி இருண்டு நிற்கச் செய்யும் திருமேனியின் முழுச்சோதியும் இங்கே பேசப்படுகிறது. ஆதித்தியனின் "சோதிபோல் தோன்றும் சுடர்பொன்" மேனியனை இல்லை என்பார், அவனுக்கு திருமேனி, இல்லை என்பார், சூன்யத்துக்கு துல்யமான நிர்விசேஷ சிந்மாத்ர ஸ்வரூபம் என்பார், குணக்கடலுக்கு குணம் ஏதென்பார், இவர்களின் இழவு தரிக்க முடியவில்லை. பசியிருக்க, அமுதக்கடல் இருக்க பசியையே தின்பரோ? மணலைத்தான் தின்பரோ? ஆதித்யவர்ணம் தன்னடிச் சோதியாம் வானுயரின்ப வைகுந்தத்தே சுடர்மிக நிலையான உருவம் கொண்டு மன்னி வீற்றிருக்கும் பரமபதநாதன்.

தமஸ: பரஸ்தாத்- ஸம்ஸார மண்டலத்துக்கு எட்டாத அப்பால் ஆதித்ய வர்ணனின் சாச்வதமான உறைவிடம் சொல்லுகிறான் வேதபுருஷன். அண்ட பஹிரண்ட மெல்லாம் பரமாணு ஸத்ருசம் போல்வன என்னலாம்படி இவை எல்லாம் தனக்குள் கடலில் அலையும் துரும்புகள் எனக் கொண்டு எல்லையற்று சூழ்ந்தகன்று ஆழ்ந்து உயர்ந்த முடிவில் பெரும் பாழுக்கு மேலே அப்பால். தம: என்பது மூலப்ரக்ருதி என்பது ப்ரஸித்தம். எல்லையற்ற தமஸ்ஸுக்கு ஒருபுரம் மாத்ரம் எல்லை உண்டென்றும். அங்கு விரஜா நதி மேலெல்லாம் விரிந்துள்ள த்ரிபாத் விபூதியையும் தமஸ் என்கிற ஸம்ஸாரமண்டலத்தையும் பிரித்துக்கொண்டு நீண்டோடுவதாகவும் **"விரஜாம் வாநீயம் நதீம் ப்ராபத்" (கௌஷீதகி உபநிஷத்) என்பதிலே காண்கிறது. தமஸ் மாத்ரமே ஸம்ஸார மண்டலம் என்றும்**

ஸம்ஸாரிகள் இந்த பொய்நிலச் சேற்றிலே புதைந்துள்ளவர்கள் வைகுந்தத்தை உள்ளதென்று அறியும் வாய்ப்புக்கிடையாதாகையால் ப்ராப்யபூமியை உள்ளதென்றும் அறியாமல் ஸம்ஸாரிகள் இழப்பதோ என்று பார்த்து ப்ராப்ய பூமியாம் வைகுந்தம் உண்டென்றும் வைகுந்தத்திலே ஆத்மநாதனும் உண்டென்றும் உத்கோஷிப்பது தன் பொருப்பு என்று நினைத்து இப்படிச் சொன்னான் வேதபுருஷன்.

தம்- சேதனாசேதன ஜகத்துக்கும் காரணனாய், நித்ய சேஷியாய், அனவதிக கல்யாண குணங்களினால் மஹாத்மாவானவனை, திருப்பரமபதத்தில் சுடரிலகு திருமேனியனை,

ஏவம்- இதுவரையில் இங்கு பேசப்பட்ட மந்த்ரங்களுக்கு மெய்ப்பொருள்படி இங்ஙனமே

வித்வான்- இங்குள்ள விதி தாது உபாஸனை என்ற பொருள் சொல்கிறது. ஸ்ரீகீதாபாஷ்யத்தில் வேதாந்தேஷு, வேதாஹம் ஏதம் புருஷம் மஹாந்தம்! ஆதித்யவர்ணம் தமஸப் பரஸ்தாத்! தமேவம் வித்வாந் அம்ருத இஹபவதி! நாந்ய பந்தாவித்யதேயநாய! என்று விஹிதம் வேதநம் த்யானோபாஸநாதி சப்தவாச்யம் தர்சந ஸமாநாகாரம் ஸ்ம்ருதி ஸந்தானம் என்று (18-65) இங்குள்ள "வித்வான்" என்பதின் பொருள் ஸ்ரீ பாஷ்ய காரராலேயே நன்கு விளக்கப்பட்டுள்ளது. அதாவது இங்கு விதிக்கப்பட்டுள்ள வேதநம் உபாஸநமே, அதுதான் பகவானை நேரேகண்டநுபவிப்பது போன்று உபாஸகனின் உட்கண்ணில் தோற்றம். இந்நினைவுத் தோற்றத்தில் மூழ்கிய தொடர்நிலையே உபாஸனம். இங்குள்ள வேதனம் ஞானமாத்ரம் என்ற பூர்வபக்ஷத்திற்கு மறுப்பு ஸ்ரீபாஷ்யாதிகளிலும் இந்த பங்திகளுக்கு வ்யாக்யானமான தாத்பர்யசந்த்ரிகையிலும் த்ருடமான நிர்தாரணத்தில் காணலாம்.

இஹ அம்ருதோ பவதி- ஸம்ஸாரதசையிலேயே உபாஸகன் முக்ததுல்யனாக பகவத் குணாநுபவத்தை பெற்று இனியன் ஆகிறான் என்கிறது. முக்தனும் பரமபக்தியின் அநுபவத்திலேயே திளைத்திருப்பன். பக்தனான நிலையிலும் பக்தியோகி பரமபக்திநிலையில் அந்த முக்தனின் நிலையைத்தானே அடைந்துள்ளான். உபாயமும் பரமபக்தி. உபேயமும் பரமபக்தியே.

இஹைவ - இந்த ஸம்ஸாரத்திலேயே அம்ருதோ பவதி முக்தன் ஆகிவிடுகிறான். என்று இப்பொருள்தானே எளிதாகக் கிடைக்கிறது என்றால் அடுத்துள்ள "**நாந்ய: பந்தா: அயநாய வித்யதே**" என்ற வாக்யத்தில் "அயநம்" என்று செல்லுதலைச் சொல்வதால் அடையப் படவேண்டியவன் ஆதித்யவர்ணன் பரமபதத்தில் என்று ந்யாயமான ஸ்வாரஸ்யமான அர்த்தம் உள்ளதால் ப்ராப்யத்தைப் பெறவேண்டிய உபாஸகனின் உபாய அநுஷ்டானம் அவனுக்கு இனிய அநுபவமான, பகவானிடம் ப்ரீதிரூபமான, த்யான

நிலையில் இங்கு உள்ளபோதே **"இனியனாக"** உள்ளான் என்பதை மாத்ரமே **"அம்ருத: இஹ பவதி"** என்பது காட்டுகிறது. இதையே ஸ்வாமி தேசிகனும் **"பஜனஸுகம் ஏகஸ்ய விபுலம்"** என்றும் நம்மாழ்வார் **"பலம் முந்து சீரில் படிமின் ஓவாதே"** என்று அருளிச் செய்தனர்.

குத்ருஷ்டிகள் **"வித்வான் அம்ருத இஹ பவதி"** என்பதற்கு "ஞானயோகி ஜக்யகஞானம் இங்கு பெற்ற உடனே ஜீவன் முக்தனாகிவிடுகிறான்" என்று சொல்லும் அர்த்தம் இப்படிப்பட்ட ஜீவன் முக்தன் சரீரத்யாகத்திற்குப் பிறகு செல்லவேண்டிய இடம் யாதுமில்லையாதலால் பின்னே உள்ள "அயநாய" என்கிற "மோக்ஷஸ்தானத்தைக் குறித்து சொல்லுதல்" என்கிற நேர் அர்த்தம் சொல்லமுடியாமல் திணறவேண்டிவரும்.

"அயந" சப்தத்திற்கு "கதி" அர்த்தம் சொல்லாமல் "ப்ராப்யம்" என்று மாத்ரம் சொல்லுகிறோம் என்று சொல்லி ஜீவன்முக்தன் இங்கேயே ஐக்ய ப்ராப்தியும் பெறுவான் என்பதை "அயந" சப்தத்தினால் பெறுகிறோம் என்றால் - ப்ராப்யம் நக்ஷத்ராணிரூபம் என்றல்லவோ பகவானின் திருமேனியை வைகுந்தத்தில் நெருங்கி இருப்பதே ப்ராப்தி-மோக்ஷம் என்று இங்கேயே அறுதியிடப்பட்டுள்ளது. ஆதலால் குத்ருஷ்டிகளின் ஜீவன்முக்தி வாதமும், ஐக்யப்ராப்தியே மோக்ஷம் என்கிற வாதமும் பாலிச பாஷிதம்.

அயநாய- தமஸ்ஸுக்கு மேலான லோகத்தை சென்றடைவதற்கு வழிசொல்லவந்தவன் வேதபுருஷன், இங்கு பெறப்படும் இனிய பரமபக்தியே பரமனிடம் செல்ல வழி என்று நாம் செல்ல வேண்டியதை வலியுறுத்தும் சொல்.

நாந்ய: பந்தா: வித்யதே- வேதங்களில் நாநாவித்யைகளும், அவ்வோ வித்யைகளுக்கு உபாஸ்யமான சூர்ய, வஸு இந்த்ர, ருத்ர மூர்த்திகளும் தாங்களே வாஸ்தவத்தில் மோக்ஷோபாயமன்று. அந்தந்த தேவதாஸ்தானங்களினால் தன் ஸங்கல்ப மாத்ரத்தால் அவ்வோ தேவதைகளின் கர்மானுகுணமாக நிறுத்தி தத்தத்தேவதா சரீரகனாய், அந்தராத்மாவாய் விளங்குநி பகவானிடம் உபாஸனரூப பக்தியோகமே உபாயம் என்றும், தேவதாந்தர ஸம்பந்தங்கள் மாத்ரமே கூட உபஜீவ்யம் என்பார்க்கு மோக்ஷம் கிடையாது என்பதையும், ஸர்வவேதபாகங்களிலும் விதிக்கப்பட்டுள்ள தேவதாந்தர பஜனத்தின் வாஸ்தவார்த்தம் அந்தர்யாமி ஆராதனமே என்றும் ஸர்வவேதார்த்தத் தெளிவிற்காக வேறுமார்க்கம் இல்லவே இல்லை என்று ஓதுகிறது. இதர ஸித்தாந்தங்களில் தான் தோன்றியாய் முடிவெடுக்கப்பட்ட அத்தனை உபாயங்களையும் உண்மை விளம்பிவேதபுருஷன் "நாந்ய: பந்தா: வித்யதேயநாய" என்கிற ஒரேவரியினால் தள்ளிவிட்டான். ஸர்வமதஸமரஸ வாதிகள், தேவதாந்தர பக்திமான்கள், ஆஸ்திக, நாஸ்திகர்கள், நாஸ்திக ஆஸ்திகர்கள் எல்லார்க்கும் நல்லதை எண்ணி வேதபுருஷன் பகவத் பக்தியோக மாத்ரமே மோக்ஷோபாயம்

அல்லாதவையாவும் அனர்த்த ஹேது என்று அருள் கொண்டு அருளினான். வேதம் எங்கும் தேவதாந்தர பக்தியை போதிக்கிறது. தேவதாந்தர பக்தி அநர்த்தம் என்று எங்கும் சொல்லவில்லை. இப்படி அந்வய வ்யதிரேகங்களால் ஸர்வதேவதைகளையும் உபாஸிக்கச் சொல்லும் வேதத்தின் திரண்ட கருத்தை உள்ளபடி அறியாமல் நம் போன்ற சில வைதிகர் தேவதாந்தர பக்தியை நரகஹேது என்று ஸித்தாந்திப்பது அத்யந்த பரிஹாஸ்யம் என்றுரைப்பார்க்கு ஸர்வவேதஸாரமான இப்புருஷஸூக்தம் தெளிவிக்கும் உண்மை இங்குள்ளது. தமஸ்ஸுக்கு மேலான வைகுந்தநாதனை உபாஸிப்பதைத் தவிர முக்திக்கு வேறு மார்க்கமில்லை என்று தீர்த்துச் சொல்லிமற்றைய தேவதைகள் உபாஸித்தாலும் முக்தி என்று காட்டிய சில தேவதாந்தர பக்திவித்யைகளிலும் அந்தந்த தெய்வங்களை சரீரமாக உடைய பகவானே மோக்ஷப்ரதன் என்று தெள்ளத்தெளிவான பக்திரூப த்யானமே மோக்ஷோபாயம் என்னும் மறைபொருளை இங்கு மறைக்காமல் உணர்த்துகிறான் பரம காருணிகனான வேதபுருஷன்.

ஆக முதல் மந்த்ரத்தால் பகவானே ஸர்வகாரணன் என்றும் ஸர்வசேஷி என்றும் தெரிவித்தான் வேதபுருஷன். இரண்டாம் மந்த்ரத்தில் வேறெந்த ப்ரமாணத்தாலும் அறியப்பட முடியாதவனான பரமபுருஷன் ஜாஜ்வல்யமான திருமேனியனாய் இருப்பவன். அவனிடம் அநந்யப்ரயோஜன பரமபக்திமாத்ரமே மோக்ஷோபாயம்; வேறெந்த உபாயமும் மோக்ஷோபாயமன்று என்று சொல்லிற்றாயிற்று.

இனி மூன்றாம் மந்த்ரம்.

பரம பதநாதனைப்பெற்று முக்திபெற பரமபக்தியே உபாயம் என்றால் இதுவெல்லாம் எட்டாக் கனியைப் பேசும் வேத புருஷனின் வெட்டிப்பேச்சோ. கைமுதலிழந்தார்க்கு வழியில்லையோ? பரதத்வத்தை இழந்தே போவதோ? வேதம் வேறு வழியறியாது வாய்மூடிற்றோ? ஸம்ஸாரிகளை பரமபுருஷன் எட்ட நின்று விலக்குவனோ? தன் உடைமைகளை வாரிக் கொள்ளாத உதாஸீனனோ? படைத்தவன் படைப்பெல்லாம் பாழாய்விட்டுப் பார்த்திருப்பனோ பரமபக்திக்குத்தான் நான் எங்கே சென்று முட்டிக்கொள்வேன்? விடை இதோ!

प्रजापतिः चरति गर्भे अन्तः अजायमानो बहुधा विजायते।
तस्य धीराः परिजानन्ति योनिं मरीचीनां पदमिच्छन्ति वेधसः।।

பதவுரை

ப்ரஜாபதி:	- பெருமான்
கர்பே அந்த:	- (கௌசல்யா, தேவகீ முதலான தாய்மார்களின்) கர்ப்பத்திற்குள்ளே
சரதி	- ஸஞ்சரிக்கிறான் (கருவாகி வளர்கிறான்) அன்றியும்,

அஜாயமாந: - பிறப்பில் பெருமான்
பஹுதா - பல்வேறான
விஜாயதே - பிறவிகள் கொள்கிறான்
தஸ்ய - அந்த கருணாமூர்த்தியினுடைய
யோநிம் - (அவதாரத்தின்) மூலத்தை (ரஹஸ்யத்தை)
தீரா: - மெய்ஞானிகள்
பரிஜாநந்தி - முற்றும் நினைக்கின்றனர்.
மரீசீநாம் - ஒளியுடைவானவர்களுடைய (நித்ய ஸூரிகளுடைய)
பதம் - நிலையை
வேதஸ: - (அந்த தீரர்களான) ஸூக்ஷ்மஜ்ஞர்கள்
இச்சந்தி - (ப்ரதிச்சந்தி) பெறுகிறார்கள்.

விளக்கவுரை- இந்த மந்திரத்தின் உள்ளுறைபொருளை ஸ்ரீ கீதையில் நான்காம் அத்யாயத்தில் "அஜோபிஸந் அவ்யயாத்மா" என்று தொடங்கி நான்கு ச்லோகங்களாலே ஸ்ரீகீதோபநிஷதாசார்யன் விரித்துறைத்தருளினான். இவ்வர்த்தங்களை ஸ்ரீ ஸ்வாமி தேசிகனும் அவதாரஸ்ய ஸத்யத்வம் அஜஹத்ஸ்வஸ்வபாவதா! பூத்த ஸத்வமயத்வம் ச ஸ்வேச்சாமாத்ரநிதாநத. தர்மக்லாநெனஸமுதய: ஸாதுஸம்ரக்ஷணார்தததா இதி ஜன்ம ரஹஸ்யம் யோ வேத்தி நாஸ்ய புநர்பவ:. என்று ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரத்திலே ஸங்க்ரஹித்தருளினார். அவதாரரஹஸ்ய சிந்தனம் அந்த ஜன்மத்திலேயே கடுக உபாய பூர்த்தியை விளைவித்து மோக்ஷம் தந்துவிடும் என்றும் அருளிச்செய்துள்ளார்.

ப்ரஜாபதி:- ஸர்வாத்மாக்களுக்கும் சேஷியான பகவான் அல்லனோ! தன் கைப்பொருள் பாழாக்க விடுவானோ!

கர்பே அந்த: சரதி "ஒருத்தி மகனாய் பிறந்து" என்னலாம் படிக்கு "தத: சத்வாதஸேமாஸே" என்றவாறு 12 மாதங்கள் பாபிசேதனனைப் போல் தானும் கர்ப்பவாஸம் செய்தருளி "கௌசல்யா அஜநயத்" என்றும் கௌசல்யா லோக பர்த்தாரம் ஸுஷுவே" என்றும் ஆபாஸ கர்ப்பத்திற்குள்ளே கருவாகி உருவாகி வெளிப் போந்தான் என்று லோகத்தார் 'சோபனம்' சொல்லவந்து பிறந்து பெருமிதப்பட்டுக் கொள்கிறான்.

அஜாயமாந: முதலும் முடிவும் இல்லாத முழுமூர்த்தியிறே! பாவப் பிண்டங்களுக்கிறே பிறப்பு தவிர்க்கப் போகாது! இவன்தான் நிர்விகார மூர்த்தி கண்டீரே!

பஹுதா - எந்நின்ற யோநிகளிலும் முகம் மலர்த்திவந்து பிறப்பானே எம்

அண்ணல்! வரைமுறை ஒன்று சொல்ல சக்தனோ நான் என்கிறான் வேதபுருஷன். தடுப்பார் இல்லையே! நீசப் பிறவியென்று சொன்னாலும் கேளானே! வேநராஜனின் பிணத்தினின்றும் கூடப் பிறந்தானே! பெரியவனின் தாழ்ச்சி நெஞ்சு பொறுக்கவில்லை! "எந்நின்ற யோனியுமாய் பிறந்தாய் என்று அறிந்தாரை வாய் அரற்றப்பண்ணி சிரிக்கும் தத்வமிறே! என்நான் செய்கேன்.

விஜாயதே- விவிதம் ஜாயதே, விசேஷேண ஜாயதே- விவிதம்- ஸமகாலத்திலேயே விதம்விதமாய் அவதரிப்பானே. சக்ரவர்த்திக்கு நான்கு திருமகன்களாய் வந்து ஸம்ஸாரத்தில் தலையிடுவானே! பலராம க்ருஷ்ணர்களாய் பலப்பல செய்வானே! ஆச்ரித ரக்ஷணத்தில் த்வரை பெருவீட்டின் அனந்தாஸனத்திலே நெருஞ்சிமுள்ளிட்டு அமர்ந்தால் ஒத்ததோ! அனைவரின் ஹ்ருதய கமலத்திலும் எழுந்தருளியிருக்க கோடி அவதாரங்கள் எப்போதும் கொண்டுள்ளானே!

விசேஷேண- ஸௌலப்ய ஸௌஸில்யாதிகள் பரமபதத்தில் கானத்துப் பூக்களாய் அநுபவிப்பார் இல்லாமல் கருகின இழவுதீர இம்மநநோய்க்கு ஒருபுது ரஸாயனம் தின்று பரமபதத்தின் மேன்மை சுணையாநப்பத்தியச் சோறு விலக்கி ஸம பங்க்தியிலே இங்கு உண்டு உடுக்க அவதரிக்கும் விசேஷம். ஏழையும் ஏதலனும், கீழ்மகனும், வேடுவச்சியும், வேண்டுமென அவதரிக்கும் விசேஷம்.

தஸ்ய- தாழ்ச்சியையே பெறப்பாரிக்கும் அவ்வாதியஞ்சோதியின்-

யோநிம்- அவதார ரஹஸ்ய வைபவத்தை இரண்டாம் மந்த்ரத்தில் பக்தியோகமே தவிர முக்திக்கு வேறுமார்க்கமில்லை என்று ஓதியதால் அஞ்சின பேர்க்கெல்லாம் பக்தியோகஸித்திக்கு அமுதினிய உபாயம் சொல்கிறான் வேதபுருஷன். அவதார ரஹஸ்ய சிந்தனம் இப்பிறவியிலேயே உபாஸகனுக்கு பக்தியோக பூர்த்தியை உண்டாக்கி மோக்ஷோபாயமாம்.

தீரா:- **"தீமதாம் அக்ரே ஸரா:"** என்று ஸ்ரீ கீதா பாஷ்யத்தில் (4-10) ஆசார்யர் அருளிச்செய்தார்.

பரிஜாநந்தி- சுற்றும், முற்றும் அறிந்து திளைக்கின்றனர்.

மரீசீனாம் பதம்- பரஞ்ஜ்யோதிஸ்ஸுடன் ஸாதர்ம்யம் உடைய ஒளியுடைவானவர்களான ஸூரிகளின் நிலையை- (ஒளிக்கொண்ட சோதியுமாய் உடன் கூடுவது என்று கொலோ! அடியார்கள் குழாங்களையே" என்றல்லவா சடகோபன் தவிப்பு. அவதார ரஹஸ்ய சிந்தனம் என்கிற இனிய உபாயத்தினால் நித்யஸூரிகளின் கோஷ்டியில் ப்ரவேசிக்க யோகிகள் வழிகண்டுள்ளனர்.

இச்சந்தி - தாதுக்களுக்கு அநேகார்த்தம் உண்டே! ப்ரதி என்ற உபஸர்க்கம் மறைந்து நிற்கிறது. ப்ரதீச்சந்தி பெறுகிறார்கள். ஆதித்யவர்ணனை பக்தியோகத்தினால் சென்றடைய அவனே தாழவந்து காட்டியருளிய அவதாரங்களின் ரஹஸ்ய சிந்தனம் ஸுகமான உபாயம். இதை யோகிகள் அறிந்து அநுஷ்டிக்கின்றனர் என்பது ஸாரம்.

இனி நாலாம் மந்திரம்

यो देवेभ्यः आ तपेति यो देवानां पुरोहितः।
पूर्वो यो देवेभ्यो जातः नमो रुचाय ब्राह्मये॥

பரமபுருஷன் தன் ஸௌலப்யாதிகளை தன்வாய்விட்டு தானே தமர்க்குச் சொல்ல தானே முயலும் பெரும் தன்மையை இந்த மந்த்ரத்தால் வேத புருஷன் தெளிவிக்கிறான். தன் அவதாரச் செல்வங்களை தமர்கள் இழக்காமல் அணிந்து உய்ய பிரானின் பாடு இவ்வாராம்.

யோ	- எந்த பரமபுருஷன் (பரம காருணிகன்)
தேவேப்ய:	- தைவப்ரக்ருதிகளான நல்லோர்க்கு (வால்மீகி பராசர, வ்யாஸ, சுகாதிகளுக்கு)
ஆதபதி	- தோற்றமாய் நிற்கும் சுடராகிறானோ
யோ	- (மேலும்) எந்த பரமபுருஷன்
தேவாநாம்	- தைவப்ரக்ருதிகளான பாக்யசாலிகளுக்கு
புரோஹித:	- முன் நின்று நன்மை செய்யும் ஆசார்யனோ
யோ	- எந்த பரமபுருஷன்
தேவேப்ய:	- தைவப்ரக்ருதிகளான நல்லோர்க்காக
பூர்வ:	- முன்னோனாய்
ஜாத:	- (பின்னானான் வணங்கும் சோதியாய்) அர்ச்சாவதாரங்களை எடுத்துள்ளானோ
(தஸ்மை)ருசாய	- அந்த பரஞ்ஜோதிஸ்ஸுக்கு
ப்ராஹ்மயே	- பர ப்ரஹ்மத்திற்கு
நம:	- நமஸ்காரம் ஆத்மாத்மீய ஸமர்ப்பணம்

விளக்கம்

மற்ற வேதமந்த்ரங்களில் ஓதப்பட்ட புருஷோத்தமனின் அதிசயங்கள் எல்லாம் இந்த மந்த்ரத்தில் பேசப்படும் அவன் செய்யும் உபகார அதிசயங்களுக்கு ஏகதேசம் என்று சிலிர்த்துப் போய் வேதபுருஷன் யவன் அவன் என்று நம் ஆழ்வார் மூன்று முறை ஆதரம் மிகுந்து ஆவ்ருத்தி செய்தவழகில் ய: என்று மூன்றுமுறை பேசக் காண்கிறோம்.

தேவேப்ய: ஆதபதி- விஷ்ணுதர்மத்தில் விஷ்ணுபக்தி பரோ: தேவ: விபரீத: ததாऽஸுர: என்ற ரீதியில் பரமவைஷ்ணவர்களான வால்மீகி, வ்யாஸாதி மஹர்ஷிகளுக்கு தோற்றமாய் நின்ற சுடராயிற்றே இவன். அவர்களுக்கு தன்னை காட்டியன்றோ உலகிற்கும் தன்னை சாச்வதமாக காட்டிக்கொடுத்துள்ளார். "கற்பார் இராமபிரானையல்லால் மற்றும் கற்பரோ" "கேட்பார்கள் கேசவன் கீர்த்தியல்லால் மற்றும் கேட்பரோ" என்றிறே தன்னை எம்பெருமான் தைவப்ரக்ருதிகளுக்கு ப்ரகாசிப்பித்துள்ளான்.

தேவாநாம் புரோஹித:- மஹரிஷிகளாய் உலகிற்கு உபதேசித்து விலகிநின்றது போதாதே! தைவப்ரக்ருதிகளான வைஷ்ணவர்கள் நிலத்தேவர்களிலே இவர்களுக்கு முன்னான நன்மை உணர்ந்து, ஊடுருவி உபதேசிக்க ஆசார்யராய் வந்து வந்து அவதரித்து லோகஸ்ருஷ்டியின் பரமப்ரயோஜனத்தைதான் அடைவன் அல்லனோ எம்பிரான்.

தேவேப்ய: பூர்வ: ஜாத:- பின்னானார் வணங்கும் சோதி என்று அர்ச்சாவதாரத்தை திருமங்கையாழ்வார் அருளிச் செய்வார். 'முன்னிவந்தவன் நின்றிருந்துறையும்' என்று ஸ்ரீ நம்மாழ்வார் அர்ச்சாவதாரத்தை அருளிச் செய்தார். இவ்வர்த்தத்தையே இங்கு மந்திரத்தில் காண்கிறோம். விஷ்ணுபக்தியுள்ளவர்களே தேவர்கள். ஸ்ரீகீதையிலும் "தைவீஸம்பத் விமோக்ஷாய" என்றருளினாறே. முமுக்ஷுக்களான தைவ ப்ரக்ருதிகளான ஸ்ரீ வைஷ்ணவர்கள் உய்வதற்க்காக முன்னமே ஆங்காங்கே அர்ச்சாவதாரம் கொண்டு அருளி வைஷ்ணவர்களை வாரிப்பிடித்து வைகுந்தம் ஏத்துவனே எம்பிரான்.

ப்ராஹ்மயே ருசாய நம:- பரமோபகாரகனான பரப்ரஹ்மத்தினுடைய சுடர்மிகுந்த இந்த கல்யாண குணத்திற்கு நமஸ்காரம் என்று க்ருதக்ஞதா நிவேதனம் ஆகவும் ஆம்.

ப்ரஹ்ம என்றால் வேதம் என்றும் பொருள்- அப்போது வைதீக ஞானப்பேரொளியான இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு நமஸ்காரம் என்றாகவும் ஆம். அன்றிக்கே ரிஷிப்ரவர்த்தகனாகவும், ஆசார்யர்களாகவும் அர்ச்சாவதாரங்களாகவும் இவன் நல் முயற்சி செய்ய "அதை ஊற்றமுடையாய் என்றார்போலும் "ப்ராஹ்மயே" ப்ருஹத்வாத் ப்ருஹ்மணத்வாத் "பெரியாய்" என்றார்போலும் ருசயே - உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே என்றார்போலும், சதுர்த்தி விபக்தியினால் சேஷியின் பொருட்டே அநுஸந்தித்து என்று தியானித்து நமஸ் சப்தத்தினால் ஆத்மாத்மீய ரக்ஷண பரன்யாஸத்தை அநுஸந்தித்ததாயிற்று.

இவ்வாறெனில் இரண்டாம் மந்த்ரத்தில் பக்தியோகத்தை உபாயம் என்று உபதேசித்து, மூன்றாம் மந்த்ரத்தினால் அதை கடுகஸாதிக்க அவதார ரஹஸ்ய சிந்தனத்தை உபதேசித்து நான்காம் மந்த்ரத்தில் பக்தியோகத்திற்கு அங்கமான சரணாகதியை

உபதேசித்தாயிற்று. அல்லது பக்தியோக ஸ்தானத்திலே பகவானை நிறுத்தும் ஸ்வதந்த்ர ப்ரபத்தியையே உபதேசித்துள்ளது என்றும் கொள்ளலாம். இந்த மந்த்ரம் பகவான் தன்னுடைய ஸௌலப்ய வேகத்தில் தன்னை ஆசார்யர்களாகவும் அர்ச்சாவதாரங்களாகவும் காட்டுவதை உணர்த்துவதால் (உபேய ஸௌலப்யத்தைப் போல்) உபாய ஸௌலப்யம் இவ்வாறும் என்று எளிய ப்ரபத்திஸ்வரூபத்தின் அளவும் நீளும் பக்தியோகஸ்வரூபத்தை உணர்த்திற்கும்.

இனி ஐந்தாம் மந்த்ரம்:- நான்காம் மந்த்ரத்தில் நம: சப்தத்தினால் சரணாகதி வெளியிடப்பட்டது. இந்த மந்த்ரத்தில் இந்த நம: சப்தார்த்தமான சரணாகதியை அறிந்தார் (அறிதல் அநுஷ்டானபர்யந்தமாம்) களுடைய நிரதிசய மாஹாத்ம்யம் உணர்த்தப்படுகிறது.

रुचं ब्राह्मं जनयन्तः देवा अग्रे तदब्रुवन् ।
यस्त्वैवं ब्राह्मणो विद्यात् तस्य देवा असन् वशे ॥

பாஹ்யம்	- ப்ரஹ்ம ஸம்பந்தமான -(வைதீகமான)
ருசம்	- ஒளியை (ஞானத்தை- ஸம்ப்ரதாயத்தை அதாவது ஆத்மஞானத்தை)
ஜநயந்த:	- உண்டாக்குகின்றவர்கள் (ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்கள்)
ப்ராஹ்மம்	- ப்ரஹ்மத்தினுடைய
ருசம்	- தேஜஸ்ஸை
ஜனயந்த:	- உலகில் பிறக்கவைக்கின்றவர்கள் (அதாவது ப்ரஹ்மத்தை தங்களுக்காக உலகில் அவதரிக்க செய்கின்ற மஹா பாகவதர்கள்)
தேவா:	- தைவப்ரக்ருதிகளான மஹா பக்திமான்கள் ட
தத்	- அந்த (நமஸ் சப்தார்த்தத்தை அல்லது நமஸ்காரத்தை)
அப்ருவன்	- (அறிவித்தேன் ஆழ்பொருளை) என்று உலகிற்கு அறியச் சொன்னார்கள்.
ய: ப்ராஹ்மண:	- எந்த ப்ரஹ்மஞானி
ஏவம்	- இவ்வாறாக
வித்யாத்	- (இந்த நம: சப்தரூப சரணாகதியை) அறிகிறானோ அநுஷ்டிக்கிறானோ
தஸ்ய	- அந்த மஹானுடைய
வசே	- அதீனத்தில்
தேவா:	- எல்லாத் தெய்வங்களும்

அஸன் - ஆயினர் (இருக்கிறார்கள் என்று பொருள்)

விளக்கவுரை

நான்காம் மந்திரத்தில் வெளியிடப்பட்ட சரணாகதியினை அநுஷ்டித்த பாக்ய சாலிகளின் மஹாத்ம்யம் தேவர்க்கும் எட்டவொண்ணாததாய் அவர்களை அடிமை செய்யவைக்கும் என்று ஓதப்படுகிறது. ஶ்ரஷ்டு ருத்ர் என்ற பதங்கள் ப்ரஹ்மத்தினுடைய அழகான தேஜஸ்ஸையோ அல்லது வேத ஸம்ப்ரதாயத்தையோ சொல்லவல்லது.

ஜநயந்த:- என்றபதம் பரித்ராணாய ஸாதூநாம் என்ற பகவத் வசனப்படி பகவானை அவதரிக்க வைக்கும் மஹான்களைச் சொல்கிறது. அல்லது வேதத்தின் சுடரொளியான வைதீக ஸம்ப்ரதாயத்தை இந்த உலகில் மறையும் போதெல்லாம் மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆசார்யர்களைச் சொல்கிறதாகவும் ஆம்.

தேவா:- **"விஷ்ணுபக்தி பரோதேவ: விபரீத: ததாஸு"** என்று முன்பே கண்டபடி உலகில் நடமாடும் தெய்வங்களான பரம வைஷ்ணவ பாகவத அக்ரேஸரர்களைச் சொல்கிறது.

தத்- முன் மந்த்ரத்தில் வெளியிடப்பட்ட நம: என்றசொல் நபும்ஸகலிங்கமானதால் தத்ஸப்த: தத: - சரணாகதி ஸர்வபல ஸாதனமான, சரணாகதி.

அப்ரூவன்- உலகறியச் சொன்னார்கள் அன்றிக்கே தாங்கள் நம: சப்தத்தைச் சொல்லி சரணாகதியை அநுஷ்டித்தார்கள்

ய:- எந்த மஹான் பாக்யசாலி

ஏவம் வித்யாத்- இவ்வாறாக பெரியோர்கள் சரணாகதியை பரமஉபாயமாக அனுஷ்டித்ததை அறிவாரோ!

து- என்பது ய: து, ஏவம் து, ப்ராஹ்மணஸ்து வித்யாத்து என்று நான்கு பதத்திலும் தனித்தனியே ருசித்தவாறு அந்வயித்தாலும் அர்த்த கௌரவத்தை விசதமாக்கிக் கொடுக்கும்.

ய: து- யாருக்கு இந்த சரணாகதியில் நல்லறிவு கிடைக்கும் என்று சொல்லப்போமோ?.

ஏவம் து - இதுவன்றோ சாஸ்த்ரார்த்த ஸாரம்.

ப்ராஹ்மணஸ்து- ப்ரஹ்ம அணதி இதி ப்ராஹ்மண: எக்குலத்தவராயினும் ப்ரஹ்மத்தை இந்த சரணாகதியினால் அடைபவர் ப்ரஹ்மவித்துதான்.

வித்யாத் து- அறிந்தவன் அன்றோ. நம: சப்தத்தால் உபாய உபயேங்களை அன்றோ நன்கு அறிந்துள்ளான். அறிவது அநுஷ்டான பர்யந்தமாகிவிடுமே. அநுஷ்டான பர்யந்தமல்லாத அறிவு அறியாமைக்குச் சமமே. ஆகவே சரணாகதியை அறிந்த அநுஷ்டித்தவரைச் சொல்கிறது.

தஸ்ய தேவா: அஹந்வசே- ப்ரபந்நனுடைய மாஹாத்ம்யம் இப்படியிறே. ஸம்ஸாரத்தில் ஊழிக்காலம் முன்னர் இறை கொண்ட தெய்வங்களெல்லாம் ப்ரபன்னனுக்கு இப்போது அஞ்சி அநுக்ரஹத்தைத் தேட வேண்டி சொல்லியதைச் செய்ய துடித்துக்கொண்டிறே இருக்கும்.

ஸத்கர்ம நிரதா: சுத்தா; ஸாங்க்ய யோகவித: ததா।
நார்ஹந்தி ப்ரணஸ்தஸ்ய கலாம் கோடிதமீமபி।।

த்ரவந்தி தைத்யா: ப்ராணமந்தி தேவதா:. என்றிறே ப்ரபந்நனின் மாஹாத்ம்யம். ப்ரபன்னனின் மஹிமையில் கோடியில் ஓரம்சத்திற்கு ஆகமாட்டானே பக்தியோகியும், அசுரசக்திகள் ப்ரபன்னனைக் கண்டு கால் பிடரியில் பட ஓடுமே. தேவதைகள் அடியேந் என்று மண்ணைக் கவ்வி கும்பிடுவரே.

இனி ஆறாம் மந்த்ரம்

இந்த மந்த்ரத்தை ஓதித்தந்த வேதபுருஷனுக்கு எத்தனை நன்றி செய்தும் ப்ரஹ்மவித்துக்களின் நெஞ்சம் த்ருப்தி அடையாது. பரமபுருஷனை ச்ரிய: பதி என்று அடையாளம் காட்டும் இந்த மந்த்ரத்தை நம் ஆசார்யர்கள் வைஷ்ணவத்தின் உயிர்நாடியாக அல்லவா அறிந்து வைத்துள்ளனர். பரதத்வநிர்ணயம் செய்யும்போது எம்பிராஈ நிஸ்ஸம்டசயமாய் காட்டும் இந்த மந்த்ரத்தை புல்லரித்துப்போய் பேசும் நம் ஆசார்ய ஸ்ரீஸூக்திகள்தான் எத்தனை எத்தனை! மறைக்கும் வேதமே! நீ மறைக்காமல் ஓதித்தந்த இந்த வாக்கு அல்லவா எங்களை அன்னையையும் பிதாவையும் அறிந்த மஹான்களாக்கி வைத்துள்ளது. வேதபுருஷனே உன்கருணைக்கு எல்லை இல்லவே இல்லை.

திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ நிற்பவன் திருவடிகளிலே காலத்தைக் கடந்து ஸர்வசேஷவ்ருத்தியையும் ப்ரார்த்திக்கும் மந்த்ரம்.

ह्रीः चते लक्ष्मीश्च पत्न्यौ। अहो रात्रे पार्श्वे। नक्षत्राणि रूपं।
अश्विनौ व्यात्तं। इष्टं मनिषाण। अमुं मनिषाण। सर्वं मनिषाण॥

எம்பிரானே
ஹ்ரீ: ச - பூமிப்பிராட்டியும்

லக்ஷ்மீ: ச	- பெரியபிராட்டியும்
தே	- உன்
பத்ந்யௌள	- தேவிகள்
அஹோராத்ரே	- பகலும் இரவும் (காலம்)
பார்ச்வே	- உன் அருகில் (நீ இட்ட வழக்காம்)
நக்ஷத்ராணி ரூபம்	- அழிவில்லாப் பொருள் யாவும் உன் வடிவே
வ்யாத்தம்	- (i)எடுத்த (அவதாரங்கள்) எல்லாம் (ii) (அல்லது) விரித்துரைத்ததெல்லாம்
அச்வினௌள	- (i)அருமருந்தன்ன தெய்வவடிவங்கள் (ii) (அல்லது) மருந்தன்ன தெய்வங்கள்
இஷ்டம்	- எங்களுக்கு இஷ்டமான ஸம்ஸார நிவ்ருத்தியை (அல்லது) உனக்கு இஷ்டமான எங்கள் ஸம்ஸார நிவ்ருத்தியை)
மநிஷான	- ஸங்கல்பய அநுக்ரஹிக்கவேணும்.
அமும்	- இந்த உன் சரணாரவிந்தங்களை
மநிஷாண	- ஸங்கல்பய- அநுக்ரஹிக்கவேணும்.
ஸர்வம்	- ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவித கைங்கர்யங்களையும்
மநிஷாண	- ஸங்கல்ப- அநுக்ரஹித்தருளவேணும்.

விளக்கவுரை

பரமபுருஷனையும் ச்ரிய: பதி என்று அடையாளம் காட்டி, பரமபுருஷார்த்தத்தையும் ப்ரார்த்திக்கும் வகையை காட்டுகிறது இந்த உயர்ந்த மந்த்ரம். ப்ராப்யநிஷ்கர்ஷம் பண்ணுகிறது. ச்ரிய: பதியே ப்ராப்யன். திருமாலவன் திருவடிகளிலே ஸர்வ கைங்கர்யங்களும் ப்ராப்யம்.

ह्रीयते अनया इति ह्रीः- நம் பாபத்தைத் தொலைப்பவள் ஆனபடியாலே **ह्री** ஹ்ரீ: என்கிற பிராட்டி. பத்ந்யௌள என்று மேலே பதம் உள்ளது. 'விஷ்ணுபத்நீம் மஹீம் தேவீம் மாதவீம் மாதவப்ரியாம் என்ற பூஸூக்த வாக்யப்படி இந்த பிராட்டி பூமிப்பராட்டி **हरतीति ह्रीः** பகவான் இவனிடம் மிகவும் விளையாடுகிறான். விஹரதி- அதனால் **ह्री** கிடந்திருந்து நின்றளந்து கேழலாய் கீழ்புக்கிடந்திடும் தடம் பெரும் தோளாத்தழுவும் பாரென்னும் மடந்தையை மால்செல்கின்றமால் என்று ஸ்ரீ நம்மாழ்வார் (2-8-7) அருளிச்செய்தரீதியில் பூமிப்பிராட்டியோடு எம்பிரானுக்கு பெருவிளையாட்டுகள் மிகை.

लक्ष्मीः- லக்ஷ்ம என்ற சொல் அடையாளம் என்று பொருள் படும். பகவானுக்கு

இவள் 'அடையாளம்' ஆதலால் இவள் லக்ஷ்மீ- திருவில்லாத்தேவரை வேதம் தெய்வமாகக் கொள்ளுமோ?- திருமடந்தை மண்மடந்தை இருபாலும் திகழ, நம் தீவினைகள் போயகல இருக்குமிறே பரதத்வம். இவ்வழகு இல்லாததெல்லாம் அவரதத்வமிறே.

पत्न्यौ- पत्युः नो यज्ञसंयोगे इति नकारान्तोऽन्तादेश- உலகரக்ஷணம் என்ற யக்ஞத்தில் பிராட்டிமார் பகவானுக்கு ஸஹதர்மசாரிணீகளாயிற்றே.

அஹோராத்ரே பார்ச்வே- அஹோராத்ரம் என்பது சாந்தஸமாய் அஹோராத்ரே என்றாகில் பகவானுக்கு மருங்கில் பிராட்டிமார் பிரிவில்லாதிருப்பர் என்று பொருள் அஹ: ச ராத்ரி: ச அஹோராத்ரே என்றுரைத்தால் காலம் பகவானுக்கு அருகில் கைகட்டி நிற்கும் என்று தொனிக்கும்.

நக்ஷத்ராணி ரூபம்- ந க்ஷரந்தீதி நக்ஷத்ராணி - அழிவில்லாப் பொருள்கள் யாவும் புருஷோத்தமனின் உருவமே. ப்ரக்ருதி, காலம், சுத்தஸத்வம் என்னும் மூன்று அசேதனங்களும் அறிவில்லாப் பொருள்களே. த்ரிவித சேதன வர்கங்களும் அழிவில்லாப் பொருள்களே. இவையெல்லாம் பகவானின் உருவமே. நக்ஷத்ராணி என்ற பஹுவசனமும் ரூபம் என்கிற ஏகவசனமும் இங்கு ஒரே வாக்யமாக உள்ளது. மிச்சம் மீதியின்றி அனைத்து சேதனாசேதனங்களும் பகவானின் மொத்த ஒருவடிவே என்பது ஸ்வாரஸமான பொருள். ஸ்வரூபம் என்ற சொல் ஆத்மஸ்வரூபத்தையும் ரூபம் என்ற சொல் திருமேனியையும் குறிக்கும் என்பது ப்ரஸித்தம் ஆக இங்குள்ள ரூபம் என்கிற சொல் சரீரம் என்ற பொருளைத் தருகிறது. அழிவற்ற சேதனாசேதனங்கள் யாவும் பகவானுக்கு சரீரம் என்று வைதீக ஸித்தாந்தம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டதாயிற்று. ஆக 'எம்பிரானே! எப்பொருளும் உன் உருவே' என்கிறான் வேத புருஷன் .

அச்விநௌ வ்யாத்தம்- மருந்தளிக்கும் தேவர்களை அச்விநௌ என்கிறது. வ்யாத்தம் என்ற பதத்திற்கு 'எடுத்தது' என்றோ விரித்து உரைத்தது' என்றோ பொருள். 'எடுத்தது' என்று பொருளாகில் 'எதை எடுத்தது' என்று ஆகாங்க்ஷா உண்டு. இதற்கு முன் ரூபம் என்று உள்ளதே. அதைக் கொண்டு 'எடுக்கப்பட்ட அவதாரங்களை' என்று அர்த்தம் கொண்டு அவையாவும் அச்விநௌ- அமுதன்னமருந்தளிக்கும் தெய்வத் திருவுருவங்கள் அதாவது நக்ஷத்ராணி ரூபம் என்ற வாக்யத்தில் சேதனாசேதனங்கள் யாவும் பகவானுக்கு சரீரம் என்றான். விசேஷமாக பகவான் எடுத்துக்கொள்ளும் அவதாரத் திருமேனிகள் ஸம்ஸாரிகளுக்கு அருமருந்தளிக்கும் தைவிக உருவங்கள் என்று தெரிவிக்கிறான். உலகில்யாவும் புருஷோத்தமனின் வடிவே என்று கொண்டால் கண்ணில் படும் எதுவும் கடவுளாகத் தொழப்பட்டால் நன்மையாமோ? என்று கேள்வி பிறக்கிறது. அதற்கு பதில்தான் 'அச்விநௌவ்யாத்தம்' பகவான் எடுத்துக்கொண்ட அவதாரத்திருமேனிகளே தொழுவார்க்கு நன்மைசெய்யும் அருமருந்தன்ன

தெய்வத்திருவுருவங்கள். ஸம்ஸாரவ்யாதிக்கு மருந்து எம்பெருமானின் திவ்யமங்கள விக்ரஹங்களே.

ப்ரதர்தனாதி வித்யைகளால் இந்த்ராதி தெய்வங்களை உபாஸிக்க விதித்துள்ளது. இந்த்ராதி தெய்வங்கள் திவ்யமங்கள விக்ரஹம் உடையவை அல்ல. இந்த்ராதி சரீரகபரமாத்ம உபாஸனமும் ப்ராபகம் அதாவது மோக்ஷமளிக்கும். முக்தியில் ப்ராப்யம் திவ்யமங்கள விக்ரமே. இந்த்ராதி சரீரங்களுக்கு அந்தர்யாமியாக பகவானை உபாஸிக்கின்றவர்களுக்கு முக்தியைப் பெறுவதில் கால விளம்பம் ஏற்படலாம். திவ்யமங்கள விக்ரஹத்தையே பற்றுவார்க்கு அந்த ஜன்மத்திலேயே மோக்ஷம். இதையும் அவதாரரஹஸ்ய சிந்தனம் பண்ணுவார்க்கு அந்த ஜன்மத்திலேயே மோக்ஷம் என்று ஸ்ரீகீதையில் அருளிச்செய்தான். ஆக 'அச்விநெள வ்யாத்தம்' என்பதால் 'எல்லாம் பகவானே' என்றால் எந்தத் தெய்வத்தையும், எது கண்ணில்பட்டதோ அதைத் தொழுவதும் பகவானுக்கே சேரும் என்ற வாதத்தைத் திருத்தி எம்பெருமானின் அவதாரத்திருமேனிகளான சுபாச்ரய விக்ரஹங்களே ஸம்ஸாரவ்யாதிக்கு திவ்யமான மருந்தாம் தைவிகமான உருவங்கள் என்று தெளிவித்தான் வேதபுருஷன். 'அச்விநெள' என்கிற த்விவசநஸ்வாரஸ்யம், ப்ராபகத்வம் போல் ப்ராப்யத்வமும் அதாவது இரண்டு ஆகாரங்களும் சுபாச்ரய திருமேனி ஒன்றிற்கே உண்டு என்று குறித்ததாயிற்று. 'ப்ராப்யத்வ உபாய பாவெள சுபஸுபகத்நோ:' இத்யவாதீத் த்ருதியே என்று தாத்பர்யரத்நாவளியில் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் திருவாய்மொழியின் மூன்றாம்பத்தின் ஸாரத்தை ஸங்க்ரஹித்தருளினார். அதாவது உபாயத்வமும் உபேயத்வமும் ஆக இரண்டும் திவ்யமங்கள விக்ரஹத்திற்கே உள்ளது என்று. இவ்வர்த்தம் 'அச்விநெள' என்கிற த்விவசந ப்ரயோகத்தில் தொனிக்கிறது. மேலுள்ள 'வ்யாத்தம்' என்பது ஜாத்யேக வசநம். பர, வ்யூஹ, விபவ, ஹார்த, அர்ச்சா திருமேனிகள் யாவும் லக்ஷ்யம். வ்யாத்தம் என்றால் விரித்துரைத்தது என்று பொருள்கொண்டால் பகவத் விஷயம் யாவும் மருந்தாம். இனி ப்ரார்த்தித்தால் ஒழிய மோக்ஷபுருஷார்த்தம் கிடையாது என்று திருவுள்ளப்பட்டு வேதபுருஷன் அநிஷ்டநிவ்ருத்தியையும் இஷ்டப்ராப்தியையும் ப்ரார்த்திக்கிறான்.

இஷ்டம் மநிஷாண- மநிஷாண என்றால் ஸங்கல்பய என்றோம். நீ ஸங்கல்பிக்க வேணும். 'உண்ணிலாவிய ஐவரால்' பதிகத்தில் நம்மாழ்வார் கதறியது போல ஸம்ஸாரநிவ்ருத்தி அதாவது அநிஷ்ட நிவ்ருத்தி நம் இஷ்டம் நம் ஸம்ஸார நிவ்ருத்தி பகவானுக்கும் இஷ்டம். இதற்காகவன்றோ ஜகத் ஸ்ருஷ்டியாகிற் பெருந்தொழில் செய்கிறான் பகவான். எம்பிரானே உமக்கு இஷ்டமான என் ஸம்ஸார நிவ்ருத்தியை நீயே ஸங்கல்பிக்கவேணும் என்று ப்ரார்த்தனை.

அமும் மநிஷாண- திவ்யமங்கள விக்ரஹத்தில்தான் இந்த ப்ரார்த்தனை நடையாடுகிறது. 'அமும்' என்று சரணாரவிந்தயுகளத்தை 'இதை' நீ அடியேனுக்கு ஸங்கல்பிக்க வேண்டும் என்று ப்ரார்த்தனை. திருவடிகளிலே என்ன வேண்டும்

என்றும் ப்ரார்த்திக்க வேண்டாமா? அதுதான் இறுதியான ப்ரார்த்தனை. ஸர்வம் மநிஷாண எல்லாம் அருள வேண்டும். ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவிதகைங்கர்யங்களையும் அருளவேண்டும். எம்பிரானே நீயும் திருமகளும் மண்மகளும் சதிராக எழுந்தருளியிருக்க, அடியேன் கைங்கர்யம் செய்து உம்மை உகப்பிக்க காலதத்வமும் அடியேனுக்குப் போதாது. எவ்வித அடிமையையும் இவ்வளவுதானா என்றிருப்பேன். அடியேனால் நீர் எல்லா உகப்பும் பெறவேணும். இன்னம் செய்யேனோ? இன்னம் செய்யேனோ என்று துடித்திருப்பேன். இவையெல்லாம் நீஅருளவேணும்.

இவ்வாறாக இந்த உத்தரானுவாகத்தில்

முதல் மந்த்ரத்தில் - எம்பிரானே ஜகத்காரணன் என்றோதினான். வேதபுருஷன் இரண்டாம் மந்த்ரத்தில் - அவனை உபாஸிப்பதைத் தவிர முக்திக்கு உபாயம் வேறில்லவே இல்லை என்கிறான். மூன்றாம் மந்த்ரத்தில் - பகவானை உபாஸிப்பதில், இந்த ஜன்மத்திலேயே முக்தியை ஸாதிக்க அவதாரரஹஸ்ய சிந்தனம் பரம உபகாரம் என்ற ஸூக்ஷ்மத்தை வெளியிட்டான். நான்காம் மந்த்ரத்தில் - விபவாவதாரங்களாகவும், ஆசார்யர்களாவும் அர்ச்சாவதாரங்களாகவும் எம்பெருமான் அவதரித்தருளி வைதிக ஸம்ப்ரதாயத்தை ரக்ஷித்தருளுகிறான். அவனிடத்தில் ஆத்மஸமர்ப்பணம் பக்தியோகதுல்யம் என்றான். ஐந்தாம் மந்த்ரத்தில் ஆத்மஸமர்ப்பணமாகிற ப்ரபத்தியை அனுஷ்டிக்கும் மஹான்களின் மஹிமை தேவர்களையும் அடிமை கொள்ளும் என்றான்.

ஆறாம் மந்த்ரத்தில் திருமகளும் மண்களும் விரும்பும் தெய்வமே பரதத்வம் என்று உலகுக்கு பரதத்வத்தை அடையாளம் காட்டி, பரமோபகாரம் செய்து ஸர்வவேதவாக்யங்களையும் மறைவின்றி நமக்கு பொருள் கொள்ள வழிகாட்டி, ப்ரார்த்தித்தால் அன்றி பரமபுருஷார்த்தம் கிடையாது என்பதைக் காட்ட, எதை எப்படி ப்ரார்த்திக்க வேண்டும் என்று பெருகும் அன்போடு ஸர்வவேதஸாத்தை முடித்தருளினான் வேத புருஷன். இந்த புருஷஸூக்த உத்தர நாராயணானுவாகத்தில் எல்லாம் உள்ளது. இதை விரித்துரைக்கில் வேறொன்றும் வாசிக்க வேண்டாதபடி கடலை தன்னுள்ளே அடக்கிய கடுகு இது என்று வியக்க வேண்டியுள்ளது.

★ ★ ★ ★ ★ ★

श्रीः

श्रीमते रङ्गरामानुजमहादेशिकाय नमः

ஓரொன்றுதானே அமையாதோ

(ஸ்ரீ உ. வே. வித்வான் வடுவூர் வீரராகவாச்சார்ஸ்வாமி)

ஸ்வாமி தேசிகன் க்ரந்தங்களாகவும் ஸ்தோத்ரங்களாகவும் பல பல செய்து ஸம்ப்ரதாயத்திற்கு உபகரித்துள்ளார். இதில் ஏதேனுமொன்றைப்பற்றி அதன் அர்த்த விசேஷத்தை நானும் நினைத்தாலே அதுவே நமக்கு இங்கு இருக்கும்வரை வாழ்வாகலாம் என்பர் பெரியோர்.

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்றச்சொன்ன பழமொழியுள்
ஓரொன்றுதானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப்போமளவும் வாழ்வு.

ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் அனைவரும் போற்றும் ஓர் (பெரிய) உயர்ந்த ஸ்தோத்ரம் பாதுகா ஸஹஸ்ரம். நம் ஆச்ரமத்தில் ஆசார்யர்கள் சிஷ்யர்களுக்கு மந்த்ரோபதேசத்திலும் சேர்த்துப்போருமது. தம் தம் இஷ்டபூர்த்திக்காக சில விசேஷ ஸ்லோகங்களை பாராயணமாகவோ, ஜபம் செய்தோ பலன் அடைய உதவுவது. 1000 சுலோகங்கள். முப்பத்திரண்டு உட்பிரிவுகள்-பத்ததிகள் என்று பெயர் அவற்றுள் அபிஷேக பத்ததி பற்றி அறியலாம். ஆசார்ய வள்ளலாம் ஸ்ரீமதாண்டவன் ரங்கராமாநுஜ மஹாதேசிகனின் ஸப்ததி பூர்த்தி ஸமயம் அவருக்கு பல்லாண்டுபாடி அபிஷேகபத்ததியை அறிவது போரப்பொருத்தம்.

தந்தையின் வாக்கைக்காக்க வனவாஸம் சென்றார் ஸ்ரீராமன். சித்ரகூடத்தில் வசித்தார். தஸரதர் ஸ்வர்கமடைந்ததால் அயோத்தியில் பரதன் முடிசூடவேண்டும். பரதனுக்கு இஷ்டமில்லை. சித்ரகூடம் சென்று ஸ்ரீராமனிடம் பாதுகைகளைப்பெற்று அவற்றுக்கு அபிஷேகம் செய்வித்தான். அவற்றின் ப்ரதிநிதியாக, ஸேவகனாக ராஜ்யத்தை நடத்தினான். பாதுகைகளுக்கு அப்போது நடந்த அபிஷேகத்தைப்பற்றிய ஆசார்யவள்ளலின் அநுபவ ப்ரவாஹமே அபிஷேக பத்ததி.

இந்த பத்ததியில் முப்பது சுலோகங்கள் உள்ளன. அவற்றிலிருந்து நமக்கு கிடைக்கும் அர்த்த விசேஷங்கள் - ஸாரார்த்தங்கள்.

1) பாதுகாபட்டாபிஷேகம் என்பது எம்பெருமான் திருவுள்ளம்.

2) எம்பெருமானது அடியார்களும் பாதுகாபிஷேகத்தை ஆசைப்பட்டனர்.

3) ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் என்றபடி எம்பெருமானே தேவாதிதேவன் அவனது ப்ரதிநிதியே பாதுகாதேவி.

4) நில்லெனப்பின்தொடர்ந்தார் இளையபெருமாள். முடிசூடமறுத்தான் பரதாழ்வான். மேற்படி விஷயங்ளில் ராமனது சொல்லை இருவரும் கேட்கவில்லை. பாதுகாதேவி ராமனது எண்ணப்படி அயோத்திக்கு மீண்டு அரசேற்றதால் அவர்களிருவரையும் மிஞ்சினாள்.

5) ப்ரஹ்மா த்ரிவிக்ரமாவதாரத்தில் பெருமாளின் திருவடிகளுக்கு அபிஷேகம் செய்தார். ப்ரஹ்மபுத்ரராம் வஸிஷ்டரோ திருவடிநிலைகளுக்கு அபிஷேகம் செய்தார்.

6) பாதுகாதீர்த்தம் (அபிஷேகதீர்த்தம்) பட்ட பூமியையெல்லாம் மிகப் புனிதமானது.

7) ராமாயணம் செய்த வால்மீகி அதற்கும் முன்பே அபிஷேக ஸமயத்தில் பாதுகையை துதித்தார். பாதுகையைத்துதித்த பலனே ராமாயணம் செய்யும் பாக்யம் கிடைத்ததாம்.

8)பாதுகாபிஷேகத்தால் ஸந்தோஷமடைந்தாள் ராமனைப்பிரிந்துவாடிய பூமிதேவி.

9) அபிஷேகம் செய்துகொண்ட பாதுகாதேவி ஜனங்களுக்கு இஷ்டத்தைப்பூர்த்தி செய்யக்கூடிய காமதேனு, கல்பவிருக்ஷம் போன்று இருந்தாள்.

10) குலகுருவாம் வஸிஷ்டர் போன்ற மஹர்ஷிகளின் லோகக்ஷேமத்தை ஆசைப்படும் வ்ரதங்களின் பலனே பாதுகாராஜ்யம்.

11) பாதுகாபிஷேகத்தால் ஜனங்களுக்கு வைதிகமார்கத்தில் சிரத்தையிருந்தது.

12) அரசர்களுக்கு நடத்தும் அத்தனை வைபவங்களுடனும் பாதுகாபிஷேகமும் நடந்தது.

13) குலகுருவான வஸிஷ்டர் பல ராஜஸபைகளைக் கண்டவர். அவை எல்லாவற்றிலும் பாதுகாதேவி நடத்திய ராஜஸபை பெருமையுடையதாயிருந்தது.

14) அபிஷேகம் ஏற்ற பாதுகாதேவி எம்பெருமானது திருவடிகளைத்தாங்கும் அந்தஸந்தோஷத்தையே ஏற்றுருந்தாள். எங்கிருந்து செய்தாலும் பகவத்கைங்கர்யம் (ரசிகர்களுக்கு) ஸந்தோஷத்தையே தரும்.

உட்பொருள்

ஆழ்வாரது திருநாமமான ஸடாரி என்பதை பாதுகையும் ஏற்கிறாள். ஆதலின் பாதுகையைக்குறித்து செய்யப்பட்ட ஆயிரம் ஆழ்வாரது விஷயமாகவும் ஆகலாம். பாதுகை என்றால் ஆசார்யனும் ஆவான் . ஆதலின் இந்த ஸ்தோத்ரம் ஆசார்யனைப்பற்றயதாகவும் கொள்ளலாம். ஆதலின் பாதுகா ஸஹஸ்ர ஸ்லோகங்களுக்கு ஸந்தர்பத்திற்கேற்றபடி ஆழ்வார் விஷயமாகவும் ஆசார்ய விஷயமாகவும் ஸ்வாபதேசம் பொருள் சொல்வதுண்டு.

அபிஷேகபத்ததி முதல் சுலோகம்

पाहि नः पादुके यस्या विधास्यन् अभिषेचनम् ।
अभिषेचनिकं भाण्डं चक्रे रामः प्रदक्षिणम् ॥

சுலோகப்பொருள்:-

பாதுகாதேவி! வனவாஸத்திற்கு கிளம்பிய ராமன் தன் ப்ரதியாக உனக்கு அபிஷேகம் நடக்கவேணுமென நினைத்தார். அதற்காக அபிஷேக தீர்த்தம் வைக்கப்பட்டிருந்த கலசத்தை ப்ரதக்ஷிணமாக வந்தார்.

ஆழ்வார் விஷயமான பொருள்:-

பகவத் பாதுகை எனப்படும் ஆழ்வாரே! உமக்கு எம்பெருமான் கொடுத்த ஏற்றத்தைப்பாரீர். கலியுக ஆரம்பத்தில் விஷ்வக்ஸேனரின் அம்ஸமாக நீர் அவதரித்து விஷ்வக்ஸேனராய் திருப்புளியடியில் மந்த்ரோபதேஸம் செய்விக்கப்பட்டு லோக-உபகாரத்திற்க்காக ஆழ்வாராக ப்ரபந்ந ஜனஸந்தான கூடஸ்தராக அபிஷேகம் செய்யப்பட்டீர். அந்த இடத்தை நீர் ஆழ்வாராக ப்ராகாரிக்கும் தாமிரபரணிதீர்த்தத்தை ப்ரதக்ஷிணம் செய்பவனாக நவதிருப்பதிகளில் எம்பெருமான் அர்ச்சாரூபியாக அவதரித்தான் அன்றோ! எம்பெருமான் நவதிருப்பதிகளில் எழுந்தருளியதே ஆழ்வாரின் அவதாரத்தையும், பெருமையையும் நினைத்தே எனப்பட்டது. இவ்வாறே மேலும் பல பல விசேஷம் பொருள் கொண்டது ஆசார்ய ஸூக்தி.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ:

ஆதிரை அறிஞர்

(ஸ்ரீ. உ. வே.வித்வான் வ.ந. கோபாலதேசிகாச்சாரியர்,
ஒப்பிலியப்பன் ஸந்நிதி)

சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டரான ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீமத் ஆண்டவன் ஸப்ததி பூர்த்தி மஹோத்ஸவம் அற்ற பற்றர் சுற்றிவாழும் அந்தணீர் அரங்கத்தில் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. இந்த சுப அவஸரத்தில் வெளியிடப்படும் விழா மலரில், அடியேனுடைய காணிக்கையாக இந்த வ்யாஸத்தை ஸமர்ப்பிப்பதில் அடியேன் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

யதிகளுக்கும் ஸப்ததிக்கும் ஒரு நெருங்கிய ஸம்பந்தம் உண்டுபோலும். அதனால் தான், திருவேங்கடமுடையானுக்கு 100 ச்லோகங்களையும் (தயா சதகம்), வரதனுக்கும் தேவநாதனுக்கும் 50 ச்லோகங்களையும் (வரதராஜ பஞ்சாசத், தேவநாயக பஞ்சாசத்) ஸமர்பித்த ஸ்வாமி தேசிகன் யதிராஜருக்கு 70ச்லோகங்களை (யதிராஜ ஸப்ததி) ஸமர்பித்தார். ஸ்ரீ பாஷ்யகாரரும் 74ஸிம்ஹாஸனாதிபதிகளை நியமித்தார்.

ஆதிரையில் அவதரித்த அறிஞரான நம் ஸ்ரீமத் ஆண்டவன் திக்குநிறை புகழாளர். செந்தமிழும் வடமொழியும் திகழும் நாவர் இந்த பேரறிவாளர் என்பதை நாடும் நகரமும் நன்கறியும். ஸ்ரீரங்கநாத பாதுகாவில் ஸ்வாமி அருளிச்செய்துவரும் பெரியதிருமொழி வ்யாக்யானமும் இதற்குச் சான்றாகும்.

இதே போல, ஆதிரையில் அவதரித்த நம் பூர்வாசார்யர்களான மஹநீயர்கள் சிலரின் பெருமையைச் சுருக்கமாகப் பார்ப்போம்.

நம் தர்சன ஸ்தாபகர் ஆன ஸ்ரீபாஷ்யகாரர் அவதரித்ததும் திருவாதிரை நக்ஷத்திரத்தில்தான். இங்கே ஒரு ஸ்வாரஸ்யம். பாஷ்யகாரருடைய திருநக்ஷத்ரம் திருவாதிரை. ஸ்வாமிநிகமாந்த மஹாதேசிகனுடைய திருநக்ஷத்ரம் திருவோணம். தீந்தமிழில், 27 நக்ஷத்ரங்களில், திருவாதிரையும் திருவோணமும் தான் "திரு" என்பதைச் சிறப்பு அடைமொழியாகப் பெற்றுள்ளன. மற்ற நக்ஷத்ரங்களுக்கு இந்தப் பெருமை கிடையாது. பின்னால் பாஷ்யகாரரும் தேசிகனும் இந்த நக்ஷத்ரங்களில் அவதரிக்கப் போகிறார்கள் என்பதனால்தான், இவற்றுக்குத் "திரு" என்ற சிறப்பு அடைமொழி ஏற்பட்டதோ?

எம்பெருமானாரின் அவதார காரணத்தை மிக அழகாக எடுத்துக் கூறுகிறார் வடுகநம்பி- உண்மையான வேதாந்தஸித்தாந்தத்தை நிலை நாட்டவும், வேத விரோதமான

பாஹ்யமதங்களையும், வேதத்துக்குத் தவறாகப் பொருள் கூறும் குத்ருஷ்டி மதங்களையும் அழிப்பதற்காகவும், ஆதிசேஷனுடைய அம்சமாக அவதாரம் செய்தார். (வேதாந்த ஸித்தாந்த ஸமர்த்தநாய பாஹ்யாந்தர ப்ராந்த மதாபநுத்தயை சேஷாம்சக: ... கச்சித் இஹாவிராஸீத் யதிராஜ வைபவம் - 7)

இங்கே கஸ்சித் என்று ஸ்ரீபாஷ்யகாரரைக் கூறுகிறார். கஸ்சித் என்பதற்கு ஒருவர் என்று பொருள் அல்ல. ஒப்பற்றவர் என்று பெருள். பகவத்கீதையில் கண்ணன் கூறுகிறான் - ஸாதுக்களை ரக்ஷிக்கவும், தீயவர்களை அழிக்கவும், தர்மத்தை நிலைநாட்டவும் நான் யுகந்தோறும் அவதரிக்கிறேன் . (பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம். தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே. பகவத் கீதை -4-8)

அங்கே தர்மத்தை நிலைநாட்ட கண்ணன் அவதாரம். இங்கே வேதாந்தஸித்தாந்தத்தை நிலைநாட்ட ராமானுஜர் அவதாரம். அங்கே தீயவர்களை அழிக்க கண்ணன் அவதாரம் இங்கே தீயமதங்களை அழிக்க ராமானுஜர் அவதாரம். இப்படி உள்ளது இரண்டு ராமானுஜர்களுக்கு ஒற்றுமை. (கண்ணனும் ராமானுஜன்தான்- அதாவது பலராமனுடைய தம்பி)

வடுக நம்பி இப்படி பாஹ்ய குத்ருஷ்டி மதங்களை அழிப்பவர் என்று சுருக்கமாகக் கூறினார். இதையே அமுதனார் "கட்டப்பொருளை மறைப்பொருள் என்று கயவர் சொல்லும் பெட்டைக்கெடுக்கும் பிரான்"" என்று விளக்கினார். (ராமானுஜநூற்றந்தாதி-93) இதை ஸ்வாமி தேசிகன் பின்னும் விவரிக்கிறார்- ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகள் குத்ருஷ்டிகளுடைய கூட்டத்தை வேரறுக்கின்றன. "எல்லாம் பொய்" என்று சொல்லும் மதத்தை நம்பிச்சீரழிந்த ஜீவாத்மாக்களை உயிர்ப்பிக்கின்றன. வேதம் ஆகிற மகாராணியின் உபநிஷத் ஆகிற கூந்தலை அலங்கரிக்கின்றன. மோக்ஷத்தையும் அளிக்கின்றன. (இதம் ப்ரதம ஸம்பவத் குமதி ஜாலகூலங்கஷா ..... சிகுரபந்த ஸைரந்த்ரிகா- யதிராஜஸப்ததி-36)

தம்முடைய ஸ்ரீஸூக்திகளில் பல பல இடங்களிலும் தேசிகன் பாஷ்யகாரரின் பெருமையை பரக்கப்பேசுகிறார் "ஓரொன்றுதானே அமையாதோ" என்றபடி, ஒரே ஒரு பாடலைப்பார்ப்போம்-

ஒரு மாலைப்பொழுது. சுகமாகக்காற்று வீசுகின்றது குளக்கரையில் இரு நண்பர்கள் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கின்றனர்-

ஒருவர்- இந்த குளத்தில் உள்ள அன்னபக்ஷி தாமரைப்பூவில் உள்ள தேனைப்பருகவில்லை; அசைந்து அசைந்து, அழகான நடை போட்டு, நீந்திச்செல்லவில்லை. ஏன் இப்படி சோர்ந்து நிற்கின்றதோ, தெரியவில்லை.

மற்றவர்- அதன் பெருமையை இழந்துவிட்டதால், வருத்தத்தில் உள்ளது.

ஒருவர்- ஏன் தன் பெருமையை இழந்தது?

மற்றவர்- பாலையும் நீரையும் பிரிக்கும் சக்தி அதன் நாவிற்கு உண்டு. அந்த சக்தியைப்பயன்படுத்தமுடியாமல், அன்னம் வருந்துகின்றது.

ஒருவர்- ஏன் அன்னம் தன் நாவின் சக்தியை பயன்படுத்தமுடியவில்லை?

மற்றவர்- ஸ்ரீபாஷ்யகாரர் உடைய அளவற்ற பெருமையால். உலகம் முழுவதுமே வெண்மைமயமாகிவிட்டது. (பெருமையை வெண்மை நிறமாகக்கூறுவது கவிகளின் மரபு) அதனால், ஜலமும் வெண்மை நிறமாகிவிட்டதால். பாலையும் ஜலத்தையும் பிரிக்கமுடியாமல் வருந்துகின்றது அன்னம். (அலர்ந்த அம்புயத்து இருந்து .....மாசில் வாழி வாழியே- தேசிகப்ரபந்தம் - அம்ருதாஸ்வாதினி -33) இந்த பாடல் ஒன்றே போதும் ஸ்ரீபாஷ்யகாரரின் பெருமையை விளக்க.

பாஷ்யகாரரின் அபாரமான, திவ்யஜ்ஞானத்துக்கு ஒரு விளக்கம் உண்டு. வ்யூஹாவதாரமான ஸங்கர்ஷணனுக்கு அபிமான பாத்ரம் ஆதிசேஷன் என்று சாஸ்த்ரங்கள் கூறும். ஸங்கர்ஷணனுக்கு ஞானம், பலம் ஆகிற குணங்கள் விசேஷம் ஆதலின் ஆதிசேஷனுக்கும் இவ்விரு குணங்களும் விசேஷம்.

இதைத்தான் ஆளவந்தாரும்(தயாஸஹாஸீநமநந்தபோகினீ ப்ரக்ருஷ்ய விஜ்ஞாந பலைகதாமினீ (சிறந்த ஞானம், பலம் இவற்றைக்கொண்ட ஆதிசேஷன் ஸ்தோத்ரரத்னம்-39) என்றருளிச்செய்கிறார். அந்த ஆதிசேஷனின் அவதாரம்தான் பகவத்ராமானுஜர், ஆதலின் அபார திவ்ய ஜ்ஞானத்துடன் விளங்கினார் ஸ்வாமி.

அடுத்து ஆதிரையில் அவதரித்த மஹான் வேதாந்தோதயநர் ஆன கிடாம்பி ஆசார்யனுடைய திருக்குமாரர் ராமானுஜர். ஸ்ரீபாஷ்யகாரரைப்போலவே, இவரும் அதே சித்திரையில் ஆதிரைநாள் வந்துதோன்றியதால், ராமானுஜர் என்றே திருநாமமிடப்பெற்றவர். ரஹஸ்யபரம்பரையில் ஸ்ரீபாஷ்யகாரரின் திருவடி ஸம்பந்தமும், தேசிகனின் திருமுடி ஸம்பந்தமும் பெற்ற பேரறிவாளர்.

அடுத்து ஆதிரை வந்த அறிஞர் தேசிகனின் ஸாக்ஷாத் ஆசார்யரான அப்புள்ளார். அப்புள்ளார் அப்பிள்ளார் என்று இரண்டுவிதமாகவும் ஸ்வாமியை வ்யவஹரிப்பதுண்டு. இத்திருநாமங்களே ஸ்வாமியின் விசேஷ ஞானத்தை ஸூசிபிக்கின்றன. எப்படி என்றால்-

வேதாத்மா விஹகேச்வர:

என்று ஆளவந்தார் அருளிச்செய்தபடி (சதுச்லோகீ-1) வேதஸ்வரூபியும், ஞானஸ்வரூபியும் ஆனவர் கருடன். கருடனைப்போல விசேஷ ஞானத்தைப் பெற்றிருந்ததால் அந்த கருடனோ இவர் என்னும் பொருள் பட, அப்புள்ளார் என்று அழைக்கப்பட்டார். (புள் - பக்ஷி - கருடன்)

அதே போல ஸ்வாமியின் ஞான விசேஷத்தைப்பார்த்துப்பெரியோர்கள் அப்பிள்ளானோ இவர் என்று ஆச்சர்யப்பட்டனர். (பிள்ளான்- திருக்குருகைப்பிரான் பிள்ளான் = திருவாய்மொழி வ்யாக்யானமான 6000 படி அருளிச்செய்தவர்.) அதனால் அப்பிள்ளார் என்ற திருநாமம் ஏற்பட்டது.

அப்புள்ளார் என்ற நாமத்துக்கேற்ப கருட மந்த்ரத்தை தேசிகனுக்கு உபதேசித்தார். அப்பிள்ளார் என்ற நாமத்துக்கேற்ப, திருவாய்மொழியின் ஆழ் பொருளை தேசிகனுக்கு உபதேசித்தார். அதன் பலனாகத்தான் தேசிகனும் திருவாய்மொழிக்கு வ்யாக்கியானமாக நிகமபரிமளத்தை அருளிச்செய்தார்.

பிள்ளான், நடாதூர் அம்மாள் மூலமாக பாஷ்ய பகவத்விஷய பரம்பரையும் , கிடாம்பி ஆச்சான் மூலமாக ரஹஸ்ய பரம்பரையும் வந்தடைந்த மஹாநுபாவர் அப்புள்ளார், ஸ்ரீபாஷ்யகாரருக்குப்பிறகு, குருபரம்பரை முழுவதுமாக அப்புள்ளாரிடம்தான் வந்தடைந்தது. இதை குருபரம்பரை 3000-படி மிக அழகாகக்கூறுகின்றது.

உடையவருடைய பரிபூர்ண கடாக்ஷ விசேஷம் பிள்ளான் முகமாயும், கிடாம்பி ஆச்சான் முகமாகவும் இரண்டு வழியாய் ப்ரவஹித்து வந்து அப்புள்ளார் ஆகிற மஹாதடாகத்தில் மடுத்தது; ஸ்வாமிதேசிகனுக்கு ஸகல சாஸ்த்ரங்களையும் போதித்த மஹாசார்யர் அப்புள்ளார். "நேசனைக்காணா இடத்து நெஞ்சாரத்துதிக்கவே ஆசானை எவ்விடத்தும் அப்படியே" என்கிறது ஒரு பழந்தமிழ்ப்பாடல் இதற்கேற்ப நிகமாந்த குருவும் ராமானுஜார்யாத் ஆத்ரேயாத் மாதுலாத் ஸகலாः கலாः அவாப (தேசிகமங்களம் - 7) என்றபடி, ஸகலகலைகளையும் கற்பித்த தன் ஆசார்யரைத்தன் ஸ்ரீஸூக்திகளில் பல இடங்களிலும் வாயாரப்போற்றிப்புகழ்கிறார்.

கிடாம்பி அப்புள்ளார் அடியேனைக் "கிளியைப்பழக்குமாப்போலே பழக்கி வைத்தார்" என்று பெருமிதம் கொள்கிறார் ஸ்வாமி. (ரஹஸ்யத்ரய்ஸாரம் ஆசார்யக்ருத்யாதிகாரம்) திருவஷ்டாக்ஷர அர்த்தர்னுஸந்தானத்துக்குக்குறிப்பாக அப்புள்ளார் அருளிச்செய்த விரகை நன்றியுடன் நினைவுகூர்கிறார். (ப்ரதாநப்ரதிதந்த்ராதிகாரம்). ஸர்வேஸ்வரனுடைய பரத்வமாத்ரத்தை அறிந்து அகல்பவன் நராதமன், ஸௌலப்யத்தை அறிந்து பரமனை நணுகுமவன் பரம ஆஸ்திகன் - என்று அப்புள்ளார் அருளியதையும் குறிப்பிடுகிறார் ஸ்வாமி (பரிகரவிபாகாதிகாரம்)

அடுத்துவரும் ஆதிரை அறிஞர் ஸக்ஷாத் ஸ்வாமி "ஜ்ஞாந வைராக்ய அநுஷ்டான ஸேவதி" என்று ஸ்வாமிபோற்றப்படுவதே ஸ்வாமியின் பேரறிவைக்காட்டுகின்றது. எம்பெருமானாரைப்போலவே சித்திரையில் ஆதிரையில் அவதரித்த பெரும்புகழாளர் ஆதலின் ஸாக்ஷாத் ஸ்வாமி என்றே பஹுமாநத்துடன்

அழைக்கப்படுகிறார். பின்னால் ஏற்படப்போகும் ஒரு மஹா ஜ்ஞானியின் அவதாரத்தை குறிக்கும் விதமாக தேசிகன் அருளிச்செய்த ச்லோகம் விஷமது பஹிஷ்குர்வந்..... கஸ்சித் ஜிஹாஸிதஸம்ஸ்ருதி: (முமுக்ஷுத்வாதிாரம்) இந்த மஹாசார்யரைப்பற்றியது என்று பெரியோர்கள் கூறுவர்.

நைனாராசார்யர் அருளிச்செய்த ஸ்வாமி தேசிகனுடைய வாழித்திருநாமங்களில் சில நாமங்கள் இந்த மஹானுக்கும் ஔபசாரிகமாகப்பொருந்தும் என்று சொல்லலாம். எப்படி என்று பார்ப்போமா?-

1) ஸ்ரீபகவத்ராமானுஜஸித்தாந்த நிர்தாரண ஸார்வபௌமர் ஆவார் ஸாக்ஷாத்ஸ்வாமி. நம் வைஷ்ணவஸித்தாந்தத்தையும் ஸம்ப்ரதாயத்தையும் நன்றாகக்கட்டிக்காத்து அருளியவர் அதனால் மன்னுபுகழ்ப்பூதூரான் மனம் உகப்போன் வாழியே என்று சொல்லலாம்.

2) பெரிய பிராட்டியின் விபுத்வ உபாயத்வாதிகளை, தம்முடைய ஸ்ரீதத்வ ஸித்தாஞ்சனம் என்ற க்ரந்தத்தின் மூலம் ஸமர்த்தனம் செய்தருளினார். பிராட்டியின் திவ்ய ஸ்வரூபம் பற்றி சதுச்லோகி பாஷ்யத்தில் தேசிகன் குறிப்பிட்ட ஐந்து பக்ஷங்களில் , தேசிகன் உகந்த பக்ஷம் எது என்பதை பல ப்ரமாணங்களையும் காட்டி நன்கு நிரூபித்தார் ஸாக்ஷாத் ஸ்வாமி. அதனால் கஞ்சத்திருமங்கை உகக்க வந்தோன் வாழியே என்று சொல்லலாம்.

3) திருவாய்மொழிக்கு பிள்ளானுடைய திருவாறாயிரப்படியை அனுசரித்து 24,000- படியை அருளிச்செய்தார் அதன் மூலம் ஸத்ஸம்ப்ரதாயார்த்தங்களை தெளிவு படுத்தினார் . அதனால் செஞ்சொல் தமிழ் மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே என்று சொல்லலாம்.

4) ஸ்வாமி தேசிகன் ப்ரபத்தி சாஸ்த்ரத்தை நெறிபடுத்தி, ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் , நிக்ஷேபரக்ஷை போன்ற பல க்ரந்தங்களை இயற்றி அருளினார். அப்படியும் இளநெஞ்சர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்க்கும் விதமாகவும், பிறர் எழுப்பக்கூடிய ஆக்ஷேபங்களுக்கு ஸமாதானமாகவும், ந்யாஸவித்யா தர்ப்பணம் என்ற அரியக்ரந்தத்தை அருளிச்செய்தார். தம் ப்ரியசிஷ்யரான திருக்குடந்தை தேசிகன் மூலம் நிக்ஷேபசிந்தாமணி என்ற க்ரந்தத்தையும் செய்வித்தருளினார்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல, ப்ரபத்தி சாஸ்ச்ரம் ஆகிய ரஹஸ்யத்ரயஸாரத்துக்குத்தாமும், தம்சிஷ்யர் மூலமாகவும் ஸாராஸ்வாதினீ என்ற உத்தமமான வ்யாக்யானம் செய்து, செய்வித்தருளினார். அதனால் "தஞ்சப்பரகதினை தந்தருள்வோன் வாழியே" என்று சொல்லலாம். (தந்து = விளக்கி)

இப்படி ஆதிரை அறிஞர்களான மகான்களைப்பற்றி சுருக்கமாகப்பேசினோம். இப்போது ஸ்வாரஸ்யமான விஷயம் ஒன்றைப்பார்ப்போமா?

தேசிகனுடைய ஆசார்யரின் (அப்புள்ளார்) திருநக்ஷத்ரமும் ஆதிரை. திருக்குடந்தை தேசிகனுடைய ஆசார்யரின் (ஸாக்ஷாத்ஸ்வாமி) திருநக்ஷத்ரமும் ஆதிரை. ஆதிரை என்றாலே ஞானத்தைக்குறிக்கும். அது எப்படி?

திருவாதிரை நக்ஷத்ரத்துக்கு அதிதேவதை ருத்ரன் என்று வேதம் கூறுகின்றது. தத்துவஞானத்தில் சிறந்தவன் ருத்ரன். ஸ்வாமி தேசிகனும் ஸர்வஜ்ஞன் ஆன ருத்ரன் (எல்லாம் அறிந்தவன்) என்று புகழ்கிறார் (பரதேவதா பாரமார்த்யாதிகாரம்)

பாத்மபுராணமும் பகவத்தர்ம தத்வஜ்ஞன் ருத்ரன் என்கிறது . பகவத் ஸ்வரூபம் பற்றிய உண்மையை அறிந்தவன். அதனால்தான் ப்ரஸித்தமான ச்லோகம் கூறுகிறது.

ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத்
தநம் இச்சேத் ஸுதாசநாத்।
ஈச்வராத்ஜ்ஞானமன்விச்சேத்
மோக்ஷமிச்சேத் ஜனார்தனாத்।।

(சூரியனிடம் ஆரோக்யத்தையும், அக்னியிடம் செல்வத்தையும், சிவனிடம் ஞானத்தையும் , நாராயணனிடம் மோக்ஷத்தையும் விரும்பவேண்டும்.)

சிவன் கடுந்தவம் செய்து ஞானத்தைப்பெற்றான். நாராயணனே பரதத்வம் என்று அறிந்து கொண்டு அதை ஓர் ஆலமரத்தின்கீழ் அகஸ்த்யர், புலஸ்த்யர், தக்ஷர், மார்கண்டேயர், என்ற நான்கு ரிஷிகளுக்கு உபதேசித்தான் - என்கிறார் திருமழிசை யாழ்வார். (ஆலநிழல் கீழ் அறநெறியை நால்வர்க்கு மேலையுகத்து உரைத்தான் மெய்த்தவத்தோன் - நான் முகன் திருவந்தாதி-17)

இந்த ஞானம் ருத்ரனுக்கு எப்படி கிடைத்தது? ஸங்கர்ஷணனிடமிருந்து கிடைத்தது. வ்யூஹ அவதாரமான ஸங்கர்ஷணன் ஞானம், பலம் இவற்றை விசேஷமாகக்கொண்டிருக்கிறான். ஸங்கர்ஷணன் ருத்ரனுக்கு ஞானத்தையும் பலத்தையும் கொடுக்கிறான். அந்த பலத்தினால் ருத்ரன் உலகங்களை ஸம்ஹாரம் செய்கிறான் என்று அஹிர்புத்ந்ய ஸம்ஹிதை போன்ற பகவச்சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

ஆக ஆதிரையின் மஹத்வத்தையும் ஆதிரை அறிஞர்களின் மஹத்வத்தையும் பார்த்தோம். ஸப்ததி மஹோத்ஸவம் கண்டருளும் ஆதிரை அறிஞரான ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீமதாண்டவன் உரியகாலத்தில், இதேபோல் மிகச்சிறப்பாக, சதாபிஷேக மஹோத்ஸவத்தை கண்டருளவேண்டுமென்று தன்னொப்பாரில்லப்பன் ஆன திருவிண்ணகரப்பன் திருவடிகளில் ப்ரார்த்தித்து நிற்கிறேன் அடியேன்.

★ ★ ★ ★ ★ ★

श्रीः

ஸ்ரீமதே ரங்கராமானுஜமஹாதேசிகாய நமः

ஸ்ரீமதே வேதாந்த ராமானுஜமஹாதேசிகாய நமः

நாத ஸுதா

(ஸ்ரீஉ. வே. வித்வான் கல்யாணபுரம். R.ஆராவமுதன்
ஸ்ரீமத் ஆண்டவன் ஆச்ரம ஹரிகதா ஆஸ்தான வித்வான்)

ஸங்கீதம் என்பது மிகவும் பழமையானது. ஸர்வகர்மஸமாராத்யனான பரமபுருஷனை நாதவித்யையாலே உபாஸிப்பது என்ற மரபு தொன்று தொட்டு இருந்து வந்துள்ளது. ஸங்கீதசாஸ்த்ரத்திற்கென முதன்மையாகதிகழும் பரத முனிவரின் நாட்யசாஸ்த்ரத்தில்

பரதர்

सामभ्यो गीतमेव च।
सामवेदादिदं गीतं संजग्राह पितामहः ॥

ஸாமவேதத்திலிருந்துதான் ஸங்கீதம் உண்டானதாக் குறிப்பிடுகிறார். த்யாகராஜரும் தனது ஹிந்தோள ராகக்ருதியில் (सामजवरगमना) அனுபல்லவியில்

सामनिगमजसुधामयगानविचक्षण இதை வலியுறுத்துகிறார். இது தவிர யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி என்ன கூறுகிறது பார்க்கலாமா?

वीणावादनतत्त्वज्ञः श्रुतिजातिविशारदः।
तालज्ञश्चाप्रयासेन मोक्षमार्गं नियच्छति ॥

(வீணை வாசிப்பதில் தேர்ச்சி, ச்ருதி, தாளம் இவை பற்றிய ஞானம் ஆகியவை எவ்வித ச்ரமுமின்றி மோக்ஷ மார்க்த்தை அடைவிக்கிறது.)

இந்த அபிப்ராயத்தை பல க்ருதிகளில் கூறும் த்யாகராஜர் பக்தியின் முக்யத்துவத்தை நன்கு வலியுறுத்துகிறார். அதில் ஒரு க்ருதியின் பல்லவி இது

ராகம்: சங்கராபரணம் தாளம்: ஆதி

स्वररागसुधारसयुतभक्ति
स्वर्गापवर्गमुरा - ओ मनसा

(ஸ்வரம், ராகம் ஆகிய அம்ருதத்துடன் கூடிய பக்தி ஸ்வர்கம், மோக்ஷம் தரும்)

அப்படி ஸாமவேதத்தை ஆதியாகக் கொண்ட உயர்ந்த ஸங்கீதமரபு தொன்று தொட்டு சாகோபசாகமாக பகவதுபாஸனா மார்க்கத்திலே அவிச்சின்ன பரம்பரையாக வந்து கொண்டிருக்கிறது. சங்கீதசாஸ்த்ரத்துக்கென பல மஹாத்மாக்கள் க்ரந்தங்கள் செய்துள்ளார்கள். அவை அனைத்துமே ஸம்ஸ்க்ருதத்தில்தான் உள்ளன.

நமது விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்திலே ஆழ்வார்கள், ஆசார்யர்கள் ஸங்கீதத்தை பற்றி அனுபவித்துள்ளதைச் சற்று ஆராய்வோம்.

இந்த ஸங்கீதத்தைத் தமிழில் இசை என்கிறோம். மிகவும் அழகான பெயர். பாடுபவர் கேட்பவர் அனைவரையும் இசைவிப்பதால் அப்படி ஒரு பெயர் போலும். இறைவனையும் இசைவிப்பதல்லவா இசை! பகவானே நாரதரிடம் என்ன கூறுகிறார் பாருங்கள்

नाहं वसामि वैकुण्ठे न योगिहृदये रवौ।
मद्भक्ताः यत्र गायन्ति तत्र तिष्ठामि नारद।।

அதனால்தான் த்யாகராஜரும் ஸ்ரீரஞ்ஜனி க்ருதியில்

ஸொக ஸொகா ம்ருதங்க தாளமு
ஜூத கூர்சி நின்னு ஜோக ஜேயு தீருடெவ்வடோ?

நல்ல ம்ருதங்கத்தை ஜுதை சேர்த்துக் கொண்டு இனிய இசையால் உன்னை சொக்க வைக்கும் தீரன் ஏவனோ?

ஸ்ரீவிஷ்ணுபுராணம் என்ன கூறுகிறது?

काव्यालापाश्च ये केचित् गीतकान्यखिलानि च।
शब्दमूर्तिधरस्यैते विष्णोरंशा महात्मनः।।

ஆகவே நமது பூர்வர்கள் இசையை எம்பெருமான் வடிவாகவேதான் கண்டார்கள். இதற்குச் சான்று பின்வரும் நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தி

பாலென்கோ நான்கு வேதப் பயனென்கோ சமயநீதி
நூலென்கோ நுடங்கு கேள்வி இசை என்கோ (திருவாய்மொழி - 3-4-6)

ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழி முதல் பத்து ஐந்தாம் திருவாய் மொழியில் பகவானின் ஸௌசீல்யத்தை வர்ணித்து அந்தப் பதிகத்தை முடிக்கையில் ஸாதிப்பது மிகவும் அழகு.

பாலேய் தமிழர் இசைகாரர்
பத்தர் பரவும் ஆயிரத்தின்
பாலே பட்ட இவை பத்தும்
வல்லார்கு இல்லை பரிவதே.

ஆழ்வார் தமது திவ்யஸூக்தியில் பல இடங்களில் பாடுவது பற்றி ஸாதிக்கிறார். உதாரணத்திற்கு

1.பரிவதில் ஈசனைப் பாடி (திருவாய்மொழி 1-6-1)

2.சாதுசனத்தை நலியும் கஞ்சனை ஸாதிப்பதற்கு
ஆதியஞ்சோதி உருவை அங்கு வைத்து இங்குப் பிறந்த
வேதமுதல்வனைப் பாடி வீதிகள் தோறும் துள்ளாதவர்
ஓதியுணர்ந்தவர் முன்னா என் சலிப்பர் மனிசரே (திருவாய் 3-5-5)

3. **பண்கொண்ட** புள்ளின் சிறகொலி பாவித்து
திண்கொள்ளலுற்கும் கிடந்து என்செவிகளே (திருவாய் - 3-8-5)

4.என்றாவது எத்தனை நாளைக்குப் போதும் புலவீர்காள்
மன்னா மனிசரைப் பாடிப் படைக்கும் பெரும் பொருள்கள்
மின்னார் மணிமுடி விண்ணவர் தாதையைப் **பாடினால்**
தன்னாகவே கொண்டு சன்மஞ்செய்யாமையும் கொள்ளுமே

5.ஆடியாடி அகம் கரைந்து இசை **பாடிபாடி** கண்ணீர் மல்கி
(திருவாய்மொழி 2-4-1)

இப்படிப் பல இடங்களில் ஆழ்வார் இசையைப் பற்றி அருளுகிறார். வ்யாஸம் விரிவடையும் என்ற அச்சத்தில் ஒருசில மேற்கோள்களோடு நிறுத்திக்கொள்ளுகிறேன்.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியைப் பற்றி சொல்லவும் வேண்டுமோ? பாடவல்ல நாச்சியார் என்கிற திருநாமமுடைய ஆண்டாள் பாமாலை பாடிக் கொடுத்தது ஸுப்ரஸித்தம். திருப்பாவையில் பாடி பாட, பாடவும் என இசையின் பெருமையைப் பல பாசுரங்களில் காணமுடிகிறது. பெரியாழ்வாரோ தமது திருமொழியில் (3-6) கண்ணன் குழலூதிய சிறப்பை பதினோரு பாசுரங்களில் விவரிக்கிறார். குலசேகராழ்வார் பெருமாள் திருமொழியில் திருவரங்கத்து அடியார்கள் அவன் திருநாமத்தைச் சொல்லிப் பாடுவதை

ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம்
கீண்டதும் ,முன் இராமனாய்
மாறடர்ந்ததும் மண் அளந்ததும்
சொல்லிப்பாடி என அருளுகிறார்.

திருமழிசை பிரானின் ப்ரபந்தங்கள் இரண்டில் ஒன்றான திருச்சந்த விருத்தமே இசை, தாளம் இவற்றுடன் அனுபவிக்கும்படி அமைந்துள்ளது. அவரும் பேசவந்த தேவர் வந்து பாட முன் கிடந்ததும் என்கிறார். (திருச்சந்தம் 20).

தொண்டரடிப் பொடிகள் திருப்பள்ளி எழுச்சி ஆறாவது பாசுரத்தில் புரவியோடு ஆடலும் பாடலும் என அருளுகிறார். ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி யாழ்குழல் முழவமோடு இசைதிசைக்கெழுமி என்பதும் கவனிக்கத்தக்கது. திருப்பாணாழ்வாருக்குத் திருநாமமே பாண்பெருமாள். இசையோடு அரங்கனை அனவரதமும் பாடியவர்.

திருமங்கையாழ்வார் பெரியதிருமொழியில் காழிச்சீராமவிண்ணகரத்தில் உறைகின்ற எம்பெருமானை மங்களாசாஸனம் செய்கையில் ஒருகுறளாய், இருநிலம், மூவடி மண்வேண்டி எனத்தொடங்கி நான்கு, ஐந்து, ஆறு ஏழு என அருளுகையில் அருமறையின் திறல் நான்கும் கேள்வி ஐந்தும் அங்கங்கள் அவையாறும் இசைகள் ஏழும் எனச் சாதிக்கிறார். (பெரியதிருமொழி- 3-4-1)

திருநெடுந்தாண்டகம் பதினைந்தாவது பாசுரத்தில் அருளுவதைப் பார்ப்போம்.
கல்லுயர்ந்த நெடுமதில் சூழ் கச்சிமேய
களிறு என்றும் கடல்கிடந்த கனியே என்றும்
அல்லியம் பூமலர்ப் பொய்கை பழனவேலி
அணிஎழுந்தூர் நின்றுகந்த அம்மான் என்றும்
சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்
தூமுறுவல் நகை இறையே தோன்ற நக்கு
மெல்விரல்கள் சிவப்பெய் தடவியாங்கே
மென்கிளிபோல் மிக மிழற்றும் என்பேதையே.

அவரே திருப்புல்லாணி விஷயமாக அருளும்போது
அலமும் ஆழிப்படையும் உடையார் நமக்கு அன்பராய்
சலமது ஆகி, தகவு ஒன்று இலர் நாம் தொழுவதும் எழு
உலகுகால் நல்கழி ஓங்கு கண்பைம்பொழிலூடு இசை
புலவு காணல் களிவண்டினம் பாடு புல்லாணியே. என்கிறார் (பெ.திரு 9-3-8)

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான ஸ்வாமி தேசிகன் ஸ்ரீமந்நாதமுனிகளைப்பற்றி அருளுகையில்

காளம் வலம்புரியன்ன நற்காதலர் அடியவர்க்கு

தாளம் வழங்கி தமிழ்மறை இன்னிசை தந்த வள்ளல் என்று குறிப்பிடுகிறார்.

ஸ்வாமி தேசிகன் அறியாத விஷயமில்லை. ஸங்கீதசாஸ்த்ரத்தில் இருந்த நைபுண்யம் அவரது பல க்ரந்தங்களில் ப்ரதிபலிப்பதைக் காணலாம். ஸ்வாமி தேசிகனுக்கு ஸங்கீதத்தில் எத்துணை நைபுண்யமோ அந்த அளவு நாட்யசாஸ்த்ரத்திலும் இருந்திருப்பது அவரது ஸ்ரீஸூக்திகளில் பல இடங்களில் காணலாம். நந்தகோபன் க்ருஹத்தில் கண்ணன் ஒரு திருவடியை மடக்கி மற்றொரு திருவடியை அசையாது வைத்து ஆபரணங்கள் ஒலிக்கத் தயிர் கடையும் சத்தத்தையே தாளமாகக் கொண்டு வெண்ணெய்க்காக ஆடிய நாட்யத்தை ஸ்வாமியைத்தவிர வேறு யாரால் இவ்வளவு அழகாக வர்ணிக்க முடியும்?

आविर्भवत्वनिभृताभरणं पुरस्तात्
आकुञ्चितैकचरणं निभृतान्यपदम्।
दध्ना निमन्थमुखरेण निबद्धतालं
नाथस्य नन्दभवने नवनीतनाट्यम्॥ (गोपालविंशतिः)

தயாசதகத்தில்

வீணாவிசேஷமிவ வேங்கடசைலநாதः என்று அருளுவதும் ரஸித்து சுவைக்கத் தக்கது. ஸ்வாமி அனுக்ரஹித்த ஹஸ்திகிரி மாஹாத்ம்யம் இசையுடன் அனுபவிக்கத்தக்கது என்பதை அவரே உணர்த்தி ஒரு சிறந்த நாட்ய நாடகமாகவே (DANCE DRAMA) அமைத்துத்தந்தார். ஸங்கீதசாஸ்த்ரம், நாட்யசாஸ்த்ரம் ஆகியவற்றில் ஸ்வாமியின் புலமை இந்த க்ரந்தத்தில் காணமுடிகிறது. அதே போன்று யாதவாப்யுதயத்தில் கண்ணன், காளியன் தலையிலே நர்த்தனமாடும் பாங்கை வர்ணிக்கையில் காளியனின் பணாமண்டலமே சிறந்த அரங்கமாக அமைந்ததையும் யமுனையின் அலைகள் தாளகதியாக அமைந்ததையும் இப்படி பலவாறாகச் சித்தரிப்பது அவரது இசைப்புலமையை வெளிப்படுத்துகிறது. அதை ஆரபடீ நடனம் எனத் திரு ஸ்வாமி வர்ணிக்கிறார்.

இக்கட்டுரையில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட பரதமுனிவரின் நாட்யசாஸ்த்ரத்தில்தான் முதன் முதலில் ஸங்கீதத்தைப் பற்றி அறியமுடிகிறது. அதன்பிறகு மதங்கமுனிவரின் ப்ருஹத்தேசீ போன்ற நூல்கள் ஏற்பட்டன. ஸ்வாமி தேசிகன் தமது ஸங்கல்பஸூர்யோதயம் என்ற நாடகத்தில், பாவம் ராகம், தாளம் இவற்றுடன் கூடியதுதான் ஸங்கீதம் என அவற்றின் முதல் எழுத்துக்களான भ, र, त என்ற அக்ஷரங்களை ஒன்று சேர்த்துத் தனது பெயராகக் கொண்டார் பரத முனிவர் என அருளுவது ரஸிக்கத்தக்கது.

उपवेदमुदारधीस्स्वनाम्ना भरतस्सूचितभावरागतालम्।
यमुदाहरति स्म विश्वगुप्त्यै तदभिज्ञैरबहिष्कृता वयं स्मः॥

ப்ரபந்தஸாரத்தின் முடிவில் ஸ்வாமி தம்மை சந்தமிகு தமிழ்மறையோன் எனக் கூறிக்கொள்வதில்தான் எத்துணை பெருமைப்படுகிறார். பரமபதஸோபானத்தில்

விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக் கண்டு
விண்ணவர் தங்குழாங்களுடன் வேதம் பாடிப்
பண்ணுலகில் படியாத இசையால் பாடும்
பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே என அருளுகிறார்.

ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரரான ஸ்வாமி தேசிகனை ஸேவிக்கும் பாக்யமில்லாத நம்போன்றோருக்கு அவரது அபராவதாரமாக எல்லாக் கலைகளிலும் தேர்ச்சி பெற்றவராக ஸ்ரீலக்ஷ்மீ ஹயவதனனின் பேரருளுக்குப் பாத்திரமானவராக ஆசார்யஸார்வபௌமராகத் திகழும் ஸ்ரீமதாண்டவன் (ஸ்ரீமுஷ்ணம்) ஸ்ரீரங்கராமாநுஜ மஹாதேசிகனுக்கு ஸங்கீதத்தில் உள்ள புலமை நாடறியும். எம் ஆண்டவனின் இசைத் திறமையைக் கண்டும்(Both Theory and Practical Knowledge) லக்ஷ்யலக்ஷணஸமன்விதமாக நமது ஆசார்யஸார்வபௌமன் ராகங்களை ஆலாபனை செய்யும் பாங்கைக் கண்டும் ஸங்கீத விற்பன்னர்கள் பலரும் பெருவியப்பு அடைந்ததை பலமுறை அடியேன் கண்டதுண்டு. அவற்றுள் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1. 1996 ஆம் ஆண்டு ஸ்ரீரங்கம் அட்வகேட் ஸ்ரீமான் K.N.ஸ்ரீனிவாஸன் அவர்கள் தயாரித்த தீக்ஷிதக்ருதி முக்தாவளி என்ற நூலை நாரதகானஸபா அரங்கில் ஸ்ரீமதாண்டவன் வெளியிட்டு இசையைப் பற்றிப் பேசியதையும், ச்ருதிகள் இருபத்தியிரண்டா, இருபத்தி நான்கா என்ற சர்ச்சை தேவையற்றது என்பதைப் பல மேற்கோள்களுடனும் பல க்ரந்தங்களில் இருந்தும் விளக்கிய அந்த நிகழ்ச்சியில்

செம்மங்குடி முதல் பல இசை மேதைகள் நமது ஆசார்ய ஸார்வபௌமனின் இசை ஆற்றலைப் போற்றினார்கள்.

2. அடுத்து 1998 இல் திருவையாறு ஸம்ஸ்க்ருத காலேஜில் சுமார் 1 மணிநேரம் ஆற்றிய உரையில் 1.ஸம்ஸ்க்ருதம் 2.தமிழ் 3.இசை 4.நாட்யம் 5.ஹரிகதை ஆகிய அனைத்தது விஷயங்களை பற்றியும் எடுத்துக் கூறிய அபூர்வமான விஷயங்கள் அவையோரை வியப்படையச் செய்தன.

3. அதன் பிறகு அடுத்த இரண்டு ஆண்டுகள் இசைவிழாவின் போது சென்னையில் பிரபலமாக உள்ள நாரதகானஸபா, பார்த்தஸாரதி ஸபா போன்ற சபைகள் துவக்கி வைப்பதற்கு ஸ்ரீமதாண்டவனைப் ப்ரார்த்தித்த போது மகிழ்ச்சியுடன் இசைந்து இசையைப் பற்றிப் பல அரிய விஷயங்களை எடுத்துரைத்ததும், ஸ்ரீமதாண்டவன் பாடிய தோடி, ஷண்முகப்ரியா, காம்போதி போன்ற ராகங்களின் நேர்த்தி பற்றியும் சென்னை வாழ் இசை ரஸிகர்கள் மத்தியில் பல நாட்கள் பேசப்பட்ட விஷயமாகும்.

4. பம்பாய் ஷண்முகாநந்தா ஸபையில் ஸ்ரீமதாண்டவன் பாடிய ஷண்முகப்ரியாவும் அப்படியே

ஸ்ரீமதாண்டவனின் நூல்நிலயத்திலுள்ள எல்லையற்ற நூல்களில் ஸங்கீதம், நாட்யம் ஆகியவற்றைப் பற்றிய நூல்களும் இடம் பெற்றுள்ளன. அது தவிர இசைக் கருவிகள் பலவற்றைச் சேகரித்து வைத்துள்ள ஸ்ரீமதாண்டவன் அவற்றைப் பற்றியும் திவ்ய ப்ரபந்தம், தேவாரம் ஆகியவற்றின் பழைய பண்கள் பற்றி ஆராய்ந்து அடிக்கடி அது பற்றிப் பலரிடம் உரையாடியாகும்.

ஒரு பிரபல ம்ருதங்க வித்வானுக்கு கங்கையிலிருந்து மண் எடுத்து வந்து கொடுத்து அதை ம்ருதங்கத்தில் சேர்த்து அமைத்தால் நாதம் மிகவும் நன்றாக விளங்கும் என ஆலோசனை சொன்னபடியால் அவரும் அதன்படி செய்து ஸ்ரீமதாண்டவன் முன் ம்ருதங்கம் வாசித்துக் காட்டி மகிழ்ந்தார். இது அண்மையில் நடந்த விஷயம்

1989 இல் ஆச்ரம ஸ்வீகாரம் செய்து கொண்டதிலிருந்து 1999 வரை 10 ஆண்டுகள் பல ஸங்கீத வித்வான்கள்/விதுஷிகளுக்கு விருது வழங்கி கௌரவித்தாயிற்று. அவர்களுள் சிலர்

1. ஸ்ரீமதி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி
2. ஸ்ரீ T.N.க்ருஷ்ணன்
3. ஸ்ரீ லால்குடி ஜெயராமன்
4. ஸ்ரீ வேலூர் ராமபத்ரன்
5. ஸ்ரீமதி வேதவல்லி
6. ஸ்ரீ T.N.சேஷகோபாலன்
7. ஸ்ரீ ராமானுஜாசார்யுலு
8. ஸ்ரீமதி ஸுதா ரகுநாதன்

பிறகு 1999 முதல் ஆண்டுதோறும் வைகாசி திருவாதிரை நன்னாளில் நமது ஆச்ரமவிருது என்றத் தனித்தன்மையுடன் காயகலாநிதி என்ற விருது ஒரு இசைக் கலைஞருக்கு அனுக்ரஹித்தாயிற்று. இதுவரை இந்த விருது பெற்ற பாக்ய சாலிகள்

1999	-	செங்கல்பட்டு ஸ்ரீரங்கநாதன்
2000	-	Dr.K.வாகீஷ்
2001	-	ஸ்ரீ M.A நரசிம்மாச்சாரி. பெங்களூர்
2002	-	மதுரை ஸ்ரீ N.க்ருஷ்ணன்
2003 (இருவர்)	-	1. வைரமங்கலம் லக்ஷ்மீநாராயணன்
		2. எம்பார் ஸ்ரீராகவஸிம்ஹம்
2004 (இருவர்)	-	1. ஸ்ரீ M.J ஸ்ரீனிவாஸன், பெங்களூர்
		2. தஞ்சாவூர் L.வேங்கடேச ஐயங்கார்

இது தவிர அறுபது ஆண்டுகளுக்கு மேல் இசைத்துறையில் தொடர்ந்து ஸேவை செய்வதைப் பாராட்டி புல்லாங்குழல் வித்வான் N.ரமணி மற்றும் ம்ருதங்க வித்வான் வேலூர் ராமபத்ரன் ஆகியவர்களை மறக்காமல் ஸ்ரீமதாண்டவன் கௌரவித்தபடி. அத்துடன் மேலும் வேலூர் ராமபத்ரன் மற்றும் கத்ரி கோபால்நாத் இருவருக்கும் ஸ்ரீமதாண்டவன் ஆச்ரம் ஆஸ்தான கலைஞர்கள் என்ற கௌரவமும் அளித்தாயிற்று.

இப்படி இசையிலே திளைத்து, இசையிலே லயித்து இசையாலே கேட்போரை மயங்கச் செய்து, இசைக் கலைஞர்களை ஊக்குவித்து, இசைக்காக பலவற்றைச் செய்துவரும் எம் ஆண்டவன் ஸப்ததி மஹோத்ஸவத்தில் நல்ல இசை நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீமதாண்டவன் பல்லாண்டு பல்லாண்டுகள் எழுந்தருளியிருந்து ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரான ஸ்வாமி தேசிகன் போலே ஸம்ப்ரதாயத்துக்கு மேலும் பல நன்மைகளைச் செய்து சிஷ்யர்களை இசைபட வாழ்விக்க திவ்யதம்பதிகள் அருள வேணும்.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ

ஆழ்வாரெம் பெருமனார் தேசிகன் திருவடிகளே சரணம்

மங்கையர் கோன் மடல்கள்

(ஸ்ரீ உ.வே. வித்வான் தையார் லக்ஷ்மணாச்சார்யார் ஸ்வாமி)

ஸ்ரீ மதாண்டவன் ஆச்ரமம்

திவ்ய ப்ரபந்தங்கள் அருளிச் செய்த ஆழ்வார்களுள் கடைசியாக அவதரித்தவர் கலியன். கலியன் என்பது பெருமாள் சூட்டிய பெயர். இவரருளிச் செய்த ப்ரபந்தங்கள் ஆறு. அவைமுறையே பெரிய திருமொழி, தாண்டகங்கள் இரண்டு, திருவழுகூற்றிருக்கை, மடல்கள் இரண்டு என்பனவாகும். மடல்களுக்குச் சிறிய திருமடல், பெரிய திருமடல், என்ற பெயர்கள் ஸ்வாமி தேசிகன் காலத்திலேயே வழக்கில் இருந்தன என்பது 'சிறிய மடற்பாட்டு முப்பத்தெட்டிரண்டும் சீர்பெரிய மடல்தனில் பாட்டு எழுபத்தெட்டும்' என்ற பிரபந்தசார வரிகளால் அறியலாம். இவ்விருமடல்களின் திரண்ட அநுபவத்தைப் பெற முயற்சிப்போம்.

மடல் என்பது தாழை, பனை முதலியவற்றில் காணப்படுவது. கடிதத்திற்கும் மடலென்றபெயர் உண்டு. இந்நூல்களுக்கு மடல் என்ற பெயர் வரக் காரணம் என்ன, எனில் கூறுவோம் களவியலும் கற்பியலும் வழங்கி வந்தது தமிழ்நாட்டில். மணமாவதற்கு முன்பே தலைவனும் தலைவியும் கூடுதலை களவியலென்றும், மணவினை நிகழ்ந்து அவர்கள் கணவன் மனைவியாய் இல்லறம் நடத்து வது கற்பியலென்றும் கூறுவர். களவியலாலே கலந்து பழகிய ஒரு தலைவனையும் தலைவியையும் அவர்கள் பெற்றாரும் உற்றாரும் மணவினை செய்வித்து இல்லறம் நடத்தவிடாமற் செய்தால் அப்போது தலைவன் பலருமறிய தன் காதலை வெளிப்படுத்தக் கையாளும் முறைமடலூர்தல் எனப்படும். பிரிவால் வருந்திய தலைவன் உண்ணாது உறங்காது, பனையோலையால் (மடலால்) செய்த குதிரையிலமர்ந்து, உடம்பெல்லாம் நீறு பூசி, தான் காதலித்த பெண்ணின் படத்தைக் கையிலேந்தி, அரசனது மாளிகையின் முன்பும், நாற்சந்திலும் கிடப்பன். அது கண்டு இரங்கங்கொண்ட அரசனும் சான்றோரும் இருவருடைய பெற்றோரையும் அழைத்துப் பேசி அவர்களுக்கு மணம் செய்விப்பது பண்டைய வழக்கம். பெற்றோர்களையும் மற்றவர்களையும் இணங்கச் செய்யக் கையாளும் முறை மடலூர்தல் எனப்பட்டது பனைமடலைப் பயன்படுத்துவதாலும், கடிதம் போல் மனதிலுள்ள செய்திை அறிவிப்பதாலும் இதற்கு மடலெனப் பெயர் வந்தது.

இனி திருமங்கையாழ்வார் இருமடல்களிலும் கூறியவற்றை ஆராய்வோம் உலகம் எப்படிப்பட்ட தென்கிறார். சாரார்.....நிலமங்கை என்னும் இப்பூ இவ்வுலகிலுள்ளவர் கருதும் புருஷார்த்தங்கள் மூன்றே. அம்மூன்றும் ஆராயில் தானே அறம் பொருளின்பமென்று - என்றார் திருமடலில். பெரியதிருமடலில்

நாகத்தணையில் பள்ளிகொண்ட பெருமான், பிரமனைப் படைத்து அவன் முகமாக நான் மறைகளைப் படைத்தான். அம்மறைகளிலே கூறிய நன்னெறிகள் நான்கு, அவை யாவன மன்னும் அறம் பொருள் இன்பம் வீடென்று உலகில் நன்னெறி மேம்பட்டன நான்கன்றே.

சிறிய திருமடலில் வீடு என்னும் புருஷார்த்தம் உண்டென்றே சொல்லவில்லை. பெரியதிருமடலில் அது உண்டென்றார். ஆனால் பரசால நாயகியின் மனதில் மோட்சம் பற்றிய கவலை சிறிதுமில்லை. அதை அவன் புருஷார்த்தமாகவே நினைக்கவில்லை. வீடென்று குறிப்பிடாமல் ©சிக்கென மற்றாராறு முண்டென்பார் என்பது தானதுவும் ஓராமையன்றே உலகத்தார் சொல்லும் சொல்' என்கிறார். பெரியதிருமடலில் சற்று விஸ்தாரமாக வீட்டைப் பெறுவது துர்லபம் என்கிறார் – 'ஓர் தொன்னெறியை வேண்டுவார் வீழ்கனியும் ஊழிலையிலும், என்றுமிவையே நுகர்ந்து உடலம் தாம் வருந்தி, துன்னும் இலை குரம்மைத்துஞ்சியும் வெஞ்சுடரோன் மன்னுமழல் நுகர்ந்தும் வண்தடத்தினுட் கிடந்தும்' இன்னதோர் தன்மையராய் ஈங்குடலம் விட்டெழுந்து, தொன்னெறிக்கண் சென்றாரெனப்படும் சொல்லல்லால்,' இன்னதோர் காலத்து இனையார் இது பெற்றார் என்னவும் கேட்டறிவதில்லை.

வீடென்று ஒன்றுண்டு என்பவர் ஆராயாமல் பேசியவர் என்கிறார். ஓராமையாமாறு அதுவுரைக்கேன் கோளாமே, காரார் புரவியேழ் பூண்ட தனியாழி தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு, ஆராவமுத மங் செய்தி, அதில் நின்றும் வாராதொழிவதென்று ஒண்றுண்டே. பெரிய திருமடலிலும் இக்கருத்து காணப்படுகிறது. 'உளதென்னில் மன்னுங்கடுங் கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள், அன்னதோர் இல்லியினூடுபோய் வீடென்னும் தொன்னெறிக் கண் சென்றாரைச் சொல்லுமின்கள் – சொல்லாதே அன்னதே பேசும் அறிவில் சிறு மனத்து, ஆங்கன்னவரைக் கற்பிப்போம்' யாமே.

வீடுமட்டுமல்ல அறமும் பொருளும் கூட பயனற்றவையே என்கிறார் பெரிய திருமடலில் 36வரிகளில் அறம் வளர்த்தவர் பெறும் பேறு இன்னது என்கிறார். அறம் செய்தவர்கள் அமரர் நாட்டிலே செல்வர். சிங்காதனத் திலமர்வர். கன்னியர் கவரி வீசுவர். அது இளந்தென்றல் போன்றிருக்கும். பக்கத்திலுள்ள பெண்களின் சிரிப்பு நிலவு போன்று ஒளிரும். கற்பகமலர்கள் பூத்த சோலைகளில் மின்னிடையாரோடு விளையாடுவர். பளிங்கும் பவளமும் செம்பொன்னும் சேர்த்துச் செய்த மண்டபத்திலிருந்து, அரம்பையர் யாழோடு பாடும் இன்னிசையைக் கேட்டு இன்புறுவர். ஆகாயமளாவும் உயர்ந்த மாளிகையில் அழகிய பெண்கள் விரித்த படுக்கையில் தேவமாதருடைய கடைக்கண்ணோக்கு இலக்காகி, அவர்களின் முறுவலாகிய இன்னமுதத்தை மாந்தி இருப்பர். அதுவல்லவோ அறத்தின் பயன்? பொருளும் அறத்திற்காகவே யாதலால் அதுவும் பயனில்லை. தன்னுடைய மார்கம் எதென்கிறார்

'காமத்தின் மன்னும் வழி முறையே நிற்றும் நாம்' ஆக பகவத் காமமே பரம புருஷார்த்தம் என்பது திருமங்கையாழ்வாரின் முடிவு எனத்தெரிகிறது. இராமாநுஜ சித்தாந்தமும் இதுவே என்கிறார் அமுதனார் சேமநல்வீடும், பொருளும் தருமமும், சீரியநற்காமமும் என்றிவை நான் கென்பர். நான்கினும் கண்ணனுக்கே ஆமது காமம் அறம் பொருள் வீடிதற்கென்றுரைத்தான் வாமனன் சீலன், இராமாநுசனிந்த மண்மிசையே.

பரகாலனான நீர் பெண்ணாடையுடுத்துக் காமமே புருஷார்த்தமென்றீர். ஆனால் பெண்கள் மடலூர்தல் என்பது உலகவழக்கல்லவே. தமிழரது அகப்பொருள் நூல்களில் பெண்கள் மடலூர்தல் தகாது எனக் கூறியுள்ளதே. மரபுக்குப் புறம்பாக இப்படிச் செய்யலாமோ என்பதற்கு விடையளிக்கிறார். எனக்கும் அது தெரியும். 'மானோக்கின் அன்ன நடையார் அலரேச ஆடவர் மேல் மன்னு மடலூரார் என்பதோர் வாசகமும் தென்னுரையில் கேட்டறிவதுண்டு,' பின் ஏன் இப்படிச் செய்கிறீர் எனில் 'அதனையாம் தெளியோம்' மன்னும் வடநெறியே வேண்டினோம். 'எனக்குத் தமிழ் நெறி தெளிவாக விளங்கவில்லை. யான் கடைப்பிடிப்பது வட நெறியாகும்' அதாவது தன் காதலனைத் தேடி அவன் இருப்பிடம் செல்லும் தலைவி 'अभिसारिका' எனப்படுவள் வட நூல்களில். நான் அவ்வழியைப் பின் பற்றுகிறேன் என்கிறார். இது தகாது என்பவர் பிரிவின் துயரத்தை அநுபவித்தறியாதவர்கள் என்கிறார். அவர்களுக்கு மலயமலையில் தோன்றிய சந்தனத்தின் தன்மை தெரியாது. ஆயர்களின் வேய்ங்குழலோசைக்கு இரங்கமாட்டார்கள். எருதின் கழுத்திலே கட்டிய மணியினோசை கேட்டு வாடமாட்டார்கள். பனைமரத்தின் மேலுள்ள அன்றில் பறவையின் சிறு குரல் கேட்டு நெஞ்சுருகாது. நிலவு அவர்களைச் சுடாது. காமன் மலர்கணை வீச உள்ளேயிருக்கமாட்டாது தெருவிலே வரமாட்டார்கள். பிரிவின் துயரத்தை அறிந்தவர்களை சந்தனமும், ஆயர்குழலும், விடைமணிக்குரலும் அன்றிலின் ஆர்த்த த்வனியும், நிலவு, காமனின் மலர்கணைகளும் துன்புறுத்தும் என்கிறார்.

நான் மட்டுமா காதலனைத் தேடிப் போகிறேன். இவ்வாறு சென்றவர்கள் பலருண்டு என்கிறார். சிறிய திருமடலில் ஒரே உதாஹரணம் மட்டும் 'அது நிற்க ஆரானுமாதானும் அல்லளவள் காணீர், வாரார் வனமுலை வாசவதத்தையென்று ஆராறும் சொல்லப்படுவாள், அவளும் தன் பேராயமெல்லாம் ஒழியப் பெருந்தெருவே தாரார் தடந்தோள் தளைக் காலன் பின் போனாள், ஊரார்கழ் திடப்பட்டாளே (பெருங்கதையிலுள்ள உதயணன் கதை). பெரிய திருமடலில் சீதை, வேகவதி, நாககன்னிகை, பாணன் மகளான உஷை, உமை என்றவர்களைக் காட்டுகிறார். இவர்களுள் சீதை, பிரிவைத் தாங்க முடியாதென்று இராமன் பின் சென்றாள். கணவனைப் பிரியக் கூடாதென்று எத்தனை துன்பங்கள் அநுபவித்தாள் அவள், எங்குக் கானல். விண்தோர் எனப்படும் பேய்த்தேர்கள் காணப்படுகின்றன. கல்நிறைந்த பாதை சுடுகிறது, மூங்கில்கள் உடைந்து கிடக்கின்றன. காற்று வீசுகிறது. பேய்கள்

உலாவுகின்றன. இப்படிப்பட்ட கானத்து வழியில் பஞ்சு போன்ற மெல்லடிகளால், கற்களின் மீது நடந்தான். வேகவதி தன் காதலனைக் காணாது. அவனிருக்குமிடம் சென்று அழிந்து பின் அவன் கைப்பிடித்தாள் (ஹஸ்திகிரி மாஹாத்ம்யம்). நாககன்னிகை, நாணம், மடம், அச்சம் என்பதை எல்லாம் விட்டு, குருவம் சத்தவனான அர்ஜுனனைத் தன்ந கருக்குக் கொண்டு போய் அவனோடு இனிது வாழ்ந்தேன் என்பதை மஹாபாரதமென்ற முன்னுரையில் கேட்டறிவேன். பாணன் மகளான உஷை, தன் தோழியின் மாயத்தால் கொண்டு போய் தன் காதலனோடு எத்தனையோ இன்பம் துய்த்தாளன்றோ. மலைக்கரசனான இமவானின் புதல்வி உமை தான் காதலித்த சிவபெருமானையடைய எவ்வளவு சிரமப்பட்டாள். 'பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகல, தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்து, ஆங்கு அன்ன அருந்த வத்தினூடு போய் - அன்னவன் தன் பொன்னகலம் சென்றாங்கணைந்திலறே - பன்னியுரைக்குங்கால்' பாரதமாம்.

பரகால நாயகி தன் மனதைப் பறிக்கொடுத்தது யாரிடத்திலே என்கிறார் இருமடல்களிலும் இருவகையாக. சிறியதிருமடலை முதலில் பார்ப்போம். அவளே கூறுகிறாள். ஏராரிளமுலையீர் என்தனக் குற்றதுதான். காரார் குழலெடுத்துக்கட்டி, கதிர்முலையை வாராரவீக்கி மணிமேகலை திருத்தி, ஆரார் அயில் வேற் கண் அஞ்சனத்தின் நீரணைந்து, சீரார் செழும்பந்து கொண்டடியா நின்றேன் நான் அப்போது என்னைப் போன்ற சில பெண்கள் கண்ணன் குடமெடுத்தாடுகிறான் வா பார்க்கலாம் என்றார்கள் அப்போது 'சென்றேன், என் வல்வினையால்'.

சென்ற எனக்கு என்ன நேர்ந்து தெரியுமா. சாரார் மணி நிறமும் கைவளையும் காணேன் நான், ஆரானும் சொல்லிற்றும் கொள்ளேன், அறிவழிந்து தீரா உடம் பொடு பேதுறுவேன்.'

இதைக்கண்ட என் அன்னை. சீரார் செழும்புழுதிக்காப்பிட்டு, செங்குறிஞ்சித் தாரார் நறுமாலைச் சாத்தற்கு, தான் பின்னும் நேராதன ஒன்று நேர்ந்தாள்.

ஆனால் பயனில்லை. மூதறியும் அம்மனைமார் சொல்லுவார். பாரோர் சொல்படும் கட்டுப்படுத்திரேல். ஆராறும் மெய்ப்படுவானென்றார். கட்டுவிச்சியை அழைத்தார்கள் அவள் 'சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெறியா,..... பேராயிர முடையானென்றோர் கார்போன்ற திருமேனியன். கையில் வலம்புரிச் சங்குடையவர் திருத்துழாய் மாலையணிந்தவன். அவன் யாரொன்று சொல்லுகிறேன் கேண்மின். வையமளந்தவன் இலங்கையைப் பொடிப் பொடியாக வீழ்த்தியவன், கல்மாரிகாத்தவன், ஆழிநீரைக் கடைந்தவன், அவனே கண்ணனாய் வந்து வெண்ணெய் திருடி ஆப்புண்டவன், நாகத்தின் தலைமீது பாய்ந்தவன், சூர்ப்பணகையை மூக்கரிந்தவன். கரனையும் இராவணனையும் கொன்றவன், இரணியனை உடலிடந்தவன், வாமனனாய் மண்கொண்டவன், கடல் கடைந்தவன், கஜேந்த்ரனைக் காத்தவன், என்றெல்லாம்

அடையாளம் சொன்னாள். இதைக் கேட்ட தாய்க்குக் கவலை நீங்கியது. சிக்கென மற்று ஆராறுமல்லாமை கேட்டு எங்களம்மனையும், அவளாகில் பூந்துழாய் தாராதொழியுமே, தன்னடிச்சியல்லளே, மற்றாராறுமல்லனே என்றொழிந்தாள்.

சிறிய திருமடலில் நாம் காணும் பரகாலநாயகி தோழிமார் கூப்பிடச் சென்று கண்ணனைக் கண்டாள். ஈடுபாடு விபவத்தில். அன்னை கூப்பிட்டாள். கட்டுவிச்சியை அழைத்துக்கேட்டாள். எம்பெருமானிது செய்தான் என்று தெரிந்தவாறே கவலையை விட்டொழித்தாள். தன் அடியளாான இவளுக்குத்துழாய் மாலை கட்டாயம் தருவன் இவள் நோய்தீரும் என நம்பினாள்.

பெரிய திருமடலில் பரகால நாயகி கூறுவதைக் காண்போம்- இவரை யாரும் அழைக்கவில்லை. தாய் கூப்பிடவில்லை. கட்டுவிச்சியையும் அழைக்கவில்லை. தலைவி தானாகவே சென்று திருநறையூரில் நம்பியை சேவித்தாள். மையல்கொண்டாள் அவள் வாயாலேயே கேட்போம். பாவியேற்கு எண்ணுறு நோய் யாதுரை கேண்மீன். இரும்பொழில் சூழ் மன்னு மறையோர் திருநறையூர் என்றொரு திவ்ய தேசம். அங்கே சென்றேன். மாமலைபோல் பொன்னியலும்மாடக் கவாடம் கடந்து புக்கு என்னுடைய கண் களிப்ப நோக்கினேன். எவற்றை மன்னன் திருமார்பும் வாயுமடியிணையும், பன்று கரதலமும் கண்களும் வீழ் நாணும் தோள்வளையும், மன்னிய குண்டலமும் ஆரமும் நீள்முடியும், சூடாமணியும் சிறிய திருமடலில் குடக்கூத்தாடும் கண்ணனை மட்டும் கண்டாள். பெரியதிருமடலில் பிராட்டியுடன் பெருமானைக் கண்டாள். மரதகக் குன்றம் போன்ற பெருமானின் பக்கத்திலே இன்னிள வஞ்சிக்கொடியொன்று நின்றதுதான். அதனை முழுமையாகக் காணவில்லை. ஒவ்வொரு அவயவமாகக் கண்டாள். கண்டபோது அங்கங்கள் நினைவுக்கு வரவில்லை. அவற்றிற்கு உபமானமானவையே தோன்றுகின்றன. நடையிலே அன்னம், துள்ளித்திரிவதில் மான், மயில் தோகை போன்ற கூந்தல், இடைமின்னல் போன்று மிக மெல்லியது. கைகளிரண்டும் இளமூங்கில்கள் போன்றவை. இரண்டு செப்புகள் சேரந்திருப்பது போன்ற மார்பு, கோவைக்கனி போன்ற வாய், கண்களோ கெண்டைமீன்கள் இரண்டு. இப்படிப்பட்ட ஒரு திருவுருவம் நின்றதை அறியாமலே அவளுடைய நெஞ்சும், அறிவும், இனவளையும், பொன்னாலான மேகலையும் அவளைவிட்டுப் போயின. (மன்று மரதக்குன்றின் மருங்கே இன்னிள வஞ்சிக்கொடியொன்று நின்றதுதான். அன்னமாய் மானாய் அணிமயிலாய் ஆங்கிடையே மின்னாய் இள வேயிரண்டாய் இணைச் செப்பாய், முன்னாய தொண்டையாய்க் கெண்டைக்குலமிரண்டாய், அன்ன திருவுருவம் நின்றதறியாதே, என்னுடைய நெஞ்சும் அறிவும் இனவளையும் பொன்னியலும் மேகலையும் ஆங்கொழியப் போன்றதற்கு).

எம்பெருமானிடம் மையல் கொண்ட தலைவியின் நிலையைப் பார்ப்போம்- மடலில் பேசுகிறார். நான் அவனைக் காரார் திருமேனி கண்டதுவே காரணமா பேராப்பிதற்றாத் திரி தருவன், பின்னையும் ஈராப்பு குதலும் இவ்வுடலை தண்வாடை

சோராமறுக்கும் வகையறியேன். ஆழ்குழலார் ஆராறும் ஏசுவர் என்னுமதன் பழியை வாராமல் கார்ப்பதற்கு வாளா இருந்தொழிந்தேன். இருக்க முடியவில்லை. என்னுடனேயே இருக்கும் மனதை அவனிடம் தூது போகச் சொன்னேன். என்ன கேட்க வேண்டும் "மணிவண்ணன் சீரார் திருத்துழாய் மாலை நமக்கருளி தாரான் தருமென்று இரண்டத் திலொன்றதனை, ஆரானுமொன்றாதார் கேளாமே சொன்னக்கால், .. போராதொழியாதே போந்திரு நீ" என்று சொல்லி அனுப்பினாள். ஆனால் "காரார் கடல் வண்ணன் பின் போன நெஞ்சமும் வாராதே என்னை மறந்ததுதான். (இவ்வாறு மனதைத் தூதுவிடுவது பெரிய திருமடலில் காணப்படவில்லை) அழல்வாய் மெழுகுபோல் நீராயுருகும் என்னாவி, நெடுங்கண்கள் ஊராருறங்கிலும் தானுறங்கா, உத்தமன் தன் பேராயினவே பிதற்றுவன்".

பெரிய திருமடலில் தலைவியின் நிலையைக் காண்போம்- கடல் கோஷிக்கிறது. (மன்னுமறிகடலுமார்க்கும்) நிலவு என்னைச் சுடுகிறதே. அதன் தன்மையே மாறிவிட்டதோ மதியுடுத்த இன்னிலாவின் கதிரும் என் தனக்கே வெய்தாகும், தன்னுடைய தன்மை தவிரத் தானென் கொலோ. "பொதிகை மலையில் சந்தன மரங்களோடு புகுந்து வந்து உலகை மகிழ்விக்கும் பூந்தென்றல் காற்று எனக்கு மட்டும் எரிவீசுகிறதே. "தென்னன் பொதியில் செழுச்சந்தின் தாதளைந்து மன்னிவ்வுலகை மனங்களிப்ப வந்தியங்கும். இன்னிளம் பூந்தென்றலும் வீசும் எரி எனக்கே பனைமரத்தின் மீது அன்றில் பறவை கூடுகட்டியிருக்கிறது. தாமரையிதழ்களாலே கட்டியகூடு அதிலே தனியே இருக்கும் என்னெஞ்சை வாள் போன்று அறுக்கிறது. (விளரிக்குன்றில் மென்பெடை மேகின்ற முன்றில் பெண்ணே, முளரிக்குரம்பை இது விதுவாக) "முன்னிய பெண்ணைமேல் முள்முளரிக் கூட்டசத்து, பின்றுமவ்வன்றில் பேடைவாய்ச் சிறுகுரலும் என்னுடைய நெஞ்சுக்கு ஓரீர் வாளாம், என்செய்தேன். இவைமட்டும்மா, சாமன் தன் கருப்புசிலையில் பூங்கணைகளைத் தொடுத்து கொண்டு தன்னுடைய தோள் கழிய வாங்கி தமியேன் மேல் என்னுடைய நெஞ்சே இலக்கை எய்கின்றான். என்னைக் காப்பவரில்லை. இவை மட்டுமா, மாலையிலே திரும்பி வருகின்றன பசுக்கள். அவற்றின் கழுத்திலே கட்டியிருக்கும் மணியின் இன்னிசை யோசையும் என் செவிகளுக்கு எஃகை விடக் கொடிதாயுள்ளன. என்னை யாராவது காப்பீர்களா. இப்படியே இருந்துவிட்டால்- கணபுரத்திலே பொன்மலை போன் நின்றவனை நான் ஆலிங்கனம் செய்து (அணைந்து கொள்ளாமல் - போனால், என்னுடைய பெண்மை, நலன் , பெண்மைக்குரிய அங்கங்கள் இவை எல்லாம் வீணாகும். எனக்கே பாரமாயிருக்கும். நானும் முதுமை அடைந்துவிடுவேன். நான் மூப்படையாமல் காக்கும் மருந்தறிந்தவர் யாரேனும் உளரோ. எம்பெருமானை அடையாமல் வீணாவதற்கு ஒரு உதாரணம் காட்டுகிறார். கல் நவிலும் காட்டகத்து ஓர் வல்லிக்கடி மலரின், நல்நறு வாசம் மற்றரானும் எய்தாமே, மன்னும் வறுநிலத்து வாளாங்குடுத்ததுபோல் சிறிய திருமடலில் கட்டுவிச்சி வாயிலாக அவதாரங்களிலே ஈடுபட்டார். இங்கு தனக்கு இந்த நிலமையை விளைவித்தவன் இன்னான் என்று தானே

சொல்லி அவதார சரிதங்களைப் பேசுகிறார். கடலில் அணைக்கட்டி ராவணன் முடிகள் பத்துமறுத்து தென்று லகம்புகச் செய்தவீரன் அவன். வானவருலகைத் தன் தோள்வலியால் கைப்பற்றிய அசுரன் இரணியன். சிங்கவுருவில் அவனைக் கொன்றவன். யுத்தத்திலே அவனை வீழ்த்தவில்லை. அவன் தலையைப் பிடித்து இழுத்து, தன் மடியிலே இருததி நகத்தால் கீண்டான மின்னிலங்கும் ஆழிப்படைத் தடக்கை வீரனை ப்ரளய காலத்தில் இவ்வுலகிக் கடல் விழுங்க, அப்போது பின்னுமோரேனமாய்ப் புக்குவளைமருப்பில், சொல்நவிலும் கூல் நுதிமேல் வைத்தெடுத்த கூத்தனை. மலையை மத்தாக்கி, அரவைக் கயிறாக்கிக் கடல் கடைந்தான் தேவர்களுக்கு அமுதூட்டி அவர்கள் துயர்போக்குகிறான். தான் இன்னாரென்று மற்றவர்கள் அறியாதபடி மாவலிவேள்வியில் குறட்பிரமச்சாரியாய் சென்றான். அவள் நெஞ்சையுருக்கிறான். மூவடிமண் இரந்தான். மூவுலகங்களையும் தன்னதாக்கினான். இவ்வாறு ராம, நரஸிம்ஹ, வராஹ, கூர்ம, வாமன அவதாரங்களில் ஈடுபட்டார்.

அவனைத் தேடி அவன் எழுந்தருளி இருக்கும். திவ்ய தேசங்களுக்கெல்லாம் செல்வேன் என்கிறார். சிறிய திருமடலில் 25திவ்ய தேசங்களும் பெரிய திருமடலில் 36திவ்ய தேசங்களும் குறிக்கப்பெற்றுள்ளன. அங்கங்கெல்லாம் போய் அவனுடைய காரார் திருமேனியைக் காண்பேன். "கல்நவில் தோள் காளையைக் கண்டாங்குக் கை தொழுது.என்னிலமை எல்லாம் அறிவிப்பன்" அப்போதும் அவன் தன்னருளும் ஆகமும் தரவில்லை என்றால் அவனைப் பழி கூறுவேன். எங்கங்கெல்லாம்- "மின்னிடையாய்ச்சியர் சேரியிலும், வேதியர்கள் வாழ்விடத்தும், தன்னடியார் முன்பும், தரணிமுழுவதும் வேந்தர் கூட்டத்தும், நாட்டகத்தும். அங்கங்கெல்லாம் போய் அவன் செய்தவைகளைக் கூறுவேன். இவன் உரலிலே கட்டுண்டதைச் சொல்வேன். "மின்னிடையாய்ச்சியர் தம் சேரிக்களவின் கண் துனஅனயல் திறந்து புக்கு, தயிர் வெண்ணெய் தன் வயிறார விழுங்க கொழுங்கயற்கண் மன்னுமடகவார்கள் பற்றியோர் வான் கயிற்றால், பின்னும் உரலோடு கட்டுண்ட பெற்றிமையும். ஆயர் விழவில மிகுதியான சோற்றை உண்டானே அதைச் சொல்லுவேன். "அன்னதோர் பூதமாய் ஆயர் விடிவின் கண் துன்று சகடத்தா புக்க பெருஞ்சோற்றை, முன்னிருந்து முற்றத்தான் துற்றிய தெற்றனவும்" கௌரவர் சபையில் தூதனாய்ச் சென்று இகழப்பட்டானே. அதைச் சொல்லுவேன். மன்னர் பெருஞ்சபையுள் வாழ்வேந்தர் தூதனாய். தன்னையிகழ்ந்துரைப்பத்தான் முனநாள் சென்றதுவும். குடக்கூத்து ஆடியதைக் கூறுவேன். ராவணின் நல் தங்கை சூர்ப்பணகை, காமத்தால் இவனை அணுகினாளே. அப்போது இவன் செய்ததென்ன. முனிந்து மூக்கரிந்தான். தன்னிகரொன்றில்லாத தாடகையை மாமுனிக்காத் தென்றுலகம் ஏற்றுவித்தான். இப்படிப்பட்ட அவன் செயல்களைக் கூறித் திரிவேன். ஊரார் இகழ்ந்தாலும் மடலூராது இருக்கமாட்டேன்.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ:

ஸ்ரீமதே ரங்க ராமானுஜ மஹா தேசிகாய நம:

குணம் திகழ் கொண்டல்

(பகவத்விஷய பூஷணம், பகவத் விஷயாஹஸ்யார்த்த விமர்சகர் (வைகுண்டவாஸி) ஸ்ரீ மத் ரெங்கம் என். ராமஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீரங்கம்)

முன்னுரை:

அஸ்மத் ஸ்வாமி ஸ்ரீமத் ரங்க ராமானுஜ மஹா தேசிகனுடைய ஸப்ததத்யப்தபூர்த்தி மஹோத்ஸவ வைபவத்தில் ஸ்ரீமத் ஸ்வாமியினுடைய திருவடித்தாமரைகளை யதாமதி போற்றி ஜன்ம ஸாபல்யத்தை அடையக் கருதி ஸ்ரீகார்ய ஸ்வாமியினுடைய நியமனத்தை சிரஸா வஹித்து ஸ்ரீமத் ஆண்டவனுடைய மஹிமாநுவத்தில் சில திவலைகளை விஷயமாக்கி விக்ஞாபிக்கிறேன்.

ஸ்ரீமந்நாத முநி முதலாக யாமுநமுநி நடுவாக ஸ்ரீ ராமானுஜ முநி ஈறுக உள்ள ஸம்ப்ரதாயம் ''முநித்ரயஸம்ப்ரதாயம்.'' அதில் ஸ்ரீ மத் ஆண்டவன் ஆஸ்தானத்தை அலங்கரித்து நிற்கும் ஸ்ரீ ரங்கராமானுஜ மஹா தேசிகன் ''நிபத்த நாயக ஸ்ரீ'' என்கிற ஸ்ரீ தேசிகன் ஸ்ரீ ஸூக்திக்கு ஏற்ப நடுநாயகமாக விளங்கி வரும் மஹான்.

ஸ்ரீமத் ஆண்டவன் அவதாரத்தில் பல உல்லேகங்கள்:

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வன் ''பரித்ராணாய ஸாதூநாம்'' என்கிற கீதாசார்யன் திருவாக்கின்படி ராமக்ருஷ்ணாதிகளாக அவதரித்து இவ்வுலகை ரக்ஷித்தருள்வது போலத் தானே ஆசார்யனுகவும் அவதரித்து இவ்வுலகைக் காப்பாற்றி அருளுகிருன். ஆகவே ஆசார்யா வதாரமும் ஸ்ரீ சரண்யனின் விபவாவதாரமே யாகும் என்பர் ஆன்ரோர். ''ஸாக்ஷத் நாராயணோ தேவ: க்ருத்வா மர்த்ய மயீம் தனும் । மக்நாநுத்தரதே லோகாந் காருண்யாத் சாஸ்த்ரபாணிநா ॥ என்றும்'' பீதகவாடைப்பி ராஞர் பிரமகுருவாகி வந்து'' என்று பேசப் படுகிறவசனங்களாலே சஸ்த்ரபாணியான பகவானே சாஸ்த்ர பாணியான ஆசார்யனுக அவதரிக்கிருன் என்பதை அறியலாம். அப்படி அவதரித்த ஆசார்யன் ஸ்ரீரங்க ராமானுஜ மஹாதேசிகன்.

ஸித்தம் ஸத்ஸம்ப்ரதாயே ஸ்த்திரதிய மநகம் ச்ரோத்ரியம் ப்ரஹ்ம நிஷ்டம்
ஸத்த்வஸ்த்தம் ஸத்யவாசம்ஸமயநியதயா ஸாது வ்ருத்த்யா ஸமேதம் ।
டம்பாஸூயாதி முக்தம் ஜிதவிஷயிகணம் தீர்க்க பந்துமதயாளும்
ஸ்க்காலித்யே சாஸிதாரம் ஸ்வபரஹிதபரம் தேசிகம் பூஷ்ணுரீப்ஸேத்॥

(மேன்மை நிலைக்கு வர விரும்புகிறவன் சிறந்த ஸம்ப்ரதாயத்தில் நிலைபெற்றவனும், உறுதியான புத்தியுடையனும், குற்றமற்றவனும், வேத வேதாந்தங்களை நன்கு கற்றவனும், எம்பெருமானிடம் பக்தியுடையனும், ஸத்துவகுணத்தில் நிலையுடையனும், உண்மை பேசுபவனும், தருமமுணர்ந்தவரின்வரையறைக்கு உட்பட்ட சிறந்த ஒழுக்கத்துடன் கூடியவனும், டம்பம் பொருமை முதலியன அற்றவனும், இந்திரியக் கூட்டங்களை வசப்படுத்திய வனும், நீண்டஉறவினனும், அருள்மிக்கவனும், சிஷ்யர்களுக்குத் தவறுநேருங்கால் சிக்ஷிப்பவனும், தனக்கும் பிறருக்கும் நன்மையை நாடுபவனுன ஆசார்யனை அடைய விரும்பவேண்டும் என்று ஸ்ரீ தேசிகன் ந்யாஸ விம்சதியில் கூறியபடி ஆசார்ய லக்ஷணங்கள் அனைத்தும் பொருந்திய ஆசார்ய குலதிலகம் ஸ்ரீரங்கராமானுஜமஹாதேசிகன்.

வர்த்தமான ஸ்ரீமத் ஆண்டவன் ''விண்ணாட்டவர் மூதுவர்'' என்னப்பட்ட நித்யஸூரிகளிலே இவ்விபூதியைத் திருத்துகைக்கு எம்பெருமானுடைய நியமனத்தாலே வந்து அவதரித்த ஒருவரோ?

''கலக்க மில்லா நல்தவ முனிவர்களைக் கண்டோர்'' என்கிற பாசுரத்தில் கரைகண்டோர் என்று சொல்லப்பட்டவர்களாய் ஸம்ஸாரத்தைக் கடந்து அக்கரைப்பட்டிருப்பவர்களான முக்தாத்மாக்களில் ஸம்ஸாரிகளை திருத்துவதாக பகவதாஜ்ஞையாலே வந்தவரித்த ஒருவரோ?

''பாற்கடல் பாம்பணைமேல் பள்ளி கொண்டருளும் சீதனையே தொழுவார் விண்ணுளாரிலுஞ்சீரியரே'' என்கிற பாசுரத்தில் நித்ய முக்தர்களைக்காட்டிலும் மேம்பட்டவர்களான ச்வேதத்வீப வாஸிகளிலே இங்குள்ளாரைத் திருத்துகைக்கு வந்தவரித்த ஒருவரோ?

ஸமஸாரிகளுக்குள்ளேயே ''முன்னம் நோற்ற விதிகொலோ'' என்கிறபடியே அநேக ஜன்மஸஞ்சிதமான தம்முடைய ஸுக்ருதம் பலிக்கப்பெற்று அவதரித்த ஒருவரோ?

''அனந்தன் மேல் கிடந்த எம் புண்ணிய'' என்று அநந்த சாயியான ஸநாதநபுண்யம் என்று சொல்லப்பட்ட ஸர் வேச்வரன்தானே ஒருவருக்கு

விசேஷ கடாக்ஷம் செய்து அவதரிக்கச் செய்தானோ? என்று சங்கிக்கும்படி எழுந்தருளியிருப்பவர்.

காரேய் கருணை (ஸ்ரீரங்க) ராமாநுச!

''காரேய் கருணையிராமானுஜ'' என்பர் அமுதனார். மேகத்தை ஒத்த கருணையுடைய பகவத் ராமானுஜரைப்போலே, ஸ்ரீரங்க ராமானுஜ முனிச்ரேஷ்டரும் விளங்குபவர். மேகத்திற்கு ஸ்ரீ மதாண்டவனுக்கும் சில ஒற்றுமைகள் காணலாம்.

1. மேகமானது கடல் நீரை முகந்துகொண்டு வர்ஷிக்கும்.

   ஸ்ரீமதாண்டவனும் ''ச்ருதிஸாகராத்'' என்று ''த்ராவிட வேத ஸாகரம்'' என்று சொல்லப்படுகிற உபயவேதக்கடலில் உள்ள ரஸப்பொருள்களை முகந்து கொண்டு வர்ஷிப்பர்.

2. மேகமானது உப்புத்தண்ணீரையும் தன்வாய்க்கொண்டு மிக மதுரமாக்கி வர்ஷிக்கும்.

   ஸ்ரீமதாண்டவனும் சாஸ்த்ரக்கடல்களில் விரஸமாகக்காணும் பொருள்களையும் தன் வாக்காலே மிக மதுரமாக்கி உபந்யஸிப்பர். ''மேகங்கள் ஸமுத்ர ஜலத்தை வாங்கி ஸர்வோபஜீவ்யமான தண்ணீராக உமிழுமாபோலே வேதார்த்தங்களில் வேண்டும் ஸாரதமாம்சத்தை ஸர்வர்க்கும் அதிகரிக்கலான....'' என்கிற ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி இங்கு அனுஸந்தேயம்.

3. மேகமானது ''உயிரளிப்பான் மாகங்களெல்லாந்திரிந்து'' என்கிறபடியே உலக மெல்லாம் சென்று வேண்டினவிடத்தே பெய்யும்.

   ஸ்ரீமதாண்டவனும் ''எண்டிசையும் பேர்த்தகர நான்குடையான் பேரோதிப் பேதைகாள் தீர்த்தகலிராமின் திரிந்து'' என்கிற பூதத்தாழ்வாருடைய நியமனப்படியே சிஷ்யர்களுள்ளவிடமெங்கும் ஸஞ்சரித்து நல்ல அர்த்தங்களைப் பெய்து உபதேசிப்பர்.

4. மேகமானது பள்ளமான இடங்களில் பெய்து அவற்றைப் பூரிக்கும்.

   ஸ்ரீமதாண்டவன் ''நீசனேன் நிறையொன்றுமிலேன்'' என்றிருக்கும் பரம ஸாத்விகர்களிடத்தே அர்த்தங்களைத் தேக்கி வைப்பவர்.

5. மேகமானது எப்போதும் பெய்யாது, சிலகாலவிசேஷங்களில் பெய்யும்.

   ஸ்ரீமதாண்டவனும் தாபம் மிக்கவர்கள் வந்து வேண்டுங்காலங்களிலும்,

தான் தரித்து நிற்பதற்காக வாய் விட்டுப் பேசவேண்டிய காலங்களிலும் அர்த்தங்களை வர்ஷிப்பர்.

6. மேகம் பெய்ய வேண்டிய காலங்களிலே பெய்யாவிடில் உலகில் தீங்கு மலியும்.

ஸ்ரீமதாண்டவனும் உபதேசிக்க வேண்டிய காலங்களில் உபதேசிக்காம லிருந்தால் தேஹாத்மப்ரமம், ஸ்வஸ்வாதந்த்ர்யப்ரமம், அந்ய சேஷத்வப்ரமம், ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயம், ஆபாஸ பந்து ஸங்கம், விஷய ப்ராவண்யம் முதலான தீங்குகள் மலியும்.

7. ''திங்கள் மும்மாரி பெய்து'' என்கிறபடியே மேகமானது மூன்று மழை பெய்து வாழ்விக்கும்.

ஸ்ரீமதாண்டவனும் ரஹஸ்யத்ரயம், தத்வத்ரயம், கத்யத்ரயம், ஷட்கத்ரயம் (கீதை) தத்வ, ஹித, புருஷார்த்தங்கள், பரபக்தி, பரஜ்ஞாந பரமபக்திகள் என்றிங்ஙனேயான மும்மாரிகளைப் பெய்து வாழ்விப்பவர்.

8. மேகமானது எவ்வளவு வர்ஷித்தாலும் வர்ஷித்தோமென்றிராமே மேள் மேலும் வர்ஷிக்கையில் தானே ஊக்கங்கொண்டிருக்கும்.

ஸ்ரீமதாண்டவனும் உபதேசங்களையும், உபந்யாஸங்களையும் எவ்வளவு நிகழ்த்திஞலும் த்ருப்தி பெருது மேலும் மேலும் வர்ஷிகைக்குக் குதூஹலங்கொண்டிருப்பர்.

9. மேகமானது கைம்மாறு கருதாமே தன் பேருக வர்ஷிக்கும்.

ஸ்ரீமதாண்டவனும் ஒரு ப்ரயோஜனத்துக்காக வன்றிக்கே அநந்யப்ரயோஜநமாகவே வர்ஷிப்பர்.

10. மேகமானது சில சமயங்களில் நாலு சிறு துளிகளைப் பெய்துவிட்டுப் போய்விடும், மற்றுஞ்சில சமயங்களிலே ''கடல் வாய்ச்சென்று மேகம் கவிழ்ந்திறங்கிக்கது வாய் பட நீர் முகந்தேறி யெங்கும் குடவாய்பட நின்று மழை பொழியும்'' ''தாழாதே சார்ங்கமுதைத்த சரமழைபோல்'' என்கிறபடியே கணக்கப்பொழியும்.

ஸ்ரீ மதாண்டவனின் நிலையும் இப்படியே. செவியிலே நாலுவார்த்தைகளைச் சொல்லி நிற்கிற காலமு முண்டு; ''ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப மாற்ருதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள் போலே வாங்கக் குடம் நிறையப் பொழிவது முண்டு.

11. மேகம் சில விடங்களிலே சில காலங்களிலே பெய்கிற நீரானது முத்தாகி மேன்மை பெறும்.

ஸ்ரீமதாண்டவன் சில வ்யக்திவிசேஷங்களிலே உபதேசிக்கிற சில அர்த்தவிசேஷங்கள் முத்துப் போலே பின்புள்ளார்க்கும் அணிகல மாயிருந்து அநர்க்கமாயிருக்கும்.

12. மேகம் பெய்த நீர், நதிகள், குளங்கள், ஏரிகள், கிணறுகளாகிய இவற்றில் சேர்ந்தால் அனைவருக்கும் உபஜீவ்யமாய், மற்றையிடங்களில் தேங்கிஞல் வாய்வைக்க வொண்ணுது போம்.

ஸ்ரீமதாண்டவன் வர்ஷித்த அர்த்தங்களும் நல்ல ஞானத்துறைகளிலே சேர்ந்தால் ''பூர்வே பூர்வேப்யோ வச எததூசு: ''என்றகாடகச்ருதியின் கணக்கிலே உபதேச பரம்பரையிலே வந்து உபஜீவ்யமாகும்; அவையே அனதிகரிகள் பக்கலிலே தேங்கிஞல் அப்ரயோஜநமாயொழியும்.

13. மேகம் ''எத்தனையும் வான் மறந்த காலத்தும் பைங் கூழ்கள் மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்'' என்கிறபடியே பயிர்களால் ப்ரதீக்ஷிக்கப்பட்டு அவற்றை வாழ்விக்கும் ''நீர்காலத்தெருக்கிலம் பழவிலைபோல் வீழ்வேனை'' என்கிறபடியே எருக்கிலை போன்றவற்றை மாளச்செய்யும்.

ஸ்ரீ மதாண்டவன் படியும் இப்படியே. ''நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன; நாரணனைக்காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகை வள்ளல் வாட்டமிலா வண்தமிழ் மறை வாழ்ந்தது'' என்கிற அமுதனார் அருளிச் செயலை அனுஸந்திப்பது. (மற்றுபல விரிவுக்கு அஞ்சி நிறுத்தப்பட்டது.)

ஹம்ஸமும்–பரமஹம்ஸரும்:

1. ஹம்ஸம் நீரையும் பாலையும் கலந்து வைத்தால் அவற்றைப் பிரிக்க வல்லமையுடையது. ''ஹம்ஸோ யதா க்ஷீரமிவ அம்புமிச்ரம்'' என்பர்.

ஸ்ரீபரமஹம்ஸரான ஸ்ரீமதாண்டவனும் ஸாரங்களும் அஸாரங்களும் கலந்து கட்டியாயிடுக்கிற சாஸ்த்ரங்களில் ஸாராஸாரங்களைப் பகுத்தறியும் தன்மை யுடையவர்.

2. ''அன்னமாயிருந்து அங்கு அறநூலுரைத்த'' ''அன்னமாய் நூல்பயந்தாள்'' என்கிறபடியே வேதசாஸ்த்ரங்களை வெளியிட்டது பகவதவதாரமான ஹம்ஸம்.

ஸ்ரீமதாண்டவனும் சிஷ்யர்களைக் குறித்து சாஸ்த்ரங்களை உபதேசிக்கும் தன்மையைக்காணலாம்.

3. ''ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்த்தமாம்பஸி'' (ஹம்ஸமானது சேற்று நிலத்தில் ஒரு போதும் மனம்பொருந்தியிருக்கமாட்டாது) என்கிறபடியே

ஹம்ஸம் சேற்றில் பொருந்தாது.

''மாறன் விண்ணப்பம் செய்த சொல்லார் தொடையிலிந் நூலும் வல்லார் - பிறப்பாம் பொல்லா வருவினை மாயவன் சேற்றள்ளல் பொய் நலத்தே அழுந்தார்'' என்கிற ஆழ்வார் திருவாக்கின்படி ஸம்ஸாரமாகிற வலிய சேற்று நிலத்திலே பொருந்தமாட்டார் ஸ்ரீபரமஹம்ஸரும்.

4. ''பெடையோடன்னம் பெய்வளையார் தம் பின்சென்று நடையோடியலி'' என்று ஹம்ஸமானது பெண்களின் நடையழகைக்கண்டு தானும் அப்படி நடக்கைக்காகப்பின் செல்லுமென்று சொல்லப்படுகிறது.

ஸ்ரீமதாண்டவனும் அன்ன நடைய அணங்கான பிராட்டியினுடைய நடையை பின் செல்வர். பிராட்டியின் நடையாவது அவளுடைய நடத்தை சேதநர்களைக் குறித்து எம்பெருமான் திறத்தில் புருஷகாரம் செய்வது. பிராட்டி புருஷகாரம் செய்யாவிடில் எம்பெருமான் முக்திஸாம்ராஜ்யம் அளிக்கமாட்டாதது போலவே, ஸ்ரீமதாண்டவனும் புருஷகாரம் செய்யாவிடினும்– அதனை அளிக்கமாட்டான் என்பதை ''தத்தேரங்கீ நிஜமபி பதம் தேசிகாதேச காங்க்ஷீ'' என்கிற ந்யாஸதிலக ஸ்ரீஸூக்தியிஞல் ஸ்ரீதேசிகன் வெளியிட்டார்.

5. ''அன்னம் செந்நெலொண் கவரியசைய வீற்றிருக்கும்'' என்று ஹம்ஸமானது. பக்கபலமான செந்நெலின் அசை வைக்கவரியாக (சாமரமாகக்) கொண்டு வீற்றிருக்கும். ஸ்ரீமதாண்டவனும் ''அஹமந்ந மஹமந்ந மஹமந்நம்'' என்னும் படிப்பரிபக்குவமான ஞானத்தையுடையரான சிஷ்யர்களை செந்நெற்கதிர்களாகக் கொள்ளலாம், அவர்கள் சாமரைவீசுதல் முதலிய கைங்கர்ய வ்ருத்திகளைச் செய்ய எழுந்தருளியிருப்பார்.

6. ''சங்கமவை முரலச் செங்கமல மலரையேறி அன்னமலி பெடையோடுமரும்'' என்று ஹம்ஸமானது சங்குகளின் முழக்கத்தை இனிதாக கேட்டுக்கொண்டிருக்கும்.

ஸ்ரீமதாண்டவனும் சுத்த ஸ்வபாவர்களான சிஷ்யர்கள் செய்யும் ஸ்துதி கோஷங்களைக் கேட்டுக் கொண்டு எழுந்தருளியிருப்பர்.

7. ''வரிவண்டிசைபாட அன்னம் பெடை யோடு உடன்நாடும்'' என்ஞ ஹம்ஸமானது வண்டுகளின் மிடற்ருேசையைப்ப ராட்டாகக்கொண்டிருக்கும்.

வண்டுகள் தேனையே போக்யமாகக் கொண்டிருப்பது போல

''உளங்களிந்திருக்கும் அடியவர் தங்கள் உள்ளத்துள் ஊறிய தேஞகிய பகவத் விஷயத்தையே போக்யமாகக் கொண்டிருக்கும் சிஷ்யர்கள் பாட ஸ்ரீமதாண்டவன் எழுந்தருளியிருப்பர்.

(மற்றும் பல. வல்லார்வாய் கேட்டு உணர்க)

வித்யா தானம் அளிக்கும் வித்யா நிதி

ஸ்ரீமதாண்டவன் பல தலங்களில் வேத, ப்ரபந்த, சாஸ்த்ரபாடசாலைகளை நிறுவியும், ஸ்ரீமதாண்டவன் கலைக் கல்லூரி மூலமாகவும் வித்யா தானம் வழங்கும் வித்யா நிதியாக த்திகழ்பவர்.

உலகில் ஸத்யம், தபஸ் முதலியவைகளைக்காட்டிலும் தானம் சிறந்தது என்கிறது ச்ருதி. ''லோகே தாதாரம் ஸர்வ பூதாநி உபஜீவந்தி தாநேநாராதிமபாநு தந்த தாநேந த்விஷந்தோ மித்ரா பவந்தி தஸ்மாத் தாநம் பரமம் வதந்தி'' (உலகில் தானம் கொடுப்பவனை அண்டி ஸர்வப்ராணிகளும் ஜீவிக்கின்றன. தானம் கொடுப்பதால் சத்ருக்கள் மித்ரர்களாகிறார்கள். தானத்தில் எல்லாம் அடங்கி இருக்கிறது. ஆகையால் தானம் பண்ணுவது தான் மிகச் சிறந்தது)

தானங்களில் கோதானம், பூதானம், ஹிரண்யதானம் எனப் பல உண்டு. அவைகளுள் ''ஸர்வேஷாமேவ தாநாநாம் வித்யா தானம் விசிஷ்யதே'' என்றபடி வித்யாதானம் மிகச் சிறந்தது. ஏன் எனில் பசுப்ராயர்களாக விவேக மற்றிருப்பவர்களுக்கு வித்யை உபதேசித்து அவைகளைக் காட்டிலும் விலக்ஷணர்களாகச் செய்வதனால் மிகச் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது.

வித்யாதானத்தைக் காட்டிலும் ''தத் ஜ்ஞாநம் அஜ்ஞானம் அதோSந்யதுக்தம்'' என்கிறபடி ப்ரஹ்ம ஞானமே மிகச்சிறந்தது. மற்ற ஜ்ஞானங்கள் அஜ்ஞானம் எனப்படும். சுமையானகல்விகள் சூழவந்தாலும் அமையாவினவை என்கிறார் ஸ்ரீதேசிகன். ''ஸ்வாத்யாயப்ரவசநே ஏவேதி நாகோ மௌத்கல்ய:'' என்றது ச்ருதி.

இவைகளைக் காட்டிலும் பூர்வாசார்யர்களின் க்ரந்தங்களை ரக்ஷிப்பது மிகச்சிறந்தது.

ஸ்ரீமதாண்டவன் வித்யாதானம் செய்தும் ப்ரஹ்மஞானம் ஏற்படக் கால க்ஷேபம் சொல்லியும்– ஸ்ரீபாஷ்ய ஸ்ரீகோசத்தை அட்சிட்டும், ஸ்ரீபாஷ்ய ஸதஸ் நடத்தியும், ஸ்ரீமத்ரஹஸ் யத்ரயஸாரம் அதன் பூர்வாசார்யர்களின் வ்யாக் யானங்களை அச்சிட்டும் பேருபகாரம் செய்தருள்கிறார்.

ஆகவே ஸ்ரீமதாண்டவன் வித்யாநிதியே!

வித்வான்களை போற்றும் வித்தகர்:

ஸ்ரீமதாண்டவன் ஒரு வித்தகன். வித்தகன் என்ருல் ஞான வடிவினன் என்று பொருள். ''சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்தவர் ஸ்ரீமதாண்டவன். ''ஸகலவித்யா வாஹிநீ ஜந்மசைய:'' என்று போற்றப்படுவர் ஸ்ரீமதாண்டவன்.

வித்வான் ''''என்ருல் ''அறிந்தவர்'' என்று பொருள் உண்டு. உலகில் ''வித்வாந் விபச்சித் தோஷஜ்ஞ:'' என்கிற அமரகோசத்தின்படி தோஷங்களையறியுமவன் என்றும் பொருள். வித்தகர் வித்வான்களை ஆதரிக்கு முறையை காணலாம்.

உபயவேதாந்த வித்வான்களை ஊக்குவிக்கும் முறையில் தன்னுடைய வள்ளல்தனத்திஞல் அவர்களைக் கௌரவிப்பது ஸ்ரீமதாண்டவனுடைய தன்னேற்றம்.

சதேஷு ஜாயதே சூர: ஸஹஸ்ரேஷுச பண்டித:।

வக்தா சதஸஹஸ்ரேஷு தாதா பவதி வா ந வா ॥

(சூரன் நூற்றில் ஒருவன். பண்டிதன் ஆயிரத்தில் ஒருவன், நல்ல பேச்சாளி நூருயிரத்தில் ஒருவன், கொடையாளி இருக்கிருரே இல்லையோ தெரியாது) என்கிற ச்லோகத்தின் பொருளைப் பொய்யாக்கி ஸ்ரீமதாண்டவன் வள்ளலாக விளங்குபவர்.

இலன் என்றும் எவ்வம் உரையாமை ஈதல் குலன் உடையான்கண்ணே உள (இல்லை என்றும் இழிவைச் சொல்லாமல் உள்ளம் உவந்து கொடுக்கும் தன்மை உயர்ந்த குலமகளிடத்தே தான் உண்டு) என்கிற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்பவர் ஸ்ரீமதாண்டவன்.

''ஈவானேதெய்வம்'' என்று ஔவையாரும் ''ஈந்தே கடந்தான் இரப்போர் கடல்'' என்று கம்பரும் ''Generosity is the part of a soul raised above the vulg (உதாரமான கொடை மேலான உயிரின் பாகமாயுள்ளது) என்றும் ''The man who ignores self in a ministry of mercy discovers life indeed (தன்னை மறந்து பிறர்க்கே இரங்கி உதவுகிற மனிதன்தான் உண்மையான உயிர் வாழ்வைக் காணுகிருன்) என்றும் ஆங்கில அறிஞர்களும் பேசியிருப்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குமவர் நமது ஆசார்ய ஸார்வ பௌமனை ஸ்ரீமதாண்டவன்.

முடிவுரை:

ஆசார்ய பதமானது தரம் பெறுவதற்கு இன்றியமையாத பெருமை

அனைத்து மொருமை பெற்று விளங்கும் உத்தமராகும் நம் ஆசார்ய ஸார்வபௌமனுகிய ஸ்ரீமத் ரங்கராமானுஜ மஹாதேசிகன் குலப்பெருமை கலந்த குணப்பெருமையும் ஸத்ஸம்ப்ரதாய ஸம்வளித ஸதாசார ஸம்பத்தியும் ஸமீசீனஜ் ஞாநவைராக்ய பூர்த்தியும் சாரீரகாதி ஸச்சாஸ்த்ர ப்ரவசநனைகபரதையுமாகிய இப்பெருமைகளனைத்தும் தகட்டில் அழுத்தின ரத்னங்கள் போல் இவ்வாசார்ய னிடமே திரண்டு விளங்குகின்றன.

பொன்னுக்கு பரிமளம் கலந்தாப்போலே வணக்க மொடுக்கம் வழக்க மொழுக்கம் முதலான குணக்குலம மைந்திருக்கும் அழகை வாணீதேவி யல்லது பணீந்த்ரன் பணிக்கலா மன்றி நமது நாவுக்கும் நினைவுக்கும் நிலமன்றேயது.

குற்றமின்றிக் குணங்கள் மலிந்த திருவவதாரமும் குருகுலத்தில் சிரகால பரிசர்யையால் வந்த ஸர்வஜ்ஞத்வமும் லீலார்த்தமாவாவது ஸத்ஸம்ரபதாயத்தில் பூர்வபக்ஷம் பேசும் தோஷம் சிறுதுமற்றவாக் சுத்தியும் இவ்வாசாரியரிடம் கண்டு ரஸிப்பதற்குரியதாகும்.

புஷ்பம் போன்ற தம் திருமேனி மேன்மையும் பாராது சாஸ்த்ரீய கர்மங்களை முக்ய கல்பமாக ஸ்வயம் அநுஷ்டித்தும், அவற்றை ரஸமாக பிறர்க்கு உபதேசித்தும் ஆச்ரிதர்நெஞ்சப்பெருஞ்செய்யுள் தர்மமாகிய வித்தை விளைத்து அலக்ஷிய புத்தியாகிற களையை போக்குவிக்கும் பாங்கும் இவ்வாசாரியரிடம் அநிதர ஸாதரணமானரமணீய அம்சங்கள்.

பல பேசி என்? ஸாரமாக வொன்று பேசித் தலைக்கட்டுகிறேன். ''அப்திர் லங்கித ஏவ வாநாபடை: கிந்த்வஸ்ய கம்பீரதாம் ஆபாதாள நிமக்னபீவரதனுர் ஜாநாதி மந்தர்சல:'' என்ருர் முராரி. வானரவீரர்கள் கடலைக்கடந்து அப்பால் சென்று விட்டார்களெனினும் கடலின் ஆழத்தை அவர்கள் சிறுதும் அறிய கில்லார்கள். கடலினுள்ளே பாதாளம் வரையில் அமிழ்ந்து கிடந்த மந்தரமலைக்கன்ரே அந்த ஆழம்தெரியும். ஜ்ஞாதாக்கள் என்று பேர்படைத்தவர்களெல்லாம் வானர முதலிகளின் ஸ்தானத்திலேயாய் ஸ்ரீமதாண்டவன் ஒருவரே மந்தரமலையின் ஸ்தாநத்தில் இருப்பர். "போந்ததென் நென்சென்னும் பொன்வண்டு உனதடிப் போதில் ஒண்சீ ராந்தெளி தேனுண்டு அமர்ந்திட வேண்டி நின்வாலதுவே ஈந்திடவேண்டும் (ஸ்ரீரங்க) இராமானுஜ! இதுவன்றி ஒன்றும் மாந்தகில்லாது இனிமற்றென்று காட்டி மயக்கிடலே".

★ ★ ★ ★ ★ ★

श्रीमते रङ्ग रामानुज महादेशिकायनमः

ப்ரக்ருதியின் மாற்றங்கள்

(ஸ்ரீ.உ.வே. சௌரி ராஜாச்சார், அடையார் லைப்ரரி)

நமது ராமாநுஜ மதத்தில் உலகம் அனைத்தும் பகவானுடைய சரீரம் என்பதாக சித்தாந்தம். இதே கருத்தை பகவான் 'ஸர்வவ்யாபீ' என்றும் அவனல்லாத பொருள் ஒன்றுமில்லை என்றும் வேதங்கள் கூறுகின்றன.

மனிதர்களாகிய நம் கண்ணிற்கு புலப்படுமளவில் இந்த உலகை பகவானுடையதாக எப்படி நம்புவது? இதில் ஏற்படும் ஒவ்வொரு மாற்றமும் பகவானின் எண்ணத்திற்கு ஏற்பதான் நடைபெருகிறதா? என்ருல் 'ஆம்' என்கிறது வேதம்.

ஒரே மூலப்ரக்ருதியினைக் கொண்டு இப்படி பலவாருக மாற்றத்தை எப்படி உண்டுபண்ணிக் கொள்ளக்கூடும் என்ற கேள்வி எழும். இங்கே த்ரிவ்ருத்கரணம் (त्रिवृत्करणम्) என்ற முறையிலே பஞ்ச பூதங்களை ஒன்ருடொன்று வினை புரியச்செய்து பலவாருன பொருட்களை உண்டுபண்ணுவதாய் கூறப்படுகிறது.

இங்கே பலவாருன மாறுபாட்டை தன்னுள்ளே ஏற்படுத்திக் கொள்ளும் மூலப்ரக்ருதி தன்னுள்ளேயும் பல உட்கூறுகளைக் கொண்டதா? இது உண்மையான மாறுபாடு தானு? அல்லது தோற்றமா? என்ற கேள்விகள் எழும்.

இங்கே ப்ரக்ருதி என்ற அவ்யக்தம், மஹத், அஹங்காரம், மனஸ்முதலான 11 இந்திரியங்கள் 5 மகாபூதங்கள் அதன் தன்மாத்திரைகள் என்ற - 24ஆக கணக்கிடப் படுகிறது. முன்தத்வத்திலிருந்து அதற்கு அடுத்த படியான தத்வம் உண்டாவதாய் அறியப்படுகிறது. இப்படியாக ஏற்படும் 24 தத்வங்கள்வரையிலும் समष्टि सृष्टि யாக (ஒன்று சேர்ந்த) சொல்லப்பட்டது. இதற்கு மேல் உண்டாகும் மாற்றங்கள் கணக்கில் அடங்காதவை.

இப்படியாக ஒரே பொருளில் பலவாருன மாற்றம் எப்படி நிகழக்கூடும். இது உண்மையான மாற்றம் தானு? அல்லது மாறுவது போல தோற்றமளிக்கிறதா? (शुक्ति रजतं போல்) எப்படி ஒரே களிமண்ணில் பானை, மடக்கு, அகல்விளக்கு போன்ற பல பொருட்களோ அதேபோல் என்னுல் அப்படி சொல்ல முடியாது. அந்த களிமண் பல மூலக் கூறுகளை தன்னுள்ளே கொண்டது. ஆனால் இந்த உலகின் மூலப்ரக்ருதி ஒன்றேதான் என்றும் மூலக்கூறுகள் அற்றது (निष्कलम्) என்றும் வேதம் கூறிவிட்டதே. I ஒன்ருகவே கருதப்படும் ப்ரக்ருதி எப்படி பலவாறான பரிணுமத்தை அடையும் II அப்படி மாற்றத்தை இசைந்தால் அதில்

ஒருமையும்-பன்மையும் (एकत्व-अनेकत्वं) என்ற முரண்பட்ட கருத்தை இதில் ஒப்புக்கொண்டதாய் ஆகும். அப்படியே மூல ப்ரக்ருதிக்கு ஒருமையும் அதில் உண்டானவைகளுக்கு பன்மையும் சொன்னால் பேத-அபேத வாதத்தை தன் சித்தாந்தமாக கொண்டவர்களுக்கும் நமக்கும் எந்த வித்தியாசமும் இல்லாமல் போகுமே? மேலும் ப்ரக்ருதியானது தன்னுள்ளே பலமூலக்கூறுகள் அற்றதான ஒரே பொருளாகவே கருதப்படுகிறது. ஆனால் பல வாரூன மாற்றத்தை அடையும் பொருள் ஒன்றாக இருக்க முடியாதே என்று கேட்டால், இதற்காக ப்ரக்ருதியின் பற்பல பாகங்களில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமா என்றால் தேவையில்லை. எப்படி பல பண்டிதர்கள் கூடிய இடத்தை 'ஓர் சபா' என்று கூறுவதைப்போல் மூலப்ரக்ருதியில் ஒருமையும்-பன்மையும் சொல்லலாமே என்றால் தார்கிக மதத்தாரைப்போல் நாமும் 'பரமாணு' (परमाणु) காரணத்தை ஒப்புக் கொண்டதாய் அமையும்.

இதற்காக ஒன்றே பலவாறாக தோற்றமளிக்கிறது என்று சொன்னால் அத்வைத (विवर्त) வாதம் போல் அமைந்துவிடும். ஆகையால் நம் சித்தாந்தத்தில் பகவானே தான் எண்ணிய (संकल्प) மாத்திரத்தில் தன் சரீரமாகிய ப்ரக்ருதியில் परिणाम மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்கிறான் என்றால் இதற்குமேல் யாதொரு கேள்வியும் எழ வாய்ப்பில்லையே?

மேலும் நிரவயமான ப்ரக்ருதியில் முழுப்பரப்பிலும் அல்லாமல் (சில பரப்பில்) ப்ராதேவிக (விகாரம்) மாற்றத்தை நாம் ஒப்புக் கொள்ளலாமே. பகவானுடைய சங்கல்பத்தாலே பலவாறான பரிணாமங்கள் சில இடங்கள் தவிறவும் உண்டாகக் கூடியதே.

இப்படி நாம் ப்ரக்ருதியில் பரிணாமத்தை சொன்னால் பேதாபேத (भेदा-भेद) வாதத்தை ஒப்புக் கொண்டதாக அமையுமல்லவோ? என்றால் இந்த பேத-அபேதவாதம் நம் சித்தாந்தத்திற்கு விரோதமில்லையே. அவஸ்த்தாரூபமான ஒருமை-பன்மை என்ற முரண்பட்ட தன்மைகள் கால பேதத்தாலும் பரிகாரம் செய்யப்படுமே. இதையே நம் சித்தாந்தத்தில் ஆரம்பணாதிகரணத்தில் ஏகத்வ-பஹுத்வா வஸ்தைகள் கால பேதத்தால் உண்டாகக் கூடியதே என்று எம்பெருமானார் எடுத்துரைத்தார்.

ஸ்ரீமதே நிகமாந்த மகாதேசிகாய நம:

★ ★ ★ ★ ★ ★

பெயர் அறியாப் பெரும் புலவன்

(மஹாவித்வான் தமிழ்க்கடல் ஸ்ரீ வீ. கோபால ஐயர், பாண்டிச்சேரி)

தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடும்
சூழ்கலை வாணர்களும் - இவள் என்று
பிறந்தவள் என்றுணராத
இயல்பினளா மெங்கள் தாய்.

என்று போற்றத்தக்க பழமையும் இலக்கண இலக்கியச்சீர்மையும் நிரம்பிய நம் தாய்மொழியாம் தமிழ் பலநூறு ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மன்னர் மூவருள் பாண்டியரால் தலை இடை கடைச்சங்கங்கள் நிறுவிப்போற்றி வளர்க்கப்பட்ட பெருமைக்கு உரியது. எனினும் இக்காலத்துத் தலைச்சங்கநூலுள் நமக்கு யாதும் கிட்டாத நிலையில் இடைச்சங்க நூலாகிய தொல்காப்பியம் ஒன்றும், கடைச்சங்கத்தில் கவியரங்கேறிய பல்லாயிரம் பாடல்களுள் ஒரு சிறு பகுதி யாகத்தொருக்கப்பபெற்ற பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என்ற தொகை நூல்கள் ஒன்பதும் ஆகிய பத்து நூல்களே கிட்டியுள்ளன.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற உறுதிப்பொருள்கள் நான்கனுள் வீடு சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகலின் அதனை விடுத்து நூல்களால் குறிப்பிடப்படுவன அறம் பொருள் இன்பம் என்ற மூன்றே. இவற்றுள் இன்பம் என்பது ஆணும் பெண்ணுமாக அமைந்து வாழும் உலகத்து உயிரினங்கள் எல்லாவற்றினுக்கும் பொதுவாகிய செய்தியாகும். அறமும் பொருளும் மக்கள் இனத்திற்கே சிறப்பாக வகுக்கப்பட்டவை. மன அறிவும் மொழியறிவும் பேசும் திறனும் பேசியவற்றை எழுத்து வடிவில் நிலைபெறச் செய்யும் ஆற்றலும், அம்மக்கள் இனத்திற்கே உரியன. அறந்தாற்றில் பொருள் ஈட்டி அப்பொருளினால் இல்லற இன்பத்தைத்துய்த்து, இம்மூன்றின் இறுதியிலும் இவற்றின் நிலையாமையை உணர்ந்து நிலைபேறுடைய வீடு பேற்றை அடைவதே மக்கள் யாக்கை பெற்றதன் முடிவான குறிக்கோளாய் இருத்தல் வேண்டும் என்பதே சான்றோர்கள் கண்ட முடிவு.

இல்லறத்தைச் சுற்றம் சூழ இனிமையாக நடத்தும் கணவனும் மனைவியும் துய்க்கும் இன்பம் உள்ளத்தாலேயே பெரிதும் நுகரப்படுவதாய்ப் புறத்தார்க்கு அஃது இத்தன்மைத்து என்று சொற்களைக் கொண்டு முழுமையாக விளக்கமுடியாததாய் இருத்தலின் அதனை அகம் என்றும் ஏனைய அறம் பொருள் தொடர்பான அனைத்தையும் புறம் என்றும் தமிழ்ச்சான்றோர் வகுத்தனர். கடைச்சங்க நூல்களாகிய பத்துபாட்டு எட்டுத்தொகைகளுள் பத்துப்பாட்டுள் முழுமையான அகம்பற்றிய பாடல்கள் இரண்டு உள்ளன. எட்டுத்தொகையுள் ஐந்து தொகைநூல்கள்

அகம் பற்றியனவே. பரிபாடல் அகம் புறம் என்ற இரண்டுடன் கலப்பாக உள்ளது. பதிற்றுப்பத்து புறநானூறு என்ற இரண்டு தொகைநூல்களே முழுமையாகப் புறம்பற்றியன. எறத்தாழ 2350 சங்கப்பாடல்களுள் புறம் பற்றிய பாடல்கள் ஐந்நூறே.

அகம்பற்றிய பாடல்கள் பாடுவதற்குப் பல கடுமையான வரையறைகள் தொல்காப்பியம் என்ற இலக்கண நூலின் பொருளதிகாரத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அகம்பற்றிய பாடல்களுக்குக் கலிப்பாவும், பரிபாடலுமே சிறப்பாக உரிமையுடையன என்று தொல்காப்பியம் குறிப்பிட்டபோதிலும் பெரும்பாலானவாகிய அகப்பாடல்கள் ஆசிரியப்பாவாகவே உள்ளன. அகப்பாடல்களில் கவிகளின் சொந்த அனுபவத்திற்கு இடமே இல்லை. அப்பாடல்கள் யாவும் கவிகளுடைய கற்பனையில் தோன்றும் கணவன் மனைவி, தோழி, செவிலி , நண்பன் முதலியவர்களுக்காகவே அமைந்திருக்கும். பாடல் எதன்கண்ணும் கணவன் மனைவி முதலியவர்களின் இயற்பெயர்கள் இடம்பெறக் கூடாது. இத்தகைய பாடல்களைப்பாடிக்கொண்டு வள்ளல்களிடம் புலவர்கள் சென்று பரிசில் பெறுதல் இயலாது. வள்ளல்களின் நற்பண்புகள், வீரம், பேராற்றல் இவற்றைப் பாடல்களாகப்பாடிக்கொண்டு சென்றதால்தான் பரிசில் பெறுதல் இயலும். புறத்தைப்பற்றிய 400 பாடல்களில் வள்ளல்களைப் புகழ்ந்துபாடிப் புலவர்கள் பரிசில் பெற உதவிய பாடல்கள் ஏறத்தாழ அறுபது இருக்கும். ஏறத்தாழச் சங்கப்பாடல்களைப்பாடிய ஐந்நூற்றுவரும் வள்ளல்களை நாடிப்பரிசில் பெற்று அதனால் வாழ்நாளைச் செலுத்திவர்கள் ஐம்பதின்மருக்குக் குறைவானவர்களே. ஏனைய புலவர்கள் யாவரும் உழவு , நெசவு , மருத்துவம் , வாணிபம் முதலிய பல துறைகளிலும் ஈடுபட்டுப் பொருளீட்டி வாழ்ந்தவர்களே. இவர்கள் பரிசில் பெறும் நோக்கமின்றிச் சிறந்த மன்னர்கள், வீரர்கள், புரவலர்கள், இவர்களுடைய நற்செயல்களில் மனம் உவந்து அவர்கள் புகழ்பாடுவதனைத் தம்முடைய கடைமையாகக் கொண்டவர்களே. வள்ளல்கள் யாரையும் பாடாமல் நம் மனநிறைவிற்காக அகம்பொருள் பாடல்களை மாத்திரம் பாடிய புலவர்களும் இருந்தனர். இவர்களிடையே மனிதர்களையோ மனிதர்களின் வாழ்க்கை நலன்களையோ பாடாமல் பரம்பொருளைப்பற்றிய மாத்திரம் பாடிய சான்றோர் சிலரும் சங்ககாலத்தில் வாழ்ந்து வந்தனர். அவர்கள் கீரந்தையார், கடுவன் இளவெயினனார், நல்லமுநியார், இளம்பெருவழுதியார், கேசவனார் முதலியோர். இவர்கள் பாடல்கள் பரிபாடல்களிலேயே இடம் பெற்றுள்ளன.

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் பாடல்கள் ஆசிரியம், வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா, பரிபாடல் என்ற அறுவகைப்பாக்களே. இவற்றுள் ஆசிரியப்பாக்களே சங்கப்பாடல்களில் பெரிதும் இடம்பெற்றவை. கலித்தொகை என்ற தொகுப்புநூலில் 150 கலிப்பாக்கள் உள்ளன. பரிபாடல் என்ற பா பலவகைப்பாடல்கள் கலந்து வருவது. கலிப்பாவும், பரிபாடலும் இசைப்பாக்களே. அவற்றுள் பரிபாடலுக்கே இசைவகுக்கப்பட்டுள்ளது. எழுபது பரிபாடல்கள் கடைச்சங்ககாலத்தில் பாடப்பட்டன

என்று இறையனார் களவியல் உரை குறிப்பிடுகிறது. இவ்வெழுபது பரிபாடல்களுள் திருமாலைபற்றியன 8. முருகனைப்பற்றியன 31. வையை ஆற்றைப் பற்றியன 26. மதுரையைப் பற்றியன 4. காடு கிழானைப் பற்றியது 1 என்று பழம்பாடல் ஒன்று கணக்கிட்டுள்ளது. ஆனால் இக்காலத்து நமக்கு கிட்டும் பரிபாடல்கள் இருபத்து நான்கே. இவற்றுள் 22 பாடல்களுக்குப் பரிமேலழகர் உரை முழுமையாகவோ சற்று சிதைந்த நிலையிலே கிட்டியுள்ளது. இப்பாடல்களுள் திருமாலைப் பற்றியவை 7. முருகனைப் பற்றியவை 8. வையையைப் பற்றியவை 9.

இப்பரிபாடலைப் பாடிய புலவர் பெருமக்கள் பாடல்கள் பெரும்பாலும் மற்றைத்தொகை நூலக்களில் இடம் பெறவில்லை. திருமாலைப் பாடிய புலவர்களில் யாவரும் வாய்கொண்டு மானிடம் பாடவந்த கவிஞர் அல்லர். இவர்களில் கீரந்தையார் ஒரு பாடலும், கடுவன் இளவெயிலனார் இரு பாடல்களும் கல்லெழுதியார் ஒரு பாடலும் இளம்பெருவழுதியார் ஒரு பாடலும் பாடியுள்ளனர். ஏனைய முதற்பாடலையும் இறுதிப் பாடலையும் பாடிய சான்றோர்களின் பெயர் புலப்படவில்லை.

ஆயிரம் விரித்த என்று தொடங்கும் பாடலே பரிபாடலின் முதற்பாடலாக அமைந்திருத்தல் வேண்டும் என்பது முதற்பகுதியின்றிச் சிதைந்து காணப்பட்ட முதற்பாடலின் பரிமேலழகர் உரைப்பகுதியை உட்கொண்டு ஊகிக்கப்பட்டது. அப்பாடல் தொல்காப்பிய செய்யுளியல் 119 ஆம் சூத்திர உரையில் இளம்பூரணார் என்ற உரையாசிரியரால் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளது. இதன்கண் பரிபாடலின் உறுப்புக்களாகிய தரவு, எழுத்து, அராகம், ஆசிரியம், போரண் சிற்றெண், இடையெண், அளவெண், தனிச்சொல், அரிநகம் என்ற உறுப்புக்கள் இளம்பூரணாரால் குறிப்பிடப் பட்டுள்ளது. இதன்கண் உள்ள அராகப் பகுதி பொருள் எளிதில் விளங்கிக் கொள்ள முடியாத வகையில் பிழைப் பட்டுக் காணப்படுகிறது. இதனை இயற்றிய பெருமகனார் யாவர் என்று அறியக்கூடவில்லை.

இனி இப்பாடல் தோன்றிய சங்ககாலச் சூழ்நிலையைச் சூழ்நிலையைச் சற்று நோக்குவோம். தொல்காப்பியம் மாயோன் காட்டுப் பகுதி மக்களின் கடவுள் எனவும், சேயோன் மலைப்பகுதி மக்களின் கடவுள் எனவும் குறிப்பிடுகிறது. மாயோன் - கருநிறக் கடவுள் சேயோன் செந்நிறக் கடவுள்.

தொல்காப்பியம் முறை செய்து காப்பாற்றும் மன்னவர் மாயோனாகவேப் போற்றப் படுவர் என்ற கருத்தில் மாயோன் மேய மன்பெருஞ்சிறப்பின் தாவா விழுப்புகழ் பூவை நிலை - என்றும் குறிப்பிடுகிறது. பொருள் சேர் புகழ் என்பது திருமாலுக்கு உரிய புகழ்களே. மற்றைத் தெய்வங்களின் புகழ்களெல்லாம் உபசாரவழக்கே என்ற கருத்தில் திருமாலுடைய புகழுக்கு மன், பெரு, தாவா, விழு என்னும் நான்கு அடைமொழிகள் வழங்கப் பட்டுள்ளன. மன் - நிலை பெற்ற, பெரு

- அளத்தற்கு அரிய, தாவா - என்றும் கெடாத, விழு - மற்றவர்க்கு இல்லாத சிறப்பிற்குரிய. எனவே திருமாலுடைய புகழ் மற்றவர்க்கில்லாத சிறப்பிற்றாகி அளத்தற்கரியதாய் என்றும் கெடாத நிலைபெற்ற புகழ் என்பது பெறப் படுகிறது.

திருமால் என்ற பெயரால் பெரும்பாலும் கண்ணனே சங்ககாலத்தில் புகழப்படுகிறான். சங்ககாலமக்கள் கண்ணபிரானை அவனுடைய மூத்தவனான பலராமனோடு சேர்ந்தே வழிபட்டு வந்தனர். இவ்விருவர் பெயர்களும் உபமானமாக வழங்கப்படும் அளவிற்கு மக்களிடையே பிரசித்தமாக இருந்தன.

பாண்டிய மன்னன் ஒருவனுடைய புகழ் திருமாலுடைய புகழ்போல அளப்பரியது என்று புறநானூறு கூறுகிறது. பாண்டியன் புகழினால் கண்ணனையும் வலிமையால் பலராமனையும் ஒத்திருப்பதாகவும் ஒருங்கு கூடியிருந்து பாண்டிய மன்னனும் சோழமன்னனும் கண்ணன் பலராமன் என்னும் இருபெருந்தெய்வங்களையும் ஒத்திருப்பதாகவும் அதே புறநானூறு குறிப்பிடுகிறது. மலை கண்ணனைப் போலத் கருநிறத்ததாகவும் மலை அருவி பலராமனைப் போல வெண்ணிறத்தாகவும் உள்ள செய்தியை நற்றினை குறிப்பிடுகிறது, மராமரமும் வெண்ணிறக்காளையும் பலராமனைப் போல இருப்பனவாகக் கலித்தொகை கூறுகிறது. தெற்கு திருமலையில் கண்ணனும் பலராமனும் கடலும் வெண்மணல் சார்ந்த கடற்கரைச் சோலையும் போலவும், சொல்லும் சொல்லினுடைய பொருளும் போலவும் பிரிக்கமுடியாத இணையர்களாகப் பரிபாடலில் போற்றப் படுகின்றனர். மீன், ஆமை கற்கி நீங்கலான ஏனைய திருமாலுடைய அவதாரங்களும், திருமாலுடைய நின்ற இருந்த கிடந்த திருக்கோலங்களும் அவருக்குப் பெருவிருப்பமான திருத்துழாயும், கஜலக்ஷ்மியும் திருமகளும் சங்கப்பாடல்களில் சிறப்பாக இடம் பெற்றுள்ளமை காணப்படுகிறது.

இனி முதற் பரிபாடலை நோக்குவோம்,

ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலைத்
தீயுமிழ் திறலொடு முடிமிசை அணவர
மாயுடை மலர்மார்பின் மையில்வால் வளைமேனி
சேயுயர் பனைமிசை எழில்மேவ ஏந்திய
வாய்வாங்கு வனைநாஞ்சில் ஒருகுழை ஒருவனை

இது தரவு

ஆதிசேடனுடைய அவதாரமே பலராமன் என்னுதல்

தெய்வத்தன்மை பொருந்திய ஆயிரம் தலைகளிருந்தும் தீயைக் காக்கும் பேராற்றலோடு திருமாலாகிய உன் தலைமிசை ஆயிரம் தலைகளையும் படங்களையும் கொண்டு குடையாகக் கவிக்கும் ஆதிசேடனே பெருமை பொருந்திய பரந்த

மார்பினையும், களங்கமற்ற வெண்ணிறச்சங்கு போன்ற உடல் நிறத்தினையும் உடையவனாய் மிக உயர்ந்த பனைக் கொடியை உயர்த்தியவனாய் கூரிய வளைந்த கலப்பைப் படையுடையவனாய் ஒரே காதில் குண்டலம் அணிந்த பலராமனாக உள்ளான்.

எரிமலர் சினைஇய கண்ணை; பூவை
விரிமலர் புரையும் மேனியை; மேனித்
திரு நெமர்ந்து அமர்ந்த மார்பினை; மார்பின்
தெரிமணி பிறங்கும் பூணினை; மால்வரை
எரிதிரிந் தன்ன பொன்புனை உடுக்கையை
சேவவல்கொடியோய்நின் வலவமின் நிறுத்தும்
ஏவல் உழந்தமை கூறும்
நாவல் அந்தணர் அருமறைப் பொருளே.

இஃது எழுத்து.

இப்பகுதியில் திருமாலுடைய வடிவழகு, அணி, ஆடை, கொடி, ஆணை என்பன கூறப்படுகின்றன.

நின் வலப்புறத்தில் உயர்த்திக் காணப்படும் கருடக்கொடியை உடைய பெருமானே! நீ சூரியனைக் கண்டு மலரும் செந்தாமரை போன்ற கண்களை உடையை. காயாம்பூ போன்ற நீலநிறத்திருமேனியை உடையை. உன் திருமேனியில் திருமகள் விரும்பி முழுமையாக ஏற்றுக் கொண்ட திருமார்பினை உடையை. மார்பில் பேரொளி வீசும் கௌத்துவமணியை அணிந்துள்ளாய். தீயினைப் போல பேரொளி வீசும் மஞ்சள் நிறப்பட்டாடையை அணிந்துள்ளாய். நின் ஏவற்படியே உலகங்கள் செயற்படுகின்றன என்று ஒலி பிறழாமல் அந்தணர்கள் ஓதும் வேதங்கள் கூறுகின்றன.

பொருவேம் என்றவர் மறந்தபக் கடந்து
செருமேம் பட்ட செருநீர் அண்ணல்!
இருவர் தாதை இலங்குபூண் மாஅல்!
தெருள நின் வரவு அறிதல்
மருள்அரு தேர்ச்சி முனிவர்க்கும் அரிதே.

இஃது ஆசிரியம்

இப்பகுதி தன்னை எதிர்க்க முற்பட்ட தீய உள்ளத்தவர்களை அழிப்பதற்குத் திருமால் எடுத்த அவதாரரகசியங்களைச் சுருக்கமாகக் குறிப்படுகிறது.

திருமால் யாரையும் தன் பகைவராகக் கருதுவதில்லை. ஆனால் தன்னைப் பகையாக் கருதி எதிர்த்தவர்களை அவர்கள் ஆற்றல் அழியுமாறு கொன்று போரில் வெற்றி பெறும் தலைவனாவான். உலகங்களைப் படைக்கும் பிரமனுக்கும், உயிரினங்களின் இன்பவாழ்க்கைக்கு உதவும் மன்மதனுக்கும் திருமால் தந்தையாவான். முனிவர்கள் காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றமும் நீங்கிய ஞானிகள். அவர்கள் தம்கண் மயக்கம் இன்மையின் உள்ளதை உள்ளவாறே உணரவல்லவர்கள். தம்கண் காமம் வெகுளி என்பன இன்மையின் உணர்ந்ததை உணர்ந்தவாறே உரைக்கவல்லவர்கள். அத்தகைய முனிவர்களாலும் கூட முதன்முறை இடைமுறை கடைமுறை தொழிலின் பிறவாப் பிறப்பிலை, பிறப்பித்தோர் இலை (பரி-3) என்று போற்றப்படும் உன் அவதார இரகஸியங்களை முழுமையாக அறிதல் இயலாது.

அன்ன மரபின் அனையோய்! நின்னை
இன்னன் என்று உரைத்தல் எமக்கவன் எளிது

இது போரண்

இஃது இறைவன் பெருமை சொல்லைக் கடந்தது என்று கூறுகிறது.

முனிவர்களாலும் உள்ளவாறு உணர இயலாத பலதிறச் சிறப்புக்களை உடைய உன்னை 'இத்தன்மையை" என்று உள்ளத்தான் உணர்ந்து உன் ஸ்வரூபரூபகுண விபூதிகளை உள்ளவாறு எடுத்து இயம்புவது இவ்வாழ்நாள் பல்பிணி சிற்றறிவினோம் ஆகிய எமக்கு எளிய செயல் ஆகுமோ?

அருமை நன்கு அறியினும் ஆர்வம் நின்வயின்
பெருமையின், வல்லா யாம் இவண் மொழிபவை
மெல்லிய எனாஅ வெறாஅது
அவ்வியம் திருமார்ப! நீ அருளல் வேண்டும்.

இஃதும் ஆசிரியம்

யான் ஆர்வமிகுதியால் குழந்தையின் மழலை போலக் கூறுவனவற்றை ஏற்றருளுக என்றது.

தாமரையில் தங்கிய திருமகள் உறையும் அழகிய மார்பனே! உன்னை உள்ளவாறு போற்றி உரைத்தல் எம்மனோர்க்கு அரிது என்பதனை யான் நன்கு அறிந்திருப்பினும் ஆர்வத்தால் வாளாவிருத்தல் இயலாமையின் யான் கூறுவனவற்றைப் பொருளற்ற சொற்கள் என்று வெறுக்காது ஏற்றருள வேண்டும்.

விறல்மிகு விழுக்கீர் அந்தணர் காக்கும்

அறனும் ஆர்வலர்க்கு அருளும் நீ;
திறனிலோர் திருத்திய தீதுநீர் கொள்கை
மற்றும் மாற்றலர்க்கு அணங்கும் நீ;
அங்கண் வானத்து அணிநிலாத் திகழ்தரும்
திங்களும் தெருகதிர்க் கனலியும் நீ;
ஐந்தலை உயரிய அணங்குடை அருந்திறல்
மைந்துடை ஒருவனும் மடங்கலும் நீ;
நலமுழுது அளைஇய புகர் அறு காட்சி
புலமும் பூவனும் நாற்றமும் நீ;
வலன் உயர் எழிலியும் மாக விசும்பும்
நிலனும் நீடிய இமயமும் நீ;

இவை ஆறும் போரண்

இப்பகுதி திருமால் அறமும் மறமும் கொண்டு படைத்தும் அழித்தும் காத்தும் உலகை நன்னிலைப்படுத்தும் யாவுமாய் இருக்கும் அவனுடைய எங்கும் பரந்திருக்கும் தன்மையை விரித்துக் கூறுகிறது.

பிறர் நலனுக்காகவே வாழும் பேராற்றல் சார்ந்த அந்தணர்கள் காக்கும் அறமும் நீயே. அடியார்களுக்கு வழங்கப்படும் அருளும் நீயே. நெறியினின்றும் வழுவியவர்களைத் திருத்தும் கொள்கையை உடைய தண்டனையும் நீயே. தீயவர்களுக்கு நிகழும் துன்பமும் நீயே. வானத்தில் அழகிய நிலவினைப் பரப்பும் சந்திரனும், வெப்பக்கதிர் பரப்பும் சூரியனும் நீயே. ஐந்து தலைகளை உடையவனாய்த் தெய்வத்தன்மை பொருந்திய பேராற்றலை உடைய உருத்திரனும் அவனால் நிகழத்தப்படும் அழித்தல் தொழிலும் நீயே. உலகிற்கு நலன் தருவன யாவற்றையும் ஓதும் குற்றமற்ற பார்வையை உடைய வேதமும், அவ்வேதத்தை ஓதும் பிரமனும் அவனால் படைக்கப்படும் படைப்பும் நீயே.வலப்புறமாக உயர்ந்து செல்லும் மழைப்பொழியும் மேகமும், அம்மேகம் தவழும் ஆகாயமும் மழையால் நலன்பெறும் நிலமும் அந்நிலத்தைத் தாங்கும் மலைகளும் நீயே. ஆகவே நீயே உடல்மிசை உயிரெனக் கரந்து எங்கும் பரந்துள்ளாய்,

அதனால்
இதுதனிச்சொல்

இன்னோ ஏனையை இனையை யால் என
அன்னோர் யாம் இவண் காணா மையின்
பொன் அணி நேமி வலங்கொண்டு ஏந்திய
மன்னிய முதல்வனை யாகலின்
நின்னோ ஏனையநின் புகழொடும் பொலிந்தே.

இது சுரிதகம்

எம்பெருமான் ஒப்பற்றவன். அவன் புகழும் ஒப்பற்றது என்கின்றது.

பெருமானே நீ இத்தன்மை உடையை. இன்னவரை ஒத்து உள்ளாய் என்று உனக்கு உவமை கூறுவதற்கு எங்கு தேடியும் நின்னை நிகராவார் ருவரையாம் காண இயலாமையால், அழகிய சக்கரத்தை வலக்கையில் ஏந்தி, நீ உலகக் காரணனாக விளங்குகின்றமையின் உனக்கு நீயே நிகர். உன் புகழுக்கு உன்புகழே நிகர். நீ ஒப்பாரை மிக்காரை இலையாய மாமியன் ஆவாய்.

அன்றெனின்,
நின்ஒக்கும் புகழ் நிழலவை;
பொன்ஒக்கும் உடையவை;
புள்ளின் கொடியவை புரிவனை யினவை;
என்றானார் கடந்து அட்ட இகல் நேமியவை;
மண்ணுற்ற மணிபாய் உருபினவை;
எண் இறந்த புகழவை எழில் மார்பினவை;

இவை சிற்றெண்ணும் இடையெண்ணும் அளவெண்ணும்

நினக்குப் பிறர் ஒப்பாவாரெனின், இங்குக் கூறப்படும் சிறப்புக்கள் அவர்களுக்கு இன்மையின் உனக்கு உன்னைத் தவிர வேறு எவரும் நிகராவார் இலர் என்கின்றது.

நீ தனக்குத் தானே நிகரான புகழை உடையை. தனக்குத் தானே நிகரான ஒளியை உடையை. திருமகளை ஒத்து ஒளிவீசும் ஆடையை உடையை. கருடக்கொடியை உடையை. வலப்புறமாகச் சுழிகளை உடைய சங்கினை ஏந்தியுள்ளாய், பகைவர்களை எதிர்த்து அழிக்கும் மாறுபாட்டை உடைய சக்கரப்படையை உடையாய். சாணையிடப்பட்ட நீலமணி போலும் நிறத்தினை. எல்லையற்ற புகழ்செயல்களை உடையை. அழகிய மார்பினை.

ஆங்கு
இது தனிச்சொல்

காமரு சுற்றமோடு ஒருங்குநின் அடியுறை
யாம் இயைந்து ஒன்றுடி வைகலும் பொலிக என
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும்
வாய்மொழி முதல்வ! நின் தாளிணைத் தொழுதே.

இது சுரிதகம்

அஃது அர்த்த பஞ்சகத்தைக் குறிப்பிடுகிறது.

வேதத்தால் காரணப்பொருளாக் குறிப்பிடப்படும் பெருமானே! இவ்வுலகச்

சூழலில் மயக்கமுற்று வாழும் யாங்கள் உன் திருவடிகளில் விருப்பமுடைய அடியார் குழாத்தொடு கூடி நின் திருவடியிணையினைத் தொழுது உன் திருவடிகளின் கீழே உறைந்திருத்தலே எங்களுக்கு என்றும் கிட்டிச் சிறப்பு தருவதாகுக என்று உன்முன் நின்று வேண்டுகிறோம். சிற்றின்பத்திற்குத் தனிமை தேவையாவது போல பேரின்பத்திற்கு ஒத்தவர் குழாம் தேவை என்பது உணர்த்தப்படுகிறது.

வாய்மொழி முதல்வ = இறைநிலை
காமரு சுற்றமொடு ஒருங்கு இயைந்து நிற்கும் யாம் = உயிர்நிலை
நின்தாளினைத் தொழுது = தக்கநெறி
ஏமுறு நெஞ்சத்தேம் = தடை
நின் அடியுறை வைகலும் பொலிக எனப் பரவுதல் = வாழ்வினை

55 அடிகளால் இயன்ற இப்பாடலைப் போன்று இன்னும் ஆறு பரிபாடல்கள் வேதங்கள் கூறியனவாகத் திருமாலுடைய மேலர்க்கும் மேலாய தன்மையை விரித்து உரைக்கின்றன. இந்த பரிபாடல்களைப் பாடிய ஞானிகளின் மரபில் வந்தவர்களே ஆழ்வார்கள். ஆழ்வார்களுக்கு முன்னோடிகளாய் வாய் கொண்டு **"மானிடம் பாடவந்த கவியேம் அல்லேம்"** என்ற வீறுடன் இப்பெருமக்கள் பாடியருளிய பரிபாடல்களிலும் ஆழங்காற்படுதல் தமிழ்ச்சுவையை நுகரும் நல்லோர் கடமையாகும்.

★ ★ ★ ★ ★ ★

போற்றியுரைத்தல்

ஸ்ரீ . உ. வே. வித்வான் முட்டம் ராஜகோபாலாச்சாரிய ஸ்வாமி திருவஹீந்திரபுரம்

श्रीमद्वेङ्कट देशिकस्य कृपया लब्धाखिलार्थं गुरुम् ।
नूनं श्रीरङ्गरामानुमुनुमदुं वन्दे कृपासागरम् ॥

முனித்ரய ஸம்ப்ரதாயம் என்ற ஒரு உலக வழக்கை நாம் ஒளித்துவிட முடியாது. உண்மைநிலைக்குச்சேர தேசிகஸம்ப்ரதாயம் என்றுதான் அனைவர்களும் சொல்லவேண்டும். ஆனாலும் இப்படி ஒரு வழக்கு இருக்கிறது என்றால் தேசிகஸம்ப்ரதாயத்திலேயே மூன்று முனிவர் ஒரு அபரதேசிக கோபாலதேசிகனிடம் ஒரே காலத்தில் ஆச்ரயித்த அதிசயப்பெருமையைப்பற்றி இந்த பிரிவு. ஸம்ப்ரதாயத்தில் அர்த்த பேதத்தைப்பற்றியன்று. ஸ்ரீதேசிகன் சாதித்த அர்த்தமே ராமானுஜஸித்தாந்தங்களில் எல்லாபிரிவினராலும் உண்மையில் பற்றக்கூடிய ஒன்று என்பது எப்போதோ தீர்ந்துவிட்டது. ஆனால் அவாந்தர ஆசார்யர்களில் ஒருசாராருடைய பெருமையை ஸ்வானுபவாக்கியபடி. மற்ற ஆசார்யர்களை அனுபவதூரமாக்கியபடியன்று. தேசிகன் காலத்துக்கு முந்திய நிலையை தேசிகனே விரிவாகக்காட்டி அருளினார். இது ஸாரக்ரந்தத்தில் தம் தம் ஸம்ப்ரதாயங்களிலே கண்டுகொள்வது என்ற ஸூக்தியால் அறியலாகும். தேசிகன் காலத்துக்குப்பின் அந்த ஸம்ப்ரதாயத்தை அனுஷ்டிக்கும் முறை மிக மிக வளர்ந்தது. அப்போது சில வ்யாக்ய பேதங்கள் அபிப்ராய பேதங்கள் ஏற்பட்டிருப்பது உண்மையே. ஆனாலும் இவைகள் எல்லாம் ப்ரதானபேதகமாகாமையால் அவாந்தர வ்யவஸ்தித விகல்பமாக மத்யஸ்தர்கள் கொண்டார்கள் இப்போது தேசிகனை முதன்மையாகக்கொண்ட ஒரு ஸம்ப்ரதாயத்தினைப்பற்றி ஸாமான்ய ஜனங்களுக்கு விரித்துரைக்கிறேன். முக்கியமாக தேசிகன் உலகுக்குச்செய்த மகோபகாரம் சரணாகதி சாஸ்திரத்தால் அனைவருக்கும் வீடு என்பதே. ஆனால் அதை எப்படி அனுஷ்டிப்பது என்ற காலத்தில்தான் தேசிகனே கோபாலதேசிகனாக வந்து ஆதிவண்சடகோபனால் நடத்திவரப்பட்ட ப்ரபத்தி அனுஷ்டானம் முதலானவற்றை க்ரந்தமுகமாகவும் அனுஷ்டானமுகமாகவும்

செய்தருளினார். இந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்தனம் பண்ண குடந்தை தேசிகனிடம் மூன்று ஸந்யாஸிகள் ஆச்ரயித்தார்கள். அவர்களில் இரண்டு ஸந்யாஸிகளுடைய பரம்பரை இப்போது இல்லை. வழுத்தூர் ஸ்வாமியின் ஸம்ப்ரதாயமே இப்போது லோக வழக்கில் முனித்ரயம், என்று வழங்கப்படுகிறது. அந்த ஸம்ப்ரதாயத்தின் ஸர்வோத்க்ரஷ்டராக இப்போது விளங்குபவரே ஸ்ரீ முஷ்ணம் ஆண்டவன் ரங்கராமானுஜ மஹாதேசிகன். இந்த ஸ்வாமி இப்போது இப்படி தானும் ப்ரகாசித்து பூர்வாசார்யர்களை ப்ரகாசிக்காவிட்டால் கோபாலதேசிகரது சிஷ்யரான வழுத்தூர் ஸ்வாமியின் பரம்பரை இவ்வளவு ப்ரஸித்தமாகாது. சில ஆசார்யர்கள் ஸ்வானுஷ்டானமாத்ரத்தில் அதிக நோக்காயிருப்பார்கள். ஆனால் காலதேசத்திற்கேற்ப ஸர்வஜனவிதிதமாக இந்த ஸம்ப்ரதாயத்தை பலவிதத்தில் செய்து வருவது கண்கூடு. த்யாகி என்ற சொல்லுக்கு தனக்கு மிகவும் விட இஷ்டமில்லாதவற்றைக்கூட சிஷ்யர்களின் யோகக்ஷேமமே பெரிதாக எண்ணி பாடுபடும் பரமாசார்யர்களில் இவரை இப்போது பிரதானராகப்போற்றலாம். நம்மாழ்வாரை விட திருமங்கையாழ்வார் கருணாதிகர் என்ற தேசிகன் தாத்பர்யத்தை உணர்ந்தவர். இந்த ஆசார்யர்களின் இப்போதைய நிலை மிக மிக உயர்ந்ததாக பேசுவர். அறியாதவற்றை அறிவிக்கவேண்டிய நேரத்தில் பிரத்யக்ஷத்தை இப்போது நான் எடுத்துக்கூற விரும்பவில்லை. வழுத்தூர் ஸ்வாமிக்குப்பிறகு அவருக்கு சிஷ்யராக பலர் தோன்றினாலும் அந்த பரம்பரையில் வந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸ மஹாதேசிகனே அக்காலத்திய பெரியோர்களால் முதன் முதலில் ஆண்டவன் என்று பேரன்பினால் அழைக்கப்பட்டார். அவரிடம் திருப்புட்குழி ஸ்வாமி ஆச்ரயித்தார். பெரியாண்டவனுக்குப்பிறகு தோன்றியவர்களும் ஆண்டவன் என்றே எல்லாராலும் அழைக்கப்பட்டாலும் உபபதத்தை சேர்த்து அதாவது நம்மாண்டவன் எங்களாண்டவன் சின்னாண்டவன் பெரிய ஆண்டவன் தென்பெரை ஆண்டவன் திருக்குடந்தை ஆண்டவன் என்று அழைக்கப்பட்டனர். இப்படியிருந்தாலும் திருக்குடந்தை ஆண்டவன் காலத்தில் இது பல பெரியோர்களிடமும் பாமரர்களி-டமும் மிகப்ரக்யாதியடைந்தது. இவ்வளவும் நிறம் பெறவே இப்போதைய ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் பரமக்ருபையாலே தோன்றியருளினார். இப்போது ப்ரக்ருத ஆண்டவனின்

எழுவதாவது திருநக்ஷத்ரமஹோத்ஸவம் அனைத்து பக்தர்களாலும் கொண்டாடப்படும் நேரத்தில் அடியேனும் சிறிது இன்புற இச்சிறிய கட்டுரையை எழுதுகிறேன். இக்கட்டுரையை ஸமர்ப்பிக்க அடியேனுக்குள்ள உரிமைக்கடன்களை சிறிது விண்ணப்பிக்கிறேன். ரங்கராமானுஜமுனி என்ற திருநாமம் எனக்கு தெரிந்தவரை இவருக்குமுன் மூன்று பேருக்கு இருந்தது. அதாவது உபநிஷத் பாஷ்யகாரர், கேதாண்டபட்டி ஸ்வாமி , கோழியாலம் ஸ்வாமி (அடியேனது ஆசார்யர்). இந்த சிஷ்ய பரம்பரையையும் கார்யவிசேஷமான சிஷ்யஸம்ப்ரதாயத்தையும் நானே எடுத்துக்கொண்டு ரக்ஷிக்கிறேன் என்று உறுதி பூண்டு தோன்றியதாக உள்ளது. எங்க ஆசார்யனை நினைக்கும்போது இவரை நினைக்காமல் இருக்கமுடியாது. அந்த மூன்று முனிகளும் அனைத்து விஷயத்திலும் ஸுப்ரஸித்தர். இந்த பெயர் மூலம் அவர்கள் இல்லை என்ற கவலை வேண்டாம் இதோ நானிருக்கிறேன் என்று இளநெஞ்சரைத்தேற்றுவதாக உள்ளது. திருக்குடந்தை ஆண்டவனோடு பூர்வாச்ரமத்திலும் இவ்வாச்ரமத்திலும் மிக மிக பழகிய யான் இந்த ஸ்வாமியின் அவதாரத்தால் அவருக்கு ஸந்தோஷமா அல்லது இவருக்கா என்று ஐயுறும் வேளையில் அடியேனுக்கு என்று திடமாகச்சொல்லுவேன். திருக்குடந்தை ஆண்டவன் மனோரதித்து சாதித்த ஜகதுஜ்ஜீவனப்ரகாரமெல்லாம் இப்போது நடைபெறும்போது அவரையும் இவரையும் நேரில் கண்ட நான் ஆனந்த வெள்ளத்தில் எப்படி முழுகாதிருக்கமுடியும். பன்னியுரைக்குங்கால் பாரதமாம். எனவே சுருக்கமாக இனி நிகமாந்த மஹாதேசிகனிடம் அடியேனது ப்ரார்த்தனையை செய்து நிறுத்திவிடுகிறேன். அதாவது நானிலமும் தான் வாழ என்று உம்மை பக்தர்கள் நூற்றாண்டிரும் என்று வாழ்த்தி அப்படியே தேவரும் இருந்தது போல் தேவரது ஸம்ப்ரதாயத்தை தீவ்ரமாக ப்ரசாரம் செய்ய தேவர் போல் ப்ரக்ருத ஆண்டவரை நூற்றாண்டிருக்கு மேல் திடமாக இருக்கச்செய்து ப்ரசாரம் செய்து சிஷ்யர்களை அனுக்ரஹிக்க ஸர்வஸக்தனான தேவரீரே செய்தருளவேணுமென்பதே.

नीचः सर्वप्रकारेणराजगोपालनायकः।
प्रार्थयामास यत्किंचिद्देशिकेन्द्रं मुदान्वितः॥

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ:

ஸனாதன தர்மம்

(ஸ்ரீ.உ.வே.கொ.ந.வரதாசார்யர்-- மேற்கு மாம்பலம்)

இவ்வுலகில் எத்தனையோ மதங்கள் இருக்கின்றன. அவைகளுள் ஸனாதன தர்மம் மிகச் சிறந்தது. இதை ஹிண்டூயிஸம் என்று இக்காலத்தவர் அழைக்கின்றனர். இது பொருந்தாது. இது அனாதியானது. பெருமை வாய்ந்தது. இம்மதம் யாராலும் உண்டாக்கப்பட்டது அல்ல. பராசரர், வேத வ்யாஸர், ஆழ்வார்கள்,ஆளவந்தார், ராமானுஜர், ஸ்வாமி தேசிகன் போன்ற பெரியோர் இதைப் பரப்பினர். இம்மகான்கள் தம் அறிவுரைகளாலும் நூல்களாலும் இம்மதத்திற்கு ஆற்றிய தொண்டு ஏட்டிலும் சொல்லிலும் அடங்கா. எண்ணற்ற இன்னல்களுக்கிடையே இம்மதம் தழைத்து வருகிறது. தேயவில்லை. பட்டை தீட்டிய வைரம் போல் பொலிகின்றது. இதை அழிக்க எண்ணியவர் அழிந்தனர். அவர் தம் ஆணவமும் கொக்கரிப்பும் அடங்கியும் குலைந்தும் போயின. சகர் ஹூணர் பர்ப்பர்யவனர் ஆகிய வெளிநாட்டவர் இதன் அருமை பெருமைகளை அறிந்து இம்மதத்தைத் தழுவினர். மெகஸ்தனீஸ் பாஹியான் ஹ்வேனஸாங் போன்ற வெளிநாட்டவர் இம்மதத்தையும் இம்மதத்தைச் சார்ந்தோரையும் பாராட்டியுள்ளனர்.

ஸ்ரீமன் நாராயணன்

இம்மதத்திற்கு தலைவன் நாராயணனே. அவனே பிரமனைப் படைத்து அவனுக்கு வேதங்களை உபதேசித்தான். அவ்வேதங்களின் துணை கொண்டு பிரமன் உலகங்களைப் படைத்தான். அவனுக்கு இடர் செய்த மதுகைடபர்களை அழித்தான். கடலில் மூழ்கிய உலகை மீட்டுக் கொடுத்தான். ஸகல சாஸ்த்ரங்களையும் மிகச்சிறந்த பாஞ்சராத்திர சாஸ்த்ரத்தையும் நானிலம் தழைக்க உபதேசித்தான். பெருங்கருணை கூர்ந்து வேதவ்யாஸன் மூலமாக பாரதம் போன்ற புராணங்களையும் ப்ரம்ம ஸூத்ரத்தையும் வெளியிட்டான். எம்பெருமானின் அருளாலேயே பராசர பகவான் விஷ்ணுவே சிறந்த கடவுள் என்று கூறும் ஸ்ரீ விஷ்ணு புராணத்தை மன்பதைக்கு அளித்தான். பகவத் கீதை எனும் அமரநூல் மகாபாரதத்தின் பகுதியே ஆகும். இவன் உபதேசித்த வேதங்கள் நான்கு. இவைகளுக்கு ஸ்வரம் (Special tune) உண்டு. மனம் போன படி இவைகளை ஓத முடியாது. ஸ்வரம் பதபாடம் க்ரமபாடம் இவை வேதங்களைத் தடம் பிறழாமல் காக்கின்றன. இவைகள் மற்ற வேதங்களுக்குக் கிடையாது. பல்லாயிரம் ஆண்டுகட்கு முன் இருந்த வேதஸ்வரமே மாறுபடாமல் இப்போதும் இருக்கின்றது. வேதம் ஆரம்பிக்கும் போதும் முடிக்கும் போதும் ஹரி: ஓம் எனும் வாக்கியம் எல்லோராலும் சொல்லப்படுகிறது. இதிலிருந்து வேதங்களுக்கும் எம்பெருமானுக்கும் இடையே உள்ள இணை பிரியாத் தொடர்பு வெளிப்படுகின்றது. இப்படி எம்பெருமான் பல உதவிகளைச் செய்து இருக்கிறான்.

ஸ்ரீமன் நாராயணின் அரசு

இவ்வரசு போற்றுதற்குரியது. போட்டி, பொறாமை, உயர்வு, தாழ்வு, வெற்றி, தோல்வி பாகுபாடு ஆகியவை இவனுடைய ஆட்சியில் இல்லை. அனைத்து தேவர்களும் இவனால் படைக்கப்பட்டவர்கள். இவனின் ஆணைக்குட்பட்டே அனைவரும் நடக்க வேண்டும். அவர்களின் வேலைகளில் இவன் தலையிடுவதில்லை. அவர்களையும் ஈடுபடுத்துகிறான். யாரையும் அவமானப் படுத்துவதில்லை. கிருஷ்ணன் யோகமாயையைக் கூப்பிட்டு தேவகியின் கருப்பையில் இருக்கும் கருவை கோகுலத்தில் இருக்கும் ரோஹிணியின் கருப்பையில் சேர்ப்பித்து விடு என்று சொல்கிறான். गच्छ देवि व्रजं भद्रे गोपगोभिरलंकृतम् அப்படி சேர்ப்பித்தால் உன்னைப் பலரும் விஜயா துர்கா எனும் பெயர்களால் அழைத்துப் பூஜித்து வணங்குவர். இப்படிச் செய்த உதவிக்கு மறு உதவியும் எம்பெருமான் செய்கிறான். நல்ல மார்க் வாங்கும் குழந்தைகளுக்கு Incentive கொடுக்கின்றனர். பெற்றோர். இதற்கு அடிப்படை இதுவே. போர் துவங்கும் முன் 'அர்ஜுனனே! துர்கையை வழிபடு. அவ்வழிபாட்டால் உனக்கு வெற்றி நிச்சயம் கிட்டும்' என்று எம்பெருமான் அர்ஜுனனிடம் கூறுகிறான்.

அவ்வாறே துர்கையை அர்ஜுனன் வழிபட்டான். துர்கை தோன்றினாள். 'அர்ஜுனா! உன் வழிபாட்டால் மகிழ்ந்தேன். விரைவிலேயே நீ எதிரிகளை வெல்வாய். ஏனென்றால் நாராயணன் உன் பக்கத்தில் உனக்கு உறுதுணையாக இருக்கின்றான். अचिरेणैव कालेन शत्रून् जेष्यसि पाण्डव! नारायणसहायवान् ' இதனால் துர்கைக்கும் பெருமையைத் தேடித் தருகிறான் எம்பெருமான். எம்பெருமான் தன் கீழ் இருப்பவரைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவதிலே மிகவும் கெட்டிக்காரன். மகிஷாசுரனைக் கொல்ல சக்தி தோன்றுகிறாள். அவளுக்கு தேவதைகள் தங்களின் சிறு சக்தியையும் ஆயுதங்களையும் அளிக்கின்றனர். மகிஷாசுரனுடன் சக்தி போர் புரிகின்றாள். கடைசியில் எம்பெருமான் அளித்த சக்ரத்தாலேயே சக்தி மஹிஷனைக் கொல்கிறாள் என்று தேவீ மாஹாத்ம்யம் வெளிப்படையாகக் கூறுகிறது. மஹிஷனின் சாவிற்கு எம்பெருமானின் சக்ராயுதமே காரணம் மற்ற ஆயுதங்களல்ல. எம்பெருமான் அசுரர்களுக்கு வரம் கொடுத்து மற்றவர்களைப் போல் துன்பத்தில் சிக்கித் தவிப்பதில்லை. மற்ற தேவதைகளை வழிபடுவோர் வழிபடட்டும், அவ்வழிபாட்டால் திருப்தி அடைந்து அத்தேவர்களின் வழியாக பலன் அளிப்பவன் நாராயணனே. எம்பெருமான் Dictator இல்லை. மற்றவருடன் இருந்து அவர்களை அணைத்துச் செல்கிறான்.

இருவினைகள்

இந்த மதம் புண்ணிய பாவங்களைப் ஒப்புக்கொள்கிறது. புண்ணியம் செய்தவன் சுவர்க்கத்தையும் பாவம் செய்தவன் நரகத்தையும் அடைகிறான். பூர்வ ஜன்மத்தை

ஒப்புக்கொள்வது நம்மதம் ஒன்றே. ஒரு குழந்தை பணக்காரக் குடும்பத்தில் பிறக்கின்றது. மற்றொரு குழந்தை ஏழையாகப் பிறக்கின்றது. ஏன்? பூர்வ ஜன்ம புண்ணியமும் பாவமுமே காரணங்களாம். ஒருவன் அரசன் ஆகிறான். மற்றொருவன் ஆண்டியாகிறான் ஏன் இந்த ஏற்றத்தாழ்வு?

யாரையும் உயர்த்துவதோ தாழ்த்துவதோ இறைவனின் வேலை அல்ல. புண்ய பாபங்களின் அடிப்படையில் ஒரு நேர்மை தவறாத நீதிபதியைப் போல அவன் பலன்களை அளிக்கிறான். புண்யமோ பாவமோ வைணவனுக்கு கிடையாது. சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்ட கர்மாக்களை பகவான் உகக்கச் செய்து அவைகளின் பலனை सर्वं श्रीकृष्णार्पणं अस्तु என்று பகவானுக்கே வைணவன் அர்ப்பிக்கிறான். ஞான யோகத்தால், பக்தி யோகத்தால், கர்மயோகத்தால் பகவானை அடையலாம். இவைகளால் அவனை சிலரே அடையலாம். எல்லோரும் சுலபமாக அவனை அடையும் ஒரே வழி உண்டு. இதை எவரும் செய்யலாம். ப்ரபன்னனுக்குத் தப்பாமல் மோக்ஷம் உண்டு. இதைச் செய்து வைகுண்டம் சென்றவர் பலர். யாரையும் நீக்குவதற்காக வந்த மதம் இதுவல்ல. வாழ்விப்பதற்காகவே, பெண்கள் ஒதுக்கப்படவில்லை. பெண்கள் இல்லாமல் வைதிககர்மாக்களைச் செய்ய முடியாது. பெண்களுக்கு உயர்ந்த இடத்தை வேதம் அளிக்கிறது. வதூவரர்களை நிச்சயம் செய்யும்போது இப்போதும் இம்மந்திரத்தைச் சொல்லி வருகிறோம். उद्धरमारोहन्ती न्यस्यन्ती पृतन्यतः। मूर्धानं पत्युरारोह प्रजया च विराट् भव। ஒரு பெண் சகல மர்யாதைகளையும் பெறுவதற்கு உரியவள். வேதபுருஷனும் मातृदेवो भव என்று தாய்க்கு முதலிடம் கொடுத்தான். எந்த பெண்ணையும் கொல்லக் கூடாது என்கிறது சாஸ்திரங்கள். பெண்கள் பூஜிக்கப்படும் இடத்தில் எல்லா தேவர்களும் வாழ்கின்றனர். கார்கீ, மைத்ரேயி போன்ற பெண்கள் இருந்தனர். ஸனாதனதர்மமே வைணவம். வைணவமே விஸிஷ்டாத்வைதம். இதலிருந்து பிரிந்தவைதான் சைவம், சாக்தம் முதலியவை.

नाविष्णुः पृथिवीपतिः எல்லா அரசர்களும் விஷ்ணுவின் அம்சமே. சூர்ய வம்சப் பேரரசன் இக்ஷ்வாகு பலவருடம் தவம் செய்து பிரமனுடமிருந்து அரங்கனை ரங்க விமானத்துடன் பெற்றான். "பணியரங்கப் பெரும் பாயல் பரஞ்சுடரையாம் காண அணியரங்கம் தந்தானை அறியாதார் அறியாதார்" என்று கம்பன் கூறுகிறான். लङ्घा कुलधनं राजा लंकां प्रायात् என்று வான்மீகமும் கூறுகின்றது. சூர்ய வம்ச அரசர்கள் அரங்கனையே வழிபட்டு வந்தனர். அனைத்து அரசர்களும் வைணவர்களே. வேனனின் பிள்ளை ப்ருதுவின் சரீரத்தில் எம்பெருமானே ப்ரவேசித்து தர்மத்தை ஸ்தாபித்தான் என்கிறது பாரதம். மாந்தாதா முசுகுந்தன் அம்பரீஷன் முதலிய மன்னர்கள் விஷ்ணு பக்தர்களே. அம்பரீஷனின் பக்தியை மெச்சி எம்பெருமான் அவனைக் காக்கத்தன் சுதர்சனத்தை அளித்தான். முசுகுந்தன் தான் கண் விழிக்கும் போது ஸ்ரீமன்

நாராயணன் தன் முன் தோன்ற வேண்டுமென வேண்டினான். தர்மம் இருக்கும் இடத்தில் கிருஷ்ணன் இருக்கிறான். எங்கே கிருஷ்ணனோ அங்கே வெற்றி நிச்சயம் என்று பலர் கூறினர். यतो धर्मः ततः कृष्णः यतः कृष्णः ततो जयः கௌரவர்களின் பெரும் சேனையைப் பார்த்து தர்மபுத்திரன் கலங்கி நிற்கிறான். வெற்றியும் வணக்கமும் எம்பெருமானின் சிறந்த குணங்கள். இவை மற்ற குணங்களைப் போலே எம்பெருமானைப் பின் தொடர்ந்து செல்லும். எம்பெருமான் உன் பக்கத்தில் இருக்கின்ற படியால் உனக்கு வெற்றி நிச்சயம் என்று அர்ஜுனன் தர்மபுத்ரனிடம் கூறுகிறான். गुण भूतो जयः कृष्णं पृष्ठतः अभ्येति என்கிறது மஹாபாரதம். எந்த ஸன்யாஸியும் தன் பேச்சை முடிக்கும் போதும் ஸ்ரீமுகத்தை முடிக்கும் போதும் क्रियते नारायणस्मृतिः என்றே சொல்லியும் எழுதியும் வருகின்றனர்.

குருவும் கல்வியும்

குருவிடம் அமர்ந்து அவருக்கு ஸேவை செய்து கல்வி கற்றனர் பழங்கால சீடர்கள். அருகில் இருக்கும் கிராமங்களில் சென்று பிக்ஷை எடுத்து குருவிற்குக் காட்டி அவரின் உத்திரவு பெற்றே உண்டு வந்தனர். கல்வி இலவசமாகவே அளிக்கப்பட்டது. மிகச் சிலரே குருதக்ஷிணை கேட்டனர். குருக்கள் ஆசை அற்றவராகவும் தன்னலமற்றவராகவும் பற்றற்றவராகவும் விளங்கினர். அவர்கள் பொன் பொருளை விரும்பவில்லை. பசுக்களையே தானமாகப் பெற்று வந்தனர். தசரதமன்னன் யாகம் பண்ண இடத்தை ருத்விக்குகளுக்கு பகிர்ந்தளிக்க, "வேண்டாம் மண். பூமியை ஆளமுடியாது. வேறு ஏதாவது கொடு' என்று ருத்விக்குகள் கூறுகின்றனர். न भूम्या कार्यं अस्माकं न हि शक्ताः स्म पालने என்கிறது வான்மீகம். முனிவர்களிடம் ஆசி பெற மன்னர்கள் காட்டிற்குச் சென்றனர். மன்னர்களிடம் எதையும் வேண்டி குருக்கள் செல்லவில்லை. குருக்களே முனிவர். இதிஹாஸங்கள் புராணங்கள் ஜோதிடநூல்கள் அனைத்து நூல்களும் அமைதிப் பூங்காவான காட்டில் வாழ்ந்த பற்றற்ற முனிவர்களிடமிருந்தே நமக்குக் கிடைத்தன. வகுப்புக்களில் கல்வி கற்பிக்கக் கேள்வி பதில் முறை சிறந்ததெனக் கல்வியாளர் கூறுகின்றனர். இம்முறையே பழைய காலத்தில் பின்பற்றப்பட்டு வந்தது. குருக்களிடம் கேள்வி கேட்டு தக்க பதிலைப் பெற்று பண்டிதர்கள் ஆயினர் பலர். கஹோளர் கார்கீ மைத்ரேயீ போன்றவர் யாக்ஞ்யவல்கியரிடம் பல கேள்விகளைக் கேட்டுத் தம் ஐயங்களைப் போக்கிக் கொண்டனர். ப்ரச்னோபநிஷத் எனும் ஒரு உபநிஷத்தே உள்ளது. ஸுகேசர் ஸத்யகாமர் ஸௌர்யாயணி கௌஸல்யர் ஆச்வலாயநர் கபந்தீ எனும் ஆறுமுனிவர்கள் பிப்பலாதர் எனும் குருதேவனிடம் கல்வி கற்கச் சென்றனர். பிப்பலாதர் அவர்களை உபசரித்து அவர்களின் ஐயத்தைப் போக்கியதாக ப்ரச்னோபநிஷத் தெளிவு படுத்துகின்றது. இப்படி தரமான கல்வி போதிக்கப்பட்டது.

குருவும் கல்வியும் சீடர்களும்

குருவிற்கும் சீடர்களுக்குமிடையே நல்லிணக்கமும் அன்பும் பரிவும் பாசமும் இருந்தன. பாடம் துவங்கும் முன்பும் முடியும் போதும் "வேதம் நம் இருவரையும் காக்கட்டும். சேர்ந்தே பயணிப்போம். அதன் பலனுக்காக இருவரும் பாடுபடுவோம். இவ்வேதம் இருவருக்கும் நற்பயனை அளிக்கட்டும். நாம் இருவரும் என்றும் மோத மாட்டோம். அமைதி அமைதி அமைதி" என்று குருவும் சீடர்களும் ப்ரார்த்திப்பர். வேதமே ஆறு அங்கங்களுடன் போதிக்கப்பட்டது. தர்க்கம், வ்யாகரணம், மீமாம்ஸா, வேதாந்தம், தனுர் வேதம், ஆயுர்வேதம், ஜ்யோதிஷம் ஆகியவை போதிக்கப்பட்டன. பலகுலபதிகள் இருந்தனர். பத்தாயிரம் பேருக்குக் கல்வி அளித்தவர் குலபதி எனப்பட்டார். "உண்மை பேசு. தர்மம் செய். வேதாத்யயனம் செய். குருதக்ஷிணை கொடுத்த பிறகு திருமணம் செய்து கொள். மங்கள கார்யங்களைச் செய். பணம் சம்பாதி. பணத்தால் பல நல்ல கார்யங்களைச் செய். அன்னை தந்தை ஆசார்யன் அதிதிகள் ஆகியோரைத் தெய்வமாக நினைப்பாய். குற்றமற்ற வேலைகளைச் செய். விஷயங்களிலோ நடத்தையிலோ ஐயம் இருப்பின் மகான்களிடம் சென்று தீர்த்துக் கொள்" என்று ஆசாரியன் வேதாத்யயனம் முடித்து வீட்டிற்குச் செல்ல இருக்கும் சீடனிடம் கூறுகிறான். அக்காலத்தில் இதுவே Convocation Address ஆகும். सत्यं वद என்று தொடங்கி एवं उपासितव्यम् எனும் வாக்கியம் வரை உள்ள வாக்கியங்களால் தைத்திரீயம் இதற்கு முன் எழுதப்பட்ட அர்த்தத்தை போதிக்கின்றது. க்ரந்த பாராயணம் முடியும் போதும் நல்ல கார்யங்களை முடிக்கும் போதும் "மக்கள் நன்கு வாழ்க. நெறி வழுவாமல் அரசன் ஆட்சி செய்வானாக. பசுக்களுக்கும் அந்தணர்களுக்கும் மங்களம் உண்டாகட்டும். ஸமஸ்த லோகமும் சுகமுடன் இருக்குமாக" என்று சொல்லி வருகிறோம் நாம் எல்லோரும். स्वस्ति प्रजाभ्यः..... समस्ता सुखिनो भवन्तु எனும் சுலோகத்தின் பொருளே மேலே எழுதப்பட்டது.

விருந்தோம்பலும் கேளிக்கைகளும்

மக்கள் எங்கும் எப்போதும் நல்ல கார்யங்களையே செய்து வந்தனர். பரஸ்பர உதவியும் இருந்தது. வேதங்கள் கோயில்களில் ஓதப்பட்டன. பல ஏக்கர் நிலங்கள் கோயில்களுக்குத் தரப்பட்டன. ஊர் ஊராகச் சென்ற யாத்ரிகளுக்கு இலவசமாக கோயில்களில் அன்னம் வழங்கப்பட்டது. பகவதாராதனத்திற்குப் பிறகு சிறிது நேரம் அதிதிகளை எதிர்பார்க்க வேண்டும். வரவில்லை என்றால் பிறகு சாப்பிடவேண்டும். ஸன்யாஸிகள் ஊர் ஊராகச் சென்று ஸனாதனதர்மத்தைப் பரப்பி வந்தனர். அன்னதானம் எங்கும் செய்யப்பட்டது. மாதம் மும்மாரி பொழிந்தது. இரவுகளில் எல்லா இடங்களிலும் விசேஷமாக கிராமங்களில் புராண நிகழ்ச்சிகள் நாடகங்கள் வாயிலாக வெளிப்பட்டன. தமிழ் நாட்டில் கூத்து தெலுங்கில் புராகதா மலையாளத்தில் மோஹினி ஆட்டம் கதகளி சாக்கியர் கூத்து ஆகியவைகளைப் பலர் கண்டுகளித்தனர். இவைகளின் வாயிலாக

புராணக் கருத்துக்கள் மக்கள் மனதில் பதிந்தன. எப்படி தழைத்தன என்பதை நம் நாட்டில் இருக்கும் கோயில்களே பறை சாற்றுகின்றன. இந்த ஸனாதன தர்மத்தின் முன் எல்லோரும் சமானமே. யாரும் உய்யலாம். யாரும் தாழ்த்தப்படவில்லை. புறக்கணிக்கப்படவும் இல்லை.

பரவும் மதம்

கீதாப்ரஸ் கோரக்பூர் பாரதீய வித்யாபவன் பண்டார்கள் இன்ஸ்டிடியூட் ஆகியவை ஆயிரக்கணக்கான நூல்களை வெளியிட்டு மதத்தைப் பரப்பி வருகின்றன. ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமம் இவ்விஷயத்தில் பெருந் தொண்டு செய்து வருகிறது. ஸ்ரீபாஷ்யம், சததூஷணீ, ஸ்தோத்திரக்ரந்தங்கள், பாதுகா ஸஹஸ்ரம் போன்ற எண்ணற்ற கிரந்தங்களையும் ஒலி நாடாக்களையும் வெளியிட்டுள்ளது. பல இடங்களில் வேத திவ்யப்ரபந்த பாட சாலைகளைத் திறந்து திறம்பட நடத்தி வருகின்றது. பல பண்டிதர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். பல மன்னர் செய்த தொண்டை ஸ்ரீமத் ஆண்டவன் ஆசிரமம் ஒன்றே செய்து வருகிறது. ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமத் ஆண்டவனின் காலம் ஸனாதன தர்மத்தின் பொற்கால மென்பதில் ஐயமில்லை. இம்மதம் மேலும் மேலும் வளரும். ஸாமான்ய சாஸ்த்ரம், விசேஷ சாஸ்த்ரம், ஜ்யோதிஷம், ஆயுர்வேதம், ஸங்கீதம் ஆகியவைகளில் வல்லுநரும் ஹஸ்தஸித்தியும் வாக்ஸித்தியும் உள்ளவருமான ஸ்ரீமதாண்டவன் ஸப்ததி வார்ஷிக மஹோத்ஸவ ஸந்தர்ப்பத்தில் ஒரு கட்டுரை எழுத வேண்டுமென பஹுபாஷாபாஷியும் சாந்தரும் மஹாவித்வானும் ம்ருதுபாஷியுமான ஸ்ரீகார்யம் ஸ்வாமி ஆணை இட்டதற்கு இணங்க இக்கட்டுரையை எழுதி ஸ்ரீமதாண்டவனின் திருவடித் தாமரைகளில் ஸமர்ப்பிக்கிறேன்.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ:

வையம் இடந்த வராஹப்பெருமான்

(ஸ்ரீ. உ.வே. பாதூர்-புராணம் ரங்கராஜாசார்யர், திருப்பதி.)

பாகவதாபசாரம் கண்டு வெகுண்டு பொறுக்கமாட்டாமல் இந்நிலவுலகில் அவதரித்துப் பலவிதமான ஆனைத்தொழில்களைப் புரிகிறான் எம்பெருமான். இவ்வாறு அவன் மத்ஸ்யாவதாரம் தொடங்கி ஸ்ரீக்ருஷ்ணாவதாரம் ஈறாக ஒன்பது அவதாரங்களை எடுத்துள்ளான். இவற்றுள் வராஹாவதாரம் செய்த எம்பெருமானை நம் பூர்வர்கள் சென்ற வழியில் சென்று அநுபவிப்போம். எம்பெருமானால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் வராஹாவதாரத்தில் ஆழங்கால் பட்டு அப்பெருமானை தமது இன்னிசைத் தமிழால் இயம்பி ஏத்தினர். "*ஏனமாய் நிலம் கீண்ட என்னப்பனே கண்ணா*" என்றெல்லாம் பலவாருகக் கூறி வழிபட்டனர். வராகப்பெருமானுக்கு உள்ள தனிச்சிறப்பாக இதைக் குறிப்பிடலாம். மற்ற அவதாரங்களில் காணக் கிடைக்காத ஓர் அம்சமாக இதை நம் பூர்வர்கள் விளக்கி மகிழ்வர். அதாவது நாம் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும்போதே பகவானை அவனுடைய "*நாமங்கள் பல சொல்லி*" வாயார வாழ்த்தி வழிபடவேண்டும். அவ்வாறு வழிபட்டோமானால் ஒருக்கால் சரீரம் தளர்ந்து இளைத்துப்போய் சக்தியற்று இருக்கும்போது எம்பெருமானை நினைக்காது போனாலும் பரவாயில்லையாம், சிறு பிராயம் தொடங்கி நாம் செய்த ப்ரார்த்தனைகளை, துதிகளை எண்ணுவானாம் எம்பெருமான். நாம் நற்கதி அடையுமாறு செய்வானாம். இதை வராஹபுராணம் விளக்குகிறது. வராஹப்பெருமான் திருமுகப் பாசுரமாக அதாவது வராஹப் பெருமானே சோதிவாய் திறந்து அருளிய காரணத்தால் நம் பூர்வாசார்யர்கள் "*வராஹ சரம ச்லோகம்*"என அழைக்கின்றனர். அந்த இரண்டு ச்லோகங்களைக் காண்போம்.

स्थिते मनसि सुस्वस्थे शरीरे सति यो नरः।
धातुसाम्ये स्थिते स्मर्ता विश्वरूपं च मामजम् ॥
ततस्तं म्रियमाणं तु काष्ठपाषाण सन्निभम्।
अहम् स्मरामि मद्भक्तम् नयामि परमां गतिम् ॥

மனம் கலக்கமில்லாமல் நிலைநிற்கும் போது உடலும் நோய் இல்லாமல் நன்றாக இருக்கும்போது வாதம் பித்தம் ச்லேஷ்மம் என்கிற மூன்று தாதுக்களும் ஓரளவாய் இருக்கையில் எந்த மனிதன் உலகத்தைச் சரீரமாக உடையவனும் பிறப்பு முதலிய மாறுபாடுகள் இல்லாதவனான என்னை நினைக்கிறானோ, பிற்காலத்தில் கட்டைபோன்றும் கல்போன்றும் ஏத்தவனாய் ஆகும்போது மரணமடையும் தருவாயில் உள்ள அந்த என்னுடைய பக்தனை நான் நினைக்கிறேன் . உயர்ந்ததான பதவிக்கு (பக்தனை) அழைத்துச்செல்கிறேன் என்கிறார் வராஹப்பெருமாள். அத்த வாளத்தலையாலே முட்டாக்கிட்டு நானே கொண்டு போகக்கடவேன் என்று இங்கு உரையிட்டனர் உரையாசிரியர்கள். அப்படிப்பட்ட முக்தாத்மாவான பக்தனை ஆதிவாஹிகர்களை அனுப்பி அழைத்து வரச் செய்யமாட்டேன். நானே அத்த வாளத்தலையாலே (புடவைத் தலைப்பாலே) மூடிக் குழந்தையை அணைத்துச் செல்லும் தாய்போல் நானே மூடி அணைத்து அழைத்துச் செல்வேன் என்கிறான் எம்பெருமான். ஸ்வாமி நம்மாழ்வாரும் "திருவிருத்தம்" என்கிற தமது ப்ரபந்தத்திலே -

ஈனச் சொல்லாயினுமாக, எறிதிரை வையம் முற்றும்
ஏனத்துருவாய் இடந்த பிரான், இருங்கற்பகம் சேர்
வானவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாய வர்க்கும்
ஞானப்பிரானை யல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே

(திருவிருத்தம் -99)

இவ்வாறாக ஞானப்பிரானாகிய வராஹப்பெருமானுடைய பெருமையை விளக்கும் இப்பாசுரத்தையும் ஸ்ரீமத்ராமாயணத்திலுள்ள "மித்ரபாவேன ஸம் ப்ராப்தம்"என்கிற சுலோகத்தையும் எடுத்துக்காட்டி நம் பூர்வாசார்யர்கள் मित्रभावेन என்கிற ஸ்ரீமத்ராமாயணச்லோகம் ராமஸித்தாந்தமாய் இருக்கிறாப்போலே இப்பாட்டு ஆழ்வாருடைய ஸித்தாந்தமாயிருக்கிறது என்ற இப்பாசுர வ்யாக்யாநவரிகள் நெஞ்சைத் தொடும் அளவிற்கு உயர்ந்த பொருள் படைத்தது.

பூமிப்பிராட்டிக்காக எம்பெருமான் வராஹ உருவம் தாங்கினான். இதைத் தெரிவிக்கும் கோதை வாய்ச்சொல் கேண்மின் -

பாசி தூர்த்துக் கிடந்த பார்மகட்குப் பண்டொருநாள்
மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாம்
தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்
பேசியிருப்பனகள் பேர்க்கவும் பேராவே

(நாச்சியார் திருமொழி - 11.8)

முன்பொருகாலத்தில் பாசி படர்ந்து கிடந்த ஸ்ரீபூமாதேவிக்காக அழுக்கேறின உடம்பில் நீர் ஒழுகும் வெட்கமில்லாத வராஹரூபம் கொண்ட ஒளியையுடைய எம்பெருமானாகிய ஸ்ரீரங்கநாதன் முன்பு கூறிய பேச்சுக்கள் நெஞ்சை விட்டு பேர்க்க நினைத்தாலும் பேராது என்கிறார் ஆண்டாள். பன்றியாய் மாறிய பரமனாம் எம்பெருமானுக்கு தேஜஸ் (ஒளி) எவ்வாறு ஏற்பட்டது என்றால் **ஆச்ரிதார்த்த மாகத் தன்னை அழியமாறுகையால் வந்த தேஜஸ்** என்று இங்கு வ்யாக்யானம். "தனக்கு வேண்டுருக் கொண்டு" என்று ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச்செய்தபடி கர்மம் காரணமாக அல்லாமல் தன் உடமையைக் காக்கவேண்டும் என்னும் விருப்பத்தாலே எடுத்த வடிவாகையால் ரக்ஷகத்வம் உறைத்திருக்கும். அப்படிப்பட்ட வராஹப்பெருமான் பெருமையை ஸ்வாமி தேசிகன் - **गोपायेदनिशं जगन्ति कुहनापोत्री** என்கிற ஸ்ரீதசாவதார ஸ்தோத்ரம் வாயிலாக வெளியிட்டருளினார். அதாவது கபடமாக வராஹவடிவம் தாங்கிய எம்பெருமான் திருமூக்கின் ஓலிகள் லோகங்களையெல்லாம் எப்போதும் காத்தருளவேண்டும் என்றருளினார். பெருநிலமெடுத்த பேராளனாய் விளங்கும் வராஹப் பெருமானிடம் தமது உள்ளத்தைப் பறிகொடுத்த பராங்குச நாயகி (ஸ்வாமி நம்மாழ்வார்)

பண்புடை வேதம் பயந்த பரனுக்கு
மண்புரை வையம் இடந்த வராகற்கு
தண்புனல் பள்ளியெந் தேவப்பிரானுக்கு, என்
கண்புனை கோதை இழந்தது கற்பே (திருவாய் மொழி 6.6.5)

என்று கூறி இருநிலமிடந்த வெம்பெருமான் திறத்தில் தமது ஆற்றாமையை வெளியிட்டார். ஸ்ரீமுஷ்ணம் ஆண்டவன் ஸ்வாமி ஸப்ததி மஹோத்ஸவம் நடைபெறும் இத்தருணத்தில் ஸ்வாமியின் நற்குணங்கள் நம்மை ஈர்க்கின்றன. ஆசேது ஹிமாசலம் விஜயயாத்திரை செய்து சேதனர்களை நல்வழிப் படுத்தும் ஸ்ரீஆண்டவன் ஸ்வாமிக்கு பல்லாண்டு பாடுவோம். அதனால் புண்ணியம் பல பெறுவோம்.

★ ★ ★ ★ ★ ★

பாதுகா ப்ரபாவம்

(பையம்பாடி, சேட்டலூர், ஸ்ரீ. ராகவாசாரியார், நங்கநல்லூர், சென்னை-61)

ஸ்ரீ ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த அற்புதமான க்ரந்தங்களுள் ஒன்றுதான் பாதுகாஸஹஸ்ரம் என்பது. சாண் கட்டையில் ஆயிரம் துளையிட்டவர், அதுவும் ஒரு யாமத்தில். (ஒரு யாமம் என்பது மூன்று மணி நேரம்) ஸபா புஜங்கீ என்பர் ஸ்வாமி தேசிகனைப்பற்றி. அதாவது ஸபையைக்கண்டு நடுங்குபவர். இதன் உண்மையான தாத்பர்யம் என்னவென்றால் தான் ஸபையில் வாத ப்ரதிவாதங்களில் பங்கேற்றால் மற்றவர்கள் தோற்கநேரிடும். தோற்றவரும் ஒரு பாகவதரான படியால் அவர் வருத்தப்படுவதைக்கண்டு அதற்கு காரணமாகத்தான் ஆகிவிட்டோமே என்று துக்கப்படநேரிடும். எனவே ஸபையைக்கண்டு ஒதுங்குபவர். ஆழ்வார் அந்தாதியாக ஸாம வேத ஸாரமாக ஆயிரம் பாஸுரங்கள் அருளிச்செய்ததை திரு உள்ளத்தில் கொண்டு ஒரு சமயம் ஒரு பாகவதர் ஒரே விஷயத்தைப்பற்றி ஆயிரம் சுலோகங்கள் இயற்ற முடியுமா என்று கேட்க, ஆயிரம் என்ன நூறாயிரம் சுலோகங்கள் எம்பெருமான் மற்றும் பாதுகா தேவியின் அருள் இருந்தால் பண்ணலாம் என்று கூறி அபிமானிகளின் வற்புறுத்தலுக்கேற்ப முக்தர்களுக்கு பரம போக்யமான எம்பெருமான் திருவடியென்ன அதையும் தாங்கும் பாதுகையே போதுமானது என்று பாதுகையின் பெருமையை ஆயிரம் சுலோகங்களால் வெளியிட்டார். அப்படிப்பட்ட பெருமையோடு கூடின பாதுகையின் ப்ரபாவத்தை இந்த சமயத்தில் ஆச்ரித வாத்ஸல்ய குணத்திற்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீமதாண்டவன் ஸ்வாமியின் சப்ததி மஹோத்ஸவ மலரில் சீலமில்லா சிறிய ஜ்ஞானத்தனான அடியேனையும் ஒரு பொருட்டாய் எண்ணி இந்த கைங்கர்யத்தை பணித்த ஸ்ரீகார்யம் ஸ்வாமிக்கும் மற்றும் சப்ததி மஹோத்ஸவ ஸமிதியைச்சேர்ந்த பாகவதோத்தமர்கள் அனைவருக்கும் அடியேனது அனந்த ப்ரணாமங்களை ஸமர்ப்பித்துக்கொண்டு அடியேன் திருத்தகப்பனாரிடம் தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும் தெரிந்து கொண்டவற்றில் சில விஷயங்களை தெரிவித்து க்ருதார்த்தனாகிறேன்.

நித்ய ஸூரிநாயகனான அனந்தாழ்வான் நின்றால் மரவடியாம் என்ற க்ரமத்தில் கருத்மான் மற்றும் விஷ்வக்ஸேனாதிகளைப்போல் எம்பெருமான் அருகில் இருந்து கைங்கர்யம் பண்ணுவதற்கு பாக்கியம் பெற்றவர் . இப்படி ஸமத்துவம் இருந்தும் ஆதிசேஷன் முதலானோர் பாதுகையை தமது சிரஸில் பரிவட்டமாக தரித்துக் கொள்வதிலிருந்து பாதுகையின் பெருமையை உணரமுடிகிறது என்றருளிச் செய்கிறார் ப்ரபாவ பத்ததியில் பரஸ்ய பும்ஸ: பதஸந்நிகர்ஷே துல்யாதிகாராம் மணிபாதுகேத்வாம் ।உத்தம்ஸயந்தி ஸ்வயமுத்தமாங்கை: சேஷாஸமம் சேஷகருத்மதாத்யா: ।। என்கிற 53வது சுலோகத்தில். ஜனங்கள் எல்லோரையும் ரக்ஷிக்கும் எமபெருமான் திருவடிகளுக்கு ரக்ஷகமாகவே இருக்கின்றது பாதுகைகள்.

மற்றொன்றால் ரக்ஷிக்கப்படாத நிலையில் இருக்கும் பாதுகையே அதன் ப்ரபாவத்தை பரக்கப்பேசுகிறது என்றருளிச்செய்கிறார் அதே பத்ததியில் பாதௌ முராரேஃ சரணம் ப்ரஜானாம் தயோஸ்ததேவாஸி பதாவனி த்வம்। சரண்யதாயாஃ த்வமனன்ய ரக்ஷா ஸந்த்ருச்யஸே விச்ரமபூமிரேகா ।।என்கிற 60 வது சுலோகத்தில்.

அடுத்ததான அன்யேஷு பத்மாகமலாஸனாத்யைரங்கேஷு ரங்காதிபதே ச்ரிதேஷு। பதாவனித்வாமதிகம்ய ஜாதம் பதம் முராரேரதிதைவதம் நஃ ।। என்கிற சுலோகத்தில் மஹாலக்ஷ்மியால் அடைந்த எம்பெருமானின் திருமார்பும், சதுர்முகனால் அடையப்பட்ட திருநாபியும் பெறாத பெருமை எம்பெருமானின் திருவடிகள் உன்னை அடைந்ததனால் எல்லோரும் உபாஸிக்கவேண்டிய உத்தம தைவமாயிற்று என்றருளிச்செய்கிறார் . என்னே ஸ்வாமியின் கற்பனை சக்தி. மேலும், தேவகணங்கள் சிவனையும், சிவன் ப்ரஹ்மாவையும், ப்ரஹ்மா பகவானையும் அண்டியிருக்கின்றனர். எவ்வித அந்தமும் ஆதியும் இல்லாத அந்த பகவானோ உன்னை அண்டியிருக்கிறான் என்றருளிச்செய்கிறார். ருத்ரம் ச்ரிதோ தேவகணஃ ஸ ருத்ரஃ பத்மாஸனம் ஸோபி ச பத்மநாபம் ।ஸ த்வாமநந்தோ ந புநஸ்தத்ஞுவமன்யம் க ஏஷ பாதாவனி தே ப்ரபாவஃ ।। என்ற 94வது சுலோகத்தில். எல்லாவற்றையும் விட்டு விட்டு ராமன் காட்டிற்கு போகும் போது ஸஹாயமாக யாரைப்பற்றுவது என்று யோசித்து அவர் தாமாகவே பற்றியது பாதுகைகளைத்தான். பாதுகையின் மஹிமைதான் என்ன?

ராமனை அழைத்துக் கொண்டு வரவேண்டும் என்று காட்டிற்குச்சென்ற பரதன் பாதுகைகளை ராமன் கொடுத்தவுடன் நாட்டிற்குத்திரும்பி வருகிறான். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் அடகு வைக்கும் பொருள் எப்பொழுதும் அதன்மேல் கடனாகப்பெறும் தொகையை காட்டிலும் மிகவும் மதிப்புள்ளதாக இருக்கும். ஆகையால் ராமனையே வேண்டிய பரதனிடம் மரவடியை தம்பிக்கு வான் பணயம் வைத்துப்போய்.... என்ற பெரியாழ்வாரின் திருவாக்கை அடியொற்றி ராமன் ஸ்தானத்தில் கொடுக்கப்பட்ட பாதுகை உயர்ந்தவள் என்பதை ஸமர்ப்பண பத்ததியில் பாதாவனி ப்ரபவதோ ஜகதம் த்ரயாணாம் ராமாதபி த்வமதிக நியதம் ப்ரபாவாத் । நோ சேத் கதந்து பரதஸ்ய தமேவ லிப்ஸோஃ ப்ரத்யாயன பரிபணம் பவதீ பவித்ரீ।। என்று அருளிச்செய்கிறார் 8வது சுலோகத்தில்.

மிகக்கொடிய பாவங்களை பொறுத்துக்கொள்ளும் தன்மை உன்னிடத்தில்தான் இருக்கிறது. ஏனெனில் ராமனும் உன்னை விட்டு பிரிந்திருந்த பொழுதுதான் ராவணாதிகளை கொன்றான் என்றருளிச்செய்கிறார். பாதாவனி ப்ரபுதராநபராதவர்காந் ஸோடும் க்ஷமா த்வமஸி மூர்த்திமதீ க்ஷமைவ ।யத் த்வாம் விஹாய நிஹதாஃ பரிபந்திநஸ்தே தேவேந தாசரதிநா தசகண்டமுக்யாஃ ।। என்கிற 10வது சுலோகத்தில். ராமன் பாதுகையின் மேல் சிறிது நேரம் ஏறி நின்றுவிட்டு பிறகு பரதனிடம் அவைகளை கொடுத்து அனுப்புகிறார். ஏனெனில் இயற்கையிலேயே சக்தி வாய்ந்த பாதுகைகளிடம் சக்தியைத்தான் பெறவேண்டித்தான் என்கிறார்

நியதமதிருரோஹ த்வாமநாதேயசக்திம் நிஜசரணசரோஜே சக்திமாதாதுகாமः ।
ஸ கதமிதரதா த்வாம் ந்யஸ்ய ராமோ விஜஸ்ரே த்ருஷதுபஸிதபூமௌ
தண்டகாரண்யபாகே ॥

என்கிற ஸமர்ப்பண பத்ததியில் 16வது சுலோகத்தில். திரும்பிச்செல் என்ற ஆஜ்ஞை இருக்கும்பொழுது திரும்பிச்செல்லாமலிருந்த இளைய பெருமாளை விடவும் , அபிஷேகம் செய்து கொள் என்ற போது அதை அடியோடு விட்டவனான பரதாழ்வானைவிடவும் இவ்விரண்டையும் செய்ததனால் பாதுகையே உயர்ந்தவள் என்கிறார் ஸ்வாமி தேசிகன். அபிஷேகபத்ததியில் ப்ராதுர்நியோகேऽப்யநிவர்தமானம் ராஜ்யாபிஷேகம் ச பரித்யஜந்தம் ।
ராமானுஜௌ தௌ நநு பாரதந்த்ர்யாத் உபாவுபாப்யாம் பவதீ ஜிகாய ॥
எனற நான்காவது சுலோகம் காண்க .

ஸ்ரீதேவி பூமிதேவிமார்களைவிட பாதுகாதேவி உயர்ந்தவள். சேதனர் கூட்டம் எம்பெருமானை அணுகும்போது ஸ்ரீ பூ தேவிமார்களின் பரிவான பேச்சைக்கேட்டு கீழே குனியும் போது எம்பெருமானை சேதனர்களை அனுக்ரஹிக்கவேண்டி பரிவுடன் பேசுபவள் பாதுகாதேவியே. ஆகவே ஸ்ரீ, பூ தேவிகளைவிட மேலானவள் பாதுகா தேவி.
பார்ச்வயோः ஸரஜஸிஜாவஸுந்தரே பாதயோச்ச மணிபாதுகே யுவாம் ।
ஸந்நிகர்ஷத ந சேந்மதுத்விஷः கிம் கரிஷ்யதி க்ருதாகஸாம் கணः ॥
எண்கிற த்வந்த்வ பத்ததி (6) சுலோகம் காண்க.

இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெரினும் வேண்டேன் அரங்கமாநகருளானே என்ற தொண்டரடிப்பொடியாழ்வார் வாக்யத்தை அடியொற்றி ஸமாச்ரிதானாம் மணிபாதுகே த்வாம் விபச்சிதாம் விஷ்ணுபதேऽப்யநாஸ்தா । கதம் புநஸ்தே க்ருதினோ பஜேரந் வாஸாதரம் வாஸவராஜதாந்யாம் ॥ (சு. 9)= தத்வங்களை உள்ளபடி அறியப்பெற்று உன்னை அடைந்தவர்களுக்கு எம்பெருமான் திருவடியிலும் பரமபதத்திலும் பற்றில்லை. அப்படியிருக்க இந்திரனுடைய பட்டணத்தில் வஸிக்கவேண்டும் என்ற விருப்பத்துடன் இருப்பரோ? என்றருளிச்செய்கிறார் பல பத்ததியில்.

எம்பெருமான் பர்யங்காஸனத்தில் எழுந்தருளியிருக்கும் பொழுது பாதுகைகள் ஒன்றும் பண்ணவில்லை என்று எண்ணவேண்டாம். அப்போதும் அவைகள் வெறுமெனே இருக்கக்காரணம் என்னவெனில், ரங்கநாதன் தனது நாபிக்கமலத்தில் படுத்துக்கொண்டிருக்கிற குழந்தையான ப்ரஹ்மாவின் ஸாமகானத்தை கேட்பதற்கு ஸந்தர்ப்பம் கொடுக்கின்றன என்றருளிச்செய்கிறார் நாத பத்ததியில்,
பர்யங்கமாச்ரிதவதோ மணி பாதுகே த்வம் பாதம் விஹாய பரிகல்பிதமௌநமுத்ரா । ச்ரோதும் ப்ரபேரவஸரம் திசஸீவமாதः நாபீசரோஜசயிதார்பகஸாமகீதிம் ॥ (சு 62) என்கிற சுலோகத்தில். நாதமுண்டு என்பது போல் நாதமில்லை என்பதும் நாதபத்ததிக்கு விஷயமே.

ஒய்யாரமாக ஸர்வ ஸ்வதந்த்ரரான அழகிய மணவாளன் காவேரியின் மணல் திட்டில் ஸஞ்சரிக்கும்போது காதுக்கு இனியதான உனது நாதங்களைக் கேட்பதற்காகவே ரஸம்நிறைந்த ஸாமவேத நாதங்களையும் நிறுத்துகின்றார். அதாவது ஸங்கீதத்தையும் ஸாமகானத்தையும் விட பாதுகாநாதம் காதுக்கு இனிமையானதாக இருக்கின்றது என்றருளிச் செய்கிறார்

ஸாமானி ரங்கந்ருபதிः ஸரஸம் ச கீதம் லீலாகதேஷு வினிவாரயதி ஸ்வதந்த்ரः।
ச்ரோதும் தவ ச்ருதிஸுகானி விசேஷவேதீ மஞ்ஜுஶினி காஞ்சனபதாவனி
சிஞ்சிதானி।।

என்றநாதபத்ததி (67) வது சுலோகத்தில்

நாரதரின் வீணாகானத்தைக் காட்டிலும் இனியது பாதுகா நாதம் என்றருளிச் செய்கிறார் பரிமிதபரிபர்ஹம் பாதுகே ஸஞ்சரிஷ்ணௌ த்வயி வினிஹிதபாதே லீலயா ரங்கநாதே। நியமயதி விபஞ்சீம் நித்யமேகாந்தஸேவீ நிசமயிதுமுதாராந்நாரதஸ்தே நிநாதம்।

என்ற நாதபத்ததி 71 சுலோகத்தில். கோவிலுக்குள் நடைபெறும் ஏகாந்தஸஞ்சாரத்தின் போது ரங்கநாதன் குறைந்த பரிஜன பரிச்சதங்களுடன் உல்லாஸமாக பத்தி உலாவுகிறார். கம்பீரமான உனது நாதங்களைக் கேட்பதற்காக அங்கு வரும் நாரதரும் தனது வீணாகானத்தை சற்றே நிறுத்திக் கொள்கிறார்.

வேதங்களை விட பாதுகைகள் உயர்ந்தன என்கிறார். எப்படி? ஸஞ்சாரத்தின் போது எழும் ஓசையினால் பாதுகைகளானது ரங்கநாதனின் மண்ணளந்த இணைத்தாமரைகளை நேரிடையாக இதுதான் சேதனர்களுக்கு ரக்ஷகம் என்று உணர்த்துகிறது. வேதங்களோவெனில் இந்தத் திருவடித்தாமரைகள் தான் ஜனங்களுக்கு எக்காலத்திலும் ரக்ஷகம் என்று உள்ளதை உள்ளபடி உணர்த்துகிறது. இது எப்படி இருக்கின்றதென்றால் மனோஹரமான உனது நாதத்தை அப்படியே அனுவாதம்=சொன்னதையே சொல்வது போல்தான் உள்ளது என்கிறார். பாதுகை சொன்னதை வேதங்கள் திருப்பி சொல்வதற்கு காரணம் பாதுகைகளின் நாதம் அவ்வளவு இனிமையானதாக இருக்கின்றது என்றருளிச் செய்கிறார்

சரணகமலமேதத் ரங்கநாதஸ்ய நித்யம்
சரணமிதி ஜனானாம் தர்சயந்தீ யதாவத்।
ப்ரதிபதமபி ஹ்ருத்யம் பாதுகே ஸ்வாதுபாவாத்
அநுவததி பரம் தே நாதமாம்நாயபங்க்திः ।।

என்ற நாதபத்ததியின் 74வது சுலோகத்தில்.

பாதுகையின் நாதங்களை திவ்யப்ரபந்தத்தோடு ஸம்பந்தப் படுத்தி அனுபவிக்கின்றார்

வகுளதரதனுஸ்த்வம் ஸம்ஹிதாம் யாமபச்ய:
ச்ருதிபரிஷதி தஸ்யா: ஸௌரபம் யோஜயந்தி ।
ஹரிசரணஸரோஜாமோதஸம்மோதிதாயா:
ப்ரதிபதரமணீயா: பாதுகே தே நிநாதா: ।।

என்றநாதபத்தியில் 76 வது சுலோகத்தில். அதாவது பாமரர்களும் பேசும் பாஷையான தமிழில் திவ்யப்ரபந்தங்கள் அமைந்திருப்பதால் அதன் சுவையை விச்வஜனானுமோதனம் என்கின்றமுறையில் எல்லோரும் அனுபவிக்கலாம். பகவானுடைய திருவடித்தாமரையின் வாஸனை திருவடியைத் தாங்கும் பாதுகையினிடத்தில் விழுகின்றது. பிறகு இதற்கு ஆபரணங்களாய் விளங்கும் வேதங்களில் ஒட்டிக்கொள்கின்றது. பாதுகையே நம்மாழ்வாராக இருந்து வெளியிட்ட திருவாய்மொழியில் மகிழம்பூ மணம் கமழ்கின்றது. மகிழம்பூ வாஸனையைக் கொண்டுபோய் பாதுகையின் நாதங்கள் பகவானுடைய திருவடித்தாமரையின் பரிமளம் வீசப்பெற்ற வடமொழி வேதங்களில் சேர்த்து அவற்றை மேலும் சிறப்பிக்கின்றன. இவை ஒலியானபடியால் தமிழ் வேத ஒலிகளிலிருந்து வாஸனையை எடுக்கவும் ஸம்ஸ்க்ருத வேத ஒலிகளில் அதைச் சேர்க்கவும் தகுதியுள்ளவை. பாதுகையின் நாதமானது இது இந்த வேதவாக்யத்தின் கருத்துப் பொருள் என்றிப்படி அன்வயப்படுத்திக் கொடுக்கின்றன போலும் என்கிறார்.

ஸதா காருணிகோபிஸன் ரக்ஷாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே என்றபடி பகவான் வாத்ஸல்யமும் கருணையும் உள்ளவனாயிருந்தபோதிலும் ஆச்ரிதர்களைக் காப்பாற்றும் விஷயத்தில், சேதனர்கள் "எம்பெருமான் தன்னை ரக்ஷிக்கவேண்டும்" என்று கேட்பதை எதிர்பார்க்கிறான். இதை ஸஹியாத பாதுகை, இதனால் வரும் தாமதத்தைத் தடுத்து "சேதனர்கள் அபேக்ஷிக்காவிட்டாலும் அவர்களை ரக்ஷிப்பது நமது கடமையன்றோ" என்று தன் நாதங்களால் ரங்கநாதனிடத்தில் முறையிடுவது போன்றுள்ளது என்று நாதபத்ததியை முடிக்கும் முன்

க்ஷிபதி மணிபாதரக்ஷே நாதைர்நூனம் ஸமாச்ரிதத்ராணே।
ரங்கேச்வரஸ்ய பவதீ ரக்ஷாபேக்ஷாப்ரதீக்ஷணவிலம்பம்।।

என்ற சுலோகத்தில் (100) அருளிச்செய்கிறார்.

பொன்னி திரைக் கையால் அடிவருட என்ற ஆழ்வார் அருளிச் செயலின் படிக்கு காவேரியின் பரிசுத்தமான மணல்திட்டில் உல்லாஸமாக சயனித்துக் கொண்டிருக்கின்ற தாமோதரனைத் தனிமுதல்வனை என்னப்பட்ட புருஷஸூக்த ப்ரதிபாத்யமான ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளை பாதுகைகளானது தன்னுடைய கைகளாகிய ஒளிகளால் பிடிக்கின்றன போலுள்ளது என்றருளிச் செய்கிரார்

கஸ்யாபி பும்ஸ: கனகாபகாயா: புண்யே ஸலீலம் புலினே சயாலோ।
ஸமீபவ்ருத்திர்மணிபாதுகே த்வம் ஸம்வாஹயந்தீவ பதம் கர: ஸ்வை:।।

என்கிற ரத்னஸாமான்யபத்ததி (6) சுலோகத்தில்.

மேலும் பாண்பெருமாள் அருளிச் செய்த "கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணையுண்ட வாயன் என்னுள்ளம் கவர்ந்தானை அண்டர்கோன் அணியரங்கன் என் அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்ற பாசுரவரிகள் ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்தில் இழையோடியிருப்பதை அனுபவிக்க முடிகிறது ஒரு சுலோகத்தில். பாதுகைகளானது சேதனர்களிடத்தில் மிக்க கருணையுடன் கூடியது. பாதுகைகளிலிருந்து வீசும் ஒளிகளானது ஜனங்களுடைய கண்களை தூரத்திலிருந்தே இழுத்து அனாயாஸமாக வேறு எதையும் நோக்காது "நாட்டினான் தெய்வமெங்கும், நல்லதோர் அருள் தன்னாலே காட்டினான் திருவரங்கனை" என்றபடி ஒண்தாமரையாள் கேள்வனான அழகிய மணவாளன் ஒருவனையே நோக்கும்படிச் செய்கின்றன என்றருளிச் செய்கிறார்.

ஜனஸ்ய ரங்கேச்வரபாதுகே த்வம் ஜாதாநுகம்பா ஜநயஸ்யயத்னத்।
ஆக்ருஷ்ய தூரான்மணிரச்மிஜாலை: அநன்யலக்ஷ்யாணி விலோசனானி।।

என்கிற ரத்னஸாமான்ய பத்ததியில் 12 வது சுலோகத்தில்

த்வாம் ஸர்வகாரணமுசந்தி அநபாயவாச: என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீவரதராஜபஞ்சாசத்தில் தெரிவித்தார். இங்கு ரத்னஸாமான்ய பத்ததியில்

வ்யங்க்த்தும் க்ஷமம் பகவதோ ஜகதீச்வரத்வம்
வஜ்ராங்குச-த்வஜ-ஸரோருஹசக்ரசிஹ்னம்।
ஆச்லிஷ்ய நிர்பரருசிம் மணிபாதுகே த்வாம்
ஆஸீதநாபரணஸுந்தரமங்க்ரிபத்மம்।। (19)

என்கிற சுலோகத்தில் தெரிவிக்கும்போதோ பகவானுடைய உலகங்ளுக்கெல்லாம் ஈச்வரனாயிருக்கும் தன்மையை விளக்குவதற்குத் தக்கதாய் வஜ்ராயுதம், மாவட்டி, கொடி, தாமரை, சக்கரம் ஆகியவற்றை அடையாளமாகக் கொண்ட "புணரே நின்ற மரமிரண்டின் நடுவே போன" ஆதி முதல்வனின் திருவடி இணைகளானது கிரணங்கள் நிறைந்த பாதுகைகளை அடைந்து எந்த விதமான ஆபரணங்களுமின்றியே அழகியதாக ஆயிற்று என்றருளிச் செய்கிறார்.

யோகாப்யாஸம் செய்து பகவானைக் காணக்கருதி ஆஸனத்தில் அமர்ந்து மனதை பகவானிடத்தில் செலுத்தும் யோகிவர்யர்களைப் பற்றிக் கூறும் போது

நிர்தூதமோஹதிமிராஸ்தவ ரத்னதீபை: நிர்விச்யமானவிபவம் நதராஜபுத்ர்யா:।
ப்ரத்யக்ஷயந்தி நிகமாந்தநிகூடமர்த்தம் பாதாவனி த்வயி நிவேசிதபாவபந்தா:।।
(சு 26)

என்றருளிச் செய்கிறார். யோகிகள் எம்பெருமனை த்யானம் பண்ணும்போது அஜ்ஞானம் வந்து மனதை வேறு விஷயங்களில் இழுத்து விடுகிறது. அதனால் பகவானைக் காணமுடியாமல் போய்விடும். அஜ்ஞானம் - இருட்டு. அது பகவானை காணமுடியாமல் கண்களை மறைக்கின்றது. அப்போது அந்த யோகிகள் பாதுகைகளை நினைக்கும்போது அதன் ரத்னங்களாகிற தீபங்கள் அவர்களுடைய ஹ்ருதயத்தில் தோன்றி அஜ்ஞான

இருள் விலகி உள்ளம் உரை செயல் உள்ள இம்மூன்றையும் உள்ளிக் கெடுத்து இறை உள்ளிலொடுங்க காரணமாகிறது. ச்ரிய: பதியான ஸாக்ஷாத் பரமபுருஷனை உள்ளபடி ஸகல ஐச்வர்யங்களோடு அனுபவித்துக் களிப்பார்கள் என்றருளிச் செய்கிறார்.

ரத்னஸாமான்ய பத்ததியில் 35 வது சுலோகத்தில் கூறும் போது

அபிதோ மணிபாதுகே நிபத்தை: க்ருதஸம்ஸ்காரவிசேஷமாத்மரத்னை:।
குருதே பவதீ பதம் முராரே: கடினே Sஸ்மின் ஹ்ருதி மே நிவேசயோக்யம்।।

என்றருளிச் செய்கிறார். அதாவது பாதுகைகளின் நான்கு பக்கங்களிலும் இழைக்கப்பட்டிருக்கின்ற கடினமான ரத்நங்களின் மேல் வைத்து வைத்துப் பழகிய பெருமாளுடைய திருவடியானது கடினவஸ்துக்களின் மேலும் வைக்கப்பழக்கப் படுத்தப் பட்டுள்ளது. இது எதற்காகவென்னில் நீசனேன் நிறைவொன்றுமில்லேனும் பாவமே செய்து பாவியானவனும் நோற்ற நோன்பிலேன், நுண்ணறிவிலேனும் வல்வினேயுனுமான தனது கடினமான மனத்தில் வைப்பதற்காகவே என்றருளிச் செய்கிறார். இத்தகைய கார்யத்தை பாதுகையானது செய்துகொண்டு வருகிறது என்கிறார். தாத்பர்யம் என்னவெனில் பாதுகையானது நமக்கு அனுக்ரஹம் செய்ய ஆரம்பித்தவுடன் பகவானுடைய திருவடி நமது மனதில் கட்டாயம் தோன்றி நிலையாக நிற்கும் என்பதாகும்.

ஸர்வ தேச ஸர்வகால ஸர்வாவஸ்த்தையிலும் எம்பெருமான் எவ்வாறு வ்யாபித்திருக்கின்றாரோ அவ்வாறே பாதுகைகளின் புகழும் வ்யாபித்திருக்கின்றது. அவற்றை எந்த ப்ரகாரத்தாலும் அளவிட்டுச் சொல்ல முடியாது. கடலைக் கையிட்டு காட்டுமாப்போலே என்கிற ஸ்ரீ ஸ்வாமிதேசிகனின் வசனப்படிக்கு சலமிலா அணிலம் போல என்கின்ற க்ரமத்திலே ஒரு சில விஷயங்களை இங்கு அடியேன் திருத்தகப்பனாரின் அனுக்ரஹத்தால் சிறிதே விளக்க முற்பட்டேன். இதில் நல்ல விஷயங்கள் இருப்பின் அதன் பெருமை அடியேன் திருத்தகப்பனாரையே சாரும். பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரான ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீரங்கராமானுஜ மஹாதேசிகனின் ஸப்ததி மஹோத்ஸவத்தில் அடியேனையும் ஒரு பொருட்டாக அபிமானித்து ஒரு வ்யாஸம் எழுத நியமித்த பாகவதோத்தமர்களிடத்தில் தன்யோஸ்மி க்ருதார்த்தோஸ்மி அநுக்ரஹீதோஸ்மி என்று கூறிக்கொண்டு இந்த கட்டுரையை முடித்துக் கொள்கிறேன். வாசிகதோஷ: க்ஷந்தவ்ய:

★ ★ ★ ★ ★ ★

श्रीः

श्रीमते रङ्गरामानुजमहादेशिकाय नमः। श्रीमते वेदान्तरामानुजमहादेशिकाय नमः

श्रीमते निगमान्त महादेशिकाय नमः। श्रीमते भगवते भाष्यकाराय महादेशिकाय नमः

ஸ்ரீபாஷ்ய வித்வத் ஸதஸ் - சில தேன் துளிகள்

(நடாதூர் வ. நரசிம்மன்)

சென்ற சுபானு (2004) வ்ருஷத்தின் ஸ்ரீபாஷ்ய வித்வத் ஸதஸில் ஒருநாள் ஸ்ரீமதாண்டவன் மிகவும் ஆச்சரியமான, அபூர்வமான விஷயம் ஸாதித்தாயிற்று. ஒரு வித்வான் ஸ்ரீபாஷ்யத்தில் 4ஆம் அத்யாத்தில் முதல் பாதத்தில் உள்ள ததிகமாதிகரணம் (**तदधिगमाधिकरणम्**)பற்றி வாக்யார்த்தம் சொல்வதற்காக, அந்த அதிகரணத்தின் ஸூத்ரத்தை கூறி ஆரம்பித்தார். **तदधिगम उत्तर पूर्वाघयोरश्लेष विनाशौ तद्व्यपदेशात्** (தததிகம உத்தர பூர்வாகயோரஸ்ச்லேஷ வினாசௌ தத் வ்யபதேசாத்) என்பது ஸூத்ரம். (4-1-13) இதற்கு முந்தின ஸூத்ரம் **आप्रयाणात्तत्रापि हि दृष्टम्** (ஆப்ரயணத் தத்ராபி ஹி த்ருஷ்டம்) என்பது. அதாவது ப்ரஹ்ம வித்யை ஆரம்பித்தவன், தன் மரணம் வரை அதைச் செய்து கொண்டே இருக்க வேண்டும் என்பது. அதை அடைந்தவுடன் அவனுடைய அவன் பின்பு செய்யப் போகும் பாபங்களும், முன்பு செய்த பாபங்களும் முறையே அவனை ஒட்டுவதுமில்லை. அழிந்தும் போகின்றன. (வித்யா மஹாத்ம்யத்தால்) ஏனென்றால், வேதத்தில் கூறப்பட்டுள்ளதால், என்பது ஸூத்ரார்த்தம்.

அந்த வித்வான் அந்த ஸூத்ரத்தைச் சொன்னவுடன் ஸ்ரீமதாண்டவன் **उत्तर पूर्व** (உத்தர பூர்வ) என்று உள்ளதே, முறையாக அது **पूर्वोत्तर** (பூர்வோத்தர) என்றல்லவோ வர வேண்டும். ஏன் வ்யாஸ பகவான் மாற்றிக் கூறவேண்டும் என்று கேட்க உடனே யாரும் சரியாக பதிலளிக்காததால், ஆண்டவனே அதற்கு விசதமாக விஷயம் ஸாதித்தாயிற்று.

இது பாணினி வ்யாகரண ஸூத்ரத்தின்படி அமைந்துள்ளது என்று கூறி அடியேனை ஸிந்தாந்த கௌமுதி என்னும் ஸ்ரீகோசத்தை எடுத்து வரும்படி பணித்தாயிற்று. அப்படியே அப்புஸ்தகத்தின்படி விளக்கம் கூறலாயிற்று, த்வந்த்வ ஸமாஸத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பெயர்ச்சொல் வரும். அதை எந்த முறையில் அதாவது எதை முதலில் கூறவேண்டும் என்பதற்கு நியமங்கள் உள்ளன. **अल्पाच्तरम्** (அல்பாச்தரம்) (வ்யாகரண ஸூத்ரம் 2-2.34) ன்படி குறைந்த எழுத்துள்ள பதம் முதலில் வரவேண்டும் என்பது நியதி. உதாரணம் **शिवकेशवौ** (சிவ கேசவௌ)

என்பது. அதனால் **पूर्वोत्तर** என்று வரவேண்டும். மேலும் பதத்தின் பொருளின்படியும் அப்படியே இருக்க வேண்டும் என்பது. ஆனால் என்ன காரணத்தின்படி அதைமாற்றி அமைத்தார் வ்யாஸர் என்பது விசாரணை.

பாணினி ஸூத்ரம் 2-2-33 **अजाद्यदन्तम्** (அஜாத்யதன்தம்) என்பதின் ப்ரகாரம் உயிரெழுத்துடன் ஆரம்பித்த, குறில் அகார்த்துடன் முடிந்த சொல் முதலில் வரவேண்டும். உதாரணம் **ईशकृष्णौ** (ஈச கிருஷ்ணௌ) என்று. எனவே இந்த ஸூத்ரத்தின் ப்ரகாரம் **उत्तर पूर्व** என்பது சரியே. அதேபோல் பின் வந்த ஸமாஸத்தில் **अश्लेष विनाशौ** (அச்லேஷ வினாசௌ) என்பதும் சரியே. மேலும் **अश्लेष विनाशौ** என்ற த்வந்த்வத்தின் முறைக்கு மாறாக எந்த ஸூத்ரமும் இல்லை. அதனால் அந்த த்வந்த்வத்தை வேதவ்யாஸர் அப்படியே எடுத்துக்கொண்டார். அதனால் அதற்கு ஏற்றபடி, அதற்கு பொருத்தமான **उत्तर** என்பதும் **पूर्व** என்பதும் அதே முறையில் கூறப்படவேண்டும். எனவே **उत्तर पूर्व** என்பதும் **अल्पाच्तरम्** என்ற ஸூத்ரத்திற்கு மாறாக இருந்தாலும், பொருள் முறையிலும் மாறாக இருந்தாலும், **अश्लेष विनाशौ** என்ற த்வந்திற்கு ஏற்றபடி **उत्तर पूर्व** என்றே வரவேண்டும். மேலும் **अजाद्यदन्तम्** என்ற ஸூத்ரமும் இதற்கு அனுகூலம்.

மேலும் **द्वन्द्वे घी** (த்வந்த்வே கீ) (2-2-32) என்ற ஸூத்ரமும் இங்கு நியமம் இல்லை. **अल्पाच्तरं** என்ற ஸூத்ரத்திற்கு வார்த்திகம்**अभ्यर्हितं च। तापसपर्वतौ** (அப்யர்ஹிதம் ச, தாபஸ பர்வதௌ) என்று சொல்லி, உதாரணம் கூறியது. அதாவது மதிப்புக்குரிய நபரைக் குறிக்கும் சொல் முதலில் வரவேண்டும், தாபஸபர்வதர்களும் (இருவரும் ரிஷிகள்) என்று உதாரணம் கூறியது. அல்லது **वासुदेवार्जुनौ** (வாஸுதேவார்ஜுனௌ) வாஸுதேவனும் அர்ஜுனனும் என்று மதிப்புக்குரிய வாஸுதேவன் முதலில் கூறப்படவேண்டும். இந்த இடத்தில் இப்படி ஒரு நியமனமும் இல்லை. இதேபோல் **वर्णानामानुपूर्व्येण** (வர்ணானாமனுபூர்வயேண) என்பது மற்றொரு வார்த்திகம், இந்த**अल्पाच्तरं** என்ற சூத்ரத்திற்கு, ஜாதிமுறைப்படியும் மேல் வர்ணம் முதலில் கூறப்படவேண்டும். உதாரணமாக **ब्राह्मणक्षत्रियविट्शूद्राः** அல்லது **भ्रातुर्ज्यायसः** உதாரணமாக **युधिष्टिरार्जुनौ** என்பதும் இங்கு சரி வராது. ஆனால் **अल्पाच्तरं** என்ற ஸூத்ரத்திற்கு **लघ्वक्षरं पूर्वं**(லக்வக்ஷரம் பூர்வம்) என்ற

வார்த்திகத்தின்படி உதாரணமாக कुशकाशम् (குசகாசம்) என்று குறில் எழுத்துடைய कुश என்பது काश த்துடன் சேர்ந்து कुशकाशम् என்பது போல்उत्तर पूर्व என்றும் வருவது சரியே. எப்படியும் अजाद्यदन्तम् என்ற ஸூத்ரம் ப்ரதானம். அதுபோல், अश्लेष विनाशौ என்பது ஓரளவிற்கு अभ्यर्हितं च என்ற வார்த்திகத்தின்படியும் श्रेष्ठः पूर्वः प्रयोज्य इति वक्तव्यः (ச்ரேஷ்ட பூர்வ: ப்ரயோஜ்ய இதி வக்தவ்ய:) என்ற बाल मनोरमा (பால மனோரமா) என்ற ஸித்தாந்த கௌமுதியின் வ்யாக்யானத்தின் படியும் ஓரளவு அனுகூலம்.

இந்தஆச்சரியமான, மிகவும் சூக்ஷ்மமான வ்யாகரண சாஸ்த்ரத்தை அனுசரித்து வேதாந்த ஸூத்ரம் அமைந்துள்ள விஷயத்தைக் கேட்டு வித்வான்கள் எல்லாரும் மிகவும் கொண்டாடினபடி. மேலும் இந்த விஷயம் எந்த ஒரு வேதாந்த ஸூத்ர வ்யாக்யாதாவும் இது வரை எடுத்துச் சொல்லாத மிகவும் அபூர்வமான விஷயம்.

★ ★ ★ ★ ★ ★

ஸ்ரீ

ஸ்ரீமதே லக்ஷ்மீ நரஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஆசார்யனின் தூதக்ருத்யம்

(வில்லிவலம் லக்ஷ்மிநரஸிம்ஹாசார்யார்)

